
# மார்க்கண்டேயன் அம்மானை



0258
Sarasvati Mahal Library. Thanjavur

சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 258

# மார்க்கண்டேயன் அம்மானை

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :

சைவத்திரு புலவர் **பா.சீனிவாசன்** எம்.ஏ., பி.எட்.,
முதுநிலைத் தமிழாசிரியர்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூலகம்**
மற்றும் **ஆய்வு மையம்**
தஞ்சாவூர்

2014 விலை : ரூ.220

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **மார்க்கண்டேயன் அம்மானை** |
| பதிப்பாசிரியர் | : | புலவர் **பா.சீனிவாசன்** |
| வெளியிடுபவர் | : | **இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்** |
| வெளியீட்டு எண் | : | **258** |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | ஜுன் – **2014** |
| தாள் | : | **TNPL 18.6 Kg** |
| நூல் அளவு | : | **21 x 14 cm** |
| பக்கங்கள் | : | **246** |
| படிகள் | : | **500** |
| எழுத்து | : | **12** |
| அச்சிட்டோர் | : | சிவகாசி பிரஸ்,<br>ரயிலடி, தஞ்சாவூர் – 1. 9025 709672 |
| புத்தகக்கட்டு | : | மல்டிகலர் ஆர்ட் போர்டு |
| பொருள் | : | இலக்கியம் |
| விலை | : | ரூ.**220** |

# வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டு தனிச் சிறப்புடன் விளங்குவது தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம். அதன்கண் அமைந்துள்ள அரிய சுவடிகளை நூல்களாக சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் **மார்க்கண்டேயன் அம்மானை** என்னும் இந்நூல் தற்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது.

என்றும் சிரஞ்சீவியாய் விளங்கும் மார்க்கண்டேயன் சரிதை பல காலமாக மக்கள் மனத்தில் நிலைபெற்று ஒளிரும் ஓவியமாகும். சரசுவதி மகால் நூலக தமிழ்ப்பிரிவில் எண்.1966 ல் உள்ள சுவடித் தொகுப்பினை ஆதாரமாகக் கொண்டு மார்க்கண்டேயன் அம்மானை என்னும் நூல் இயற்றப் பெற்றது. மகளிர் விளையாடும் மரபு வழி விளையாட்டுக்களில் அம்மானை வகைப் பாடல்கள் ஆடிக்கொண்டே பாடுவது ஆகும்.

நீண்டகாலமாக மகப்பேறு இல்லாத மிருகண்டு மருத்துவதி தம்பதியருக்கு சிவபெருமானின் அருளால் அறிவுக்கொழுந்தாய் 16 ஆண்டுகளே நிலவுலக வாழ்வு பெறும் மார்க்கண்டேயன் அவதரித்தார். கல்வியும் கேள்வியும் நிரம்பப் பெற்ற மார்க்கண்டேயன் நல்லோர் போற்ற சிவனருள் பெற்று 15 ஆண்டுகள் சிறந்தே வளர்ந்த நிலையில் 16 வது அகவையில் தாம் 16 ஆண்டுகளே வாழ வரம் பெற்றவன் என்பதை அறிந்த மார்க்கண்டேயன் திருத்தலங்கள் தோறும் சிவபூஜை செய்து வந்தான். திருக்கடவூர் பெருமானை வழிபட்டுக் கொண்டிருக்கும்

தருணத்தில் எமன் மார்க்கண்டேயரை பெருமானுடன் சேர்ந்து பாசக்கயிற்றால் கட்டியிழுத்தனர். சிவபெருமான் எமனை தள்ளி மார்க்கண்டேயருக்கு என்றென்றும் பதினாறாக வையகம் நிலைபெறும் வரையில் வாழ வரமளித்தார்.

இந்நூலை சிறப்பாகப் பதிப்பித்த திருவையாறு சீனிவாசராவ் மேனிலைப் பள்ளியின் முதுநிலை தமிழாசிரியர் புலவர் **பா.சீனிவாசன்** அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் சிறப்புற வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு.**ம.சங்கரநாராயணன்** B.A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ்.சுதர்ஷன்** M.A., B.Lit., M.L.I.S., Ph.D., அவர்களுக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மானை இலக்கியம் தொடர்பான ஆய்வு மாணவர்களுக்கும் தமிழ் சான்றோர்களுக்கும் இந்நூல் நன்கு பயன்படும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் **என்.சுப்பையன்** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
26.06.2014

# முகவுரை.

—*—

என்றும் சிரஞ்சிவியாய் விளங்கும் மார்க்கண்டேயன் சரிதை பல காலமாக மக்கள் மனத்தில் நிலைபெற்று ஒளிரும் சுவைமிக்க ஓவியமாகும். சுவடிச் சுரங்கமென ஒளிவிட்டு மிளிரும் சரஸ்வதி மகால் நூல் நிலையத் தமிழ் பிரிவில் உள்ள சுவடி எண் வரிசையில் 1566-ல் உள்ள சுவடித் தொகுப்பினை ஆதாரமாகக் கொண்டு 'மார்க்கண்டேயன் அம்மானை' இயற்றப்பெற்று இதோ உங்கள் கரங்களில் விளையாடி மகிழ்கிறது. கும்மியும் கோலாட்டமும் மகளிர் குதூகலித்து மகிழ்ந்தாடும் மரபுவழி விளையாட்டுக்கள் என்பதும் அம்மானை வகைப்பாடல்கள் மகளிர் ஆடிக் கொண்டே பாடுவது என்பதும் நாம் அறிந்த ஒன்றே. அதிலும் அம்மானைவகைப் பாடல்கள் என்றென்றும் சிரஞ்சீவியாக நம்மனங்களில் நிலைத்து வாழும் மார்க்கண்டேயன் சரிதையினை இழையோட்டமாக இணைத்து கவியோட்ட பொலிவுடன் அமைக்கப்பெற்று பாடப்படுகிறதென்றால் அச்சுவையை சுவைத்து மகிழ நாமெல்லாம் விரும்பி விழைவது இயல்பேயன்றோ!

நீண்டகாலமாக மகப்பேறு இல்லாது ஏங்கித் தவித்த மிருகண்டு-மருத்துவதி தம்பதியர் மகப்பேறு வேண்டி சிவனருள் போற்றிவர அழகுத் திருவுருவாய் அறிவுக் கொழுந்தாய் கலைஞான வடிவாய் பதினாறு ஆண்டுகளே நிலவுலக வாழ்வு பெறும் மார்க்கண்டேயன் அவதரித்தார். கல்வியும் கேள்வியும் நிரம்பப் பெற்ற கவினுறு கலைஞானம் ஒருங்கே பெற்று மார்க்கண்டேயன் 15 ஆண்டுகள் நல்லோர் போற்ற சிவனருள் பெற்று சிறந்தே வளர்ந்த நிலையில் பதினாறாவது அகவையும் அமைந்தது. தாம் பதினாறு ஆண்டுகளே வாழ வரம்பெற்றவன் என்பதை அறிந்த மார்க்கண்டேயன் திருத்தலங்கள் தோறும் சிவபூசை

செய்து கடைசியில் திருக்கடவூர் பெருமானை வழிபட்டுக் கொண்டிருக்கும் தருணத்தில் வரம்பெற்றவாறு வாழ்நாள் முடிவுறும் சமயம் காலனார் தமது 'கரும்பசு' (எருமைக் கடா)-வின் மீது பூதகணங்களுடன் தமது கடமையாற்ற முனைந்து வந்து சிவபூசையில் ஆழ்ந்திருந்த மார்க்கண்டே யரை பெருமானுடன் சேர்த்து பாசக்கயிற்றால் கட்டியிழுத் தனர். தம்மோடு ஆழ்ந்து ஐக்கியமாயிருந்த மார்க்கண்டே யரைப் பிரிய மனமில்லாத சிவனார் எமனை சற்றே தள்ளி வைத்து மார்க்கண்டேயருக்கு என்றென்றும் பதினாறாக இருந்து இவ்வையகம் நிலைபெறும் வரையிலும் நிலைத் திருக்க சிவனருள் வாய்த்தது.

என்றென்றும் பதினாறாய் இளமையும், பொலிவும் இணைந்தே பெற்று கூடவே பதினாறு பேறுகளையும் இறையருளால் இனிதே பெற்ற **மார்க்கண்டேயன் அம்மானை**தனை பதிப்பித்த திருவையாறு சீனிவாசராவ் மேனிலைப் பள்ளியின் முதுநிலை தமிழாசிரியர் புலவர் பா. **சீனிவாசன்,** எம். ஏ., பி. எட்., அவர்கள் நமது பாராட்டுக்குரியவர். தமது தெளிந்த அறிவாற்றலினால் சுவடிகளை ஆய்ந்து இலக்கிய மணம் பரப்பும் மார்க்கண்டே யன் அம்மானையை இசையோடு நலம் பரப்ப தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்கியுள்ளார்.

அறிவுலகம் போற்றத்தக்க நல்ல நல்ல நூல்கள் வெளிவர பொருளுதவி நல்கிவரும் மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும் எமது நன்றி அறிதல் என்றென்றும் உரித்தாகுக.

இந்நூல் நன்முறையில் வெளிவர உதவிகரமாக பணி யாற்றிய நூலகர் **அ பஞ்சநாதன்** அவர்கட்கு எனது பாராட்டுக்கள்.

**மா. இராமு.**

தஞ்சாவூர், 17—7—87

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்பொறுப்பு
சரஸ்வதி மகால் நூலக சங்கம்.

திருச்சிற்றம்பலம்

## பதிப்பாசிரியர் முகவுரை

''பாலனுக் காய்அன்று பாற்கடல் ஈந்து; பணைத்தெழுந்த
ஆலினிற் கீழ்இருந்(து) ஆரணம்; ஓதி ''அருமுனிக்காய்ச்
சூலமும் பாசமும் கொண்டு தொடர்ந்(து)
அடர்ந்தோடிவந்த
காலனைக் காய்ந்த பிரான்'' கடவூர் உறை உத்தமனே''

இம்மண்ணுலகில் பன்னூலைப் படிப்பதன் நோக்கம் யாது? அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற் பயன், என்பது நன்னூலாரின் நற்கருத்து. மார்க்கண்டேயன் அம்மானை என்ற இந்நூலினைப்படிப்பதினால் விளையும் பயன் என்னவென்றால் அறம், பொருள், இன்பம் வீட்டோடு சிவமுக்தியையும் வழங்குவது எனக் கூறலாம். பாலன் மார்க்கண்டனுக்காக காலனையும் காலால் கடிந்தருள நீலகண்டர் காட்சி நல்கினார். பதினெட்டு வகை புராணங்களில் ஒன்று மார்க்கண்டேய புராணம். அது வடமொழியில் உள்ளது. சில பகுதி மட்டும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ''மார்க்கண்டேயன் அம்மானை'' என்னும் இந்நூல் பெரும்பாலும் வடமொழிப் புராணத்தை அடியொற்றியே செல்லுகிறது. பொதுவாக உலகில் வழங்கும் யாவரும் அறிந்த கதைதான். என்றாலும் சிற்றிலக்கியமாக கூறுகின்ற நயம் போற்றத்தக்கதாக உள்ளது.

சில புராணங்களில் வழங்குகின்ற உபகதைகள் பல இவ்வம்மானை நூலில் தெளிவுபட விளக்கப்பட்டுள்ளது.

செந்தமிழ்க் கவிவாணர் கற்பனைச் செய்திக்குத்தம் கவித்திறமையைப் பயன் படுத்துவர். ஆனால் நாட்டுப் பாடல்களோ உணர்ச்சிக்கு முதலிடம் நல்கும். எழுத்தறி-வில்லா பாமரமக்கள் இலக்கியமே நாட்டுப்பாடல்கள் என வழங்கப்படுகின்றன. ''மார்க்கண்டேயன் அம்மானை'' என்னும் இந்நூலும் நாட்டுப்பாடல் வகையைச் சார்ந்தது-தான். என்றாலும் இடையிடையே சில விருத்தப்பாக்கள் இலக்கிய கவியழகைப் புலப்படுத்துகின்றன. எனவே ''மார்க்கண்டேயன் அம்மானையை'' பைந்தமிழ்ப்புலவரும் பாமரமக்களும் படித்துப் பயனடையலாம்.

தஞ்சை மன்னர் சரபோசி சரசுவதி மகால் நூல் நிலையச் சுவடி ''எண் 1566'' என்ற குறிப்போடு காணப்-படும் இவ்வுரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள், மனவமைதி நல்கும் மன்பதைக்குரிய மன்னும் நன்னூலே என்பதில் ஐயமில்லை.

ஓலைச் சுவடியாக இருந்த இந்நூல் சிதைந்தும் சிறழ்ந்தும் செல்லுக்கு இரையாகியும் இருந்தது. பின்னர் படியெடுக்கப்பட்டது. சிவமுத்தியும் சகல செல்வங்களும் வாசிப்போருக்கு வழங்கும் இவ்வம்மானை நூலினை பதிப்பித்துச் சிறப்பிக்க எளியோனை அழைத்த தஞ்சை மாவட்ட முன்னாள் ஆட்சியரும், இந்நூலகத்தின் முன்னாள் இயக்குனருமாகிய திரு. **து. இரா. இராமசாமி** இ.ஆ.ப., அவர்கட்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இவ்வம்மானை நூலிற்கு வரலாற்றுச்சுருக்கம், அரும்பதவுரை, தலைவரலாறு, முதலியன விளக்கமான முறையில் எழுதி அளிக்க உரிமை வழங்கிய தஞ்சை மாவட்டாட்சியரும், சரசுவதிமகால் நூல்நிலைய சங்க இயக்குநர் பொறுப்பு வகிக்கும் சீதமதிசேர் மேதகு திரு. **மா இராமு** இ.ஆ.ப., அவர்கட்கு என் நன்றி என்றும் உரியது.

இந்நூல் புத்தகவடிவில் வெளிவர வாய்ப்பளித்த நூலக நிருவாக அதிகாரி பொறுப்பு வகிக்கும் திரு. **அ. பஞ்சநாதன்**, எம்.ஏ.பி.லிப்.எஸ்சி., அவர்கட்கு நான் என்றும் கடமைப் பட்டுள்ளேன் என் நன்றியையும் உரிதாக்குகின்றேன்.

எளியேனை இப்பணியில் ஈடுபட அனுமதி வழங்கிய எங்கள் பள்ளிச் செயலர் திரு. **ரஞ்சன்கோபால்** எம்.எஸ்சி., அவர்கட்கு என் உளமார்ந்த நன்றி.

இந்நூல் வெளிவர அவ்வப்போது அச்சுப் பிழை திருத்தி பேருதவி புரிந்த என் வாழ்க்கைத் துணைவி திருமதி. **மங்களம்சீனிவாசன்** அவர்களின் பணி பாராட்டிற்குரியது.

அழகிய புத்தகவடிவில் இவ்வம்மானை நூலினை உரிய காலத்தே அச்சுருவாக்கி வழங்கிய **திருமுருகன்** அச்சக உரிமையாளருக்கு என் நன்றி.

உயர்வான இந்நூலினை நலமே பதிப்பிக்க அருள் பாலித்த அலகில் சோதியோடு அம்பலத்தாடும் மலர் சிலம்படியானை வாழ்த்துகின்றேன் இணையற்ற தமிழன்னையின் திருவடிகட்கு ஈடற்ற இந்நூலினை அணிவிக்கின்றேன்.

நன்றி! **வணக்கம்!!**

அன்பன்,
சைவத்திரு புலவர் **பா. சீனிவாசன்**, எம்.ஏ.பிஎட்.,
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்.

திருச்சிற்றம்பலம்

## இந்நூல் பதிப்பிக்க உதவிய
## துணை நூல் பட்டியல்

1. அபிதான சிந்தாமணி
—திரு. சிங்காரவேலு முதலியார்

2. கழகத்தமிழ் அகராதி
—சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்

3. தொகையகராதி
—சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்

4. சூடாமணி நிகண்டு
—யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் பதிப்பு

5. மேற்கோள் விளக்கக்கதை அகரவரிசை
—சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம்

6. மார்க்கண்டேய புராணம் சுருக்கம்
—தொழுவூர் வேலாயுத முதலியார்

7. திருஞானசம்பந்தரின் திருக்கடைக் காப்பு
—காசி மடம்

8. திருநாவுக்கரசர் தேவாரம்
—காசி மடம்

9. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்பாட்டு
—காசி மடம்

10. மெய்கண்ட சாத்திரம்
—(சிவஞான சித்தியார்) தருமையாதீனம்

11. திருவாசகம்
—காசி மடம்

12. தமிழகம் ஊரும் பேரும்
—திரு. ரா. பி. சேதுப்பிள்ளை

13. ஆதீனக் கோயில்கள்
—தருமையாதீனம்

14. வேங்கடம் முதல் குமரி வரை
—திரு. தெ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

15. திருவிளையாடற் புராணம்
—காசி மடம்

# நூலாசிரியர் வரலாறு

0-0-0-0-0-0

இவ்வம்மானை நூலினை எழுதிய ஆசிரியர் பெயர் "இலக்குமி நாராயணன்" என்பதாகும். இவர் தன்னை "நந்தி வர்க்கத் தன்னில் நளின சுந்தர பதம் மாறாமல் சிந்தை பரமெய்ஞ்ஞானம் சீலமுனிவன் தன் சீடன்" என்று கூறிக் கொள்கிறார். எனவே சைவ தீட்சை பெற்ற கவி வானராக இருக்கலாம். மேலும் தன் ஊரைப்பற்றிக் கூறுகையில்

**"காளியுடன் வாதாடும் கறைகண்டன் தாள் பணியும்**
**மேழிக் கொடியுடையோன் விழிப்பனூர் வாழ்கின்றோன்"**

என்று கூறிக் கொள்கின்றார். கூறவந்த செய்தியைக் குறைவு படாது கூறித் தெளிவு பட வைக்கும் இவ்வாசிரியர் தன் வரலாற்றுக் குறிப்பாக ஒரு செய்தி மட்டும் கூறுகிறார்.

"காரானன் பூமதலை காட்சி தரு குலத்தோன்
சீரான ஞானநெறி சிந்தை வணக்கமுள்ளோன்
தருமநெறிமுத்துக் கூத்தன் தரு புதல்வன்
நன்மை தமிழோதுகின்ற (இ)லக்குமி நாராயணன ஆம்"

இந்நூலாசிரியரின் தமிழ் மொழிப்பற்று நம்மை மெய்ம்மறக்கச் செய்கின்றது. மேலும் சைவப் பற்று மிக்கவர் என்பது 'பஞ்சாட்சர வேதன்' என்று தன்னைக் கூறிச் செல்வதாலும் பல இடங்களில் சாத்திரக் கருத்துக்களைக் கூறுவதாலும் அறியலாம்.

உத்தமப் பெண்களின் அங்க இலக்கணம், கருடன் திருமாலுக்கு வாகனமான வரலாறு, பாற்கடலைக் கடைய வாலி சுக்கிரீவர் உதவி புரிதல் போன்ற அரிய பெரிய கருத்துக்கள் நூலினை அலங்கரிக்கின்றன.

நல்ல பிள்ளையால் விளையும் நன்மைகள், தீய பிள்ளைகளால் உண்டாகும் துன்பங்கள், தவத்தின் சிறப்பு, சிவபூசையால் யமபயத்தையும் போக்கும் பக்திச் சிறப்பு போன்ற நுட்பச் செய்திகள் விருந்தாக கொடுத்துள்ள ஆசிரியர் பாராட்டிற் குரியவர்.

——

# “திருக்கடவூர்” தல வரலாறு

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் உள்ள வளமையான தலம். சோலைகளும், குளங்களும், இடமகன்ற மணற்பரப்பும் கடவூரை அணி செய்கின்றன.

இக்கடவூர் வில்வவனம், பிஞ்சிலவனம், என வேறு பெயர்களாலும் வழங்கப்படுகிறது. பிரமன், ஞானோபதேசம் பெறும் பொருட்டு இறைவர் ஆணையால் வில்விதை ஒன்றை விதைத்த முக்கால் மணி நேரத்தில் முனைத்தச் சிறப்பால் கடவூர் “வில்வவனம்” என்ற பெயர் பெற்றது. பிரமனும் இத்தலத்தில் ஞானோபதேசம் பெற்றான்.

மார்க்கண்டேயர் எடுத்து வந்த கங்கை நீருடன் ‘பிஞ்சிலம்’ என்னும் ஜாதி முல்லை இத்தலத்தில் பதிந்து தலவிருட்சமாயிற்று இக்காரணம் பற்றி இவ்வூர் “பிஞ்சிலவனம்” என்று வழங்கப்பட்டது.

பாற்கடல் அமுதகுடம் இத்தலத்தில் பதிந்துவிட்டது. அமுதகடம் பதிந்த பதியாதலால் கடவூர் என்ற பெயராயிற்று. வழக்கில் கடையூர் என்று பிழையாகவும் கூறப்படுகிறது.

திருக்கடவூர் கோவில் ஐந்து திருச்சுற்றுக்களைக் (பிராகாரங்கள்) கொண்டது. பூக்கொய்யும் நந்தவனம் ஆலயத்தினுள் அமைந்துள்ளது. சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. கீழ்த்திசையிலும் மேற்றிசையிலும் இராஜ கோபுரங்கள் உயர்ந்து விளங்குகின்றன. கீழ்க்கோபுரத்தில் முனீசுவரர் இருக்கிறார். திருமாளிகைப் பத்தி மண்டபத்தில் பரிவார தேவதைகள் சிறந்து விளங்குகின்றனர். அலங்கார மண்டபம், மற்றும் சங்காபிஷேக மண்டபமும் சிறப்புடையன.

**விநாயகர்:** ஞானாமிர்தத்தை ஒளித்துப் பின் தேவர் வேண்ட வழங்கிய கணபதியை “கள்ளவாரணர்” என்கின்றனர்.

**சிவலிங்கம்:** அமிர்தகடமே இலிங்கமான தலம் ஆனதால் இறைவர் "**அமுதலிங்கம்**" என்ற பெயருடன் அமுதகடேசர், அமுதகடோற்பவர், என்ற திருநாமங்களும் பெற்றார். சிவலிங்கத்தின் மேல் அம்மையின் தனபாரமும், வளையலும் ஒத்தத்தழும்பும் காணப்படுவதோடு இயமனின் பாசத் தழும்பும் காணப்படுகின்றன.

**அம்மையார்:** ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி, தெளிந்த ஞானத்திருவை அள்ளி வீசும், அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாம் அம்மையின் திருநாமம் **அபிராமி** அம்மையார் என்பதாகும் அம்மன் சந்நிதி கிழக்கு நோக்கி உள்ளது.

**வேறுமூர்த்திகள்:** மார்க்கண்டேயரைக் கண்டுவந்த **புலத்திய** முனிவர் பிரதிட்டை செய்த சிவலிங்கத்திருமேனியே **புண்ணியவர்த்தனர்** இச்சிவலிங்கத்தை வழிபடின் புண்ணியம் பல்கிப் பெருகும் என்று நம்புகின்றார்.

அகத்தியமகரிஷி, உலகத்தோரின் பாபம் இரிந்தோட பூசித்த சிவலிங்கத் திருமேனியே **பாபவிமோசனர்** என்னும் மூர்த்தி.

பிரமனால் பூசிக்கப்பட்ட ஆதி சிவலிங்க மூர்த்தியே "**வில்வவனேசர்**" இவ்விறைவர் பிச்சாடன மூர்த்தியின் அருகே உள்ளார்.

இயமனை உதைத்தருளிய நச்சினார்க்கினியர், தெற்கு நோக்கி "**காலசங்காரக்கடவுள்**" என்ற பெயரோடு விளங்குகிறார் வலது திருக்கரங்களில் சூலமும் மழுவும், இடது திருக்கரங்களில் பாசமும் சுட்டுமுத்திரையுமாகக் காட்சியளிக்கின்றார்.

உதைபட்ட இயமன் சங்காரக்கடவுளின் காலின்கீழே கவிழ்ந்து கிடக்கின்றான். மார்க்கண்டேயர் இறைவரின் மேற்கு பக்கத்தில் இருக்கின்றார். வாலாம்பிகை எம்மிறை அருகே எழுந்தருளி இருக்கின்றாள். காலசங்கார மூர்த்திக்கு ஆண்டில் பதினொரு

முறையே திருமஞ்சனம் நடைபெறுகிறது. ஆண்டில் ஒருமுறை வீதிஉலா வருகின்றார்.

மார்க்கண்டர் திருவுருவோடு சந்திரசேகரர், இரத்தினகிரீடேசுவரர் திருவுருவங்களும் அறுபானமும்மை நாயன்மார்களில் "குங்கிலியக்கலயர்" முருகர் திருவுருவங்களும் கோயிலில் அணிபெறவிளங்குகின்றன.

இத்தலத்தில் அருள் பெற்றோர்பலர். மார்க்கண்டேயர் வழிபட்டு "என்றும் பதினாறு" ஆண்டாக இருக்கும்வரம் பெற்றார். கலயநாயனார் குங்கிலியதூபமிட்டு இழந்த பொருளுடன் அந்தமில் பேரின்பமும் பெற்றார். அபிராமிபட்டர் அம்மையின் அருள்பெற்று அந்தாதி பாடினார் "காரி"நாயனார் இவ்வூரில் அவதரித்து செந்தமிழ்க் கோவைபாடி மூவேந்தரிடமும் பொருள் பெற்றுச் சிவாலயங்கள் கட்டுவித்தார். இவர் அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவர் தேவாரப் பாடல் பெற்ற இப்புண்ணியத்தலத்திற்கு நாமும் சென்று வழிபட்டு வேண்டியதைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். வழிபட்டு இறையருள் பெறுவோமாக.

திருசிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

# மார்க்கண்டேயன் வரலாற்றுச் சுருக்கம்

வெற்றிக் கொடிபறக்கும் அரண்களால் சூழப்பட்ட "கடகம்" என்னும் தடநகரில் மாயையை வென்றவரும், செய்தற்கரிய தவத்தால் சிறப்புற்றவரும், இந்த உலகம் போற்றும் அந்தணருள் உயர்ந்தோங்கு குணத்தவராகிய "குச்சகர்" என்னும் நிறைகுணச்செம்மல் ஒருவர் வாழ்ந்தார். அம்முனி வேந்தர்க்கு மன்னு புகழ் மறைபயின்ற நாவீறுடைய "கௌச்சிகன்" என்னும் பெரும் பெயர் வாய்ந்த புத்திரர் ஒருவர் தோன்றினார். அப்பெருந்தகை பிறவிப்பெருங்கடலை நீந்த வேண்டி, பரமும், அபரமுமாய் விளங்கும் முழுமுதற்மெய்ப் பொருளாம், பவமதனை அறமாற்றும் சிவபெருமானைத் துதித்துத் தூமலர்த்தூவி பாமலர் சாத்தி, தவம் செய்தற்காக் சீதவளம் நிறைந்த பொழில் சூழ் நீர்நிலையை நண்ணினார்.

அவ்விடத்து மந்தைவெளிக்கல்லைப் போன்று அசைவற்று சுவாச பந்தனம் செய்து மெய்த் தவம் புரியலானார் கடும் பசி தனக்கு காயிலை, கனி சருகு புனல் அடைத்து, அப்பச்சைமால் சோலையில் கருங்கல் போல் உடல் அசையாது கருந்தடங்கண்களை மூடி நெடிது இருந்தார். மேலும் அத்தவச் செம்மல் தீயினிடை தங்கினார், தண் புனலில் மூழ்கினார், அதனால் தேகம் எலும்பாயிற்று, சென்னியிலுள்ள செம்முடியோ குருவிக் கூடாயிற்று. வெய்யிலிடை வாடினார். நாசியில் வாயுவை அடக்கியதோடு மனத்தினையும் அடக்கினார். மௌனத்தில் குடியிருந்தார். மதிமண்டலத்து கனல் செல்ல அமுதுண்டுறைந்தார். திருமறையின் ஓர்முடிவான அருளை நாடினார். ஆனந்தமான பரசிவத்தையே தியானித்தார். இத் தவமுதல்வரை உலகம் பித்தென்று எண்ணியது. ஆனால் அவர்

சித்தமோ அத்தனையே நினைத்தது. இறைநினைப்பில் அவர் உள்ளம் காதலாகியது. மனம் கசிந்தது. கண்கள் நீரைமல்கின. நாவோ நன்னெறிக்கு உய்ப்பதாகிய 'நமச்சிவா'யத்தைநாடிற்று உவமையிலாக் கலைஞானமிக்குடைய உணர்வரிய மெய்ஞ்ஞான தவமுதல்வராம் கௌச்சிகர் நாதன் நாமமாம் மந்திரத்தையே உச்சரித்தார், பரம் பொருளின் பெருமையை உன்னி, அடியார்க்கு எளியராம் சிவனின் இயல்பையும் நினைந்து, அளப்பரியும் காரணங்கள் நான்கும் சிந்தையே ஆக உள்ளுருகி புறச்சூழல் அறவே மறந்து தவநிலையில் நின்றார் பதுமைபோல் வாய்பேசாமையுற்று சீதப்புனலருகே உண்டியை நீக்கி துயிலை மறந்து, பரனையே நினைந்து செய்தவம் முயன்றார்.

அந்நீர்நிலையருகே பலவிலங்குகள் நீர் அருந்த அடிக்கடி வந்து சென்றன. பசியைப் போக்கிக் கொண்ட அம்மிருகங்கள். நீர்வேட்கையுற்று வாவியை நாடின. அவ்விலங்கின் உடல்கள் தினவெடுத்தன போலும், சிவனடியே சிந்தித்து இருப்பொருகு சிவஞான தவசீல கௌசிக்கரை அவை அசையாத கல் லென எண்ணினபோலும்! அவ்விலங்குகள் தமக்கு தினவெடுக்கும் காலத்து, அவர் முதுகில் உராய்ந்து கொண்டு சென்றன, அவை அப்படி உராய்ந்து போகுங்காலத்து, வல்ல தவத்தோரைக் கல்லெனவே கருதின. ஆனால் அத்தவமுதல்வரோ தம்மை விலங்குகள் உராய்ந்து செல்கின்றன என்பதனையும் அறியாத வராகி தாம் மேற்கொண்ட தவத்தையே செய்திருந்தார். பூத கணநாதர் அருள் இது என வியந்து வானவர் புடைசூழ அவ்விடம் வந்தனர். பவளவாயும் கமலச் செங்கண்ணும் உடைய ஆயர் கொழுந்தாம் திருமால் தவ அழகுடைய கௌச்சிகரின் திருமேனியை குழலேந்தும் அழகிய திருக்கரத்தால் தடவிக் கொடுத்தார். கல்லைப் போல் அசைவற்று தவம் புரிந்த முனி புங்கவ! விலங்குகளின் தினவை நீக்கி உதவிபுரிந்தாய். எனவே நின்திருப்பெயர் இன்று முதல் "மிருககண்டூயன்" என்று வழங்கட்டும் என தம்பவளவாய் திறந்து பகர்ந்தார். உடனே அம்முனி சிரேட்டர் தவநிலை கலைந்து எழுந்து கவின் கரத்தால் தொழுது பணிந்தார்.

பணிந்து எழுந்த அம்முனிவரைப் பார்த்து, சித்த மல மறுவித்து திருவருளைப் பாலிக்கும் பிறை சூடிய பெருமானின் பூரணமான திருவருள் நின் பாலாகக் கடவது! "நின் முற்பிறவித் தீவினைகள் தீயினில் தூசாகும்" என்று கீதையருளிய நாதர் அனுக்கிரகித்தார். அருள் புரிந்த ஒளிர் மணிகண்டன் தேவர் கூட்டத்துடனே திருஉருக்கரந்து சென்றார்.

உயர் நலம் உடைய உத்தமன் மதிநலமருளி மறைந்த பிறகு (கௌச்சிக முனிவர் என்னும்) அம்மிருககண்டுயர் பேராயிரம் பரவி, வானோர் ஏத்தும் எம்மானின் வரவுக்காகக் காத்திருந்தார். புரமெரித்த விரிசடைக் கடவுள், முக்கண் முதல்வன் காட்சி நல்கினார். வாராத செல்வம் வருவிக்க அருள் புரிந்தார். மண்ணில் நல்லவண்ணம் வாழ வைக்கும் அம்மையின் அருள் பெற்ற அம்முனிசிரேட்டர் மனமகிழ்ந்தார். விரைவில் தம் தந்தையாகிய குச்சகமுனிவர் இருக்குமிடம் ஏகி பார் தந்தையாரின் இணையடிகளில் வீழ்ந்து பணிந்தார். பணிந்த மகனின் சிறப்பையறிந்த குச்சகர் மனக்களிப்புடன் தழுவிக் கொண்டார் மைந்தனைப்பார்த்து, "கௌச்சிகா, நீ ஆற்றிய தவத்தில் நேர்ந்த செய்திகூறு" என்றார். உடனே மிருக கண்டுயர், தமக்கு இறையருள் கிட்டிய இயல்பினை பாங்குடன பகர்ந்தார். செய்திகேட்ட தந்தை மேலும் மனமகிழ்ந்தார். மகனை நோக்கி, "மிருககண்டுயனே! நம்பரம் பரையில் தோன்றியவர் இத்தகைய தவத்தின் பயனை உன்னைப் போன்று பெற்றார் யாருமில்லை! அரியதவமும் உனக்கு எளிமையாயிற்றுக் கண்டறியாதன உனக்கு காட்சியாயிற்று. முனிவர்களில் உன்னை ஒப்பார் எங்கும் எவருமிலர். உற்ற நோய் நோன்று நீ புரிந்த தவப்பயனை கோலஞ்செய் நீலகண்டரே அறிவார். வேறுயாரும் அறியார்" என்று புகழ்ந்து கூறினார். பின்னர் அவர் மனத்தில் ஓர் சிந்தனை ஓடிற்று. இந்த மிருககண்ட மாமுனிவரின் மகிமை சேர் பரம்பரையில் எக்காலத்தும் யாவருடையமனத்திலும் குடி கொண்டு இருக்கத்தக்க ஓர் புத்திரன் எமனை வெற்றிகொள்ள வேண்டிய காரணம இருத்தலினாலே, ஆன்மாக்களின் வினைப் பகையியல்பை, விடுவிக்கும் சிவபிரான் கருணையால் மற்றோர் எண்ணமும் உதயமாயிற்று. ஆகவே மகனை நோக்கி, ஐயனே! உனக்குயான் கழறும் செய்தி ஒன்று உண்டு, அதனைக் கேட்பாயாக "நல்லோரால் தள்ளத்தக்க தன்மையல்லாதனவும்

முறைமையமைந்த சிறந்த அந்தணரின் கடமையாயமைந்த விழுமிய நான்கு பிரிவுள. அவை பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், பெருந்தவத்துறவு நிலை. மகனே! நீ முதல்நிலையில் வழுவாது விழுப்பமெய்தினை! பரிசுத்தனே! இல்லறமாம் நல்லறத்தை நடாத்த உள்ளம் விழைகுவாய்! என் உள்ளக் கருத்தை நிறைவேற்றுவாய்" என்றனர். மிருககண்டுயர் புன்முறுவல் பூத்தார், "தந்தையே, தாங்கள் தீவினைகளற்ற தவத்தவர் தங்கள் புத்திரனாகிய எனக்கு இக்கட்டளை இட்டது முறையோ?"

'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்"

என்றமறை தாங்கள் அறிந்ததே இல்லறத்தால் யாது பயன்?

"குடும்ப பாரந்தனைக் கொண்டவர்க்கு அல்லல்
இடும் பரிசு இன்மையால் உந்தீபற
மெய்யுணர் வெங்ஙனம் உந்தீபற"

என்பது தாங்கள் அறிந்ததே

"ஒரு கோட்டிங்கலை முனியும் ஒளிதிகழும் கடலாடை உடுத்தகோவும் மருமலர் வாழ் திசைமுகனும் வானவர்கள் நாயகனும் மயிடன் தானும் கரியநிறத் திருமாலும் வாலியும் பாராசனுமே காமன் அம்பால் பெருமை இழந்தனர் என்றால் சிறுமனிதர்க் கெப்படியோ பேசுங்காலே" என்ற வாக்கின் படி மயக்கம் புரிவதாகிய மணவாழ்க்கைத் தேவையோ? இல்லறமாம் வெஞ்சிறையில் என்னை வாட்டாதீர்கள் மாட்சிமைபட்ட தவமாம் பெருஞ்செல்வம் யான் அடைய ஆணையிடுங்கள் என்றனர். "தவக்கொழுந்தே! உலக மக்கட்பரப்பை போல உணர்விழந்து மயங்குகின்ற காமவின்பத்தை நீ அனுபவிப்பதற்காகவா நான் கூறினேன்? அற்றன்று! முன் இறந்துள்ள நமது குலத்துப் பெரியோர்களுடைய துயரையும் நரகுறாப் பழைமை முறைமைக் குறித்து நல்ல புத்திரன் பெறுவதற்காக மகனே! ஓர் பெண்ணை மணந்து கொள்ளுவது உத்தமமே!"

# பொருளகராதி


| பெயர் | பக்கம் |
|---|---|
| அகத்தியர் | 69 |
| அகண்டி | 119 |
| அகரமுதல | 227 |
| அக்கமணி | 184 |
| அங்காரகன் | 69 |
| அங்கையின் நெல்லி | 208 |
| அஞ்சல் | 66 |
| அஞ்சல் செய்யும் | 193 |
| அஞ்சு பூதம் | 229 |
| அஞ்செழுத்து | 87 128 |
| அஞ்நூற்றுக்காதம் | 196 |
| அடிமை | 174 |
| அட்டகெசம் | 176 |
| அட்டாவதானி | 243 |
| அண்டச் சுவர் | 82, 196 |
| அண்டர் பிரான் | 174 |
| அதிசயம் | 223 |
| அத்தர் உதை | 195 |
| அதியாயம் | 172 |
| அந்தரம் | 54 |
| அந்தர லோகம் | 196 |
| அபிடேக மணி | 240 |
| அமரரிட்ட | 76 |
| அமிர்தரிஷி | 58 |
| அமுதகுடம் | 77 |
| அயன் | 121 |

| | |
|---|---|
| அயிராணி | |
| அய்யம் எடு | 236 |
| அரணக்காய்ச்சல் | 250 |
| அரண்ட உடம்பு | 107 |
| அரம்பையர் | 65 |
| அரன் | 20 |
| அரிதான் அர்பு | 200 |
| அருள் நூல் | 182 |
| அருள் விருத்தம் | 199 |
| அல்லல் வினை | 224 |
| அநாதி | 170 |
| அழகு மதலை | 119 |
| அறுசுவை | 37 |
| அறுபதினாயிரம் | 241 |
| அன்ன நடை | 124 |
| அன்னம் | 31, 50 |
| ஆகாசம் | 149 |
| ஆகாச கங்கை | 46 |
| ஆக்கை | 167 |
| ஆணிக் கனகம் | 144, 124 |
| ஆதிசக்தி | 199 |
| ஆதி ஞானம் | 28 |
| ஆபத்தைத்தீர்க்க | 78 |
| ஆதிமதேசுவரன் | 198 |
| ஆதிமுடி | 49 |
| ஆதியாய் | 227 |
| ஆந்தையைப் போல | 70 |
| ஆந்தைவிழி | 212 |
| ஆமை | 45 |
| ஆரணம் | 219 |

| | |
|---|---|
| ஆரம் | 107 |
| ஆலமுண்டகண்டன் | 101 |
| ஆலயம் | 153 |
| ஆளடிமை | 175 |
| ஆறுசமயம் | 239 |
| ஆறு தத்துவம் | 230 |
| ஆறு வாய் | 191 |
| இடுகாடு | 87 |
| இடுபாசம் | 181 |
| இந்துபகலோன் | 161 |
| இந்து வெய்யோன் | 232 |
| இயலரங்கம் | 244 |
| இரணியன் | 216 |
| இரகுராமா | 216 |
| இரதி | 25 |
| இரத்தினங்கள் | 144 |
| இரத்தின பூஷணங்கள் | 195 |
| இராசகேசரி | 16 |
| இராகுகேது | 82 |
| இருவகைப்பேறு | 238 |
| இருவாட்சி | 245 |
| இருளும் பகலவனும் | 193 |
| இலட்சுமி கடாட்சம் | 61 |
| இளவரசு | 248 |
| இறப்பதொன்று கண்டதில்லை | 211 |
| இறை ஒன்று | 182 |
| ஈசனடியார் | 25 |
| ஈசனெழுத்து | 126 |
| ஈவறியார் | 235 |

| | |
|---|---|
| ஈஸ்வரி | 23 |
| உத்தமி | 21 |
| உந்தி | 48 |
| உமையாள் | 24 |
| உலக்கை | 150 |
| உறுக நஞ்சு | 74 |
| ஊர்வனங்கள் | 251 |
| ஊனுடல் | 225 |
| எண்பத்து நான்கு லட்சம் | 211 |
| எண்ணும் பதினாறு | 197 |
| எமபட்டம் | 241 |
| எமபுரம் | 117 |
| எழுமாமுனிவர் | 69 |
| என்றும் பதினாறு | 195 |
| ஏகமுகம் | 188 |
| ஏந்திழைமார் | 23 |
| ஏமப்பகை | 100 |
| ஏழுமுகம் | 178, 233 |
| ஐந்து முகம் | 118 |
| ஐம்புலன் | 41 |
| ஐம்முகனார் | 187 |
| ஒண்ணாதார் | 162 |
| ஒள்ளியதோர்கல் | 155 |
| ஒன்பது வாசல் | 212 |
| ஓங்காரம் | 88, 129 |
| கங்காள வேடம் | 24 |
| கஞ்ச மலர் | 232 |
| கடலேகொடுத்த கடு | 200 |
| கடிகை | 181 |
| கத்தூரி | 132 |

| | |
|---|---|
| தாங்காமல் | 230 |
| தாயில்லா | 66 |
| தாது | 259 |
| திங்கள் | 84 |
| திங்களணி | 298 |
| திட்டநிறை | 239 |
| துளிமீது | 93 |
| துடியிடிக்கும் | 142 |
| தேடுமறுகலை | 37 |
| தேவேந்து | 36 |
| நலமாலை | 92 |
| நாரணன் | 219 |
| நாராயணன் | 26 |
| நாலுவகை | 3 |
| நீதமுனி | 72 |
| நீதிவேகம் | 28 |
| நீர்மீது | 58 |
| நேமநிலம் | 171 |
| பங்கையன் | 118 |
| பங்கையன் விதித்த | 236 |
| பங்கையன் விதி | 284 |
| படிமீதில் | 92 |
| படியில் வரும் | 168 |
| படியிலில் | 209 |
| படியினில் | 223 |
| படியெவை | 116 |
| படைப்பவன் | 169 |
| பத்தியாங் | 2 |
| பரவுதமிழ் | 10 |

| | |
|---|---|
| பாரில் | 260 261 |
| பாங்குபுகழை | 226 |
| பாரில் | 44 |
| பாரினில் | 2 |
| பாரினிலமக | 118 |
| பாரினில் விந்து | 122 |
| பாரினில் அளி | 158 |
| பாரேசிற | 98 |
| பிறக்கில் | 261 |
| பிறப்புமிறப்பும் | 147 |
| புனலைடைத்து | 34 |
| பூசையரன் | 178 |
| பூட்டும் பணி | 36 |
| பூமீதில் | 60 |
| பூவில் செனனம் | 128 |
| பூவில் விரை | 133 |
| பூவெல்லாம் | 183 |
| பெண்ணதள | 62 |
| பொங்கிய தவம் | 208 |
| பொங்கும் | 71 |
| பொங்கும் தவத்தில் | 235 |
| பொங்குசின | 124 |
| பொறுமை | 106 |
| பொய்யது மெய் | 194 |
| மகவாசை | 16 |
| மகவுமலைய | 89 |
| மங்கையர் | 22 |
| மங்கையுடலில் | 8 |
| மங்கையர்கள் | 23 |
| மங்கபங்கன் | 170 |

| | |
|---|---|
| மதலை எண் | 125 |
| மருவான | 59 |
| மலைகள் | 146 |
| மன்னனர் | 62 |
| மன்னுயிர் | 284 |
| மாய பிணி | 249 |
| மாயாத சீவன் | 95 |
| மார்க் கண்டரிஷி | 119 |
| மார்க்கண்டன் | 129 |
| மாலும் அய | 192 |
| மாற்றம் | 168 |
| மிகவலுவுடை | 139 |
| முடுகிய | 152 |
| முன்னாளில் | 45 |
| முன்னாள் | 166 |
| முன்னுளதாம் | 4 |
| முன்னே | 147 |
| மூல்நடுவு | 6 |
| மூவரோ | 45 |
| மூவர் பயந்து | 65 |
| மெய்யனே | 98 |
| மேதினி | 61 |
| மைந்தன் | 102 |
| மைந்தன் கெஞ்சி | 221 |
| வஞ்சகமாய் | 281 |
| வணக்கமில் | 68 |
| வண்டுதொடா | 64 |
| வந்து எதி | 29 |
| வத்தவரை | 76 |

| | |
|---|---|
| வந்த அவர் | 252 |
| வந்த அணை | 219 |
| வந்து விழை | 225 |
| வரையது | 83 |
| வலியவர் | 84 |
| வலியவர் | 186 |
| வளியை | 13 |
| வாசம்புனை | 204 |
| வாசமேற்க | 41 |
| வாசநிறை | 229 |
| வர்லை மெய் | 248 |
| விசையான் | 201 |
| விதியீடு | 48 |
| வித்தால் | 200 |
| விரைமுளை | 101 |
| விந்தை | 227 |
| வெளிதான் | 165 |
| வேகமுடன் | 232 |
| வேண்டுஞ்சுக | 32 |
| வேதன்நமை | 72 |
| வேதனார் | 168 |
| வேதனே | 228 |
| வேளை நிறை | 40 |


**

| | | |
|---|---|---|
| சேவடி | | 57 |
| சேனாபதி | | 130 |
| சோமன் | | 171 |
| சௌபாக்கியம் | | 57 |
| தங்கத்தேர் | | 241 |
| தண்டிகை | | 241 |
| தத்துவம் | 56, | 126 |
| தந்தி | 54, | 112 |
| தந்திகந்தர் | | 289 |
| தபோதனர் | | 7 |
| தயித்தியர் | | 73 |
| தரணியுயிர் | | 215 |
| தருமசாலை | | 234 |
| தருமன் | | 172 |
| தவஞ்செய்யாப்போர் | | 192 |
| தமிழ்க்கேட்டிருப்போர் | | 234 |
| தமிழ்ச்சொல் | | 255 |
| தமிழ்நூல்ஞானம் | | 234 |
| தமிழ்மாலை | | 58 |
| தாபரம் | | 162 |
| தாரணி | | 168 |
| தாழைமலர் | | 49 |
| தாழ்குழலாள் | | 111 |
| தானம் | | 125 |
| திக்குபாலகர் | | 239 |
| திமிங்கலம் | | 14 |
| திரிபுரம் | | 141 |
| திரிபுர சங்காரம் | | 199 |
| திருச்சின்னம் | | 246 |

| | |
|---|---|
| திருநடனம் | 195 |
| திருநீறு | 184 |
| திருப்பாற்கடல் | 43 |
| திருமஞ்சனம் | 132 |
| திருமால் | 195 |
| திருவருள் | 52 |
| திருவிருத்தம் | 96 |
| திலகம் | 145 |
| திவாகரன் | 83 |
| துந்துபி | 240 |
| துடைப்பவன் | 169 |
| துருத்தி | 213 |
| துரும்பு | 189 |
| துளபம் | 240 |
| தூசளிப்போர் | 235 |
| தூலம் | 170 |
| தெய்வம் | 48 |
| தேடுமறுசுவை | 209 |
| தேவர்சுகபோகம் | 198 |
| தேவர் | 21 |
| தேவராசன் | 29 |
| தேவாங்கின்வடிவு | 212 |
| தொண்டர் உள்ளம் | 192 |
| தோத்திர விருத்தம் | 91 |
| தோன்றல் | 228 |
| நடிப்பவர் | 170 |
| நடுவன் | 246 |
| நந்தி | 89 |
| நந்தீசர் | 141 |
| நந்திபீடம் | 134 |

| | |
|---|---|
| நமன் மடிந்தான் | 197 |
| நவரத்தினம் | 57 |
| நவுதரிஷி | 109 |
| நளிர்ப்பாற்கடல் | 216 |
| நன்றி மறவாதோர் | 233 |
| நாடகசாலை | 244 |
| நாதாந்தசக்தி | 184, 204 |
| நாரணன் | 219 |
| நாராயணன் | 9, 136 |
| நானிலம் | 98, 108 |
| நான்முகன் | 136 |
| நிமலனார் | 101 |
| நியமம் | 171 |
| நிறைந்தபரன் | 202 |
| நீர்ப்பந்தல் | 234 |
| நீர்மேவுகங்கை | 200 |
| நீறு பூசி | 229 |
| நூறுவயது | 102 |
| நெடியோன் | 158 |
| நெடுமால் | 67 |
| நெற்றிக்கண் | 190 |
| நேரிடும் பாலில் நெய் | 205 |
| பகடு | 144 |
| பகலவன் | 167 |
| பகைவினை | 231 |
| பங்கையன் | 118 |
| பச்சை வண்ணமேனி | 217 |
| பஞ்சமாபாதகத்தோர் | 205 |
| படியினில் | 209 |
| பட்டாபிடேகம் | 239 |

| | |
|---|---|
| பன்னாலொன் | 169 |
| பதினாறு | 123 |
| பரஞ்சுடர் | 51 |
| பரஞ்சோதி | 156 |
| பரதேசி | 20 |
| பரமேசுவரி | 181 |
| பரலோகம் | 73, 129 |
| பரனே அபயம் | 165 |
| பராசக்தி | 5 |
| பராபரம் | 56 |
| பரிமளம் | 57 |
| பருப்பதம் | 173 |
| பலநாளைத்துக்கம் | 213 |
| பவளமல்லி | 131 |
| பவுசு | 175 |
| பழையகணக்கு | 248 |
| பாங்கினம் | 112 |
| பாதகன் | 120 |
| பாதகம் நீங்கும் | 198 |
| பாதத்தண்டனை | 226 |
| பாதம் பணிவோம் | 198 |
| பாதாளலோகம் | 150 |
| பாதிமதி | 127 |
| பாம்பணிவேணியர் | 55 |
| பாம்புரு | 82 |
| பாரமலை | 177 |
| பாரி | 80 |
| பாரிசாதம் | 132, 245 |
| பார்ப்பதியாள் | 19 |

| | |
|---|---|
| பார்வதி | 164 |
| பாலின் நெய்போல | 221 |
| பாவத்திரள் | 167 |
| பாவபுராணம் | 286 |
| பாழுங்கிணறு | 111 |
| பாற்கடல் | 78 |
| பிஞ்சகர் | 169 |
| பிண்டம் | 121 |
| பிதிர் | 127 |
| பீதாம்பரம் | 146, 239 |
| புட்பராகம் | 144 |
| புரந்தரன் | 62, 164 |
| புலத்தியர் | 69 |
| புவனம் | 6 |
| புனித நூல் | 126 |
| பூசித்தகல் | 160 |
| பூசை கொண்டகல் | 180 |
| பூட்டுங்கயிறு | 185, 247 |
| பூமாது | 215 |
| பூமாலை | 56 |
| பூமிதானம் | 214 |
| பூலோகம் | 214 |
| பூலோகலட்சுமி | 106 |
| பூவில் களம் | 215 |
| பெண் சாதி லட்சணம் | 108 |
| பெரியோர் கோபம் | 222 |
| பொங்கரவம் | 118 |
| பொங்குந்தமிழ் மாலை | 119 |
| பொய்சாட்சி | 80 |
| பொய்யது மெய் | 194 |

| | |
|---|---|
| பொய்யில்லார் | 283 |
| பொருளோன் | 49 |
| பொல்லாத பாலன் | 120 |
| பொற்கதவு | 243 |
| பொற்கிரீடம் | 145 |
| பொற்குமிழ் | 144 |
| பொற்றேர் | 112 |
| பொன்னுருவம் | 216 |
| பொன்னுடல் | 178 |
| பொன்னுலகம் | 61, 169 |
| போகம் | 121 |
| போதமுண்டு | 207 |
| மகரம் | 178 |
| மகரவிழியோன் | 228 |
| மகத்துவம் | 63 |
| மகாதேவன் | 181 |
| மகாலிங்கம் | 129 |
| மகேசுவரன் | 152 |
| மங்கைபங்கன் | 159 |
| மச்சமுனி | 14 |
| மணவறை | 115 |
| மணிமண்டபம் | 244 |
| மணிமுடி | 168 |
| மண்டலம் | 145 |
| மதனன் | 22 |
| மந்திரம் | 54 |
| மயலை மூட்டி | 236 |
| மரகதம் | 144 |
| மரணமிலாபாலன் | 195 |
| மருகன் | 114 |

| | |
|---|---|
| மலர்த்தோட்டம் | 131 |
| மலரடி | 187 |
| மாசாணம் | 28, 210 |
| மாசித்திங்கள் | 100 |
| மாணிக்கம் | 144 |
| மாதவம் | 44 |
| மாமறலி | 116, 220 |
| மாமியார் | 125 |
| மாரி | 40 |
| மார்க்கண்டன் | 6, 125 |
| மாலோன் | 122 |
| மிருகம் | 35 |
| மிருகண்டன் | 36 |
| மிலேச்சன் | 120 |
| முக்களி | 80 |
| முகூர்த்தம் | 111 |
| முந்தைவிதி | 127 |
| முந்துசொர்க்கம் | 197 |
| முந்நூல் | 186 |
| முப்புரம் | 197 |
| முருகேசன் | 136 |
| முழுமுதல் | 160 |
| முளரி | 48 |
| மூங்கில் | 120 |
| மூலிகை | 53 |
| மூவர் | 45, 121 |
| மூவர்முதல் | 209 |
| மூவராணை | 237 |
| மூன்றுபுரம் | 189 |
| மூன்றுபுவனம் | 102 |

| | |
|---|---|
| மெய்ப்பொருள் | 158 |
| மேகம் | 40 |
| மேரு | 46 |
| மேவு புகழ் | 154 |
| மொழிக்கலவை | 175 |
| மோகன மாலை | 146 |
| மோகினி | 27, 79 |
| மோட்சம் | 110 |
| யோகநிட்டை | 26 |
| யோகநெறி | 57 |
| யோகம் | 121 |
| வசனம் | 160 |
| வசிட்டர் | 29, 69 |
| வச்சராங்கி | 239 |
| வஞ்சவினை | 198 |
| வடகனல் | 135 |
| வடகிரி | 136 |
| வண்டு தொடரமாலை | 64 |
| வந்த குற்றம் | 227 |
| வடவரை | 190 |
| வட்டவுலகு | 182 |
| வரம்கேட்போம் | 218 |
| வராகம் | 49 |
| வல்லவன் | 182 |
| வளமேவும் இந்து | 202 |
| வன்னி | 34 |
| வாகனம் | 78 |
| வாசவன் | 68 |
| வாசுகி | 81 |

| | |
|---|---|
| வாயு | 45 |
| வாரணம் | 219 |
| வாலிசுக்கிரீவன் | 73 |
| வாவிகூபம் | 234 |
| வானதுந்துபி | 61 |
| விஞ்சை | 48 |
| விஞ்சையர் | 73 |
| விஞ்சை விதிநூல் | 201 |
| விண்ணிமைக்கார் | 190 |
| விண்ணுலகம் | 115 |
| விண்டுவடிவு | 60 |
| விதரணம் | 245 |
| விதி | 113 |
| விதிநோய் | 225 |
| வித்தகன் | 123 |
| வித்தாரம் | 36 |
| விந்தையுடல் | 251 |
| வியாதிவறுமை | 206 |
| விரிஞ்சன் | 39, 247 |
| வில்வம் | 132 |
| வில்வமாகி | 229 |
| வீரப்பராக்கிரமம் | 171 |
| வெண்தரளத்தோள் | 197 |
| வெய்யபிணிகள் | 105 |
| வெய்யோன் | 161 |
| வெள்ளித்தேர் | 241 |

| | |
|---|---|
| வெள்ளிமலை | 144 |
| வெள்ளிவரை | 100 |
| வெள்ளைமதயானை | 63 |
| வேதசாத்திரம் | 126 |
| வேதன் | 9 |
| வேதா | 127 |
| வேதாந்த பாலகன் | 205 |
| வேதாளம் | 218 |
| வேள் | 30 |
| வைகுண்டம் | 55, 177 |


***

உ

ஓம் நமச்சிவாய !

# மார்க்கண்டேயன் அம்மானை

சுவடி எண்: 1566

அம்புலியும் அக்கணிந்து கொன்றை சூடு
அரனிடத்தில் வீற்றிருக்க உமையாள் பாலன்
கும்பமுலை தெய்வானை வள்ளிபங்கன்
மேற்குரு பரனார்க்கு முன்புவந்த
தும்பிமுகன் சீரடியைத் தொழுது வாழ்த்தி
சொன்னதமிழ்ப் பெருகிநிற்கும் துலங்குஞ் செல்வம்
செம்பொனுமை விமலிசிற்சோதி சாக்கதினம்
நினைவில் மறவாமல் சென்னி சேர்ப்பாம் (1)

சூதமாமுனிவர் வாக்கில்
துலங்கிய கிரந்த நூலால்
ஆதியாம் நிசபுராணம் அரன்மகன்
கெடா (த ருளும் நல்) வாக்கு
சோதியா விவேகத் தோடே
துலங்கி யவரைப் பாடல்

---

அடிக்குறிப்பு:-

அக்கணிந்து - உருத்திராக்கம் அணிந்து
தும்பிமுகன் - யானை முகன் (விநாயகர்)
துலங்கும் - சிறந்துவிளங்கும்
விமலி - (குற்றமற்ற) பார்வதி
கிரந்த நூல் (வடமொழித் தமிழ்) எழுத்தாலாகிய நூல்
புராணம் - பழைய நிகழ்ச்சி கூறும் பழங்கதை.

நீதியாய் அடிபோற்றிக் கொள்பவர்
 நிறைநலம் பெருகு வாரே (2)

பாரினில் வினை(யொடு) வியாதி
 பஞ்சமா பாவம் தீரும்
சீரினில் மனைவி பாலர்
 செல்வமும் வயதும் உண்டாம்
நேரினில் நிமலன் முன்னாள்
 நினைவு மார்க்கண்டர்க் காக
தாரினில் சொன்ன வாக்கு
 நலங்கெடா துண்மை தானே! (3)

பத்தியாய் (இ)லிங்கத் தோடே
 பகவானும் எழுந்தான் பாரில்
உத்திரம் "தூணி ணோடே"
 உலாவிய சிங்கம் போல
சத்திய சிவ(னின்) புராணம்
 தன்மனம் வைத்துள் ளோர்க்கு
எத்திய யமனார் வாதை
 அடியார்க்கில்லை நரகம்போகார் (4)

---

அரும்பத உரை:-

பஞ்சமா பாதகம் - கொலை, பொய், களவு, கள்ளருந்தல், [குருநிந்தை
பாலர் - பிள்ளைச்செல்வம்
நிமலன் - கடவுள் (சிவபிரான்)
மார்க்கண்டர் - மிருகண்டு முனிவருக்கு மருத்துவதியிடம் பிறந்தகுமரர்
சிவபூசை புரிந்து (யமபயம் நீங்க) சிவன் அருள் பெற்றவர்
தாரினில் - தாரணி, பூமி
பகவான் - அவாவின்மை, ஈச்சுரத்தன்மை, கீர்த்தி, செல்வம். ஞானம், வீரியம் எனும்(பகம்)ஆறு குணம் உடைய பரமசிவன்.

தங்கிய தருமம் சேரும்
தரணியில் பாவம் எல்லாம்
பொங்கியே எரிக்கும் இந்த
பூரண சரீர பா லனைக் கூற
'அங்கையின் நெல்லி போல'
யாவரும் உகந்து சொன்னால்
இங்கிவை இருஞ்சீ ரோதும்
இவர்நம் மில்தேவ ராவர் (5)

நாலுவகை ஏழுகின்னம் நரரேமிக் கநானிலத்
திலறிவு தவமாம்கேள் வியாரும்
வாலை வயதே வையகமும் அழிவில்லாத மார்க்கண்டன்
சிவபூசை வழாமை நீதம்
தாலமதி (இ)லக்குமி நாராய ணன்தான்
(தான்) உரைத்தே துதித்தான் குமரவாக்கு
சீலநெறி அறிவுடையோர் மனதிற்கொள்வர் சிவனருளால்
திருவளரும் அத்திருமால் யோகம் (6)

---

அரும்பத உரை :-

பூரணசரீரபாலன் - மார்க்கண்டன் 'என்றும் பதினாறு' என்ற அருள் பெற்ற சிரஞ்சீவி.
உகந்து - மகிழ்ச்சியுடன்
இருஞ்சீர் - (பெரிய) நிறைந்தபுகழ்.
நாலு வகை - அரசர், அந்தனர், வணிகர், வேளாளர்.
ஏழுபிறப்பு - தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்.
கின்னம் - துன்பம்.
நானிலம் - நான்கு நிலம் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்,
வாலை வயது - இளம் வயது
தாலமதி - உலகிற்சிறந்த
சீலம் - நற்குண நற்செயல்
யோகம் - பலன்

முன்னுளதாம் முச்சுடர் போலின்ன நடுமூவர்
செயல்அஞ் சுவையும் புந்திவேறோ
கன்னல்ருசி தமிழின்நாற் கவிமுன்யானும் கதிரவன்முன்
மின்னெனவே கருதி புராணமாக
சொன்னதிவை அறிவுடையோர் மனதிற்கொள் வர்சுரை
புனல்மேரு அடைவதென்றால்
என்னிலமும் புகழ்பெருகும் கங்கைபோல் - இயல்புடையோர்
இருஞ்சீரின் மதுரங் கேட்பர்

## [ அவையடக்கம் ]

சாதாரண வருடம் ஆனிமாதம் இருபத்தியிரண்டாந் தேதி குரு வாரம் (வியாழக்கிழமை) நாள் அசுபதி (அஸ்வினி) அமிர்த யோகத்தில் மார்க்கண்ட அம்மானை எழுதத் தொடங்கினது.

* * *

---

அரும்பத உரை :-

முச்சுடர் - ஞாயிறு, திங்கள், தீ.
கன்னல் - கரும்பு
நாற்கவி - ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி.
கதிரவன் - சூரியன்
மின் - மின்மினிப் பூச்சி
மேரு - இமயமலை
மதுரம் - இனிமை

அரி - ஓம் - நன்றாக

குரு வாழ்க குருவே துணை.

# மார்க்கண்ட அம்மானை.

சீர்பெருகும் பூவிற் சிறந்த திரு மாது
பார்பெருகு நீதி பராசக்தி நாமாது
கார்பெருகு மேனிக ளபநெடு மால்வேதன்
அரனார் இருபாதமன் பாகவே தொழுது
அறம்புகழும் மார்க்கண் டன்மகிழ் புராணகதை
வஞ்சமற்ற மெய்யன்மார்க் கண்(டன்) மோட் சகதை
தஞ்சமிகு சீர்மதுரம் சங்கரனே காத்தருள்வாய் !
மலைமகளைப் பாகவைத்(து) வாரணனை ஈன்றவனே !
கலையறிவால் நின்புகழ்க் கருத்துகந்து பாடுதற்கு
சிந்தை களி கூர்ந்து சிவனே . திருவருளால்
எந்தன்தனைக் காத்து இரட்சிக்க வந்தருள்வீர் !
சக்தியிட மாகிநின் றறச் சொரூப மதாய்
பாலிற்(சிறந்த) நெய்போல் பாரெங்குந் தானிறைந்து
ஆலவிதை அவ்விதையு மானமரம் வேர்விழுதாய்

---

அரும்பத உரை :-

பூ - பூமி
நாமாது - சரஸ்வதி
கார் - கருநிற மழைமேகம்
களபம் . கலவைசாந்து
வேதன் - பிரமன்
வஞ்சம் - கொடுமை
சங்கரன் - நன்மையைச் செய்யும் சிவன்
வாரணன் - யானைமுக விநாயகர்
கலை - கல்வி
சொரூபம் - இயற்கைத் தன்மை (உருவம்)

அணுவுக் கணுவுருவாய் அண்டரண்ட மூடுருனே !
தனுவுக்கு நாடிநின்ற சக்திசிவ சங்கரம்
ஆயிரத்தெட் டண்டம் அடங்கலும் மண்ணாகாசம்
தாயிரக்கம் போற்சகல உலகீர் ஆகம்
நாலாயிரத் தின்புவனம் நந்தியஞ்சு பெருமுதல்
பாசத் திரளுமாறா நும்சக்தி நிறைதேவர்களும்
இந்திரமும் சேய்நார தரும்தும்புரு சப்தரிஷி
அருந்தவசி னய்யற் அறுபத்து நாற்கோடி
கருந்தவசின் முட்டை பையின் கான
குருவி ஷித்து முதல் ......... ........
கம்புளியி னந்தன் கிருமி காதல் நூலதனுள்
நம்பியிருக்க நளினவண்டு ரூபமதாய்
சந்தேகம் அக்குகையில் தங்குபுறா வேட்டுவனாய்
இந்திரத்தின் கொப்புறான(க)ப் பொடியாய் நொறுக்கி
சுந்தரத்தின் தண்ணீர் தெளித்திவைமேல் தூவ
மேல்வருகின் றானமூட மேவும் பிறவிமெத்த
கோலத் தவசம்பார் எறும்புகூட்டு முனைகுஞ்சி(யதாய்)
கலத்தேரைத் தொகை கனத்த மயிலினத் தோகை
மலத்தோ டனையும் வாழ்பறவை மச்சம்
மருதமரம் புணக்கூர் வாசம்(புழு) உள்ளரையாய்

---

அரும்பத உரை :-

அண்டரண்டம் - எல்லாவுலகமும்
தனு - உடல்
பாசத்திரள் - ஆணவம், கன்மம், மாயை,
தும்புரு - (வீணைமீட்டும்) ஒருகந்தருவன்.
சப்தரிஷி - ஏழுமுனிவர், இவர், அகத்தியர், ஆங்கீரசன் கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன் (அல்லது) அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன் எனவும் கூறப்படுவார்.
தவசம் - தனியம்
மச்சம் - மீன்

வாதசிப்பி நத்தைமலர் விரைநேர் மரமாய்
தாபரத்தில் சங்கம் சகலவித்தை மந்திரமும்
நீபரத்தி லாட்டம் நிறைந்தெங்குந் தானாகி
எட்டிரண்டு மூன்றாய் இசைசேர் சுழிமுனையாய்
தொட்டுநின்று ஆட்டும் அறிவே சுடரொளியே!
பெண்ணாகி ஆணாகி பெண்ணாணொரு விரையாம்
விண்ணாகி பாரய் வியனாய் வினைவிளைவாய்
கால்நடையும் கையுங் கணதொழிலுங் கண்ணோக்கம்
பால்நடையும் வாயும் பசிவயிறு நாசி செவி
திருவருளின் ஆட்டம் திருவருள்விட் டேயகன்றால்
மறுவளரும் வல்லமையும் மாய்கைவிஞ்சைச் சூதுகளும்
ஆடுகின்ற சூத்திரங்கள் ஆடா மலேகிடக்க
ஓடுகின்ற சூட்சுமஉ பாயம் அறிபவனே!
அங்கத்தி லங்கம் அடக்கிவெளி யில்விட்டு
அங்கஞ் சிறந்தரனே உன்தாள் மறவேன்!

## விருத்தம்.

தந்தை யிவனோ விந்துனக்குத்
தாயா ரிவளோ மாதுநிறம்
அந்தமி வையோ ரிரண்டிற்குள்
ஆவி யெவையோ திரையின்வழி
வந்ததி வையோ இருபிரிவு
வருமுன் விதியோ விதிபிறகோ
முந்தெவை யெவையோ எவரறிவார்
முதலே அறிவுள்ளாள் சரணம்

---

அரும்பத உரை:-

தாபரம் - பூமி
சங்கமம் - கூடுமிடம்
சுழிமுனை - இடைபிங்கலையிடை நாடி
வியன் - பெருமை
சூத்திரம் - ஒழுங்கு (இயந்திரம்)
விந்து - சுத்தமாயை
விதி - புண்ணியப்பயன்

## நடை

மூல நடுவு முடிவிவை விரைவேற் [illegible]ளையாய்
சீலநிறை தந்திமுகத் தெந்தை செங்கையினால்
பச்சைநிற செங்கனகப் பாதந்தனை வணங்கி
இச்சைபுனை மார்க்கண்டன் இயல்புரைக்கும் மதுரம்

## விருத்தம்.

மங்கை யுடலில் ஆடவனும்
மறைய ஒளித்தச் சொரூபமிக
தங்கி யடையும் வயிறதனில்
தயவால் உதிரப் பால்திரட்டிக்
கொங்கை பெருக இடமாக
குறிசேர் உணர்வு முதல்தேடி
குங்கும வெளியில் வருஞ்சேரனாம்
இவையோ ரருளின் கணபதியே!

## நடை

ஓராறுக் கப்பால் உகந்தவெளி கமலிக் கப்பால்
சீராறு வட்டம் சிறந்த மனையிலை ஐயந்தாம்
ஆறுமுகம் ஒருருவாய் ஆறுசம யங்கள் எங்கும்

---

அரும்பத உரை :-

தந்தி - தந்தத்தையுடைய யானை
கனகம் - பொன்
சமயம் ஆறு - சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்தியம், கௌமாரம், இவைதவிர வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம், இவையன்றி புறச்சமயம் ஆறும் உண்டு அவை உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாச்சாரியம் (இது சைவர் கொள்கை)

மாறியொரு பொருளாய் மேவி வெளியி லடங்கும்
கந்தனெனப் பூவாங்கும் கருணை நெடுமால் மருகன்
அந்த நிறைந்த அழகு திருமார்பன்
நீதத் திலோங்கும் நிறைந்த திருவுருவாய்
நாதத்தில் வேதநளி னநாரா யணற்கு
தங்கை எனவோங்கும் தரணிநிறை கௌரி
மங்கையருள் கந்தன்மலர்த் தாள்கடாக்ஷம் தரும்

## விருத்தம்

ஒழுகி அரையில் விழும்விந்தில்
உதிரம் திரண்டு மகவாகி
நழுவி வருக புவிநிறைந்து
நமதென்று இவரை பலபேரும்
தொழுது அருகில் மகிழ்ந்திருப்பார்
துடியளவு தவறி விழும்போது
அழகும வற்கருள் முந்துமுயிர்
அறியா தறிவீர் ஆறுமுகனே

## நடை

ஒருவர் அறியாமல் ஒளிக்க விந்தை ஒரறையில்
பருவம் மேவரறியோ பாரில் விடுநூல் வேதன்
வெண்தாமரை வேதன் தன்மனைவி நாமமிது
தெள்ளு தமிழ்ப்பொருளே தேவி சரஸ்வதியே
உரமும் புகுந்து உயர்நெறி நாதாந்த
மேல்வெளி யில்விளங்கும் புகழ்மாதே !

---

அரும்பத உரை :

கௌரி - பார்வதி
கந்தன் - முருகன்
கடாட்சம் - கடைக்கண் பார்வை
உரம் - மார்பு
நாதாந்தம் - ஞான நெறிகளில் ஒன்று

சீலத்தமிழ் உந்தன்செயல் முருகன் வாக்கிதுவாம்!
சாறுநிகர் செவ்விதர ணிநிறைபூ மாதே!
சீரிலுறை மாது சிறப்புடனே காப்பாமே!

## விருத்தம்

சொரூப மெவையும் உமைமாது!
துலங்கு மழகே திருமாது!
அரூப மெவையும் வசனப்பொருள்!
அதனில் நினைவே நாமாது!
பருவ மூவர், மூவர் தோளில்
பகரில் அடியும் நடுமுடியாய்!
உருவில் எவையும் அபயமென
உதவும் மலர்த்தாள் பணிவேனே!

## நடை

பரவுத்தமிழ்ப் பெருகும் பரவுரைப் போதகங்கள் முன்னே
ஆடரவம் பூணாகம் ஆடுகின்ற வாறு ரைத்தேன்
சூரியன் தருங்காந்தி துலங்கு கமலம் விரியும்
பாரிலெருக் கிலையும் பண்புடனே பூத் தோற்தும்
ஞான கலைவேகம் நல்லோரைக்கு எதிராய்
தானங் கொருஉண்மை தான்பேசும் வார்த்தோர்க்கும்

---

அரும்பத உரை :

வாக்கு - சொல் (அசரீரி) சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என நான்கு வாக்குள
சாறு - தேன் போன்ற இனிமை
திருமாது - இலக்குமி
பரவுதமிழ் - புகழ்மிக்கத்தமிழ்
போதகம் - சிங்கம்
அரவம் - பாம்பு
காந்தி - ஒளிக்கிரண அழகு
கமலம் - தாமரை
ஞானம் - தெளிந்தஅறிவு

பொற்குடந் தன்னில் புகன்றெழுதுஞ் சித்திரத்தை
நட்புடனே கண்ணி லானநான் கண்டே நின்றதோற்கும்
தங்கநிறை காணுமந்தக் கட்டில் தராசில் மெல்ல
வங்கனமாய்க் குண்டுமணி வந்து கிடந்தோற்கும்
கந்தன் கிருபை கடாட்சமுள வாக்கு
செந்தமிழிற் என்) புன் சொல்லும் சித்திரமாகப் பொறுப்பீர்
பட்ச நிற புட்பவன பஞ்சாட்சர வேதன்
(இ) லட்சு மிநாராயணன்தன் நளின சுந்தரபதம் மறாமல்
நந்தி வர்க்கந் தன்னில் நளினசுந்தரபதம் மறாமல்
சிந்தை பரமெய்ஞ் ஞானம் சீல முனிவன்தன் சீடன்
காளியுடன் வாதாடும் கறைகண்டன் தாள்பணியும்
மேழிக் கொடியுடையோன் விழிப்பனூர் வாழ்கின்றோன்
காரானன் பூமதலை காட்சிதரு குலத்தோன்
சீரான ஞானநெறி சிந்தை வணக்கமுள்ளோன்
தரும நெறி முத்துக் கூத்தன்தரு புதல்வன்
நன்மை தமிழோதுகின்ற (இ)லக்குமி நாராயணனாம்

## விருத்தம்.

காலமதில் ஏறாஇளமை தன்னில் மிக்க
தவமிதுவாம் புகழ்பெரிது மனிதர்க் கெல்லாம்
சீலநெறி மார்க்கண்டன் மதுரங் கேட்கில்
திருவருளால் அகத்தின் இருள் பாவம் நீங்கும்
வாலமதி சூடி அரன்சொன்ன வாக்கால்
மதிபெருகும் ஆயுளும் பெருகி நிற்கும்

---

அரும்பத உரை :-

வங்கணம் - நட்பு(டன்)
கிருபை - கருணை
பஞ்சாட்சரம் - நமசிவாய என்ற ஐந்தெழுத்து மறை.
மேழி - கலப்பை
மதலை - குழந்தை
வாலமதி - வெண்மதி(பிறை)
மதி - அறிவு

**தாலமதி (இ)லக்குமி நாராயணன் தானுரைத்தே துதித்தான் குமர வாக்கு**

## நடை

தங்குபுகழ் மார்க்கண்டன் கதையைக் கேட்டவர்க்கு
செங்கை தவம் பூவுலகில் செய்யாது இருந்தாலும்
சிந்தைபக்தி நேயம்சிவ கிருபை வாக்கதனால்
கந்தனவன் நற்றாளை கருதுவோர்கள் தான் பெறுவார்!
வஞ்சனைகள் நோய் வறுமை வாராது! பாவம் அறும்;
கஞ்சமுகமாம் வயது காசினியில் தீர்க்கமதாம்
வாக்குடனே ஈசர் மகிழ்ந்து தவமீதெனவே
மார்கண்டனுக்கு வரமாம் தருமகதை
நேசமுடன் இப்பால் நிசமதுரங் கூறுகிறேன்
கடவூர் தனிலே கருணை நெறி வேந்தன்
திடமாஞ் சுகவேதன் சிறந்தரசு செய்யுமன்னாள்
வேதநிறை வேள்வி மிகுந்த சிவதவமும்
நீதிநெறி யோகம் நிறைஞான தெய்வநெறி
சிவபூசை மீறா சருகை(யும்) கிறுகை
தவமிரி யாதவர்கள் தானிருக்கும் நாளிலே
வேத குலபிராமன் மச்சமா ரிஷியும்
நீத சமுத்திரத்தில் நீண்ட தடாகமதில்
தவமோக மாமுனியும் தானுமச் சாதனைய்யாய்

---

அரும்பத உரை :-

தாலமதி - நாவன்மைமிக்க அறிவு
குமரவாக்கு - முருகன் அருளிய வாக்கு
தவம் - பற்று நீங்கிய வழிபாடு
கடவூர் - திருக்கடையூர், சிவத்தலம், மயிலாடுதுறை வட்டம் வீரட்டானம் (கோயில்) யமனை (மார்க்கண்டருக்காக) சங்காரம்புரிந்த விசேடச்சிறப்புடையது.
சுகவேதன் - சிற்றரசன்.
மச்சமாரிஷி - குச்சகமுனிவரின் புத்திரர் பெயர் கவுச்சிகர் அவரே மச்சரிஷி

சிவயோக மாமுனி(வன்) சிறந்த வளிதிறந்து
நாடி யீரைந்(தில்) நடத்துங்கால் பத்தாகி
ஓடுங்கா( ) ரெண்டவற்றுள் ஓடாத காலொன்று
ஆடுங்கால் தன்னையடக்கி அறியதனுள்
தேடுங்கால் ரெண்டவற்றுள் தேடாத காலொன்று
கூடுங்கால் கூட்டிக் குவளை விழிதிறந்து
காலில் நடவாக் கருத்தை நடைபழகி
மேலில் கருத்து வினவாமல் உட்புகுந்து
தந்திர மரமேறி தானதன்றித் தனித்து
மந்திரமாம் யோகம் அளந்தறி வேயறிவாய்
அப்புக் கடலில் அமர்நாள் நிறைவாய்
குப்பை நிறைதபசு கொண்டிருக்கும் நாளிலே

## விருத்தம்.

வளியை அடக்கி வளியேற்றி
வளரும் இடைகலை சுழியாய்
வெளியி லிருத்தி வெளியேற்றி
விமலன் முன்தசக் கரத்தில்
சுழியை இறக்கிச் சுழிமுனையில்
துலங்கும் எழுத்தே நடுநாதம்
ஒளியில் விழித்து ஒழிவாகி
உறுதி தபசு புரிநாளில்

---

அரும்பத உரை :-

வளிதிறந்து - சுவாச பந்தனஞ் செய்து
காலில் நடவாக் கருந்து - நாமேல் நடந்த அனுபூதி நிலை
அப்பு - தண்ணீர்
குப்பை - கூட்டமான
இடைகலை - இடமூச்சு (சந்திரகலை)

## நடை

தங்கு திமிங்கலமுன் தாரதிமிங்கல மீன்
பொங்கு லட்சமீன்கள் புடைசூழ்ந்திரு புறமும்
எங்கும் மீன்துள்ளி இடைவிடாதே திரண்டு
கங்கை தனில்துள்ளி கௌடஅலை சிதற
மேல்நனைய மீனங்கள் மிதந்து விளையாடி
சீரனைய மச்சமுனி செய்யுந் தவத்தருகே
எதிர்நீந்தி மீனங்கள் இயல்பாய் வருகிறது(ஆல்)
சதிர்நெஞ்சம் புலப்ப தாரின் தவமுனிவன்
வாசதவமுனிவன் வாசமலர்க்கண் விழித்து
பாசநிறைமீ னங்கள் தன்னைப் பார்த்தான் தவமுனிவன்
மச்சமுனி பார்க்கையில் மச்சம் அறிவுதங்கி
இச்சைத் திமிங்கலம் இன்பத் திமுங்கலமும்
வந்து முனிவன் மலர்த்தாள் தனைவணங்கி
சிந்தை மகிழ்ந்து சிறந்தெதிர் நின்றதுவே
கடலில் மகரம் கருணை அறிவாய்வணங்கி
திடலில் எதிர்நின்ற திடங்கண்ட மாமுனிவன்
இந்தக் கடலில் இயல்பாகவே நீங்கள்
சிந்தையுடன் திரிந்தீர் சேனையெனப் பொற்சுவடாய்
உங்கள் குலத்தார் உங்களைச் சூழ்ந்து நின்ற
தங்குகன மகர மதன வளமுஞ்சொல்லும் என்றான்
மீன் பாஷையாலே விளம்பி மகாமுனிவன்
மீன் பாஷைகேட்டு மிக அறிவு மீனங்கள் சொல்லும்

---

அரும்பத உரை :-

தாரம் - மனைவி
கௌடஅலை - ஆபத்தைத்தரும் வஞ்சக அலைநீர்
மச்சமுனி - கவுச்சிகர்
சதிர் - பெருமை
புலம்ப - வருந்த
மகரம் - சுறாமீன்
திரிந்தீர் - அலைந்தீர்
சேனை - படை
பொற்சுவடு - பொன்னிறம்
மகரம் - சுறாமீன்
மதன - இன்ப
விளம்பி - சொல்லி
மீனம் - மீன்

அய்யா ! அடியேன் அணிபெறத் திமிங்கலமாம்
மெய்யீர் என் பாரியின் பெயர் மீனே திமிங்கலமாம்
எங்கள் தனைச் சுற்றியிருந்த நூறாயிர மீன்
தங்கும் எந்தன் பாலகரும் தன்பாற் பிள்ளைகளும்
பாலகியும் பாலகரும் பாலகியார் பூட்டன் பூட்டர்களும்
ஓலரியும் ஒட்டியாளும் ஒட்டிவாய்க் கற்றவரும்
என்னைப் பிரியாதிவர்களுடனே அடியேம்
உன்னிடத்தில் வந்து கண்டேன் ஓங்குகரும பிஞ்சுகுலம்
என்றும் தருமம் இயம்பு மகாமுனிவன்
அன்று மீன்தன்னை அனுப்பி அதிசயமாய்

## விருத்தம்.

அடக்கும் விதையைத் தாவரங்கள்
அதனையடக்கும் விதைபோல்
உடக்கும் போகமதனை அடக்கும்
முடக்கை யடக்கும் மகன் போகம்
சடக்கை யடக்கும் கண்மாய்கை
தானே அறிவதுமவை யடங்கும்
அடக்கும் ஆசை மனதடக்கும்
அடரும் மனதே சனக்கூட்டம்

---

அரும்பத உரை :-

பாரி - மனைவி
நூறாயிரம் - இலட்சம்
பூட்டன் - பாட்டன்தகப்பன்
ஓலரி - சிறிய மீன்
ஒட்டிவாய்க்கற்றவர் - வஞ்சினங்கூறிய மீன்
உடக்கும் - மெலியச்செய்யும்
முடக்கை - அடக்கம்
சடக்கு - செருக்கு
அடரும் - நொய்மையான

## நடை

மகவாசை மூவர்மனது தனைக் கலக்கும்
மச்சத்தைப் போலே வளர்ந்த சனக்கூட்டமதாய்
இச்சையுடன் நாமும் இருந்து சுகம் பாராட்ட
காமக் கடலைக் கருதி அளவிட்டதின்பின்
நேமக் கடலில் நிலைபார்த்த பசுநிலை
கண்டுவிடவேணும் இன்பம் கண்டுவிடாதே வெறுத்தால்
அண்டி மனதில் அணுகிப் புகுந்திருக்கும்
உண்டு ருசிகண்டு உலகில் வெறுத்ததொப்பாம்
மண்டும் இந்த ஆசை மயக்கை செலுத்துதற்கு
மாதர் புணர்ச்சி மதனவித மன்னரும் சூழ
நீதர் எங்கை என்று நெறிமுனிவன் பார்க்கையிலே
செங்கைதனில் மன்னன் திருமாது அணிகரம்
தங்கு தருமன் சீர் ராசகேசரியாம்
மன்னன் தனக்கு மனைவியர்கள் ஆயிரமாம்
கன்னல் மதன்போல் கருணை மகிழ்ச்சியினால்
மங்கையர்கள் ஆயிரம் பெறமங்கையர்தம் வயிற்றில்
பொங்குபுகழ் ஆயிரமும் பெண்களாய்த்தான் பிறந்தார்
வந்து பிறந்த மகவுகள் ஆயிரமும்
சிந்தை நிறை மன்னன் சிறப்பாகவே வளர்த்தான்
மாதர் பருவம் வளர்ந்த பெண்கள் ஆயிரமும்
நீத மணவாளர் நிறைந்த தொரு ஆயிரமும்
வந்து நிறைந்ததன்பின் மங்கையர்கள் ஆயிரமும்
கந்தம் நிறைந்த கலியாண மோர் முகூர்த்தம்
சூட்டுவோமென்று மன்னன் தோகையரை வைத்திருந்தான்
சூட்டும் மணாளர்களோர் ஆயிரத்துத்தொண்ணூறு

---

அரும்பத உரை :-

நேமக்கடல் - (வேலி)நியமக்கடல்
பசுநிலை - உயிர்இயல்பு    மதனவிதம் - இன்பவிளையாட்டு
நீதர் - நன்னெறியாளர்    கன்னல் - கரும்பு
மகவு - குழந்தை    (மாதர்)பருவம் - இளமை(பருவம்)
கந்தம் - சந்தனக்குழம்பு வாசனை
முகூர்த்தம் - மூன்றேமுக்கால் நாழிகை(நல்லநேரம்)
அதாவது இருபத்தைந்து நிமிடம் கொண்ட நேரம்

வந்தார்கள் பின்னும் மணாளர்கள் பத்துவந்ததன்பின்
செந்தாமரையின் திருப்போல மணமுடித்து
எண்ணியிருந்த மன்னன் எண்ணந்தனை அறிந்து
மண்ணி(ன்) நிறைந்த மச்சமுனி வந்தான் அரசனிடம்

வந்தமுனி பாதம் வணங்கி அரசன் மகிழ்ந்து
எந்தனிடத்தில் இறையோனே நீர்தாமும்
வந்தவகை சொல்லும் என்ன மாமுனிவன் ஏதுரைப்பான்
"மன்னா நின்னிடத்தில் வாழ்ந்து சுகம் பாராட்ட
இன்னாளில் மன்னாயியல்பாய் உன்மக்கள் தனில்
மங்கை ஒருத்திதனை மணம் முடித்துத் தாரும்" என்றான்
தங்குபுகழ் வேதமுனி தான் உரைக்க; மன்னவனும்
சிந்தைமகிழ்ந்து, சிறந்தோம் வெகுதவங்கள்
வந்தது இவனாலே; மகாதவத்தோன் நன்மகட்கு
ஆடவராய் வீற்றிருக்க ஆதியருள் கருணையதாம்
தேடக்கிடையாத தவம் சிக்கினதே நல்லதென்று
வார்பெருகு கும்பமுலை மங்கையர்கள் ஆயிரத்தில்
சீர்பெருகும் இன்பத் தவச்செல்வி தனை ஆராய்ந்து
சீக்கிரமாய் நாளை மணம் செய்து பல மங்கையற்கு
போக்கில் மணாளர் வந்தபோது மணஞ்சூட்ட வென்று
வேந்தன் மனத்தில் எண்ணலுற்றான் வேந்தன் மனநிலையை
சாந்தகஞ் சேர் மாமுனிவன் தானறிந்து அங்கேது சொல்வான்
"மன்னவனே! உன்னுடைய மக்கள் அனைவரையும்

---

அரும்பத உரை :-

செந்தாமரையின்திரு - இலக்குமி
ஆதி - பரமேசுவரன்(சிவன்)
மச்சமுனி - கவுச்சகமுனி
வேதமுனி - மச்சரிஷி
ஆதி - சிவபிரான்
சிக்கினதே - தானாகக் எளிநிற்கிடைத்தது
வார் - கச்சு
கும்பம் - குடம்

தென்னவனே ! காண்போம் ! சிறந்தவர்கள் எந்தனுக்கு
பொங்கமுடன் மாலையிட்ட பூவையரை இயம்புமின்னாள்
தங்கு கலியாணந்தான் முடித்துத்தாரும்'' என்றான்
அந்த உரைகேட்டு அரசன் மனது இன்பமுற்று
விந்தை மக்கள் தாதியரை வேந்தன் அருகழைத்து
மங்கையரை நீங்கள் மணக்கோலம் செய்யும்'' என்றான்
துங்கன் உரைகேட்டு துலங்கு மன்னன் மக்கட்கு
மஞ்சன நீராட்டி மணக்கோலக் காப்பணிந்து
அஞ்சனமும் தீட்டி அழகு பிறைச்சிந்தூரம்
மூக்குத்தி யோலை முளரிக் கொப்புக் காதோலை
தாக்குத் தரிகம் தாள்பட வைரம்
மாணிக்கம் நீலம் வாழ்பவள மாலையிட்டு
ஆணிக்கனகம் அழுத்தும் கடகம் இட்டு
பா'_கங்கள் தண்டை பகற் கொலுசும் பட்டுடையும்
கோடகங்கள் மார்பில் குவிந்த முலைதனக்கு
சந்தனமும் கஸ்தூரிதான் அணிந்து கூந்தலுக்கு

---

அரும்பத உரை :-

தென்னவன் - பாண்டியன்
பொங்கம் - மகிழ்ச்சி
பூவையர் - பெண்கள்
தாதியர் - தோழியர் (பணியாளர்)
துங்கன் - மேன்மையுடையவன்
மஞ்சன நீர் - அபிடேக நீர்
காப்பு - இரட்சாபந்தனம்
அஞ்சனம் - கண்ணுக்கிடும்மை
சிந்தூரம் - சிவப்புநிறத்திலகம்
ஓலை - காதணி
முளரி - தாமரை
கொப்பு - காதணிவகை
ஆணிக்கனகம் - உயர்ந்த மாற்றுத்தங்கம்
கடகம் - கங்கணம்
பாடகம் - மகளிர்காலணியின் ஒன்று
பகல் - ஒளி
கோடகம் - முடியுறுப்பின் ஒன்று

கந்தமலர் புனைந்து கன்னியர்கள் அனைவரையும்
சந்திர விலாசமதில்தான் கூட்டிவந்தார்கள்......
சுந்தரத்தின் மாமுனிவன் தோகையர்கள் ஆயிரமும்
தங்குபுகழ் தன்புயத்தில் தார்மாலை சூட்டுதற்கு
கங்காள ரூபம் கருணை யரனார் முன்னாள்
மங்கையரைத் தானளித்தவாறு விஞ்சை தான் எடுப்பார்!
வெள்ளிமலையில் விமலரிடத்து ஈஸ்வரியும்
சென்றபுகழ் ஈஸ்வரனை செல்வி எழுந்தே தொழுது
பார்ப்பதியாள் முன்பு நின்று
தீர்த்துடனே சிவனார்முன் ஏது உரைப்பார்
ஒன்றாக நின்ற ஒரு பொருளே! உள்ளொளியே!
குன்றாத செல்வக் குலக் கொழுந்தே! இப்புவியில்
ஆடவர்கள் உந்தன் அருள்நிறைந்து நீறணிந்து
தேடரிய இன்பம் நிறைந்த மனையாளையன்றி
வேறு ஒருத்தர் மாதை விரும்பார்களன்னையென்று
சாற்றரிய ஆசை தவிர்ந்தார்கள் தன்னாகம்
தங்கு புகழான கற்பிற் தங்கட்கிணை யாருமில்லை
பங்கு புகழ்ந்தோர்கள் பதினாயிரங் கோடி
..................................................................
.......................... இருந்தார் இவர்கள் மங்கை
குன்றா வலுவுடைய கோவிந்தன் பற்றியுள்ளோர்
தங்களுடை(ய) கணவன் தன்னையன்றி வேற்றோரை
பொங்கு தந்தை மைந்தர் என்றல் பூவையர்கள் கற்பதுவாம்
கற்பு நிலைக்குக் கருணை உமைநாம் எனவே
பொற்பு நிறை நீதி புனித கற்பு நீதி நெறி
பாரில் இவரும் பதினாயிரங் கோடி

---

அரும்பத உரை :-

கங்காளன் - எலும்பணிந்த சிவன் (பிட்சாடனர்)
விஞ்சை - வித்தை (மந்திரம்)
நீறு அணிந்து - திருநீறுபூசி

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே''
(திருஞானசம்பந்தர்)

''சீரில் நெறி கற்புத்திறமோ சிவனாரே
சொல்லு மென்று'' பார்ப்பதியும் சொல்ல அரன் ஏது சொல்வார்
''வில்லின் நுதல் மாதர் விளங்கு கற்பு நீதி நெறி
சென்றறிந்து வந்து சிறப்பாகச் சொல்லுகிறேன்''
என்று அரனார் எழுந்தார், கிழவரைப் போல்
அன்று உடம்பில் அனேகஞ் சிலந்திகளும்
சீயும் உதிரஞ் சிறந்த கிருமிகளும்
ஆயும் உடம்பில் அனேகம் புண்ணும் தொண்ணூறாய்
நேசமுடன் மங்கையர்பால் நின்று தான் அங்கங்காய்
வாசமுடன் வந்து நின்று, ''மங்கையரே நாம் நோயால்
மெத்த வருத்த விதனம் உற்றோம் கண்டீரே !
உன் தகப்பன்போல் நோக்கில் உடலினில் வினை நில்லாது
ஏழைப் பரதேசி இவன் என்றே நீக்கிடாது
ஏழை எந்தன் புண் எவையும் வெண்ணீறிட்டே களையும்
கற்புடையோர் பாலரைப் போல் காக்க வேறகமில்லாமல்
பொற்பு உங்கள் செங்கைபடில் போமே எமக்(கு) அவதி
பங்கமுற்ற ஏழைப் பரதேசி கற்பினார்க்கு
அங்கைக் குழந்தை ஒப்பாம் ஆயிழையே காரும் இன்னாள்''
சொல்லுகையில் ஈஸ்வரரை தோகையர்கள் கண்டே விரட்டி
''வல்லவனே உன்னுடலை வாகாய்த் தொடுவதில்லை
பார்க்கில் ஆறோசிகமாம் பால(ன)ாக உன்னுடலை
காக்கும் வகை 'ஏது' எனவே காரிகையர்தாம் விரட்ட

---

அரும்பத உரை :-

பார்ப்பதி - பார்வதி
நுதல் - நெற்றி
சிலந்தி - கிரந்திப்புண்
விதனம் - விசனம்(கவலை)
வெண்ணீறு - திருநீறு (விபூதி)
அவதி - துன்பம்
பங்கம் - குற்றம்
ஆயிழை - தெரிந்தெடுந்த அணிகளையுடையவள்(பெண்)
காரும் - காப்பாற்றும்
ஆறோசிகம் - அருவெறுப்பு
காரிகை - பெண்

சென்றான் பின்னும் தேவர்திரள் கோடி மங்கையிடம்
அன்றே விரட்ட அரிமாலைப் பற்றியுள்ளோர்
பாகவதப் பெண்கள் பதினாயிரங்கோடி
பாக அரன் ஊறு உடலைப் பார்த்து விரட்டிவிட்டார்
சித்தரி(ல்) அறக் கற்(பு) செழும் புருட மங்கையர்கள்
உத்த சதா கோடி உமை பாகனை விரட்ட
எங்கும் திரிந்து இடைவிடாதே விரட்ட
மங்கை அருந்ததி பால் வந்து அரனார் ஏதுரைப்பார்
அங்கத்தில் புண்ணேவையும் அருந்தியே காரு மென்றார்
மங்கை அருந்ததியும் வாகாய மனம் மகிழ்ந்து
செங்கையினால் தொட்டு சிறப்பாய் குளிப்பாட்டி
மாது துகிலால் வளமாகவே துடைக்க
வாதை வடு நீங்கி மதனன் உருவானார்
நீதி மங்கை கண்டு நிறைந்த மகிழ்ச்சியுற்றாள்
அன்னைதனை நோக்கி ஆசனம் அளியும் என்றார்
அன்னமளித் தானவளை அரனாரும் தான் நோக்கி
என்னை எடுத்து அன்பாய் இயல்பு மடிமீது வைத்து
உன்னுடைய செங்கையினால் உத்தமியே ஊட்டிடென்றார்
கன்னல் மொழியினாள் கருணைமனம் மகிழ்ந்து
மைந்தரைப் போல் வாஞ்சையதாய் மடிமீதில் வைத்தூட்ட
சிந்தை மகிழ்ந்துண்டு அரன் செல்வி நெறி கற்பறிந்தான்

---

அரும்பத உரை :-

பாகவதப்பெண்கள் - வைணவப்பெண்கள்(இசையுடன் சமயக்கதைகள் சொல்வோர்)

ஊறு - துன்பம்
அருந்ததி - வசிட்டரின் மனைவி (கற்பிற்சிறந்தவர்)
குளிப்பாட்டி - நீராட்டி(உலகவழக்கு)
துகில் - ஆடை
வாதை - துன்பம்
வடு - குற்றம்
மதனன்உரு - அழகிய வடிவம்
வாஞ்சை - பேரன்பு

## விருத்தம்.

மங்கையர் கற்புக் கின்பம்
மதனனாம் கோமான் தெய்வம்

எங்கியல் நெறியில் மூவர்
அளவில் புகழ்த் தவத்தினோர்கள்

தங்கிய தனதுபாலர் சகோதரர்
எவர்க்கும் தந்தை

செங்கதிர் கணவர் பூவாஞ்
செல்வி கைதரும் விதமே!

## நடை

சிவனார் கற்பறிந்து சென்றார் உமையிடத்தில்
தவமேவு மாந்தர்கற்பு சங்கரரே சொல்லுமென்றாள்
நீதி உமை கேட்காமல் நிமலன் வழக்கேதுரைப்பார்
சோதி கற்புநீதி துலங்கும் அந்தது தியாம்
மேதினியில் மாதர் விளங்கு கற்பு இல்லை இந்நாள்
நீதி கற்பு எங்கும் நிறைந்தறமாய் மெத்த உண்டோ?
வேத மிகுதியதோ? மெய்ஞ்ஞானம் மெத்த உண்டோ?
நீதியெங்நும் இல்லையதோ நிற்பார் ஒன்றே ஏமம் வருவாய்

---

அரும்பத உரை :-

செங்கதிர் - சூரியன்
மேவு - பொருந்திய
நிமலன் - தூயவர்
மேதினி - உலகம்
வேதம் - இருக்கு, யசுர், சாம, அதர்வணம் எனும் நான்கு
மெய்ஞ்ஞானம் - உண்மையறிவு
ஏமம் - உறுதி

## விருத்தம்.

நீதிவேதம் எவர்க்குமுளதாம்
நிறைந்த வேதத்தோரும் உண்டு
ஆதி ஞானம் எவர்க்கு முளதாம்
அதுவுமறிவார் ஒருவர் உண்டு
சாதி கற்பு எவர்க்கு முளதாம்
தவிராது அதுவும் ஒருத்திக்குண்டு
காதலியல்பு எவர்க்கு முளதாம்
கருதும் புகழோர் ஒருவருண்டு

அந்த உரையில் அரனை உமையாள் நோக்கி
''எந்த விதம் போயறிந்தீர் ஏந்திழைமார் கற்பை'' என்றார்
அன்று அரனாரும் அரனாரும் அழகில்லா நோய் உடலை
இன்று பார் என்றார் ஈஸ்வரியும் அன்னாளில்
பார்த்து வெருவி பராபரனே இந்த உடல்
பூத்த புகழ் மங்கையர்கள் பொருந்தினவள் கற்பெனுவும்
கண்டு நகைத்தோர்கள் மனம் கற்புநிலையில்லை என்றும்
மண்டல........... மயக்கமிவையார் தொடுவார்
என்று உமையாள் இயம்ப அரனாரும்
நன்று காண் மாதே நளின மங்கை அனைவரையும்
இன்னிலத்தில் கற்பாய் இருந்த பலம் வரையறிய
உன்னிடத்தில் கூட்டி வந்தால் உண்மையும் பாரெனவே
நேசம் கன்ன நிறை கொடியோர்களாய்
வாச அருந்ததி பால் வந்தார் முனம் கற்பறிய
வந்த அரனார் அழகை மானாள் அருந்ததியும்
சிந்தையுடன் கண்டு சிறந்த மைந்தனாம் எனவே

---

அரும்பத உரை:-
வெருவி - அஞ்சி
பராபரனே - மேலானவனே
இயம்பி - கூறி

சாதம் மிகக் கொடுத்தாள் தான் ஊட்டுமென்றுரைத்தார்
மாது செங்கையால் சாதம் வளமாக ஊட்டலுற்றாள்
கங்காளம் வேடம் கண்டு அருந்ததியும்
மங்காத கற்பு மயக்கமில்லை எள்ளளவும்
ஊத்தை உடல் ஆனாலும் ஒளிவு அழகானாலும்
பூத்த வெறுப்பு புனித விருப்பம் இல்லை
ஆதி உமையாளும் அருந்ததியும் ஒப்பெனவே
சோதிபல மங்கையர் பால் சென்றார் அரனாரும்
கற்பிழந்து மங்கையர்கள் கண்டவுடனே மயங்கி
பொற்பிழந்து எல்லோரும் பூணும் துகில் நெகிழ்ந்து
கொங்கை மதபோகம் குடை அழகுநீர் கசிந்து
திங்களணி ஈஸ்வரனே சேர்ந்து கட்டியே அணைக்க
போகம் விருக்கிட்டு பொழிமழை ஊற்றெனவே
தாக விரகம் தணியாத ஊற்றெனவே
கங்காள வேடம் கனவு(ள்) கைகண்டவர்கள்
திங்களணிந்த சிவனே எனத் தொடர்ந்தால்
மங்கையர்கள் தங்கள் மணாளர் கண்டுமே வெகுண்டு
எங்களிடத்திலிருந்த மனத்தாசை யெல்லாம்
பொய்வேஷமோ? ஆசை பூவையர்கள் கற்புநிலை
மெய் நிசமில்லை என்று வீணாய் விரட்டி விட்டார்
ஆடவர்கள் தன்னைவிட்டு ஆயிழையார் எல்லோரும்
தேடரிய ஈஸ்வரரை சேர்த்தணையவே தொடர்ந்தார்
எத்திசையில் இப்புவியில் ஒருத்தி தப்பாமல்
நத்தி அரனார் அடிக்கே நாடினார் மங்கையர்கள்
வந்தவர்கள் யாவரையும் மாதுஉமையாள் இடத்தில்
சிந்தையுடன் அழைத்துச்சென்றார் அரனாரும்
மங்கையே கற்புநெறி பங்கையரைக் கண்டாயோ

---

அரும்பத உரை:

பொற்பிழந்து - பொலிவுஇழந்து
திங்களணிந்தசிவன் - பிறைசூடிய பெருமான்
நத்தி - விரும்பி

நங்கு நடனந்தான் ஆடுவார் புனிதம்
பார்த்திரு நீ மாதே படியில் நிறை மாதர்களில்
மூத்த "அருந்ததி" தான் பூவுலகில் கற்புநெறி

## விருத்தம்

ஆலையைஞ்சா(வி) வாவியகண்டதோர் சூதும் வாதும்
வேலையப் பணிந்த ரூப விரிசுடர் மன்றிலாடும்
நூலையும் உணரும் கேள்வி நுகர விழிநாசி மேவாய்
சாலவும் மனதாகும் தருமமேயவை ஆவாமே

## நடை

நாராயணன் அறிந்து நாமம் அணிமங்கையரை
ஆராய் மீளும் அளித்தார் என அறிந்து
செங்கமலம் போலே சிறந்த திருவுடலும்
பொங்குற்றிணைப் பொற்குடம் போல் கிரீடமுலை

சின்ன இடையும் சிறந்த வயிறு உந்திச்சுழி
அன்ன நடையும் அழகுதொடை நெற்றித்தம்பம்
ஆயிரங் கோடி அனந்த ரதி ஒரழகாய்
ஆயிரங் கோடி அழகில், பணி பூண்டு
ஈசனடியார் இயல்பு தவத் தோரையெல்லாம்
வாசமுறு மாலும் வலதளிக்க வந்ததினால்
தந்தார் தார் பிறந்தார் புத்திரராய்
தந்தார மல்லது தாரணியில் மாதர்களை
அன்னை என்று சொல்லும் அனேகமுனிவரெல்லாம்

---

அரும்பத உரை :-

சூது - வஞ்சகம்
வாது - சண்டை
கிரீடம் - உயர்ந்தது
பணி - ஆபரணம்

அன்ன நடைமாதின் அழகினைக் கண்டேமயங்கி
யோகநிட்டை வேள்வி உகந்த சிவபூசை தாம்
தாகமுடன் விட்டுத் தொடங்கியே மெய்மறந்து
கோமணமுஞ் சேலை குலைய ஒரு மாணமதாய்
பூமணமும் மாதுபுனை களப வாசனையால்
அங்கம் விளக்கிட்டு அடற்போகம் கீழொழுக
பங்கப்பட்டார் மானம் விட்டு பார்நெறி நீதியெல்லாம்
தங்காமல்.........தான் புகழ்ந்து தானும் தொழுது
செங்கோல் முத்துதற்கு சேதி என்ன என்றசைந்து
'சங்கரா' 'சம்பு' 'சதாசிவனே' மாது எனக்கு
தங்கள் வசமாக வென்றுத்தான் நடந்தார் மோகினியின்
வந்தவர்கள் யாவரையும் மாலவனார் தானழைத்து
சிந்தையுடன் சிவனார்முன் கூட்டிவந்தார்
மாதர் கற்புப் போச்சு என்று மதன்தனை விரட்டி
நீதர் என இருந்தோர் நீண்ட நெறியசைந்து
மாலவனை உபசரித்து வாகாகவே மயங்கி
சீலமுடைய சிவனாரும் தான் பார்த்து
சதாகோடி மோகமதாய் சங்கரரும் பார்த்துரைப்பார்
கோடி சலா ரதியும் கூடியொரு பெண்ணுருவாய்
தேடி வந்ததோர் அழகின் செல்வியர்கள் மோகமுற்றே
மங்கையர்கள் தீட்டும் மகுடாற்றின சிந்தூரம்
மங்கையர்கட் கெல்லாம் அரசு மங்கையர்கட்கெல்லாம் அழகு

---

அரும்பத உரை :-

களபம் - வாசனைக் கலவை
சம்பு - சிவபிரான்
மோகினி - திருமாலின் கண்டோரை மயங்கச் செய்யும் பெண் வடிவான அவதாரம்.
மாலவனார் - திருமால்
சீலம் - ஒழுங்கு
மோகம் . காமமயக்கம்
மகுடம் - சிகரம்
சிந்தூரம் - திலகம்

பூவில் இவளும் நின்றால் பூத்தாழ்ந்திடு மென்று
தேவியொரு பக்கம் சிறந்திருக்குமிடத்தில்
பாதி எந்தன் பக்கம் இந்தப்பாவை இருக்கவென்று
ஆதி வலப்பக்கம் - அரியோனைத் தாம் அழைத்தார்
விந்து வெளி சத்தாவாய் மிறினதெல்லாம் அரசாய்
இந்து வைத்தோன் பக்கல் இருந்தார் நெடுமாலும்
பாதியரனைப் பகைத்துக் கெடுக்கரிதாய்
ஆதிதனை மாலோன் அடுத்து விடுத்தார் வெளியில்

## விருத்தம்.

ஆசை போகம் சுகமதனை
அரனார் அடக்க அரிதாகி
நேச உமையாளுக் கொரு பாதி
நெடுமால் தனக்கொரு பாதி
வாசமுடலை அரன் உதவி
மருவுபெந்தம் நிசமதென்றார்
நேசமுடைக் காமியர்கள்
நினைவில் காமம் விலக்கரிதே
மங்கையர்கள் கற்பு இல்லை என்று
மங்கையர் எல்லாம் விரட்டி
நங்கட்கு மோகினி பின்
தான் நடந்து வந்தவரை
திங்கள் அணிந்த சிவனாரும்
பார்த்து உரைப்பார்

---

அரும்பதஉரை :-

பூ - பூமி
பாவை - பெண்
இந்து - சந்திரன் (பிறைநிலவு)
நெடுமால் - நாராயணர்
காமியர் - ஆசையுடையவர்
காமம் - விருப்பம்

உங்கள் மனம் எந்தன் மனம்
உண்மையன்றித் தட்டழிந்தால்
மங்கையர்கள் எவ்வாறோ
மங்கையர்கள் யாவரையும்
பொங்கமுடன் கூட்டிப்
போவென்றனுப்பி விட்டார்
அந்நாள் அரன் மால்
அழகுறண்ட மோகனத்தை
இந்நாளில் மச்சமுனி
இன்பமுடன் எடுத்தார்
ஆனாலும் வெறுக்க அரிது
அல்லவே கற்பாவை
தாராளமாய்ப் பாவைதான்
தொடரும் மயலதாய்
மங்கையர்கள் ஆயிரமும்
மாமுனிவன் தன்னழகைப்
பொங்கமுடன் கண்டு
இன்பப் பூமாலை சூட்டுதற்கு
திங்கள் அரன் மால் அழகை
சீல முனிவன்தான் எடுத்து
செங்கை மத பூவாளி
செவ்வியர் கள்மேல் பொழிய
சென்றார் அரச னோடு
சீல முனிவன் மோகனத்தால்
அன்றோர் முனியும் அழகுத்
திரளே அழகாய்

---

அரும்பத உரை :-

தட்டழிதல் - நிலைகுலைந்துக் கலங்கித் திகைத்தல்
பொங்கமுடன் - மகிழ்ச்சியுடன்
மயல் - மனமயக்கம்

வந்து எதிராகி நின்ற
மங்கையர்கள் ஆயிரமும்
சிந்தை புளகம் திரண்ட
முலை பெருகி
தங்கள் உடல் மறந்து
தங்கள் கையில் மாலை எல்லாம்
பொங்கமுடன் முனிவன்
புயத்தில் அணைந்தனர் காண(வே)

## விருத்தம்

காம மாதர் மோக மதை
கருணை யரன்மால் நூல்வேதன்
தேவராசன் ரிஷிதனையும்
நெறிசீர்க் கலைக் கோட்டு முனிதாமும்
வசிட்டர் வாசவனும்
தருசயந்தன் துண்டுமுனி சேமமாக
மகாமுனியைத் தொடர்ந்தால்
மனுவைத் தொடராதோ ?

---

அரும்பத உரை :-

புளகம் - மகிழ்ச்சி
அணைந்தனர் - சூட்டினர்
நூல் - மறை (வேதம்)
கலைக்கோட்டுமுனி - இருசியசிங்கமுனிவர்
வாசவன் - வசுக்களின்தலைவன் (தேவேந்திரன்)
சயந்தன் - இந்திரன்குமாரன்

மங்கையர்கள் ஆயிரமும்
　　மாமுனிக்கு மாலையிட
துங்கன் மனம் மகிழ்ந்து
　　தோகையர்கள் ஆயிரமும்
மாமுனிக்கு அந்நாள் மணம்முடித்துத்
　　தான் கொடுத்து
நேம முனிக்கு நிறைந்த
　　அரண் மனையும்
வீடு ஓர் ஆயிரமும்
　　வீறு புகழ் மங்கையற்கு
தேடும் வரிசை சிறக்க
　　வெகு திரளாய்
ஈந்து மன்னன் பால்
　　இயல்பு மருகனேன்
ஆய்ந்த முனியும்
　　அழகுதுரை மாதருடன்
சிந்தை மகிழ்ந்து
　　சிறந்து இரும் நேரம்
அந்த மங்கை ஆயிரத்துக்கு
　　ஆயிர வேளானாற் போல்

---

அரும்பத உரை :-

துங்கன் - மேன்மையுடையோன்
தோகையர் - மயில்போன்ற சாயல் உடைய மகளிர்
நேமம் - நியமம் (செய்கடன்) அட்டயோகத்தொன்று அவை 1. தத்துவ நூலோதல் 2. தவம் 3. தூய்மை 4. தெய்வம் வழிபடல் 5. மனம் உவந்திருத்தல் 6. இடம் 7. இணக்கம், 8. கடைவழக்கம்

வேள் ஆயிரமாம் ரதியும்
வீற்றிருந்தார் ஆயிரம்பேர்
நீளாயிர முனிவன்
நீங்காமல் வீற்றிருந்தான்
சிந்தின போகம்
செழுத்த பேரின்பமதாய்

## மார்க்கண்டன் தவம்

பெத்தின்ப யோக தவம்
பேரின்பனேறினவராய்
மாதர் புணர்சி மகிழ்ந்து
எய்துபவராய்
நீதி விஷயமதில் நீங்காக்
கல்வி சுகம்

## விருத்தம்.

தங்கம் செம்பில்தான் புகுந்து
தணலில் காட்சி வெளிப்படும்
பொங்கும் பாலில் நீர்கலந்து
புகழ்சேர் அன்னம் பிரித்தருந்தும்
மங்குகுளவி சேறுதனில் அடங்கும்
உடலில் அணுகாது

---

அரும்பத உரை :-
வேள், (செவ்வேள்)
கருவேள் மன்மதன்
இரதி - மன்மதனின் மனைவி
போகம் - இன்பம்

எங்கும் யோகி ஆசையினுள்
இருந்தும் அவரே சிவனாவார்

## நடை

வேண்டுஞ் சுகத்தில் விழைந்து
அமையநற் பாக்கியமும்
நீண்டுஞ் சுகத்தில் நிறைந்து
நெடுநாள் இருந்து
இன்பக் கடலில் இருந்து
வெகுநாள் களித்து
அன்பிற் கடலடைந்து தவம்
செய் (வா) யென்று
விந்து வெளியில் விளைந்து
வினைவாகும்
மைந்தர் புரந்தால் மகாதவத்தோன்
மாமுனிக்கு
மெத்தநெறி பாலகரில்
மிகுந்த அறிவுநெறி
புத்தியுற்றக் குச்சனையே போய்
நீ தவஞ் செய் என்று
தங்கு பேரின்ப சமுத்திரத்திலே புகுந்து
பொங்குந் தவசு புரிந்தான்
புரி அணையாள்

---

அரும்பத உரை :-

யோகி - நிட்டை செய்வோன், யோகாப்பியாசமுடையவன்,
அவை இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம்,
பிரத்தியாகாரம், தாரணை, தியானம். சமாதி என்பன.
புரி - விருப்பம்

செய்யப்புகழ் தந்தை சிறந்த
மொழிப் படியே
மெய்யில் நிறை குச்சனம்
மிகுந்த மனைவியுடன்

சீரனைய கானகத்தில் சென்று முனிவருடன்
தாரணைய முனிவருடன் தவத்தில் மனது வைத்து
ஆதி அயன் அந்தம் அகண்ட சதாசிவமாய்
நீதி சக்தி ஐந்தாய் நிறை பூதம் ஐம்பொறியாய்
பத்துப் பொறியும் பகர் சகலனாகி
வித்தை யொரு நாலும் மிகுஞ்சிவமும் ஐந்தாய்
ஆறாறு தத்துவமாய் அப்புறமும் தானவனாய்
ஓர் அரனையும் உகந்து வெளி மீதில்
காட்ட வருஞ் ஞானம் சிந்தைதனில் அஞ்செழுத்தாய்
மீட்டதுவும் பெண்ணாய் மீறு மாண பெண்ணதனை
வெளியுருவாய் நின்ற விமலந்தனைக் காண
ஒளியுருவி மூலமுந் துலங்கும் தாரகமதாய்
ஓங்கி முடிவில் உயர்ந்த பிரணவத்தில்

---

அரும்பத உரை :-

கானகம் - காடு
தாரணை - உறுதி
அயன் - நான்முகன்
அகண்டம் - கூறுபடாது எல்லாம் நிறைந்தமுழுமை(சிவம்)
பூதம் - பெரும்பொருள் (நிலம், நீர், காற்று, தீ ஆகாசம்)
பொறி - இயந்திரம் (கருவி)
நால் வகை வித்தை - 1. கேள்வி 2. தான்உணர்தல் 3. பயிற்சி 4. ஓதுவித்தல்
தத்துவங்கள் - முப்பத்தாறு (மண்முதல் சிவம் முடிய) வகைப் படும் சைவாகமத்துள் காண்க
ஞானம் - அபரஞானம், பரஞானம்
தாரகம் - ஒரு மந்திரம் (ஆதாரம்)
பிரணவம் - ஓங்காரமந்திரம் (அ-உ-ம் - ஓம்)

தாங்கி நிறை ஓசை தரு குணங்கள் கடந்து
உருவாய் அருவாய் ஒளியாகி நின்றதிலே
மிருவா தருளில் மருவி மனத்தேத்தி
தன்னை மறந்து குடசன் தானவனாம் சூட்சுமத்தில்
வன்னி விளக்கேத்தி மனதை மறந்தே நினைந்தான்

## விருத்தம்

புனலை யடைத்து குணமடக்கி
புகுந்து இருந்த திருவாசல்

மேலினி லமைத்துச் சுழியினாக்கிப்
பெருக்கத்திருக்கல் வளநேஷம்

குவளை அவிழ்த்து விழி இமைத்து
குணக்காநி முற்றும் பிரகாசம்

நலனை விளைத்து அறிவினுக்குள்
நடத்துஞ் செய்கை சிவயோகம்

## நடை

இந்தத் தவசு இவன் புரியும் கானகத்துள்
வந்து மிருக மகாக்கூட்டமாய் உரசும்

---

அரும்பத உரை :

குணம் - இயல்பு மூன்றுவகை அவை சத்துவம், இராசதம், தாமதம்

சத்துவம் - ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம் ஐம்பொறி அடக்கல் என எட்டு.

இராசதம் - மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வி என எட்டு

தாமதம் - பேருண்டி, நெடுந்துயில், சோம்பல், நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சம். மறதி, பொய், கோபம், காமம், கொலை என பதினொன்று.

மகாக்கூட்டம் - நிறைந்த விலங்கினம்,

ஈசன் அருளால் இயல் முனியைக் கட்டை என்று
........ வந்து இருந்து வாகாய்க் கடியாமல்
.................?.............உரசும்
நித்திரைந்த குடசின் நெஞ்சகத்தில் கோபமுற்றான்
அப்போ தவனாம் அருமுனிவன் தன் தவசில்
ஒப்பாய் மிருகம் ஒறுக்கி அணுகாதபடி
மிருகத்துக் கெல்லாம் மிருகண்டன் என்றுரைத்தார்
மிருகண்டன் தனை மிருகம் எவை கண்டாலும்
திடுக்கிட்டுடல் பதறி சிந்தை மருண்டே அகல்வாகி
அடுத்திட்டு நிற்கரிதாய் ஆனவிடம் போய் ஒளிக்கும்
அந்த மிருகண்டனுக்கு அன்னாள் ஒரு புதல்வன்
வந்து பிறந்தான் மகா மிருகசிங்கரேசன்
தங்கு பலநூல் ஞானம் தானுணர்ந்து ஆசைவிட்டு
வந்தச் சடம் போயிதனை வாகாக நம்பரிது
அஞ்சு பஞ்ச பூதம் புனலாட்டஞ்சு ரூபமிது
நெஞ்சும் மகிழ மகலை ? நின்றளியும் புந்தியிது
கருவிழுமோகம் கனம் சென்மப் புடை அண்டம்
வருவினைகள் எண்ணாது மாய்கை மயக்கங்களும்
புசிப்பிடத்து வைப்பதும் போக்கிடத்தில் வைப்பதும்

---

அரும்பத உரை :-

ஒறுக்கி - துன்புறுத்தி
அணுகாதபடி - நெருங்காதபடி
அகல்வாகி - விலகிச்செல்லும்
ஒளிக்கும் - மறையும்.
சடம் - உடல்
அஞ்சு - ஐந்து
பஞ்சபூதம் - ஐந்து பெரும் பொருள் அவை, நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.
ரூபம் - உருவம்
புந்தி - புத்தி
கனம் - பாரம்
சென்மம் - பிறப்பு
வருவினை - பாவ, புண்ணியம்
புசிப்பு - அனுபவிப்பு

புசிப்பினுக்குச் சுத்தி புலம்பி அலைவதுவும்
சின்ன மரப்பாவை சிறந்தாட்டுஞ் சூத்திரம்போல்
தன்னிகர் இல்லா பாவையைத் தானாட்டப் பாவையுடல்
சிந்தை கலங்கித் திகைக்கும் அனுதினமும்
பந்த உணர்வு இயல்பாகவே புசித்தும்
பீத்தக் குடலில் அப்பெருசிவம் நில்லாது
ஊத்தைச் சடலம் ஒழியும் மிகுந்த பீத்தலிது
வேண்டும் பணிதுகில் வித்தாரமாய் அணிந்து
நீண்ட அழகு ஆசை நிறைந்த உயிர் விட்டு அகன்றால்
ஆடகப் பொ(ன்)னஞ் சேலை அழகு ப(ன்)னுதி எல்லாங்
கூடச் சுடுவதில்லைக் கோலவுடல் சுட்டிடுவார் !
பின் பிறப்போர்க்கு ஈது அழகாம் பின்பு மவர் தாமாள்வார்
அன்பின் உடல் புகும் அகண்ட உயிர் யார் அறிவார்
நாடு நகர் வீதி நளின மனம் அகன்ற கண்ணால்
காடு சுடுகாடு பிணம் சுட்டிருந்தும் வாழ்ந்திடுவார்

### விருத்தம்.

பூட்டும் பணிஆடை மனைபோகம்
பொருளும் உயிர் அகன்றால்
காட்டு வழியில் போகும் உடல்,
காதல் ஆசை ஒரு அளவு

---

அரும்பத உரை :-

புலம்பு - அழுகையொலி
சூத்திரம் - இயந்திரம்
பாவை - பதுமை
பந்தம் - உறவு
உணர்வு - தெளிவு
ஆடகப்பொன் - உயர்ந்த மாற்றுத்தங்கம்
கோலம் - அழகு
அகண்டம் - பிளவில்லாதது
காட்டுவழி - சுடுகாடு

கூட்டும் உடலில் கூடவொட்டார்
கோல வுடலைக் கிடக்க வொட்டார்

மாட்டும் விறகிலிடுச் சவமாம்
வளம் அங்கெதுவோ அனல்வாதை

சுத்து மெவையுஞ் தொழிலதனுளத்
துணிவால் மகிழ்வுள்ளிடத்தில்

நத்தியிருந்த வலம் சலமாய்
நகையா தூரின் பிறந்தோரும்

பத்தி யிருந்து எழுந்திருக்கும்
படுக்கும் நடக்கும் சிரிப்பாகும் !

உத்த வாழ்வு இடுகாடோ எரியும்
வயிறு சுடுகாடே

## நடை

தேடும் அறுசுவையும்
தி(ன்)னவாய் இடுகாடாம்

கூடும் அவை பேரும்
குடலுஞ் சுடுகாடாம்

---

அரும்பத உரை:-

வாதை - கவலை
நத்தி - விரும்பி
வலம் - வெற்றி
சலம் - கோபம்
பத்தி - முறைமை
உத்தம் - அலங்காரம்(உற்ற)

வந்தவை போகும்
வழியும் இடுகாடாம்

முக்காடிருந்திட்டால்
மூண்டு மனம் பற்றுகையில்

அக்காடு மாசாணம்
ஆரிருந்த காடதம்மா

எடு(த்த) உடலுடமை
வேதன் பதித்தல்லால்

தேடுமிடம் எந்த மதி?
தேடுதற்கு சூட்சம் எங்கே?

மண்ணுள் அளவெங்கும்
வருடம் அளவாம்

விண்ணில் விளம்பு
விளைவு மன அளவாம்

உண்ணும் அறு சுவையும்
ஒத்ததளவாம் எவர்க்கும்

எண்ணுகின்ற ஆசை
எளிதோதாம் சிவன் வருத்தம்

ஆராரோ முன்னம்
அறிந்து வந்தாராரோ

---

அரும்பத உரை :-

வேதன் - மலர்அமர்பிரமன்
சூட்சம் - நுட்பம்
அறுசுவை - கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

ஆராரோ பின்னும் முன்னும்
ஆராரோ நீதி நெறி

ஆராரோ வஞ்சம்
அநியாயம் ஆராரோ

ஊராரோ பேராரோ
உற்றாரோ எவராரோ

எத்தனையோ விண் மழைதான்
எந்தனையோ ஆராருசி

அத்தனையும் உண்டவர்கள்
அங்குமில்லை இங்குமில்லை

அங்கும் இங்கும் எங்கும் அருளான
ஒருவன் உண்டு

இங்கிருத்தார்க் கெங்கெதுவோ
எங்கெங்கோ மாய்கைவுயிர்

## விருத்தம்.

'ஆராரோ மண்ணரசு அவர்
அருளால் வலகுடி

ஆராரோ முன்னவர்கள் அவர்அருளால்
பிறவினர்கள்

---

அரும்பத உரை :-

ஆராரோ - யார் யாரோ ?
வஞ்சம் - சூழ்ச்சி
ஆராருசி - நிறைவிலாருசி
வலகுடி - வலிமையானமக்கள்

ஆராரோ முன்போன அவர்பின்
வருதல் ஆராரோ

ஆராரோ முன்பாவி
ஆராரோ நெறியோரே.

வேளை நிறை ஏழு மேகம்
விரை சுமந்து பொழிகள் நதி

தாள நீரும் அறுசுவையும்
தானே சுமக்குந் தனதிதென்ன

ஏல தாரின் விளைவானால்
எவரும் பாரில் சிதறாமல்

கோலமாரி நினையாமல்
கொடு போய் வயிற்றிலடைபவரே !

## நடை

இட்டதளவாம் இயல்புடல் வலிமை
கட்டு மெட்டாய் தான்வளர்ந்து
காரணம் எது இந்த உடல்
பார் உடல் மாண்டு விட்டால்
பாங்காய் எடுப்பவற்கு
சாரகள் கட்டை நவிலும்

---

அரும்பத உரை :

ஏழுமேகம் - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம், இவை பொழிவன முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ.

கோலமாரி - அழகியமழை

கட்டை - உடம்பு

இடம் சிப்பம் என்றால்
ஏந்து வார்க்குக் கட்டை
இடமும் உடலாகும்
சாதகமாய் வீடலம்
தான் இருந்து மாண்டாலே
ஊத்தை சடலம் ஒழிவர்
யாதாசை உற்று
நாத்தந்தனை மறந்து
நாட்டினில்லாப் பொய்க்கூடு.

## விருத்தம்.

சித்திரக் கோலந் தன்னில்
சிறந்த ஐம்புலனையிட்டு

உ(த்)திரம் எலும்புதன்னை
ஒளி வெளி வளைகளோட்டி

பத்திர(த்)தம் புகட்டி
பறந்தடாதசை தோல் மேய்ந்து

ஒத்திருந்து ஆடும் வாழ்வு
உயர்வளி வெளியதாமே

வாச மேற்க நாசி, செவி வசனம்
எவையும் தான் கேட்க

---

அரும்பத உரை :-
சிப்பம் - சிறுகட்டு (மூட்டை)
வீடல் - சாதல்
ஊத்தை - அழுக்கு (புலால் நாற்றம்)
சடலம் - உடல்
பொய்க்கூடு - மனிதயாக்கை
சித்திரக்கோலம் - விசித்திரமான மானுட உடல்

பாசமேற்க மனம்; நாட்டம்
பார்க்க, நா(வு) பல உரைக்க;

நேசமேற்க விளைவிந்து
நிறைவையும் விடும் வழியும்

வேசமேற்க விதி விடுத்தாரா
விரும்பவே வரும் வீணாகமே

## நடை

காயமசைய கனத்தகரம் கால் அசைய
வாயசைய சென்னி வகுத்த விரல் அசைய
பொருத்த ரூபத் தெட்டசைய பிறந்து விட்டு அப்புறத்தே
வருத்தி அசைத்தாலு வா(க்)காய் அசையாமல்
எலும்பை நிறுத்தி இயல் நரம்பாலே பூட்டி
பிலம் போகும் தோலைப் பிரியாமலே பொருந்தி
தே(ய்)வொடு நீரும் சிறப்பாகவே அடைத்து
வாய்வு பொருமல் விளங்குகின்ற பாழ்வீடு
என்றும் ஒருநாள் பிறந்து விடும் முன்னே நாம்
சென்று நலங்கள் தவம் செய்வோம் மனம் மகிழ்ந்து
தந்தைதாய் பாதந்தனில் வீழ்ந்து தெண்டனிட்டான்
வந்தடியிலே வீழும் மைந்தன் தனை இருவர்
சிந்தை அன்பில் வாழ்த்தி சிறப்பாய் எடுத்தணைத்து

---

அரும்பத உரை :-

வேசம் - வேஷம்
சென்னி - தலை
தாலு - நா(அண்ணம்)
வாய்வு - காற்று
பொருமல் - துன்பம்
பாழ்வீடு - பயன்அற்றஉடம்பு
தெண்டனிட்டான் - பணிந்து வணங்கினான்

"கந்தம் நிறைந்த கருணை எனது மைந்தா
உந்தன் மனத்தில் உதித்தது உரையும்" என்றார்
அந்த உரை கேட்டு அருள் பாலகன் உரைப்பான்
மைந்தருக்கு முன்பு தெய்வம் மாதாபிதா குருவாம்
சிந்தையுடன் காக்க சிறந்த தவம் பின்பு தெய்வம்
அன்னஞ் சுவையருந்தும் ஆண்குடல் தனில்
கன்னல் நிறை குழவி காட்சியுடன் சுமந்து
பூட்டும் நரம்பு இளகி போதவளி தட்டிழந்து
மீட்டும் வயிறு நொந்து மெய்ம் மறந்து தானீன்று
பொங்கும் முலைப் பாலைப்புகட்டி வளர்த்து விட்டு
தங்கும் இவன் அன்னைதந்தை தங்கள் உடல் போட்டுவிட்டு
மீட்டும் மறுவயிற்றில் வேதன் விதியால் நுழைந்து
தாட்டிமை சேர் கும்பிதனைத்திறந்து பாரில் வரும்
மைந்தனால் ஏதுபலன் மாதா பிதா தனக்கு
கந்தம் நிறை ஞான மகன் தவசு மிகுந்தவம்
விந்தநிறை மைந்தன என்றால் சேரும் கனத வசும்
இந்திர சுகம் அன்னை தந்தைக் கெய்து மகவே உதவி
நீதி நிறை மைந்தர் நிறைந்த வயிறு செங்கமலம்
கோதி இவன் உண்ட முலை கோதைத்திருப்பாற் கடலாம்
நெஞ்சில் அறிவில்லாத நிஷ்டரடைந்த வயிறு
வஞ்சச் சுடுகாடு மாதர் முலை கள்பானை (யாம்)

## விருத்தம்

விதியிடு குழவி தன்னில்
மிகுவளி வயிறு நொந்து

---

அரும்பத உரை :-

கந்தம் - வாசனை
தாட்டிமை - அகன்ற
இந்திரசுகம் - சொர்க்கவின்பம்
கோதி - கிளறி
நிஷ்டர் - கொடியவர்
நொந்து . வருந்தி
கும்பி - வயிறு

நதி குமிழ் நீரதா பேதை
இரண்டிவை பிறக்கில் நல்லோர்

பதி மலர் அணைவு தேவர்
பருகிய அமுதமாகும்

கதி குறைக்கும்பிக் காடு
கொண்டது கள்ளதாமே

## நடை

பாரில் பிறந்தவர்கள் பாரில் நெடுநாள் இருந்து
சீரில் உடல் செத்ததின்பின் செத்தான் என்றே நிலையாய்
சாகும் அளவில் சஞ்சலங்காண் மன்னவனே !
போகும் இடுகாடு புக்கி வெந்து விட்டால் தீர்ந்துவிடும்
அந்தப்படி வருமுன் ஐயரே மாதவமே
எந்தன்தனை தவத்துக் கேவிடும்'' என்றுரைத்தான்
விந்தையுடனே விழைந்த அண்டம் ஊடுருவி
அந்திமதி சூடும் அரனடியை யானும் காண்பேன்
என்று மைந்தன் சொலக் கேட்டிருவருமேதுரைப்பபர்
''நின்று தவம் புரிந்து நீ பதத்தைக் காண்பன் என்றாய்
கொஞ்சம் நீ பாருலகில் கோதை தவிழ் பாலகனே !
மிஞ்சும் அருள் காண விழைந்த தவம் ஏது செய்வாய் !

---

அரும்பத உரை :

குழவி - குழந்தை
குமிழ் - நீர்க்குமிழி
சஞ்சலம் - மனக்கவலை
அந்திமதி சூடும் - பிறைச்சந்திரனைச்சூடும் சிவபிரான்

## விருத்தம்.

மூவரோ? அமரர் மூவர் முதல்வனோ?
உமையோ? ஆவும்
ஆவரோ? புனிதர் மூவர் அறிந்ததோ?
அறிந்தவர் யாரோ?
யாவரோ? அலியோரூபம்
இசைவது அறியின் நேர்மை
யாவருமறியார் என்று அருளுடன்
கதை போதித்தார்

## நடை

முன்னாளில் வேதன் முறைமை யண்ட முண்டுபண்ணி
அன்னாளில் காற்றை அகண்ட வெளியே நிறுத்தி
வாயு அதினந்தாங்கள் வளர்புனல் உண்டாக்கி
நேயம் அந்த நீரில் நிறை ஆமை மிதப்ப
ஆமை முதுகுதனில் அஷ்டகெஜம் தானிறுத்தி
வாம கெஜம் மேலே மகா பாம்பைத்தானிறுத்தி
சேடன் முடி மேலே சிறந்த இரும்பார் அழுத்தி
ஓட மதின்மேலே உரத்த கெட்டிப்பார் அழுத்தி
அப்பாரின் மேலே அகண்ட வச்சிரப் பார் அழுத்தி
செப்பாரின் மேலே இரண்டடுக்குப் பாரைவைத்து

---

அரும்பத உரை :

இசைவு - பொருந்துகை
புனல் - தண்ணீர்
நேயம் - அன்பு
அஷ்டகெஜம் - எட்டு யானை
சேடன் - ஆதிசேடன் (பாம்பு)

பார்த்தானப் பாரை படர்ந்த கண்ட பாரின் மேல்
மீதானப் பாரை வரித்திசைப் பார் அழுத்தி
தீட்டு நல்லின்பப் பாரைதிட கௌட கல்பாரை
அஷ்ட கெஜங்கள் அகண்ட பெரும் பாற்றாத்தி
சொரிப் பாரை அன்னம் சுரந்த மணற்பாரை
விரிப்பாரை மீதில் விளைந்த மண்ணை உண்டாக்கி
நத்தங்கு ஏசல் நளின வண்டல் செல்வல் என்றும்
உத்த உவரி செம்பொருப்பு நிலம் கல்லு நிலம்
காவி நிலமுங்கல் - கரம்பைப் பொவு நிலம்
மாவிலங்கு மருங்குமத்தின் வாரி உதிர நிலம்
பலநிலமும் வித்து பல பலவாய் உண்டாக்கி
பிலநிலத்தீவு(ம்) பெருந்தீவு எவை தமக்கும்
மேருகிரி அண்டம் விளங்கும் அச்சு மாணியதாய்
சீருலகில் அஷ்டகிரி சிறந்த அச்சு ஆணிய தாய்
அண்டச் சுவரில் அகண்டப் பெருங்கடலும்
விண்டக் கடல்மேல் விளைந்த மூதண்டாண்டம்
ஆகாசகங்கை அதன் மேல் இருள்மூடு
வாகாக எங்கும் - வளைந்த பிரம்மாண்ட வெளி
ஏழுகடல் ஏழுகிரி ஏழுகுலச் சீவன்
ஆழும் இருட்டும் துலங்கு பகல் எனவும்

---

அரும்பத உரை :

கௌடம் - கபடமுள்ளது
உவரி - கடல்
கரம்பை - தரிசுநிலம்(பாழ்நிலம்)
பொரிவுநிலம் - சரிந்த காட்டு நிலம்
அஷ்டகிரி - எட்டுமலை அவை கைலை, இமயம். மந்திரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம்.
பிரம்மாண்டம் - உலகம் (ஒரு புராணம்)
ஏழுகடல் - உவர்நீர்க்கடல், நன்னீர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன் கடல் இவையே ஏழுகடல் எனப்படும்.

சூரியனும் சந்திரனும் சொல்லரியறாகிப்பக்கம்
பாரில் பொழி மேகம் வாரி அஷ்ட காவலரும்
பூவும் புனலாதியும் புகழ் மாருத வெளியும்
பார் மீதில் மண்டலமாய் பருதி இந்து தாரகையும்
இந்தப்படி ஒப்பாய் இயல்பு பதினாலுலகம்
விந்தை அண்டரண்டம் மிகுந்த பகிரண்டரண்டம்
சாத்திரமும் வேத தரும விஞ்சை பாஷைகளும்
சூத்திரமும் வேதன் துலங்கவே உண்டாக்கி
மூவர் தனிலும் முதல் மூர்த்திகளும் நாம் எனவே
அவரிலும் நாமே அதிகம் என மகிழ்ந்தான்
வேதன் மகிழ்வு தன்னை வேதநிறை மால் அறிந்து
வேதனே என்னில் மிகுந்த பெரியோன் எனவே
அண்டம் பகிரண்டம் அகண்ட சொரூபமதாய்
எண்டிசையில் நிற்க இடமில்லாதே பலவும்
மண்ணு மலையும் மகா மேரு அஷ்ட கிரி
எண்ணுகின்ற லோகம் - இவை பலது மூவுலகும்
செங்கை ஒன்றிளா லேந்தி சிறப்பாகவே முழுங்க
எங்கிலுமுள்ள மூவுலகோரெல்லாம் மிக நடுங்கி

---

அரும்பத உரை :-

மண்டலம் - வட்டம்
பருதி - சூரியன்
இந்து - சந்திரன்
தாரகை - விண்மீன்

பதினாலு உலகம் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் இவை மேலுலகங்கள். கீழ் உலகங்களாவன - அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன.

மூவுலகம் - பூமி, அந்தரம், சுவர்க்கம் (பூலோகம் பரலோகம், பாதாளலோகம்)

அரிமால் வயிற்றில் அகப்பட்டு அயனாரும்
அரிநெடுமால் உந்தி அவிழும் முளரித்தண்டு
'திட்டி'த்துத் தாண்டிச் சிறப்பாக நுழைந்து
தட்டுமுளரி மலர்த்தாள் நிரம்பி வீற்றிருந்தான்
வந்த அயனார் தமையும் மாலோன் மிக முழுங்க
எந்தன் உந்திப் பூத்து இயல்புன் நீவந்ததினால்
என்னுடைய பாலக! நீ என்னிற் பெருமை என்றால்
உன்னுடைய விஞ்சை ஊது படைப் பெங்கே என்றான்
சி(ரு)ட்டித்தார் பின்னும் சிறந்தெவையும் உண்டாச்சு
கெட்டித்த மாலும் கிருபையுடன் பின் விழுங்க
எண்ணுகின்ற நேரம் ஈஸ்வரனும் அங்கு வந்தார்
மண்ணிலவர் பெருமை வாகாக சாற்றுகின்றார்
அப்பெருமை சாற்றுவதற்கு நான் காட்ட வேணு மென்றார்
இப்புவியில் மூவரிலும் அடங்காப் பரா பரத்தோன்
வந்து எதிராக நின்றார் வந்து எதிர் நின்றவரை
கந்தமலர் வேதன் கருணை நெடுமால் இருவர்
விந்தையுடன் பார்த்து மிகுந்த இருவர் வல்லமையும்
கண்டுசொல்லும் என்றார் கருணை அரன் ஏதுரைப்பார்
''பண்டும் உங்கள் நீதி பராக்கிரமங் காணாமல்
சொல்லோ நாமுஞ் சொன்னாலும் தோற்றாது உங்களுக்கு

---

அரும்பத உரை :

உந்தி - வயிறு
திட்டி - நுழைவாயில்
ஊது - பெருகிய
சிட்டித்தார் - சிருஷ்ட்டித்தார் - பிரமன்
கிருபை - கருணை
சாற்றுதல் - சொல்லுதல்
மூவர் - பிரமன், விஷ்ணு, சிவன்
பராபரம் - எல்லாவற்றிற்கும் மேலானபொருள்(பரமேசுவரன்)
இருவர் - பிரமன், திருமால்
பராக்கிரமம் - வீரம் (வல்லமை)
தோற்றாது - விளங்காது

அல்லாமலும் உரம் அறியவே பண்ணுகிறோம்!
உங்களுக்கு முன்னே நின்று உயர்சிரசு தான் கீழாய்
இங்கு வளருகிறோம் இன்னாளில் நீ(ர்) தேடும்
காண்பவரைக் காணாரைக் கண்டுரைப்போ'' மென்றார்
பூண்பதுவும் மூவர் பொருளோன் வளர்ந்து நின்றான்
கண்டார் வளர்ந்தார் காண் சுருதியை இருவர்
அண்டா தருளை... அரியயன் மேவி ஐயன்
விண்ணில் பரந்து விரிய விதிபோம் சுதி
கண் நீர்மைக்கு முன்னே - கண் கோடி யோசனைபோம்
சதுர்யுகம் மூவெட்டுதான் தேடிக் காணவில்லை
மதுரத்திருமாலோன் - வராக மென் பாரைச்
சிம்பிக் குடைந்து சிதறி மிரித்துத் தோன்றாது
கொம்புதன்னால் அழுத்திக் குத்திக் குதித்து நொடிநேரம்
பத்து நூராயிரத்தின் - பத்து இரட்டி யோசனை போம்
சுத்து மூவெட்டுத் துவங்குஞ் சதுர் யுகம்
தேடும் இவர் ஒன்றினுக்கு நாலாய் வளர்ந்து நின்றார்
மாலவனார்தான் தேடிவந்து விட்டார் காணாமல்
சீலநெறி வேதன் சிறந்த விண்ணில் போகையிலே
ஆதிமுடியில் அணிந்த கொத்துத் தாழைமலர்

---

அரும்பத உரை :

உரம் - வலிமை
சிரசு - தலை
சுருதி - வேதம்
ஐயன் - சிவபிரான்
சுதி - பூருவபக்கம்
யுகம் - நீடியகாலம், யுகம் நான்கு வகை அவை: கிரேதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.
யோசனை - ஓர் எல்லையளவு (நான்கு குரோசம் கொண்ட நீட்டல் அளவு)
குரோசம் - இரண்டேகால் மைல் கொண்ட தூரம் (கூப்பிடு தூரம்)

சேதியுடன் தப்பிச் சிறப்பாகவே விழுந்து
சதுர்யுகம் மூவெட்டுத் தானாய் வருகையிலே
மதுர அயன் கண்டு மலர்த்தாழைத்தான் பிடித்து
எங்கிருந்து நீ வருகிறாய்? ஈஸ்வரனார் சென்னி எங்கே?
பொங்கமுடன் சொல்லுமென பூவதும் ஏதுரைக்கும்
"தப்பி விழுந்தேன் சதுர்யுகம் நாலாறு
அப்பு அணியும் சென்னி அனேகஞ் சுருதியதாய்
இன்னும் வளருது காண் இவ்வுலகத்தில் எத்தனையோ
அன்னத்தில் ஏறி அயனே நீ காண அரிது"
என்று மலரும் இயம்ப அயன் ஏதுரைப்பான்
"இன்று எனக்காய் பொய் சாட்சி இன்னாள் உரையும் என்றான்
அந்த மலரை அடையாளம் கொண்டு வந்தான்
வந்து அயனார் மலர் உரைத்த சாட்சியினால்
ஆதி யயனாரே - அதிக பெருமை என்றார்
நீதி அரன் கேட்டு நிமிடத்தில் அவர்கள் முன்
அண்ட பகிரண்டத் நடங்காதான் வந்து நின்று
"கண்டவனார் என்றார் கலங்கினார் வேதனுமே
உந்தனுக்கே கோவில் இல்லை உண்மையில்லாத தாழைமலர்
எந்தனுக்கும் ஆகாது! எண்ணினார் மாலும் வந்தார்
மெய் வாக்கினாலே விளங்கினார் மாலவனும்!
பொய்வாக்கில் பூவதுவும் பூணாது ஒழிந்ததுவே
அப்படியாய் மீளும் அரனார் சொரூபமதை

---

அரும்பத உரை:

சென்னி - தலை
பொங்கம் - மகிழ்ச்சி
அப்பு - தண்ணீர்(கங்கை)
அன்னம் - பறவை
மலர் - தாழை மலர்
இயம்ப - எடுத்துக்கூற
பூணாது - அணியாது

இப்படியாய் நீ காண்பது எந்த விதம் பாலகனே !
என்று தந்தை கேட்க இயம்புவான் பாலகனும்
கொன்றை அணிந்த அரன் கோலத்தில் அன்புவைத்து
பத்தி விளக்கேற்றி பரஞ்சுடரை உள்கலந்தால்
நத்தி விளக்கேற்றி நிறைந்த அறிவே அதனுள்
வந்து நினைவுற்று வரம் உதவுவார் எனவே
எந்தையே நீர் மகிழ்ந்து ஏவும் தவத்தில் என்றார்

## விருத்தம்.

மேதினி எவையும் இல்லான்
மேலவர் மூவரல்லான்

மாதினை இடத்தில் வைப்பான்
மாதுள்ளான் யாவுமுள்ளான்

சோதனை எவர்க்கு மில்லான்
சோதி சூழ் எவைக்கு முன்னான்

சாதனை செலுத்தி நானும்
தாணுவை இனிது காண்பேன்

அவரவர் இ(ரு)தயம் அமரும்
ஈசனையே வாழ்த்துபவர்

எவர்க்கும் தோன்றிடாச் சிவனவன்
இருபகல் தெரிதல் காணிலா

அவரவர் உடல் சுகம் சுருதி காணல் இதே

---

அரும்பத உரை:-

ஒழிந்தது - நீக்கப்பட்டது
மாது - பார்வதி
சாதனை - பழகல் (உறுதி செய்தல்)
மேதினி - உலகம்
சோதனை - ஆராய்வு

## நடை

அங்கம் எ(ன்)னுஞ் சக்தி
அறிவு பொருள் சீவனவர்

எங்கும் இருப்பார் என்று
இறையோனே உளப்பெருக்கி

தங்கும் புவனம் எங்கும்
தானிறைந்து உரோம நுனி

எங்கும் நிறுத்த இடம்
இல்லாதே ஆட்டும்

திருவருள் இல்லாமல்
சிறக்குமோ எவ்வுயிரும்

திருவருளைக் காண்போர்
சிறந்த அறிவு பற்றினால்

தக்குவான் தக்கானோ
தக்குகின்ற நேசரிடம்

சிக்குவான் சிக்கானோ
தேடுவார் தேடிவரும்

மைந்தன் இவை உரைக்க
மாதா பிதா இருவர்

---

அரும்பத உரை :-

அங்கம் - உறுப்பு
புவனம் - உலகம்
திருவருள் - தெய்வத்தின்கருணை
தக்குவான் - காணக்கிடைப்பான்

சிந்தை மிக மகிழ்ந்து
சீர்மகனை மார்பணைத்து

விண்ணு மலையும்
மிகுந்த படி எவையும்

கண்ணின் ஒளி யறிவு
கண்ணை ஒளி காணாது

மெய்யில் உயிர் மேவில்
மிகுந்த உயிர் அறியும்

மெய்யின் உடல் உயிரை
மேவி அறியாது

சித்திரத்தை ஒப்பமிட் டோன்
சித்திரத்தைக் காண்பது அல்லால்

சித்திரமும் தன்னை
சிறக்க அறியாது

எந்தருசியும் எவர் புசித்தும்
காண்பது அல்லால்

அந்தருசி இவனை அக்கணத்தில்
காணாது

பொங்கும் புனித விளக்கும்
பூவில் வளர் மூலிகையும்

---

அரும்பத உரை :

படி - உலகம்
மேவி - பொருந்தி
ஒப்பம் - உவமை
புனிதம் - தூய்மை
பூவில் - உலகில்

ஒளி - சோதி
மூலிகை - மருந்துவேர் செடி, கொடி

தங்கள் வினை விதியை
  தான் தவிர்க்க மாட்டாதே

பொன் உடலைச் செப்பினிடும்
  பூவில் உருக்கேத்தினங்கள்

தன் உடம்பை ஒப்பமிடத்
  தானறியாவாறு போல்

ஏட்டின் பொருளை எழுதினவர்
  தாம் அறிவார்

தீட்டிமைசேர் அவ்வேடு தான்
  பொருளைக் காணுமதோ

மந்திரத்தைக் கற்றுணர்ந்தோர்
  மந்திரமும் நீதி நெறி

அந்தரத்தில் வீசும் அருள்சுருதி
  ஆர் அறிவார்

அன்பின் அருமை அரனாரும் தான் அறிவார்
  இன்ப அரனார் அருமையை யிவ்வுலகில்
    கண்டவரார்

சொர்ணம் மிகத்தேடி அகமெலாம் பொன்னதனால்
சொர்ணத்துக்கே துக்கமாம் இவராலே
எறும்பு கடையானை எடுத்த சொரூபம் எல்லாம்
பொருளைத் தேடி திகைக்குது தான் காணாமல்

---

அரும்பத உரை :

ஏடு - புத்தககக்கட்டு (ஓலைச்சுவடி)
தீட்டுதல் - எழுதுதல்
மந்திரம் - வேதமந்திரம்
அந்தரம் - ஆகாயம்
அருமை - கிடைத்தற்கரியது
சொர்ணம் - தங்கம்
சொரூபம் - வடிவம் (உடல்)

## விருத்தம்.

எறும்பு முன் தந்தி அந்த இருவரை
சீவனாக்கும்

திறம்புனைச் சேரா ஒருவன் உண்டு
செயல் சுகம் பெண் ஆண் இன்பம்

நிரம்பு குழவி தந்தை நினைவுறு
ஆசை அன்னை

அறம் பெரும் பாவம் என்று
ஆட்டுவான் அசை வொன்றில்லான்

## நடை

தத்துவத்தில் இல்லாதான்
தாபரத்தில் மெய்ப்பாதன்

உத்தகருத்தில் ஒடுங்கி
ஒடுங்காத அருள்

மூவர்களும் தேவர் முதல்வர்களும்
விண்ணிறைந்தோர்

ஆவர்களும் காணாத
அரும்பொருளைக் காணுதற்கு

---

அரும்பத உரை ;

சீவன் - உயிர்(ஆன்மா)
தத்துவம் - உண்மைநிலை (தத்துவத்திரயம்) கடவுளைப் பற்றிய அறிவு

தாபரம் - ஆதாரம்,

மகா புனல் தானம் வழங்கும் பெருமைதவம்
பாக நிறை பார்வதியும் பாம்பு அணி வேணியனும்
மாசித்திங்கள் தானம் வன்மையுனாடிவர
நேசத்தில் நின்று நிறைந்த தவம் கொடுப்பார்

இந்தவசில் மீறும் இயல்தவசு
யாம் காணோம்

இந்தவசின் வாழ்வைத்தான்
உரைப்பேன் கேள்மைந்தா

"திருவளரும் மார்பன் சிறந்தமகாதவம் போல்
உருவளரும் வைகுண்டம் ஓங்கு நாராயணன்
வேதத்தில் நின்று விளங்கு பராபரமாய்
நீதத்தில் நின்று நினைவில் அருள் ஆனோன்
சத்தியாய் சங்கரராய் தானயனாய் மாலவனாய்
பக்தி அன்பர் உள்ளம் பரப்பு விசாலமதாய்
இச்சை புனைந்து எவ்வுலகும் எவ்வுயிரும் தான்காக்க
இலட்சுமியை மார்பில் வைத்த இலட்சுமி நாராயணனார்
தங்குபுகழ் வைகுண்டம் தானிருக்கும் நாளையிலே
பொங்குதவத்தில் புனித கனகரிஷி
மந்திரத்தின் வேள்வி வருஷம் ஒரு நூறளவு
தத்திரமா வேதமுனி தான்விளக்கும் பூமாலை

---

அரும்பத உரை :

வேணி - சடைமுடி(யுடையசிவன்)
திருவளரும் மார்பன் - திருமால்
வைகுண்டம் - திருமால் உலகம்
சத்தியம் - என்றுமிருக்கும் உண்மைப்பிரமாணம்
விசாலம் - அகலம்
கனகம் - தங்கம்
வேள்வி - ஓமகுண்டம் (யாகம்)

வந்ததே யோக நெறி மந்திரத்தின் வேள்வியிலே
அந்தநிறை மாலையழகு நவரத்தினத்தின்
கொத்தில் வரும் வெய்யவனார் கோடி உதயமென
அந்திவந்த காந்தி - துலங்கு திங்கள் சீதனமாய்
சாரா நாதம் இயல்பு பரிமளத்தின்
சீரேகம் வாசம் நிரளாய்க் கமகமவென
அண்ட பகிரண்டம் போற்றும் அழகு திருமாலை
கண்டு முனிவன் கருணைமனம் மகிழ்ந்து
அட்டமா சித்தியுடன் அஷ்ட சௌபாக்கியமும்
திட்ட நினைத்த தெல்லாம் சீர்மாலை தான்கொடுக்கும்
கந்த மணிமாலை தன்புயத்தில் சூடுகின்றான்
முந்தும் அழகில் முகிழும் அழகு ஆயிரமாம்
எந்த யுகமும் இயல்புமலர் வாடாது
அந்நரத்தில் அன்று தொடுத்த மலர் போல் அழகாம்
சீரோங்குஞ் செங்களப சிறெங்கும் மாலையிது
காரோங்கு மேனி அரி காணற்கு ஆகுமென்று
மாலிருக்கும் வைகுண்டம் வாகாகக் கொண்டு சென்று
சீலநெறி மாலவனார் சேவடியின் மீது வைத்து
தெண்டனிட்டு நின்றான் சிறந்த தவமுனிவன்
அண்டமும் உண்ட அரியோனுக்கின்பமதாய்
எந்தயுகமும் இயல்பு அழியாது தொடரும்

---

அரும்பத உரை :

யோகம் - சாலம்பயோகம், நிராலம்பயோகம்.
நவரத்தினம் - ஒன்பது வகை மணிகள் அவை கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.
வெய்யவன் - சூரியன் காந்தி - ஒளிக்கிரணம்
பரிமளம் - வாசனைக்கலவை
சௌபாக்கியம் - மிகுசெல்வம் இவை எட்டாம் அவை அழகு செல்வம், கல்வி, விவேகம், குணம், தனம், நற்குடிப் பிறப்பு, அகவை.
சேவடி - செம்மையானபாதம்
அண்டமுண்ட - உலகைவிழுங்கிய

அந்த நிறை மாலை அதன் வரவுதான் கேட்டு
அந்நாள் உனக்கு அனேக வரம் தான் உதவி
இந்நாள் வைகுண்டம் இரும் என்றவர் களித்து
செந்திருவின் மார்பன் திருமால் அலரிமாலை
கந்த நிறைந்த கலன் திரு இலக்குமிக்கு
ஈந்தார் மகிழ்ந்து இயல்மாது பூண்டிருந்தாள்
ஆய்ந்த மணிமாலை அணிந்திருக்கும் நாளையிலே
சீர் பிர்ம லோகம் சிறப்பாக பார்க்க வென்று
தார் பெருகும் பூந்திருவும் தாம் போனார் போம் வழியில்
நேசத் தவத்தில் நிறைந்த அமிர் தரிஷி
வாசநிறை இலக்குமியை வரக் கண்டவுடன்
சிந்தை மகிழ்ந்து சிறந்து எதிரேபோய்
கந்தம் மிறை இலக்கு மியின் காரிகையாள் தான்பணிந்து
எந்தாயே எல்லைத் திருமாதுக் கியல்பாய தமிழ்மாலை
குன்றாத செல்விக் குமரியே! பூமகளே !
அன்று சரண விருத்தம் அழகு நெறி கூறலுற்றான்

## இலட்சுமி கடாக்ஷ விருத்தம்.

நீர் மீது வந்து அம் மலரே திறந்து
நிறை வாக நின்ற (அ)தனால்

---

அரும்பத உரை:

செந்திரு - இலக்குமி
கலன் - அணிகலன்
தார் - மாலை
காரிகை - அழகான பெண்
செல்வக்குமரி - திருமகள்
பூமகள் - நிலமடந்தை
சரணம் - அபயம்
விருத்தம் - பாவினத்துஒன்று

பார் மீது கந்த கதிரோன் விளங்கும்
பலதேசம் எங்கும் அழகாய்

கார் மீது வந்து புனலால் விளைந்த
கன மோக விந்து வதனால்

தார் மீதில் உந்தன் அழகே நிறைந்து
திரு வாழ்வு தந்த திருவே

மருவான வாசமலரே நிறைந்து
மருமாது உந்தன் இருதாள்

உருவான லோகம் எவையும்
சிறந்தொளியாகி நின்றதனால்

தருவான பாரில் நிலையோகச் செல்வம்
தவறாத இன்பத் துணையாம்

திருவான நீதி அழகே நிறைந்து
திரு வாழ்வு தந்த திருவே

இசையே பொருந்தி உனதாள் மிருந்த
இயல்வாழ்வு செல்வப் பொருளே!

இசையே சிறந்து உன் மனமாடும்
இன்ப விளைவே துன்பம் களைவாய்!

---

அரும்பத உரை :

கடாட்சம் - கண்பார்வை அருள்
கதிரோன் - சூரியன்
கார் - மழைமேகம்
தார் - தரணி
திரு - செல்வம்
மரு - மருக்கொழுந்து
வசை - குற்றம்

வசையே கலங்கும் மொழியேது
விண்டு வடிவே உவந்துறையும்

திசையே ஏத்தும் நிறைந்து
திருவாழ்வு தந்த திருவே

தரை மீதில் உந்தன் அறிவே சிறந்து
தவிராது செல்வம் நிலையாய்!

விரை மீதில் வந்த தினப் பூவில்
யோகம் விளைவானதுந்தன் நினைவே!

வரையால் அறிந்து கன வாழ்வு
மூவர் வளமானதுந்தன் அருளே!

திரை மீதெழுந்து அழகே நிறைந்து
திரு வாழ்வு தந்த திருவே!

பூமீதில் வந்த திருமாது உந்தன்
புகழோதும் இன்பம் இதுவே!

நாமீதில் வந்த தமிழ் பூணுகின்ற
நறுவாச கந்தம் இதுவே!

பார்மீது வந்து எனையாளுஞ்சிந்தை
பதம் சேரவைத்து மகிழ்வாய்!

கார் மீதில் வந்த திருவே சிறந்த கண
யோகச் செல்வி, சரணம்!

---

அரும்பத உரை :

விண்டு - திருமால்
உறையும் - வசிக்கும்
விரை - மணம்
திரை - அலை வீசும் கடல்
பதம் - பாதம்

## நடை

''லட்சுமி கடாட்ச விருத்தம்'' படித்த பேர்களும்
கேட்டபேர்களும் அதிகசெல்வம் பெறுவார் என்றவாறு

என்று முனியும் இயம்பு புகழ் விருத்தம்
குன்று முலை பூந்திருவும் கொள்கையுடனே கேட்டு
சிந்தை மகிழ்ந்து சிறந்த முனி தனக்கு
கந்தம் நிறைந்த களபத்திறள் பூமாலை
அட்ட சுபயோகம் அநேகம் நினைவுற்ற தெல்லாம்
அட்டமா சித்தி அருளும் அது மாலை என்று
செங்களபமாது சிறந்த முனிக்கேக் கொடுத்தாள்
பொங்கு மயனார் உலகுக் கேகினாள் பூமாது
மாது மகிழ்ந்தே கொடுத்த மாலைதனை மாமுனிவன்
நீதி தரும் வந்து நிறைந்தோம் என மகிழ்ந்து
சென்னிதனில் சூடி சிறந்த புரந்தரனார்
பொன்னுலகமதில் போனார் அமிர்தரிஷி
வேதமுனி போகையிலே வேதநிறைவாசவனும்
நீத நேரும் வெள்ளைநிற வாரணம் ஏறி
மின்னிலங்கும் கோடி பெண்கள் வெண் சாமரை இரட்ட
பொன்னிலங்கும் பூசக்கரவாளக் குடைபிடிக்க
மாதர் நடனமிட வானதுந்துபிகள் முழங்க
நீத நிறை பெண்கள் நிறைந்தடப்பங்கட்டிவர

---

அரும்பத உரை :

கொள்கை - குறிக்கோள்
அட்டமாசித்தி - அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி
பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம்
வாசவன் - இந்திரன்
வாரணம் - தேவர் உலகத்து ஐராவதம் எனும்வெள்ளை யானை
சாமரை - கவரிவீசல்
துந்துபி - இசைக்கருவி

பாங்கு களபங்கள் பூமாரி தானிறைப்ப
ங்குபுகழ் மாறாதான் சூழ்விதி வந்தான்
ந்திரனாராவார் இயல்பு சுகபவனி
ந்திரஞ்சேர் மாமுனிவன் வாகாகக் கண்டவுடன்
ந்தை மகிழ்ந்து சிறந்த சுக வேள்வி தவம்
ந்த பவுசு இயல் மூவர்க்கில்லை என்றும்

## விருத்தம்.

பெண்ணா தளவாங் கடுவதுண்டு
பித்ததும் பித்தன் அரனார்!

மண்ணா தளவா மண்ணை உண்டு
வடத்தில் உறங்கும் மாலனார்!

கண்ணா தளவாந் தலை காணா
கமலப் பொகுட்டி லயனார்!

விண்ணா தளவா மூவருக்கும்
மிகுத்தான தருக்கு இறையோனே!

## நடை

மன்னன் புரந்தரற்கு வாகாக இன்னேரம்
என்ன வரிசை செய்யப் போறோ மென முனிவன்
மங்கை கமலை மகிழ்ந்தளித்த பூமாலை

---

அரும்பத உரை :

பவனி - உலா
பொகுட்டு - தாமரைப்பொகுட்டு
புரந்தரன் - பாதுகாப்பவன் (இந்திரன்)
கமலை - இலக்குமி

பவிசு - சிறப்பு
தருக்கம் - மேம்பாடு

செங்கை யினா லேந்தி சிறந்த முனி கொடுத்தார்
வாசவனும் இன்பமதை மகத்துவத்தால்
நேசமுனி நினைவு நீள பலமும் தானறியான்
சாத்நி முனி களித்து தான் அந்த மாலை என்று
பூத்தரணி வாசம் புனிதநிங்கள் சீதனமாய்
மாலை வந்தவாறும் மகத்துவமும் கேளாமல்
சோலை நந்தவனமதில் துலங்கு மலரெனவே
''அறிவில்லார்க் கின்ப மடுத்த சுபயோகம்
குறியில்லா நீர் நிறைந்து குன்றிவிட்டக் காடதொக்கும்''
செங்கையினால் வாங்கி சிறந்த புயம் சூடாமல்
தங்கு மதயானை தடமத்தகத்தில் வைத்தனன்காண்
வெள்ளை மதயானை விளைந்த மத வேகமதால்
துள்ளித் துதிக்கையால் துலங்கு மலர் மாலைதன்னை
சிந்தி எடுத்துச் சிதறவே தாளதனால்
விந்தை மத வேகம் மிதித்து நடந்ததுவே

## விருத்தம்.

வணக்கம் இல்லார்க்குச் செல்வம்
வருகினும் தவறும் தன்னால்
இணக்கம் இல்லார்க்கு நல்லோர்
ஈதலும் பகையாம்; பாவம்

---

அரும்பத உரை :-

மகத்துவம் - பெருமை
நந்தவனம் - பூஞ்சோலை
சூடாமல் - அணியாமல்
மத்தகம் - யானையின் நெற்றி
துலங்கு - சிறந்து விளங்கும்
வணக்கம் - கீழ்ப்படிதல்
சீதனம் - சீர்வரிசை
புயம் - தோள் (புஜம்)
தடம் - அகன்ற
தவறும் - நீங்கும்
இணக்கம் - உடன்பாடு

கணக்கு அற மூவர் கோபம்
காக்க இது துறவி கோபம்

பிணக்கை யார் தவிர்க்க வல்லார்?
பொன்னகர்கெடுதி காலம்

## நடை

வண்டு தொடா மாலை தனை வாங்கிக் கரிமிதிக்க
கண்டு முனியும் கருணை மனஞ் சினந்து
இந்திரனைத்தான் நோக்கி இந்திரா நீ கேளாய்
உந்தன் கரியும் உலகில் மிருகமதாய்
“வேள்வி தரு’ மாலை” அரி மேலில் மிகத்து வேண்ட
வாழ்வு தரும் லட்சுமியும் மார்பில் அணிமாலை
எந்தனுக்குத் தந்தார்கள் யான் ஈந்தேன் உந்தனுக்கு
தந்ததை நீயும் தரியாமல் தந்தியின் மேல்
தங்க வைத்தாய் தந்தி செங்கைதான் எடுத்துத் தாளதனால்
மங்க மிதித்தடா; வாழ்வு உனக்கு நிச்சயமோ
பாக்கியம்தான் ஈந்த பகவானடி யாரிடத்தில்
நோக்கி மமதை நுழையுமோடா உன்னுடைய
கற்பகமும் வெந்து கனபவுசுந்தான் இழந்து
பொற்பெவையும் பாழாகிப் பொன்னாடு தான் இழந்து

---

அரும்பத உரை :-

பிணக்கை - மாறுபாடு
கரி - (ஐராவதம்) யானை
தரியாமல் - அணிந்து பெருமை செய்யாமல்
தந்தி - யானை (தந்தத்தையுடையது)
தாள் - கால்
கற்பகம் - கற்பகமரம் (நிழலில் இருப்போர் விருப்பை நிறைவேற்றும் தெய்வீகமரம்)
கனபவிசு - மேலான சிறப்பு
பாழாகி - வீணாகி
மங்க - ஒளிகெட

ஆடை பணி ஏதுமின்றி அன்னமின்றி வெம்புசீயால்
..............யன்றியே வறுமை வந்து அணைய'' என்றார்

## விருத்தம்

சீர்புனை துறவி சிந்தை
சிறப்பினை அறிந்திடாமல்

பார்புனை யாவரேனும்
பகைபடில் வசனத்தீயால்

தார்புனை பவுசுகுன்றி
சளநரகடை வாரென்று

நீர்புனை அரனும் வேதன்
நிறையறி அடிமையானார்

## நடை

மூவர் பயந்து ஏவல் செய்ய முனிவருடைய கோபமதால்
தேவதரு அஞ்சும் நிறை கடலிலே விழுந்து
பொன்னாடு வெந்து புகையாய் கரி நாடாய்
தன்னாடு கேட்டு தயங்கியே இந்திரனும்
உண்ண அன்னமின்றி உடைமைத் துகிலுமன்றி
மண்ணுலகிலே திரிந்து வானத்து ரம்பையரும்

---

அரும்பத உரை :-

அன்னமின்றி - உணவின்றி
அணைய - சேர
வசனத்தீ - கோபத்தால் வந்த சாபவுரை
ஏவல் - பணி விடை
பொன்னாடு - தேவர் உலகம்
திரிந்து - அலைந்து

நொந்து கலங்கி திகைத்து வெகுநாளாய்
எந்தவிதம் நாம் பிழைப்போம் அன்பு முனிவரையும்
மதியாதிருந்து வறுமையினில் வீழ்ந்தோமே
விதியா முனிவரிடம் மேவி அடிபணிந்தால்
இன்னம் அவர் கோபம் இலகுவில் பிழைக்கரிது
கன்னல் நிறை மாலவரைக் காரணரைக் காண வென்று
சென்றார் அமரரோடு தேவேந்திர மன்னன்
ஒன்றும் வைகுண்டத்தொரு பொருள் நாராயணர்
பாதத்தில் வீழ்ந்து பணிந்தார் அனைவோரும்
வேதத்தில் ஓங்கி நின்று விளை பொருளுமஞ்சல் என்றார்
''அஞ்சல்'' என்ற மாலை அமரர் புகழ்ந்தே நோக்கி
வஞ்ச வறுமை வந்தவாறு தனைக் கூறலுற்றார்

## விருத்தம்.

தாய் இல்லாப் பிள்ளை இல்லை
தனம் இல்லாப் புகழும் இல்லை

வாய் இல்லா நாவும் இல்லை
மழையில்லாப் பயிருமில்லை

காய் இல்லாப் பழமும் இல்லை
கலையில்லா மதியுமில்லை

---

அரும்பத உரை :

ரம்பை - வான் உலக ஆடலழகி
பிழைப்போம் - தப்புவோம்
மேவி - பொருந்தி
இலகு - எளிதில்
ஓங்கி - உயர்வற உயர் நலம் உடைய தன்மை
அஞ்சல் - அஞ்சேல் (பயப்படவேண்டாம்)
வஞ்ச - பொல்லாத
தனம் - செல்வம்

நீயில்லாது எவையும் இல்லை
நினதருள் இரங்கி ஆள்வாய்

குற்ற முற்றோர்கள் தம்மை
குறை ஒண்ணா தேவரைக்காக்கில்

உத்தம பாரில் உள்ளோர்
ஒளிப்பதோ மழையைக்கண்டு

மற்றவர் ஒளிப்பரென்ன
மழை பயிரையுங்காத்து

அற்றவர்க்குதவும் அன்னம்
அளித்தவர் எவரையும் குறிப்பாய்

## நடை

என்று அமரர் இயம்பு மொழியதனை
அன்று நெடுமால் கேட்டு அன்பர்கள் ஏதுரைப்பார்
தங்கு தவத்தில் தரும நெறியோர்கள் தமக்கு
பொங்கு புகழ் மூனர்கட்கு போத மகிழ்ந்தேவல் செய்வோம்
சிந்தை வெகுளி சிறந்த முனி சொற்படி
உந்தனுக்கு ஒரு துயரம் செய்தவர்யார்
கடலில் தருவைக் கவிழ்த்து அனல் மூட்டி
உடலில் முனிவர்க் கொரு முனியோ துன்பமிட்டார்

---

அரும்பத உரை :

மதி - அறிவு
கலை - கல்வி
அற்றவர் - பொருள் இல்லாத ஏழை
தரு - கற்பகமரம்
அனல் - தீ

சாபம் உரைத்து முனிதான் போனார் அல்லது
கோபமுடன் செங்கரத்தால் கூண்டடித்து அன்னிலையே
சிந்தை முனிவன் சிறந்துரைத்த சொல்படிக்கு
வந்துனைக் கெடுத்த வான் பொருளை நீயறியாய்

## விருத்தம்.

உருகி அறிவு அருளேதன்
உணரும் நெறியோர் வெகுளியதில்
பெருகும் கருணை மகிழ்வதிலும்
பிறரில் வாய்மை தவறாமல்
கருக அவரை அடருவது
கனக சுகமாய் உதவுவதும்
அருக தேவரும் அறியாதார்
அவனால் இவனால் என்செய்வாய்?

தேவேந்திரனைப் பார்த்துக் கிருஷ்ணமூர்த்தி சொல்லுகிறகதை
"இந்திரனே நீயும் இயல் வேள்வி ஆயிரமும்
தந்திரமாய் செய்து தரித்தாய் அரசுநிலை
உன்னரசு வேணும் என்று ஓங்கு கவரி மன்னன்
பின்னர் புகழ் வேள்வி வளர்த்தானே ஆயிரமும்
வேள்வி மு(டு)கிய விதிமூவர் வென்றுளாய்

---

அரும்பத உரை;

சாபம் - கடுவுரை
அடர் - நெருக்கம்
அருக - சமீப
இயல்வேள்வி - ஆகமவழியாகம்
முடுகிய - கிட்டிய

வாழ்வில் புனை மகுடம் அணியு வென்று
சுத்த முனியார் தரு நாட்(டு) அரசனுக்கு
உற்றவர் பால் சொன்னார் ஒருமை எழுமா முனிவர்
தருநாட்டரசு தவமுத்து வந்தவர்க்கு
பெருமை கிரீடம் பெருகு செங்கோல் கைகொடுத்து
தண்டிகை யிலேற்ற அவர்தானாய்ச் சுமந்து வந்து
வண்டுலவு பூங்கூந்தல் மாது அயிராணி யையும்
திருமணமுஞ் சூட்டி சிறந்த இரத்தின மேடைவைத்து
அருமை இவர் கைக்குவித்தார் அந்தரத்தோர் ஆயிரவரும்
நட்சத்திரம் இராசி நாள் வாரம் ஓரை பக்கம்
எல்லாம் தொழுவார் எழுவர் தொழாதிருந்தால்
எல்லோரும் வணங்கார் இந்திரன் என்பாடும் இல்லை
எல்லாம் முறைப்படுத்தி ஆதி உந்நன் இரத்தினமுடி
சொல்லால் உயர்முனிவன் சூட்டி அந்த மன்னனுக்கு
செங்கோல் கொடுத்துச்சிறந்த இரத்தின தண்டிகையில்
அங்காரக முனியும்[1] அகத்தியரும்[2] காசியபரும்[3]
சீறின கௌதமரும்[4] சீர்நெறி புலத்தியரும்[5]
மார்க்கண்டரும்[6] வசிட்டர்[7] வாகாய் இவர் எழுவார்
நாற் கண்டங்கோடி சகல முனிவர்களும்
எங்கும் பெரியோன் இயல் கௌரி மன்னனையே
தங்கும் சிவிகை வைத்து தான் சுமந்தார் வீதியெங்கும்

---

அரும்பத உரை :

மகுடம் - கிரீடம்
தண்டிகை - ஒருவகைக்கழுத்தணி
அயிராணி - இந்திராணி
அந்தரத்தோர் - தேவர்
ஓரை - இரண்டரை நாழிகை (நேரம்)
பக்கம் - பக்ஷம் பதினைந்து திதி கொண்ட காலம்
எழுவர் - சப்தரிஷி
சிவிகை - பல்லக்கு

சீறின முனிவர் சுமக்க அவன் மகிழ்ந்து
தாரின மகிழ்வின்பம் சமுத்திரம் போலே மூடி
வழித் தபசு ஒரு கல்பம் பண்ணினர் முன்
நாழிகைத் தான் ஒன்று நலமாய்ப் பொறுக்கரிதாய்
தருநாடு அணுகிடவும் அயிராணியுடன்
பருமுலை இணைக் கோடணைய பாங்காய் "முனிவர்களே !
சீக்கிரமாய்த் தாண்டுங் கோள் செல்விதனைக் காணுங்க" வென்று
வாக்கரியான் தானுரைக்க மாமுனிவர் கோபமுற்று,
"ஆமடா உந்தனுக்கு ஆள் அடிமையோ நாங்கள்
போமடா சிந்தை பொறுக்கலை யோக வேள்வி
கர்த்தா வினோடு உமை காரணனார் ஏவினதால்
வித்தார உந்தனையும் வீறாக நாம் சுமந்தோம்
வித்தை ஒடுங்கி "திரமாய்" ஒடுங்காமல்
வித்தையுடன் எங்களை நீ வீணாக ஏவியதால்
மதி கெட்டே மன்னும் மாதவங்கள் நீ இழந்து
விதி கெட்டு நீள் குழியில் வீழ்வாய் தலை கீழாய்
என்றவனைப் போட்டார் இயல்வேந்தன் ஆந்தையைப்போல்
அன்று முதல் இன்றளவும் ஆழ்குழி பாழுங்கிணற்றில்
தங்குதலை கீழும்தான் மேலாய் தூங்குகிறான்
மங்கி ஒரு வாக்கதனால் மாய்ந்தான் தவத்தை எல்லாம்

---

அரும்பத உரை :

சீறின - கோபித்த
முனிவர் - துர்வாசர்
தபசு - தவம்
கல்பம் - கற்பம் ஆயிரங்கோடி (உலகம் முடியும் காலம்)
கோடு - கொம்பு
திரம் - உறுதி
மதிகெட்ட மன் - நகுடன்
தூங்குகிறான் - தொங்குகிறான்

## விருத்தம்.

பொங்கும் பெரியோர்க் கஞ்சாமல்
புகழும் இதைக் கெடுவித்தால்
பங்கமவற்கோ ஓர் உரையில்
பாழாந்தவங்கள் ஒரு கோடி
தங்கும் நரகம் நெடுநாளாம்
சாகப் போவார்க்குரையளவை
மங்க எரியும் அணுவளவு வாட்டி எரிக்கும்
அருள் காணார்

## நடை

அன்னாள் அவனும் அமருபட்டுப் போகாட்டால்
மன்னா உனக்கு வாழ்நகரம் ஏது அரசு
ஓடி ஒதுங்கி ஒளிந்திருந்தாய் உந்தனையும்
தேடி அரசு செலுத்து என்று மாமுனிவன்
பொன்னாட்டில் வைத்தார் புனித அருள் கடவுள்
அன்னாட்டிலுந்தன் அரசு அளித்தன் அரோ
நேசனடியார் மனதும் நேசன் மனசும் ஒன்றாம்
வாசவனே நீயும் வணங்குமதி அத்தனையே

கந்தனக் கொடுமைக் கொளித்தாலும்
கருணை அடியார் வெகுளிதனில்

---

அம்பத உரை :

பொன்னாடு - தேவர் உலகம்
நேசன் அடியார் - மெய்யடியார்
அத்தன் - இறைவன்

அந்தனொளிக்க அரிதனை ஆர்என்று
ஒளிக்க அரிது அல்லவே
உற்றதங்கள் உதவரிதாய்
உடலும் இளைத்துச் சம(ர்)தனில்
வற்றி நடுங்கித் தலை கீழாய்
வருந்திக் கிடந்தது அறியாயோ

## நடை

நீத முனி கோபம் நினைவில் வருஞ்சாபகர்மம்
காதலுடன் நீர் கருணைதவம் வேணுமின்னாள்
"வெய்யவனைக் கண்டால் விரித்த இருள் ஓடுஞ்சம்"
துய்யக்கவசங் கண்டால் தொலைந்தோடும் பாவவினை
"வாழ்பிணிக்கு மருந்து நல்கித்தீர்ந்தாற் போல்"
தாழ்வனைத்துந்தவிர்ப்போம் வறுமை துன்பம்

## விருத்தம்

வேதன் நமைபடைப்பதேனும்
சேருங்கோள் உன்னில்லாற்கு
காதல் உடை மகவு ஆசை
கனக்கக் கொடுக்கச்செயலேது

---

அரும்பத உரை :

சமர் - போர்
நடுங்கி - பயந்து
வெய்யவன் - சூரியன்
பிணி - நோய்
வேதன் - பிரமன்

சேதி அடவிலுளது வளை
சிதறநாளும் தொடங்கும் என்று
கோதில் அமுதம் தனைக் கடைந்து
கொடுப்போம் தவசு வழாதே

## நடை

சாபத்தின் பாவம் தவிர்த்து வறுமை துன்பம்
ஆபத்தைத் தீர்க்க அமுதங் கடைய வென்று
சித்தர் அரக்கர் சேர்ந்த கன விஞ்சையரும்
கத்த தயித்தியர்கள் கருட சுராகிம் புருடர்
சேர்ந்த தபோதனர்கள் திரள் பூத்தாற்கையும்
சார்ந்த தவமூவுலகில் தானிறைந்தோர் யாவர்களும்
பரலோகம் சொக்கம் பகிரண்ட மேலுலகோர்
பிரலோகத்துள்ளோர் இயல் மாலும் வேதாவும்
எல்லோரும் திரண்டு ஏகவட பாற்கடலில்
வல்லபில மந்திரகிரி மத்தாய்க் கடலில் இட்டு
சந்திரனுக்கு மேல் மடுதாங்கு அடி ஆமையைப்போல்
தந்திரஞ்சேர் மாலவனார் தாங்கக் கடலில் நின்று
வாலியும் சுக்கிரீவனும் வடம் பூட்டி ஓர் புறத்தில்
பாலில் கடைந்தார் பராக்கிரமம் நேர் பிலமாய்
திமு திமுவென யாரும் திரண்ட பாரமிட்டு

---

அரும்பத உரை :

கோதில் - குற்றமற்ற
கடைந்து - திருப்பாற்கடலில்(அமிழ்தம்)கடைந்து
விஞ்சையர் - வித்தியாதரர் தயித்தியர் - அசுரர்
கிம்புருடர் - பதினெண்கணத் தொருவர்
தபோதனர் - தவத்தைத் தணமாகஉடைய முனிவர்
வேதா - நான்முகன் பராக்கிரமம் - வலிமை

குமு குமுவென்று பாற்கடலில் கோலவிறைச்சல்தான்
திங்கள் அணிந்த சிவனார்க்குச் சொல்லாமல்
தங்குபுகழ் மத்தால் கடைந்த பேரொலியை
சங்கரியைத் தான் தரித்த சங்கரரும் தான்கேட்டு
மங்கை கௌரி மலர் முகம் பார்த்து ஏதுரைப்பார்
''எம்மை நினையாது அயன்மால் தானவர் கூடி
செம்மையுடன் பாற்கடலில் சேர்நடுந்திரண்டமுதம்
கன்னல் மொழி மாதே கடைகிறார்'' என்றுரைத்தார்
பின்னும் சடை வேதியர் சொல் பெண்ணமதுதான் கேட்டு,
''தேவரீர் உம்மை சிறந்த வொரு பொருட்டாக
தேவர் நினையாமல் சிறந்த அலை மேல் கடைந்தால்
அரனை நினையாத அமுதம் அமுதமல்ல
உறுக நஞ்ச தென்றாள்'' உமையாள் மொழிப்படியே
அந்தக் கடலில் அனைவரையும் வதைத்தே
சிந்தை வேதனைதரும் சிந்து நஞ்சு பொங்கியதே
மின்னேர் கடலில் விளைந்த நஞ்சு ஓடி கடல்
இன்னேரம் வந்தது எனவே எங்குமது முழங்கி
கொப்பளித்துப் பொங்கிக் குமரி அமரர்களை
செப்பமுடன் நஞ்சு சிறந்து விரட்டியதே
பொங்கு நஞ்சின் கூட்டம் புரந்த வஞ்ச மூதேவி
எங்கும் விரட்ட இரிந்தோடும் தேவர்கள்
தான்நடுங்கி விசனப்படுத்தினாள் ஓடிக்

---

அரும்பத உரை :

இறைச்சல் - ஓசை
திங்களணி சிவனார் - பிறைசூடிக் காப்பாற்றிய சிவபிரான்
கன்னல் - கரும்பு
நஞ்சு - விஷம்
செப்பம் - நடுநிலை
இரிந்து - நிலை கெட்டு விரைதல்
விசனம் - கவலை

கோள் பரந்து அந்தக் கொடுமையினுக் காற்றாமல்
அந்தரத் தோர் திக்கோர் அனைவரும் பயந்து
சிந்தை கலங்கி திகைத்துப் பரிதவித்து
ஆதியே ! சோதி அரனே ! பராபரனே ?
ஆதியாம் ஈஸ்வரனே ! நிறைந்த அருள் விளக்கே !
இந்த இடரில் எவரும் பிழைக்கரிது
கந்தனுடைய தந்தையாரே காத்தருளீர் சரணம் என்று
தேவர்களும் மங்கையரும் சேர மயங்கினதால்
யாவருள்ளம் இருந்தோன் அன்றிரங்கி அஞ்சல்என்று
விண்ணு மண்ணு மோங்கி மிகுத்த விடத்தின் முன்னே
மண்ணும் விண்ணும் ஓங்கி அரன் வாகாகவந்துநின்றான்

## விருத்தம்

கனத்தில் உகந்து இருந்தோர்கள்
கவலை துயரம் மிகுந்துளதால்

மனத்தில் நெடியோர் அவர்கள்குறை
வகையை நினையார் காப்பார்கள்

நினைத்து அருளை நினையாதார்
நினைக்க இவர்கள் தனைக்காக்க

தினத்தில் இவர்செய் விடமடக்கும்
செயலோன் சிவனார் வந்தாரே.

---

அரும்பத உரை :

கந்தன் - முருகன்
சரணம் - அபயம்
ஓங்கி - உயர்ந்து
உகந்து - விரும்பி
செயலோன் - செயற்கரிய செய்யும் (பெரிய) சிவனார்

## நடை

வந்தவரை நோக்கி வணங்கி விடங்குமர
கந்தன் அய்யன் கண்டு கடுகடுத்து தானுஞ்சீறி
எங்குந் தூளாக்கி எவரும் பிழைக் கரிதாய்
பொங்கமுடன் உண்ணவென்று புண்ணியருமே அணுகி
பக்கம் அசங்காது எவையும் பாங்காய்க்கரம் ஏந்தி
அக்கை அணியும் அரனாரும் உண்டுவிட்டார்
அந்த விடத்தை அரன் உடலில் ஏறாமல்
கந்தம் நிறை பார்வதியும் கண்டத்து அமர்த்தி விட்டார்
அண்டங் கலங்க அமரர் இட்ட அமுது தன்னைக்
கண்டு உமையாள் கருணை மனஞ்சினந்தாள்
ஓடியே ஓடி ஒதுங்கி மறையோர் தாளின்
நாடி அமரர் தஞ்சமெனப் போயடைந்தார்
அன்னாள் எவரும் அரனார்குக்கோபம் என்று
முன்னாள் உமையவளும் முளரி அயன் மால்தேவன்
கலைமகள் லட்சுமியும் காட்சி தெய்வ அரம்பையரும்
கலை முனிவோர் சூழ்திசையோர் கங்குல் மதி சூரியனும்
எல்லோரும் திரண்டு ஏகம் ஒரு பொருளை
எல்லோருங் காத்திருந்தார் அன்று சிவன் ராத்திரியாம்
கந்தனைய அரன் கோபம் கருணையுடன் நீங்கியபின்
வந்தநிறை மூவர்களும் மீண்டும் அமுதங்கடைந்தால்
வடகிரியைப் போலே மகுட மணிக்குடத்தில்

---

அரும்பத உரை :

பொங்கமுடன் - மகிழ்ச்சியுடன்
புண்ணியர் - சிவபிரான்
அக்கை அணி - உருத்திராக்கம் அணியும்
கண்டம் - கழுத்து
கங்குல் - இருள்
வடகிரி : மந்தரமலை
முளரி - தாமரை
ஏகம் - ஒன்று

குடம் நிறையவே அமுதம் கொள்கையுடன் நிகழவே
பொங்கி நிறை பாற்கடலில் பூரணமாய் வந்ததுவே
தங்குபுகழ் பாற்குடத்தை தானவர்கள் தாங்குமுன்னே
வந்து கருடன் மணிக்குடத்தை தான் எடுத்து
அந்தரத்தில் சென்றார் அமரர் தொடர்ந்தே மறித்தார்
வந்து மறித்தவரை வாகாய் விசைகருடன்
சிந்தி சினந்து சிதற உடல் நொறுக்கி
வீரத்துடனே வெகுண்டு விண்ணில் போனது வே
தீரத்துடனே முடுகி செங்கண் நெடுமால் மறித்தார்
பொங்கி அமரர் புரிந்தார் பூவுலகீர் எதிர்
செங்கண் நெடுமாலும் மகிழ்ந்து கெருடனுமாய்
மூதண்ட லோகம் முடியும் அண்ட கோடி அண்டம்
ஆதண்ட கோளம் அகண்ட கிரிகள் எட்டும்
தட்டு நிறைந்திட்டவையும் சக்கரம் போல் சுழல்
வட்ட வெளி சுற்றி வளைந்து சமர் புரிந்தார்
செங்கண் நெடுமாலும் சினந்து சமர் புரிந்து
தங்கு கருடன் தனைச் செயிக்கக் கூடாமல்
அந்நாள் கருடன் அடரும் பலமதனை
முன்னாள் அரியும் முறைமையுடனே அறிந்து
போரில் இவனை வெல்லப் போகாது அமுதகுடம்
காரியமாய்க் கேட்க வென்று கார்வணன் அந்நாளில்
''வாராய் பலவான் மகாகருடா பால் குடத்தைச்
சீராகத் தந்தாயால் சிறப்பாய் உனக்குவரம்

---

அரும்பத உரை :

பூரணமாய் - நிறைவாய்
தானவர் - தேவர்
அந்தரம் - ஆகாயம்
அடரும் - போரிடும்
கார்வணன் - கார்வண்ணன் (திருமால்)

உந்தனுக்கு வேண்டியது உதவுகிறேன் கேளும் எனறார்
அந்த மொழி கேட்டு அடற்கருடன் ஏதுரைப்பான்
நீண்ட புகழ் மாலே நிறைந்த கனதவங்கள்
வேண்டியது நான் தருவேன் விரும்பி எனைக்கேளும்
அந்த மொழி கேட்டு அரியோன் மனமகிழ்ந்து
''சிந்தை நிறை தீரா சிறந்த புகழ்க் கருடா
எந்தனுக்கு வாகனமாய் என்னாளும் நீ இருக்க''
கேட்டவரத்தில் கருடன் மொழிதப்பாமல்
தீட்டு புகழ் அமுதகுடம் செங்கருடன் தோளேற்றி
கொண்டு வந்தார் மாலவனார் கோலக் கருடன் புயத்தில்
மண்டலஞ்சேர் செம்மலையில் வாரி எழுசூரியன்போல்
வந்தார் அனேக செல்வம் வாழ்வு குடத்துடனே
செந்தாமரைக் கண் திருமாலும் வந்தவுடன்
இருபது கோடி இகலில் வருமூதரக்கர்
பருப்பதம் போல் மேனி பருத்த கருவுடலும்
ஒருவனுக்குப் பத்தாது உலகு எவையும் வாரி உண்பன்
உண்டு விட்டுப் போக வென்று ஓங்கி வெகுதிரளாய்
வண்டர் இடிபோல் முழங்கி வந்து வளைந்துகொண்டார்
தேவர் கலங்கி திடுக்கிட்டு உடல் பதறி
மூவாரியே முதல்வனே காரும் என்றார்
அன்னாள் அரியும் அமர்புரிந்து கொல்லரிது
இன்னாள் உபாயமதாய் இவரை வெல்ல வேணுமென்று
மலை போல் முலையும் மதன நிறத்தில் நெற்றி

---

அரும்பத உரை :

மொழிதப்பாமல் - சொன்னசொல் மாறாமல்
மண்டலம் - நிலவுலகம்
பருப்பதம் - மலை
பத்தாது - போதாது

சிலைபோல் அழகும் சிறந்த தொடை செங்கமலம்
செங்கனிவாய் நாசி செவியும் விழிவேலும்
மங்குல் அணி கூந்தல் மதன கிரீடமன்போல்
வந்தார் மயில் அன்னம் போல் வந்தவரைக் கண்டரக்கர்
சந்தார் புகை வெள்ளம் தான்பெருக மன்மதனும்
வில்வில் பொருதி விடுத்தான் மதன் சரம்
அல்வி(ல்) விளைந்த அரக்கர் உடம்பசைய
நின்றார்கள் காமவெள்ளம் நீத்தமாய்க் கவிபுரள
அன்றோர் திருமால் அரக்கரைப் பார்த்தேதுரைப்பார்
கடலில் அமு(த)தோ கனிவாயில் பெண்ணமுதோ
இ(ட்)டமுடன் உங்களுக்கு எந்த அமுதம் வேணும் என்றார்
மால மோகினி கேட்க மால் என்று அறியாது உரைப்பார்
சாலமோக வேலை தரு அமுதம் நாம் வேண்டோம்
எத்தனை கோடியுகம் இவ்வமுதம் வாழ்வதிலும்
சற்று உந்தன் செங்கனிவாய் தன்னமுதமே போதும்
எங்கள் உடல் பிழைக்க இன்னாள் இதழ் அமுதம்
மங்கையரே தாரும் என்றார் மாலும் உரைக்கலுற்றார்
சேனை அரக்கர் திரண்டீர் கன கோடி
தேனின் அமுதம் தெவிட்டாது அருந்துதற்கு

---

அரும்பத உரை :

சிலை - கல்லிற்செதுக்கிய அழகிய உருவம்
நாசி - மூக்கு
சந்து - சந்தனம்
வில் - கரும்புவில்
சரம் - மலர்க்கணை
அல் - இருள்
வெள்ளம் - மிகுதி
மால - மாய
இதழ் - உதடு
சேனை - கூட்டம்

யாருக்கு நான் பாரி ஆகுவேன் நீங்கள் இன்னாள்
போருக்குள் வெட்டிப் பொருங்கோள் நிலைத்தவர்க்கு
முக்கனியின் சருக்கரைத்தேன் முன் பாலின்னமுதம்
தக்குவது யாருக்கோ தடவு கிரீட முலை
காமப் புளகம் கரை புரள அழகுறதம்
நேமத்திலேற நிலைத்தோர்க்கு நாம் கொடுப்போம்
என்று நெடுமால் இயம்பி நகைபுரிய
அன்று அரக்கர் அடங்காம(ல்) மதம் மீறி
எந்தனுக்கு உந்தனுக்கு என்று ஒருவருடன் ஒருவர்
விந்தையுடன் வெட்டி வினையொருவர் தப்பாமல்
பொங்கி வெட்டி குத்தி போர்க்களங்கள் சேறாக்கி
மங்கி அரக்கரெல்லாம் மாண்டு விட்டார் மோகினிமுன்

## விருத்தம்.

கார்குழல் அரிவையர் காயம் விந்துவாய்
வார் புனை மாதர்கள் மயக்கிலே மனம்
போர் புனை உயிர் உடல் பேணிவார் களாம்
சீர் புழு சுடரிலே சேர்ந்த வாறதே

---

அரும்பத உரை :

பாரி - மனைவி
பொரு - சண்டை
நிலைத்தல் - வெற்றிபெறுதல்
முக்கனி - மா, பலா, வாழை
தக்குவது - கிடைப்பது
நகை - சிரிப்பு
மதம் - வெறி
விந்தை - வேடிக்கை
மோகினி - திருமாலின் பெண் [illegible] வதாரப் பெயர்

## நடை

செங்கண் நெடுமால் சப்தரிஷி மூவர்களும் மகிழ்ந்து
தங்கு தரு பாக்கியத்தைத் தான் வருந்தி ஈயவென்று
பந்தியிருத்தி பரிந்தார் புசிப்பமுதம்
அந்தச் சபையில் அரக்கருக்கெல்லாம் அரசன்
அட்டதிசை எட்டில் அடங்காத மாயை உள்ளோன்
வட்டமுலை மோகினியால் மாளாதவன் மீண்டு
சந்திரர்க்கும் சூரியர்க்கும் தான் நடுவாய் வெற்றுருவாய்
வந்திருந்து மாலமுதம் வாங்கி புசிக்கலுற்றான்
கூடியிருந்தவனைக் கண்டட கதிர் சந்திரனும்
தேடும் புகழ்மாலை திடவரக்கன் என்றுரைத்தார்
கண்டார் நெடுமால் கள்ளவரக்கன் என்றறிந்து
தண்டாருஞ் சக்கரந்தால் தானடித்தார் உரசிய
அந்த அடிபட்டு அரக்கன் உடல் பிளவாய்
விந்தை உடல் மலைபோல் விழுந்து இருகூறாக
தங்கும் அமுதருசி தான் புசித்தான் ஆகையினால்
மங்கியுடல் உயிரும் மாளாது தான் பெருகும்
பார வரையுடலோன் பாதிபிளவு இரண்டும்
வாரங் கடல் கடந்த வாசுகியின் பாம்பின் வடம்

---

அரும்பத உரை :

கார்குழல் - கரு நிறமேகம் போன்ற அடர்ந்த கூந்தல்
அரிவையர் - பெண்கள்
காயம் - உடம்பு
மயக்கம் - கலக்கம்
பந்தி - வரிசை
புசிப்பு - அனுபவிப்பது
கதிர் - சூரியன்
சக்கரம் - திருமாலின் வலக்கரம் இருக்கும் வட்ட ஆயுதம்
வடம் - கயிறு
வார் - கச்சு
சுடர் - தீ

அண்டின் அதன் மேல் அன்று விழுந்ததனால்
துண்டுபிளவு இரண்டும் தொடர்ந்து பாம்புருவாய்
வீரநிறை இரண்டுருவாய் பீருங்கண்பிலமாய்
தீர நெடும் பாம்பு சினந்து பகுவாய் விரிந்து
ஆயிரத்தின் யோசனையாம் ஆனபடத்தின் விரிவு
நேர்புரத்துன் வாயால் நிறைந்தகிரிகள் எட்டும்
வாரி மிக முழங்கும் வாரிபுனல் வேலை உண்ணும்
காரில் எழுவேலை கனகவிடம் கொப்பளிக்கும்
தங்கு வல் ராகு தரு கேது பாம்பிரண்டாம்
பொங்கும் அமரர் களைப் பொர மிக விரட்டி
என்று முகஞ்சீறி இயல்பாய்த் தொடர்ந்தவனுக்கு
அன்று அமரர்களை அன்பாகவே மறிக்க
சிந்தை கலங்கி திகைத்து அமரர் எல்லாம்
இந்த விதிக்கேது செய்வோம் என்று கலக்கமுற்றார்
அன்னேரந்தன்னில் அரனும் நெடுமால் வேதன்
இன்னேரந் தேவர்களை இப்பாம்பு கொல்லும் என்று
மந்திரத்தினாலே மறித்து அரவுதன்னை
உந்தன் பழிக்கு உபாயம் உரைப்போம் எனவே
பார்ப்பில் கொடுமை பாம்புகளைப் பாரினில் (ஏவில்)
தீரப் பிடித்தெல்லாம் திரட்டி விழுங்கி விடும்
வானவர் மேல் ஏவிவிடில் வானவரை வானுலகைத்
தானண்ட லோகம் எல்லாம் சாடி விழுங்கி விடும்

---

அரும்பத உரை :

வேலை - கடல்
பொர - சண்டையிட
மறிக்க - தடுக்க
அரவு - பாம்பு
பார்ப்பு - பறவைக்குஞ்சு
சாடி - போரிட்டு

எங்கும் விடுத்தால் எவராலும் தடுக்கரிது
திங்கள் குளுமையிடம் சென்றால் குளிர்தோஷம்
அங்கம் சந்திரனை அதனால் முழுங்க அரிது;
செங்கதிர் மேல் ஏவி விடில் தினகரன் தன் காந்தி சுடும்
காந்தி சுட ஆவிகலங்கும் அப்பால் செல்லரிது
நேர்ந்தவர் மேல் ஏவ வென்று சீர்மூவர் ஏதுரைப்பார்
உங்கள் தனக்கு உறுதியுடன் குளுமைத்
திங்கள் கதிரோன் சிறந்த பணி தருவார்
இருவர் தனக்கும் இருவர் பணிக்காரர்
பருதி இருவர் பணிதருவார் என்றுரைத்தார்

## விருத்தம்.

வரையது நகர்ந்ததென்றால்
வரையெதிர் வரையே தண்டும்
நிறையவே கொடுத்தால் நிற்கும்
நிற்குமோ திரட்டு முன்னால்
கரையுமோ எளியோர் மீதில்
கனவிலும் எதிர்வில்லார்கள்
விரையவே இவர் வெல்லும்
வெங்கதிர் மதியும் அன்றே

---

அரும்பத உரை :

திங்கள் குளுமை - குளிர்ந்த ஒளி வீசும் சந்திரன்
தோஷம் - குற்றம்
தினகரன் - சூரியன்
ஆவி - உயிர்
பருதி - சூரியன்

## நடை

ராகுவுடன் கேது நளின மதிசூரியனை
தாகமுடன் எங்கட்கு தா வென்று கேட்டதுவே
அந்த மொழி கேட்டு அலை கதிரோன் சந்திரனும்
உந்தன் பணிக்கு ஒதுங்காமல் வந்திடு என்றான்.

## விருத்தம்.

வலியவர் எதிர்த்து வந்தால்
மலங்குவர் எளியோர் சிந்தை

எலி எதிர் பூனை வந்தால்
எதிர்க்குமோ? எலியும் ஓடும்;

புலிஎதிர் ஆடுவந்தால்
போகுமோ புலியும் பயந்து

வலிஎதிர் பாம்பைத்தேடி
வளர்மதிக்கதிரோன் வந்தான்

## நடை

திங்கள் கதிரவன்பால் செல்லரிதாய் பாம்பிரண்டும்
பொங்கும் எங்கள்தன் பணிக்குப் போதவந்து செல்லு
மென்றார்
பாரமுடன் எங்கள் பணி பார்த்ததனால் தீர்ந்தது என்ன
சேருமிரு பாம்பிரண்டும் சம்மதித்து நின்றதற்பின்

---

அரும்பத உரை :

மலங்குவர் - இலங்குவர்
பாம்புஇரண்டு - இராகு, கேது;

தேவர்க்கமுதம் சிறந்த தருவுங்கொடுத்து
யாவர்க்கும் இன்பம் அதிக சுகம் தேவர் பெற்றார்
திங்கள் அரனார் திருமுடியிலே தரித்தார்
மங்கை மால் லட்சுமியை மார்பிலே தான் தரித்தார்
வேதாவும் அன்னமதில் மேலேறி வீற்றிருந்தார்
மீதாங் கடலில் விளைந்தது எல்லாம் பகுத்து
சங்கரனும் மாலும் அயன்தானவர்கள் இன்பமுற்று
பொங்கும் அருளோன் புகழோரைப் பார்த்துரைப்பார்
இந்த அமுதம் இயல்புடனேதான் கடைய
சிந்தையுடன் முப்பது நாள் சீர்பெருகும் பாற்கடலில்
எல்லோரும் நாமும் ஏந்திழைமார் பார்வதியும்
அல்லோ நனைந்ததனால் யாரேனுமாக அதில்
பொங்கும் கதிர் சேரும் புனித மொரு நாளில்
விழுந்து நனைந்தவர்க்கும் மேலோனே நீ கடைந்த
சூழ்ந்த அமுதசுகம் சொர்க்கம் அவர்க்களிப்போம்
சிந்தையறிந்து சிறந்து ஒரு நாள் மூழ்கி
இந்தக் கதையும் இயல்புடனே தான் கேட்டால்
அங்கவர்கள் மேலும் அனேகதவம் பெற்றிடுவார்
பொங்க விடமுண்ட புனித சிவராத்திரியில்
விந்தையுடனே விழித்தோர் பெறும் புகழ்தவசு
எந்தனால் சொல்லரிது ஏக வெகுதவமாம்
நீரில் முழுகாமல் நிறைந்த சிவராத்திரியில்
சீரில் குறையாமல் சிறந்த கதை பத்தியதாய்க்
கேட்டவர்க்குச் செல்வம் கிடைக்கும் அனேகதவம்

---

அரும்பத உரை :

வேதா - பிரமன்
பகுத்து - பங்குபோட்டு
தானவர் - தேவர்
ஏந்திழை - அழகிய ஆபரணம்
பொங்கம் - மகிழ்ச்சி

இந்தக்கதையைப் படிப்பதன் பயன் நோக்கம் காலம் பலன் கூறப்பட்டது.

நாட்டமது தருமேயதை நம்பரிதாம் நம்பின் உண்டு
மந்தக் கருத்து மலைவுபெரு மாந்தர்க்கு
எந்த விதமும் இடரும்; உதவி இல்லை !
திங்கள் அணிந்த சிவனார் மொழிப்படியே
தங்கு முனிவர்களும் தானவர்களும நம்புதவம்
மாகப் புனலாடி மகிமை இந்த நற்கதையைப்
பாகமுடன் கேட்டு அரன் பாதத்தைப் போற்றும் என்றார்
தங்கு மார்க்கண்டன் தரு மிருக சிங்கனுக்கு
பொங்க முடன் சொன்ன கதை பூவுலகில் யாவரேனும்
சிந்தை வைத்து அன்பாய்ச் சிறப்புடனே கேட்டவர்க்கு
அந்தி மதி சூடும் அரன் அயன்மால் லோகமுண்டு

## விருத்தம்.

பாரினில் வேதம் நாலும்
பகர்ந்த சாத்திரம் ஓர் ஆறும்
நேரினில் பூரண மூவர்
நிறைதவம் செய்கை யாவும்

---

அரும்பத உரை :

மந்தம் - கூர்மையின்மை (தாமதம்)
இடர் - துன்பம்
மலைவு - மதிமயக்கம்
இடர் - துன்பம்
புனல்ஆடி - நீராடி
மகிமை - பெருமை
பாகமுடன் - பக்குவமாய்
சாத்திரம் ஆறு - வேதாந்தம், வைசேடிகம், பாட்டம் பிரபாகாரம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை
பூரணமூவர் - கபிலர், பதஞ்சலி, வியாசர்,

சாரினில் நரகம் பாவம்
திருமேல் சொர்க்க லோகம்

சீரினில் உணர்த்தல் கேள்வி
சிந்தையோர் சொன்னயோகம்

## நடை

தந்தை யன்னை மீதுரைக்க தான் மகிழ்ந்து பாலகனும்
விந்தையுடன் இருவர் மெல்லடியைத் தெண்டனிட்டு
மாகப் புனலாட மகிழ்ந்து மிருகசிங்கன்
பாகமுருவாகப் பலதீர்த்தம் தான் ஆடி
பொங்க புகழ் பூவில் புனித நதியுள்ள தெல்லாம்
தங்கும் மிருகசிங்கன் தான் ஆடி அஞ்செழுத்தை
நெஞ்சகத்தில் உச்சரித்து நேசமிது பொருளாய்
மிஞ்சு தவசு விரைந்து வினை போக வென்று
பாசக்கடலில் படர்மதியின் தோணி விட்டு
நேசத்துடன் நடந்து நீண்ட மலைக் காடகன்று
மலையும் கௌனரிஷி மாலங்கருக்கப்புரத்தே
குலையும் பொதுவழியில் கூடுமிருள் காடுவிட்டு
ஆதிபவளம் அருள் சுருட்டுத் தாழ்திறந்து

---

அரும்பத உரை :

மாகப்புனல் - மேலான நன்னீர்
பாகம் - பக்குவம்
தீர்த்தம் - புண்ணியதீர்த்தம் (நீர்)
பூவில் - பூவுலகில்
புனிதநதி - தூயநதி
அஞ்செழுத்து - பஞ்சாட்சரம்(மறை)
வினைபோக - கன்மபந்தம் நீங்க
பாசம் - மாயை

நீதி எட்டும் நீங்கி நிறைந்த பொன்னின் நாடு கண்டு
கானாடு பத்திக் கலந்த பளிங்கப்புறத்தே
மேனாடு செம்மை விளங்கிப் பொறியேகுப்பி
தானாடு ஆறதருகனுப்பு ஆதாரம்
தேனாடு ஏழால் சிறந்தடங்க ஐந்தடங்கும்
அடங்காத ரெண்டில் அருள் நாதமே வெளியாய்
இடைபிங்கலையை இழுத்துச் சுழி முனையில்
ஈர் எழுத்தின் வாசி இயல்பெருக வீதி விட்டு
ஓர் எழுத்தில் கட்டி உயர்ந்த அடிமேல் கீழாய்
காலாக்கினியில் கனத்த ஒளி மூட்டி
மேலாக்கி உள்ளுருக்கி மீளும் கசடெரித்து
ஆங்காரமாஞ் சூறையிட்டு ஆழ்வெளியே வெளியாய்
ஓங்காரமேறி உயர்ந்தி அருள் கோவில்
பூட்டும் மிகத்திறந்து போய் அணுகி மேல் வாசல்
சீட்டும் புகழான சிறந்த அருள் நிலையில்
குன்றாதுடலில் நின்று குன்றுமுடல் இளைத்து
நின்றான் சிவதவசு நீதி மிருகசிங்கன்

## விருத்தம்

கருவியைக்கடந்து ஓரமேல்
கனலொடு அகாரம்பத்தி
உருவியே கடந்து மாய்கை
ஒதுங்கிடா தளவால் தாக்கி

---

அரும்பத உரை :

காலாக்கினி - ஊழித்தீ
கசடு - குற்றம்
ஆங்காரம் - அகங்காரம்(செருக்கு)
ஓங்காரம் - பிரணவம் (ஓம்)
சூறை - கொள்ளை
கருவி - மெய், வாய், கண், மூக்கு, செவி,

அருவிய மேலை வாசல்
அதுவளி அறிவை யோட்டி
உருவில் லானடியில் நின்று
உண்மை கூற தவசு செய்தான்

## நடை

இந்த முனி அன்பாய் இருக்கும் சிவதவத்தில்
சிந்தை மகிழ்ந்து சிவனார் அவர் நினைந்தார்
அந்திமுயல் தவத்தோர் ஆனவோர் அருளிருந்தார்
சுத்த வெண்ணீறுத் தளமாய் துலங்கு நெற்றிக்கண்ணுடனே
சக்தியுற்றோர் பத்தி தங்கு மிங்கு ஆபரணம்
செய்ய நந்தி மீது சிவனார் சிறந்து உமையும்
வையம் புகழ்தவத்தை வந்து அரனாரும் கண்டு
பரமேஸ்வரர் மகிழ்ந்து பார்வதியே பாரும் என்றார்
வரமேவும் பார்வதியும் மாதவங்கண்டே மகிழ்ந்து.

## விருத்தம்

மகவும் அலைய மாதாவும்
மகவு மகிழப் பாலூட்டி
அகமும் வளர்த்துத் தாலாட்டி
அமுதமளிக்கு மதுநேசம்

---

அரும்பத உரை :

உருவில்லான் - பரஞ்சோதி
வெண்ணீறு - வெள்ளைத்திருநீறு
தளம் - சுனம் (வெண்சாந்து)
துலங்கு - சிறந்துவிளங்கும்
நந்தி - நந்திதேவர் (இடபம்)

உகளமை தவசு மனதுருகி
உமையும் அரனார் பசுப்போல்

மிகவும் முனிவன் கன்றாக
விரைய முனிபால் காணவந்தான்

அனலில் இருக்கை அன்புற்ற மாமுனியே
கனலை விட்டு வாரும் என்றார் கண்டான்முனிஅரனை
அஞ்செழுத்தாய் ஓரெழுத்தாய் அண்டபிண்டமூடுருவி
பிஞ்செழுத்தாய் நின்ற பெரிய அருள்விளக்கே
காணக் கிடையாத மலர்ப் பொற்பாதம் பூண்டுகொண்டான்

✳

## விருத்தம்.

எங்கும் இருளைத்தான் கிழிக்க
இரவி உதயம் ஆன

தங்கும் கமலம் முகிழ் விரியும்
தானே வண்டு மதுவுண்ணும்

மங்கும் வினையைத் தான் கிழிக்க
வந்தார் அரனார் உதயமென

பொங்கும் கருணைக் கடல் முனிவன்
புனித அமுதம் குடித்தாரே

---

அரும்பத உரை :

உகனம் - மகிழ்ச்சி
அஞ்செழுத்து - பஞ்சாட்சரம்
ஓர்எழுத்து - பிரணவம்
மது - தேன்

## நடை

தையல் உமை மாது அரன் தாள் இணையைப்
பூண்டு கொண்டு
செய்யும் புகழ் முனிவன் சீர் தோத்திரம் உரைப்பான்
மிருகசிங்க மகரிஷி சொன்ன தோத்திர விருத்தம்
படிந்த பேரும் கேட்கிறபேரும் பரமபதம் மோட்சம் பெறுவார்கள்
என்று அரன் உமையாள் வாக்கால் அருளிச்செய்தார்
என்றவாறு

## விருத்தம்

"அரனே! சிறந்த அருளே! விளைந்த
அவையே! நிறைந்தும் எவையாம்
பரனே! படர்ந்த இருளே! விளைந்த
பகலே! விளங்கும் அடியார்
வரனே! கவந்த கனரூப ரூபமதி
நீறணிந்த முடியாய்!
உரனே! வளர்ந்த வரைமீதுயர்ந்த
உமைபாதி தங்கும் சிவனே!

---

அரும்பத உரை :

தையல் - பெண்
இணை - இரண்டு
தோத்திரம் - துதிபாடல்
பரமபதம் - வீடுபேறு
மோட்சம் - முத்திநிலை (பரமுத்தி)
வரனே - (வரங்கொடுப்பதில்) சிறந்தசிவனே!
கவந்தம் - வயிறு(குறைத்தலை)

படிமீதில் வேதன் ஒரு நாவிலேழு
பலர் ஏக ரூப சேடமாய்

நெடிதாக ஏவ அவையே மறந்து
நிலை யாதுள னற்றின் வாய்

கொடிதாகிய ஒன்றை அரியாது
ஒன்றுகுல பேதை சிந்தை மயலாம்

ஒடி பூணுபாய் அவையே நிறைந்து
உமைபாதி தங்கும் சிவனே

கருவான காயம் உயிரேசுமந்து
கனமாலதாகி விடுனாள்

எருவான மேடை தனிலே கிடந்து
இடரான நத்தை பொடியாய்

மருவான சீவன் எவையே பிறக்க
வயிரோயி தோன்று மரியோன்

உருவான காலன் வினைதீரவேணும்
உமைபாதி தங்கும் சிவனே

நலமான வேதன் உடலேபடைக்க
நளிர் பூவினங்கள் அடைவாம்

---

அரும்பத உரை :

நீறு - விபூதி
உரனே - திண்ணிய அறிவும், உள்ளத்தின் மிகுதியுங் கொண்ட வலியவனே !
படி - உலகம்
சேடன் - பெரியோன்
பேதை - முட்டாள்
மயல் - மயக்கம்

தலைமீதில் அன்னை வெகுபேர்கள் இன்று
தயவான சிந்தை மலவாம்

பிலமானகாலன் இவையே தொடர்ந்து
பெரிதான பாசம் தெளிவாம்

உலகாசையீதுஎன வினைதீரவேணும்
உமைபாதி தங்கும் சிவனே

துளிமீது கொண்டல் புனலால்
விளைந்த அவமாய்கை யாரும் பிரிவின்

தெளிவொடு கண்ட பொறியாதி அய்ந்து
திரமான தோற்ற(ல) தெதுவோ

வெளியாகி நின்ற விரையால்
விரிந்த விளைவாகி நின்ற அருளே!

ஒளியாகி நின்ற பரனே சிறந்த
உமைபாதி தங்கும் சிவனே

கனமாய்கை தாதைமயல் மூழ்கிவிந்து
கரைவாசல் ஊடு நுழைவாம்

மனதாவி அன்னை உடலூடெடுத்த
வளமான இந்த உடலைகனமாய்

---

அரும்பத உரை :

துளி - மழை
கொண்டல் - மேகம்
புனல் - நீர்
அவம் - வீண்
பொறி - ஐம்பொறி அவை மெய், வாய், கண், மூக்கு, செவி,
தாதை - தந்தை

மலம் - குற்றம்

கனமாய்கை முத்தவழி ஏவவந்து
கடிதாக ஏவி விடுநாள்
உளதொடுநின்ற அருள்பூண வேணும்
உமைபாதி தங்கும் சிவனே !

கோது தவிர்ந்து மனதே புகுந்து
குருவான கல்வி நிறைந்து
சூதுந்தவிர்ந்து அதுவே புகுந்து
அறிவான் சிந்தை பொருளாம்
ஏதும் தவிர்ந்த அருளே புகுந்த
இறைவா நிறைந்த அரனே !
ஓதும் நிமிர்ந்த புகழே சிறந்த
உமைபாதி தங்கும் சிவனே !

கொத்தால் மிகுந்து அதுவே சிறந்த
குறிகாண முன்னின் விரைவாய்
வித்தால் எடுத்த பலமாய்கை யாவும்
வினைவாகி மேலும் விரிவாய்
செத்தார் பின்நின்ற தேவரோ பின்னின்ற
சிறியார் பிணவார் தேவரார்
உத்தோர்கள் காண வறியாதறிந்த
உமைபாதி தங்கும் சிவனே.

---

அரும்பத உரை :

கோது - குற்றம்
குரு - மனவிருளைநீக்கும் ஞானாசாரியர் (ஆசான்)
சூது - வஞ்சனை

மாயாத சீவன் எதையோ பிறந்து
வளியேகி மாண்டு விடுமோ
தேயாது யறிந்த கதிரோன் வளர்ந்த
திருவோடு வந்தமதியும்
சாயாது எழுந்த வளியோக வெறு
சமகைனாசை தினமும்
ஓயாத வேலை கடுவே யருந்து
உமைபாதி தங்கும் சிவனே !

தலை ஏழுபொந்து உடல்வாசல் இரண்டு
தனிலே றாசிந்தை பணியே
நிலைஏக சிந்தை அடையாது இரண்டு
நிறைதாள் உந்தி அயனாம்
சிலைமோக செங்கை அரியாமற்புநத்தி
சுந்தரி மூவர்தாளத் துவாம்
உலையாத இன்ப மனதே புகுந்து
உமைபாதி தங்கும் சிவனே

பாரேசிறந்து அடியேன் மகிழ்ந்து
பலநாளிருந்து முன்தாள்

---

அரும்பத உரை :

சமம் - அறுவகைச் சமாதிகளுள் ஒன்று(அந்தக்கரணத்தைத் தண்டித்தல்)

தாள் - பாதம்

சீரே புனைந்து அருளேயிருந்து
திறமாகி நின்றதினியே

..........................................................

ஊரெங்கும் சிறந்து நிறைவாக வேணும்
உமைபாதி தங்கும் சிவனே,

## நடை

ஓதும் திருவிருத்தம் உத்தமரும் பார்வதியும்
காதலுடன் கேட்டு கருணை மனம்மகிழ்ந்து
தங்கும் மிருகசிங்கன் த(ன்)னை அரனார்நோக்கி
''பொங்கும் புகழ் மகாதவம் பூவில் மிருகசிங்கன்
சிந்தை வைத்தால் மீளாசிறந்த அருள் நிலையில்
உந்தன் மனதில் உறறவரம் கொடுப்போம்
சிந்தைமகிழ்ந்து சிறந்த வரங்கொடுப்போம்
கந்தம் நிறைமுனியே காட்சியுடன் கேளும்'' என்றார்
ஈசர் உரைக்க இறைஞ்சி மகாமுனிவன்
நேசம் நிறைந்த சத்திய பங்கா
அன்னைதந்தை நாயேன் அனுதினமும் நின்கயிலை
உன்னைப்பிரியாது இருக்க உற்றவரம் ஈயும்'' என்றார்

---

அரும்பத உரை :

சீர் - சிறப்பு
திறம் - வலிமை
ஓதும் - சொல்லும்; திருவிருத்தம் விருத்தப்பாவகையால் செய்யப்ப தோத்திரப்பாடல்
காதல் - அன்பு
அருள் - தொடர்பில்லாரிடத்தும் (உள்ளன்போடு) காட்டும் பரிபு
வரம் - தெய்வம் முதலியவற்றால் பெறும்பேறு (அனுக்கிரகம்)
இறைஞ்சி - வாழ்த்தி

அன்றுமுனி சொல்ல அரனாரும் தான்கேட்டு
கொன்றை அணிந்த சடைக்கோமானுந்தான் கேட்டு
உந்தனுக்கு வேதா உவமையிலா அளவு
இல்லறத்திலொத்து இயல்புடனே வானத்திருந்து
வல்லவனே இன்பதுன்பம் மாய்கைக்கடல் மூழ்கி
செல்காலம் நிகழ்காலம் சேர அனுபவித்து
நல்காலமதிலுண்மை நாம் அழைப்போம் வாரும் என்றார்
இவ்வாறு அதை ஈசர் எடுத்துரைக்க மாமுனியும்
அவ்வாறு இன்பம் ஒழியாது ஆசைவெள்ளம்
மாயக்கடலில் மனதுபற்றி நேமமில்லை
காயக்கடலில் கலந்தார் இமைப்பொழுது
பாரில் சிற(ந்த) கருத்து பண்புடனே தானதருமம்
நீரில் குமிழியென்று நினைவுணர்ந்து ஒட்டாது
ஊத்தைச் சடலம் ஒழிவறியாது ஆசை உற்று
காற்றைப் பிடித்துக் கரகத்தடைத்தப்பால்
நீண்டதவம் ஆசை நினைவு தவஞ்சிக்காது
மாண்டுமென கயிற்றில் வந்தனாணவத் தாட்டிவிடும்
காயம் வெந்து தீயில் கருவி அழிந்து விடும்
மாயமிது ஆசை மயக்கம் வெகு(ளி) திரளாம்
கூத்தாடும் பாண்டமிது காற்றகன்றால் ஒன்றுமில்லை
கூத்தாட்டம் பொல்லாக் குடிச் சாக்காடு
பாரில் பொருள் மயக்கம் பாவையர்மேல் ஆசைவெள்ளம்
காரி நடுவில்லாக் கண வரையில் சந்திரனாம்

---

அரும்பத உரை :

ஒழியாது - நீங்காது
மாயக்கடல் - மாயையின்காரியமாகிய பொருள்களில் பற்று
தானம் - அறவழியில் ஈட்டிய பொருளைத்தக்கார்க்குக் கொடுத்தல்
தருமம் - உயிர் நலம் கருதி அறஞ்செய்ய விரும்பும் நற்செயல்

இந்த மயக்கம் இறப்பும் பிறப்புமல்லாய்
வந்துள மலரடியில் வாகாகச் சேரலரிது

## விருத்தம்.

இளமைப் பிராயமுதல் உடலில்
இதுவா முரியிளைவேதுவோ

பழமையதுவுமாகியது
பழசுமனதே புதிதாமோ

வளமையிதுவும் வயதேக
வருவார் வருவார் நமனாரும்

உளமைதவிரும் அங்கிருப்பரேனும்
உயிரின் வாதை உட(லே)லதோ

மெய்யனே நின்பாதம் வேண்டினபேர் வீற்றிருப்பார்
அய்யனே ஆசையினால் யார் இருந்து வாழ்ந்தார்கள்
காணக்கிடையாத பொருள் கைமீதில் வந்ததென்றாரே
வீணுக்குப்பாரில் விடுவார்களா ஈஸ்ரர்
என்று மிருகசிங்கன் ஈதுரைக்க ஈசர் சொல்வார்
மன்னுலகில் வேதன் வகுத்த விதிக்கற்பினையை
நாமும் அதைத் தடுத்தால் நானிலத்துக் கொவ்வாது
ஆமாந் தவத்தில் அணுகாது காம வினை

---

அரும்பத உரை :

பிராயம் - வயது
வளமை - செல்வப்பொலிவு
ஆசை - பெற்றபொருளைச் சிறிதாக்கி பெறாப்பொருளிடத்து நாட்டங்கொள்ளும் மன ஓட்டம்
மன்- நிலையான

## விருத்தம்

இருளில் புகு(து)ங் கதிரவனோ(டு)
இருளும் ஒளியும் கலவாது

அருவியில் புகுந்தும் உனதுயிர்
அருவி மலமும் அணுகாது

தெருளில் அருஞ்சுவை கொளுநர் சுகம்
தெரிதலவர்க்குத் தெரியாது

அருளில் உனது மனமாய்கை
அருளித்தறிவே பொருள்மீளும்

※

## நடை

சிற்றின்பந் தன்னில் சிறந்த பேரின்பதவம்
சுற்றி விளக்கொன்றிரண்டாய்த்தான் ஆனந்தமாகலையோ
எண்ணெய்க் கட்டை நெய்யதுவும் ஏகமொரு அக்கினியாம்
மண்ணில் நிறங் கற்பூரம் வாசம் புகை வேற்றுமையாம்

---

அரும்பத உரை :

ஒவ்வாது - பொருந்தாது
அணுகாது - நெருங்காது
காமம் - விருப்பம்
அருவி - நீர்வீழ்ச்சி
தெருள் - தெளிவு
சிற்றின்பம் - ஐம்புலநுகர்ச்சி (பலவகைப்படும்)
பேரின்பம் - வீடுபேற்றின்பம் (ஒரே ஆனந்தம்)
கர்ப்பூரம் - தேவதாரு மரப்பட்டை முதலியவற்றை ஆலையி விட்டுக் காய்ச்சுவதால் உண்டாவதும் ஆவியினாலுண் -டாகும் பரிணாமப் பொருள்.

காமப்புணர்ச்சியிலே காமநிலை கண்டுணர்ந்து
ஏமப்பகையாம் எனத்தீது அனையது அன்றி
ஞானம் மிக விளையும் நாமே நீ யாவருக்கும்
தானமும் தவமும் தரிக்கும் அவர் மனதில்
இல்லறத்தில் கூடியிருந்தால் ஒத்கிருந்தால்
நல்லறங்காண் எந்தனுக்கு நமக்கும் இரு சக்தி உண்டு
மங்கையரைக் கூடிமகிழ்ந்து சுகம் காணுதற்குப்
பொங்குபுகழ் மனையில் போய்க்கயிலை வாரும் என்றார்
கிள்ளை மொழியாளும் கிருபையுடன் ஈஸ்வரரும்
வெள்ளிவரை நோக்கி வித்தனார் போகின்றாம்
ஈசன் உரைத்த சொல்லை இந்த முனி தப்பாமல்
பாசமுடன் அரனார் பாதத்தில் தெண்டனிட்டு
தங்கள் பதி நோக்கி தான் வந்து அன்னை தந்தை
பொங்கு புகழ்தாள் தொழுதான் புகழ்ந்திருவர் பாலகனை
கைகோத்துக் கட்டி கன மகிழ்ச்சி(யுடன்) மார்பணைத்து
மெய்கூர்ந்து இன்பம் மிகமகிழ்ந்து ஏதுரைப்பார்
சங்கரரை நோக்கி தவசி இருந்து கேட்டவரம்
எங்களுக்கு அன்பாய் எடுத்துரைப்பாய் பாலகனே!
என்றுதந்தை கேட்க இயம்புவான் பாலகனும்
கொன்றைச் சடைமுடியான் கோலமுடன் மாசித்திங்கள்
நீதிப் புனலாடி நிறைந்த அருள் போயணுகி
சோதியரனார் சுகரூபம் கண்டதுவும்

---

அரும்பத உரை :

ஏமம் - பாதுகாப்பு
ஞானம் - பேரறிவு
தரிங்கும் - உண்டாகும்
கிள்ளை - கிளி
வெள்ளிவரை - இமயமலை
இயம்புதல் - கூறுதல்
மாசித்திங்கள் - மாசிமாதம்

நின்றதவம் பார்க்க நிமலனார் வந்ததுவும்
அன்று அரனாரும் அன்பாய் மொழிந்ததுவும்
வல்ல நெறியும் வளரும் புகழ் பாலகன்
சொல்லக்கேட்டு இன்பந்தோன்றும் கடல் எனவே
பூரித்து தந்தை அன்னை போத மனம் மகிழ்ந்து
பாரித்துப் பாலகனையும் பண்பொடு உரந்தழுவி
ஆகம் மிகக்குளிர்ந்து அன்புற்று இருவரும்
நாகம் அணி ஈஸ்வரனார் தனதருள் நினைத்து
உந்தன் தவசில் உமையாளும் ஈஸ்வரனும்
வந்ததனால் ஈசரிடம் வாழ்ந்திருப்போம் எந்நாளும்
பாலகனே நிறைந்த விசனம் பாவமேல் காமம் தீர்ந்தோமே!
ஆலமுண்ட கண்டதற்பரனில் பாதம் கண்டோமே!

விரை முனை ஆலதாகி
விழுதுகள் மிகவும் ஊன்றி

தரையினில் பிள்ளை போலத்
தன்னை ஆளாக்கி விட்டாற்போல்

நிறைக்க இன்ப அன்புதானாகி
நலமுடன் தாங்கும் தாய்போல்

திறமுடன் எனது மைந்தர்
செய்தவம் தாங்குகின்றாய்

---

அரும்பத உரை :

பூரித்து - மகிழ்சியடைந்து
ஆகம் - உடல்
உரம் - மார்பு
நாகம் - பாம்பு
விசனம் - மனக்கவலை
பாவம் - செய்தகுற்றம்
காமம் - விருப்பம்
ஆலம் - விடம்(நஞ்சு)
கண்டம் - கழுத்து
ஆல் - ஆலமரம்

### நடை

அந்தவுரை கேட்டு அறிவுடைய பாலகனும்
எந்தனையே நீங்கள் இயல்பாய்ப் புகழ்ந்தீரே

### விருத்தம்

இன்று வளர்த்தத் தாய் தந்தைக்கு
எவர் என்(ன) கைம்மாறி யற்றிடினும்
அன்று மதலை நூறு வயதளவு
அருமைத் தொழில் புரியினும்
மூன்று புவனத்துள்ள பொருள்
முற்று மளித்தும் முறைமுறையே
ஊன்றி வழிபாடு இயற்றிடினும்
ஒருநாள் வளர்த்ததுக் கொவ்வாதே.

### நடை

மைந்தன் ஒருவன் நூறுவயதளவு அன்னை தந்தை
சிந்தை கலங்காமல் தினசரி(யும்) அன்னை தந்தை
கேட்ட வகையெல்லாம் கிருபையுடனே கொடுத்து
வாட்டமில்லாமல் மகன் வைத்திருந்தால் தந்தையர்க்கு

---

அரும்பத உரை :

கைம்மாறு - நன்றிக்கடன்
மதலை - குழந்தை
புவனம் - உலகம்
கிருபை - கருணை

ஒருநாள் வளர்த்த கடன் ஒவ்வாதன்னையர்க்கு
தருநாள் சுமை நீச மந்தான் போதாது என்றுரைத்தான்
இந்த உரைபாலன் எடுத்துரைக்க தந்தை அன்னை
மைந்தன் தனக்கு மணமுடிக்க வேணுமென்றார்
அந்தவுரைக் கேட்டு அருள் பாலகன் உரைப்பான்
பெண்கள் மணஞ் சூட்டவென்றால் பெண்சாதி லட்சணங்கேள்
மண்ணுலகில் வேதன் வகுத்தபடி ஒத்திருந்தால்
செய்வீர் கலியாணம் சீர்பெருகும் செல்வமிது
மெய்சீர் (அ)வமாகில் வேண்டாம் கலியாணம்
இல்லறத்தில் சீர்பொருந்த இருப்பாள் தருமவித்து
இல்லறத்தில் கோபம் வஞ்சம் இருப்பாள் கருமவித்து
வஞ்சக் கொடூரம் மனையாள் மனை வாழ்க்கை
நஞ்சில் கொடூரம் நடுங்கும் வளம் மனையில்
தங்குவது பாவம் தருமநிலை நில்லாது
மங்கையவள் ஈன்றமகன் தநதைக்கே சனியன்
படியில் கொடூரம் பல வினைகள் செய்திடுவான்
துடியில் வலுப்பாவம் தொடரும் அவன்தந்தையற்கு
நீதிமதி யறிவு நீண்டதவமுள்ள பெண்டீர்
சோதியறியதுவும் துலங்கு நிறை தவமாம்

---

அம்பத உரை :-

வாட்டம் - (மன)வருத்தம்
ஒவ்வா - பொருந்தாது
மணம் - திருமணம்
(இ)லட்சணம் - இலக்கணம்(அழகு)
கொடூரம் - கொடுமை
நஞ்சு - விஷம்
சனியன் - தொல்லை கொடுப்பவன் படி : நிலம்
துடி - காலதசப்பிரமாணத்தொன்று அது நிமிடம் எட்டுக் கொண்டது (காலநுட்பம்)
சோதியறிவு - இறையுணர்வு

பொற்பூவும் வாசம் புருடன் மனைவிளக்கம்
கற்பூரவாசம் கனதவங்கள் மீறி நிற்கும்
மாது அவள் ஈன்ற மகன் தந்தைக்கு ஏழகம்
நீதி நெறியில் நிறையும் நிறை தவங்கள்

### விருத்தம்.

கொடிய வயிற்றின் கொடியினுடல்
குருதி பெருக்கும் மகவு அவம்

நெடிய வயிறின் வயிறுதிரம்
நிறையும் மகவு அறிவாகும்

துடிய கடலின் பிறவி கடு
தொடரும் கெடுதி மூதேவி

நெடிய அமுத முடல் பிறவி
நிறை உதிரம் உபகாரி

### நடை

இந்தப்படி ஒத்திருந்தால் இல்லறமே நல்லறமாம்
கந்த நிறை மாதைக் கலியாணம் செய்வதல்லால்
ஒவ்வாத மங்கையரை ஒவ்வேன் நான் தந்தையரே
செவ்வான மங்கையரைப் பூவுலகிற் தேடுதற்கு
சாற்று நெறி நீதி தயவு (இ)லட்சணம் உரைப்பேன்

---

அரும்பத உரை :

பொற்பூ - பொன்னால் செய்த பூ
ஏழகம் - ஆடு
குருதி - இரத்தம்
மகவு - பிள்ளை
அவம் - பயன் அற்றது
மூதேவி - சேட்டை
அமுதம் - உண்டவரை நெடுநாள் வாழவைக்கும் (மருந்து பொருள்
சாற்று - சொன்ன

## விருத்தம்.

ஆதலால் இனத்தோகையரே
அரவே பூத்தத் தருவதற்பின்

மாதர் ஆகில் நற்குலத்திற் வந்தாளாகில்
மதியின ளாயி ஒது.........

......... நன்மையினால் ஒளிரும்
முகத்தாள் தானாகி......

சாதி அரவ மந்திரவை தாரின்
பேர் இல்லாதவளாகி.......

குருகி உருவம் இல்லாளாய்க்
கூந்தல் செம்மயிர் இல்லாளாய்

மருவு பெருமை மங்கையராய்
வசன கோபம் இல்லாளாய்

தரும நெறியும் மிகுந்தவளாய்
தருப்போல் பொழுதின் உதவுவளாய்

செய்ய முகமும் கமலமென
திருவோடு சிதை் வில்லாளாய்

வெய்ய பிணிகள் இல்லாளாய்
விளங்கும் ஒழுக்கம் உடையவளாய்

---

அரும்பத உரை :

ஒளிரும் - சிறந்து விளங்கும்
தரு - (கற்பக)மரம்
செய்ய - சிவந்த
கமலம் - தாமரைப்பூ
திரு - செல்வம்

துய்ய மரபு தாய்தந்தை துகளோர்
இல்லாத துறப்பினளாய்

பொய்யின் வாடை இல்லாளாய்ப்
பூவில் தேடுமென உரைத்தான்

✱

## நடை

பொறுமைக்கு பூமியைப் போல்
பூலோக இலட்சுமியாய்

அருமைக்கு நாயகம் போல்
அன்புக்கும் ஆதரவாய்

புத்திக்குத் திங்கள் புணர்ச்சிக்கு
வேசியைப் போல்

தித்திக்கச் சொல்லும் சிறந்த
வசனமதாய்

கற்புக்கு அருந்ததி போல்
காட்சியுற்ற மங்கையராய்

பொற்புக் கரசன் பூலோகத்து
உத்தமியாய்

கூந்தல் சிவத்து குறுகி
இராதவளாய்

---

அரும்பத உரை :

பிணி - நோய்
துகள் - குற்றம்
வாடை - வாசனை

நேர்ந்தே வளர்ந்து நிமிர்ந்து
இராதவளாய்

இருண்ட முகில் கூந்தல் சுருண்டே
இராதவளாய்

அரண்ட உடம்பு மகாபிணிகள்
இல்லாளாய்

செட்டை செவியும் சிவந்த
புழு கண் இல்லாளாய்

நெட்டைக் கழுத்து நெடுநாற்றம்
இல்லாளாய்

வில் புருவம் உரோமம் மிரண்டும்
வீதி தொடாதவளாய்

சொல் பெரும் வாயில் துலங்கு
பல் விரத்தினளாய்

தங்கு புயம் வத்தி தரு கை
பெருகாதவளாய்

மங்குகின்ற ஆரம் மணிக்
கழுத்து இல்லாளாய்

பார வயிறு பரு இடையும்
இல்லாளாய்

---

அரும்பத உரை :

முகில் - மேகம்
செட்டை - தோள்பட்டை
நெட்டை - நெடுமை (நீண்ட)
வீதி - புருவ நடு ஒழுங்கு
துலங்கு - சிறந்துவிளங்கும்
பார - பெரிய
பருஇடை - பருத்த இடை

நேர் உள்ளங் காலில்
நிலை வளைவும் இல்லாளாய்

தேனைப் போல் இன்பத் தெவிட்டாத
புத்தமுதம்

ஆனைக் கால் அன்றி அழகு
விரல் படமாய்

.........கைவிரல் நெத்தனவே
ஆனவிடை கொஞ்சமதாய்

கொங்கை தங்கச் செப்பெனவே
கோலமுகம் திங்களைப் போல்

வாலை மதி மங்கையர்க்கு
வகுத்த விதி இலட்சணங்கள்

திறமுடன் ஒத்திருந்தால்
செய்வீர் கல்யாணம்

என்று மகன் சொல்ல
இயல்பு மிருகண்டரிஷீ

நன்று என மகிழ்ந்து
நானிலம் எல்லாம் திரிந்து

தன்மகனார் சொன்னபடி தரணி
எல்லாம் ஆராய்ந்து

---

அரும்பத உரை :

கொங்கை - முலை
செப்பு - சிமிழ்
கோலமுகம் - அழகிய முகம்
திங்கள் - சந்திரன்

நன்மைபுரி இலட்சணங்கள்
நாடி எங்கும் ஆராய்ந்து

நாடி நவுத(வ)ரிஷி நன்னுதலாள்
நான்கு பெண்கள்

தேடியே கண்டான் திருந்து
மடமங்கையர்களை

அந்த மடமாதை அழகு
திரு இலட்சணங்கள்

சிந்தையுடன் கண்டு சிறந்து
மன(மு)ம் மகிழ்ந்து

எந்தன் மகனுக்கு இவளாம்
மனைவி என்று

கந்த நவுத(வ)ரையும் கண்ட
மிருகண்டரிஷி

நீதி நெறி முனியே நீண்ட
புகழேன் மகனான

ஆதி மிருக சிங்கன் ஆன
மிகு தவத்தோன்

சங்கரரை நோக்கி தவம்
முடித்து மீண்டு வத்தோன்

பொங்கு புகழ் ஈஸ்வரனார்
புண்ணியனார் சொன்னபடி

---

அரும்பத உரை :

மடம் - இளமை
நுதல் - நெற்றி

இல்லறத்தில் வாழ்க எனது
மகன் தனக்கு

நல்லறத்து ஆய்ந்த நளின
மங்கை நால்வரிலும்

என்னுடைய பாலகனுக்கு ஓர்
ஏந்திழையை ஈயும் என்றார்

கன்னல் மொழி சொன்னார்
கருணை மிருகண்டரிஷி

மங்கையர்கள் அன்னைதந்தை
வாகாகவே மகிழ்ந்து

பொங்கு சடை முடியோன்
பொற்பாதம் கண்டு வந்த

உந்தன் மகனுக்கு உகந்து
உந்தன் பிள்ளைகளை

சிந்தை மகிழ்ந்து மணம்
செய்தேனே ஆமாகில்

எந்தனுக்கு மோட்சம் உண்டு
என்னுடைய பிள்ளைகளாய்

எந்தன் மருகன் இயல்பு
தவ நெறியால்

---

அரும்பத உரை :

நளினம் - இங்கிதம் (நயச்சொல்)
இழை - ஆபரணம்
கன்னல் - கரும்பு
உகந்து - மகிழ்ந்து
மோட்சம் - வீடுபேறு

முந்து எந்தன் நற்குலமும்
மூதாதை எல்லோரும்

சிந்தை மகிழ்ந்து சிவன் பாதம் வீற்றிருப்போம்

வந்தேதவம் எனக்கு வாகாக சிக்கியதே
தந்தேன் உன்மைந்தனுக்கு தாழ்குழலாள் நால்வரையும்
என்று மகிழ்ந்து இவர்களுக்குறுதி சொன்னார்
அன்று மிருகண்டரிஷி அன்னாள் மனம் மகிழ்ந்து
திருவனைய நால்வர்களும் செல்வமிகுதவத்தால்
ஒரு மாது கேட்க உதவுகிறார் நால்வரையும்
நல்லது என்று சிந்தை நளினமுற்று அந்நாளில்
வல்ல முகூர்த்தம் இட்டு வந்தார் மகளிடத்தில்
நாளிட்டு நலமுனிவன் நன்றாக மீண்டதற்பின்
வாளேற்ற வேல் விழியார் மிகாப் புனல் ஆட
சென்றார்கள் பெண்கள் செல்லும் வழிதனிலே
அன்று ஓர் கரியும் அதட்டி விரட்டியதே.
ஆனை விரட்ட அரிவையர்கள் மெய்ம்மறந்து
தேனை ஒத்த சொல்லார் திசைமறந்து ஓடுகையில்
பாதை விலகியவர் பாழுங் கிணத்தைக் காணாமல்
மாதர் அதில் வீழ்ந்து மாண்டு விட்டார் நால்வர்களும்
மாகர புனலாட மனது வைத்துப் போன பெண்கள்

---

அரும்பத உரை :

மூதாதை - முப்பாட்டன்
தாழ்குழல் - நீண்டகூந்தல்
திருவனைய - இலக்குமிபோன்ற
முகூர்த்தம் - நல்லவேளை
வாள் - கத்தி
கரி - யானை
அரிவை - பெண்

தாகமுடன் வீழ்ந்து தந்தியால் மடிந்தார்
நம்மால் தொடவரிது நரமும் தொடாதபடி
செம்மான் பிடித்த சிவன் உலகேற்ற
வேணும் என்று சொல்லி மிகுந்த பொற்றேர் ஏற்றி
காணும் என்று ஈசர் கயிலை வரை சென்றார்
அந்த வழியில் அரிவையரைத் தானுந்தேடி
வந்து முனிவன் மலர்ப்புனலில் காணமல்
சிந்தை நொந்து பின் வழியில் தேடிவருகையிலே
அந்தமுள்ள மாதர் அடித்தடங்கண்டே கலங்கி
வந்த வழிப் போயினரோ என்றேங்கி மாமுனிவன்
சிந்தையுற்று நால்வரையும் தேடிப்பரிதவித்து
பச்கத் தடத்தில் பாங்கினத்தை வந்து கண்டார்
தக்கத் துயரால் விழுந்து தானெடுத்து நால்வரையும்
மங்கையரைத் தானெடுத்து பாசக் கரையில் கிடத்தி
தங்குபுகழ் நெஞ்சம் கலங்கி விழுந்து அழுது
எண்ணி பெருமூச் செறிந்து உடல் மெய்ம்மறந்து
விண்ணில் பறப்பார் போல் மெத்த மதி மயங்கி
மண்ணின் வேந்தன் மங்கையரே வாகாக நீங்கள் எந்தன்
கண்ணைப்பறித்து எறிந்து காட்சியுடன் போயினளோ?
மங்கையரே உங்கள் மணாளன் சிவதவத்தோன்
தங்குபுகழ் ஆன்வன் முன் தானேகிப் போயினளோ?
உங்கள் தமை இந்நாள் உகமை தவத்தோர்க்கு ஈந்தால்
எங்கள் குலம் ஈடேரும் என்று மகிழ்ந்திருந்தோம்

---

அரும்பத உரை :

செம்மான் - சிறந்த மான் (விலங்கு)
அடித்தடம் - பாதச்சுவடு
பரிதவித்து - துன்புற்று
பாங்கி - தோழி
உகமை - மகிழ்ச்சி
தந்தி - யானை
ஈடேறும் - சிறப்படையும்

மைந்தனுக்கு மாதை வழங்கும் என்றார் மாமுனிவன்
தந்தேன் அவர்க்கு வரம் தானுரைத்தேன் போனவர்பின்
வந்தால் இனியேது வாய்திறப்பேன் மங்கையரே
எந்தாயே என்மகனே எங்கள்குலக் கொழுந்தே
மச்சமாமுனிவர் மகாயோகந்தான் போனார்
இச்சை எந்தன் பாலகியார் இன்பமணஞ்சூட்டி
கண்டு எந்தன் வஞ்சிக் கென கடல் போல் வாழாமல்
பண்டு விதி தள்ள எந்தன் பார்தவம் வீண்போச்சே

## விருத்தம்

பாரினில் மகவு ஈன்றால்
பால் தந்தை அன்னை
சீரினில் மறுகற நீதி
செய்தவம் குலம் ஆராய்ந்து
நேரினில் தவத்தார்க்கு ஈந்தால்
நிறையுமே கொடுமையொப்பார்
தாரினில் தவத்தோர்க் கீந்தேன்
சதாசிவா தவம் வீண்போமோ?

என்ன இருந்து இனியோர் இருந்து ஏதுபலன்?
இன்னிலத்தில் என்னுயிரை யானுமினி மாய்ப்பேன்

---

அரும்பத உரை :

உகமை - மகிழ்ச்சி
ஈடேறும் - சிறப்படையும்
இச்சை - விருப்பம்
வஞ்சி - பெண்

சாகத்துணிவதும் சங்கை யுடலோ உயிரோ
போகத்துணிவதும் பொரும் உடலோ உயிரோ
இருக்கத்துணிவதும் இயல்பு உயிரோ உடலில்
தரிக்கச் சதமல்லவேதான் வருவேன் என்றழுதான்
மாதர் செனனம் மகாதவத்தோர்க்கு ஏவல் செய்தால்
நீதச் செனன துன்பம் நீங்கி மங்கை தேவர்களாம்
தங்கம் பருத்தி தரை கனலும் தாபரங்கள்
இங்கும் இவை பேணான் இவைபுநவக் காட்டுதல் போல்
மங்கையர்கள் செய்தவம் மாதா பிதா மாமன்
தங்கு புருஷன் அவனால் இவட்கு மோட்சமுண்டாம்
எத்தனையோ கோடிதவம் எத்தனையோ பெற்றபயன்
அத்தனையும் சித்தம் அனுபவியாதே போனீர்
மங்கையர்கள் தாயாரும் மங்கையர்கள் சேர்ந்தவகை
சங்கையுடன் கேட்டு தயங்கி நிலத்தே விழுந்து
மருகன் அதிக வரத்தில் தலைமுடையோன்
பெருக வருவான் வரிசை பெறுவோம் என்றிருந்தேன்
எந்தன் வயதினில் இன்பமுடன் உங்களை நான்
சிந்தை மகிழ்ந்து சிறந்திருந்து பெற்றபலன்
மக்கள் இறந்தால் மருகன் எனக்கேது?
தக்க புகழின்பம் தவத்தோன் தனக்குதவி

---

அரும்பத உரை :-

சங்கை - சந்தேகம்
தரிக்க - இருக்க
சதம் - நிலைமை
செனனம் - பிறப்பு
ஏவல் - பணிவிடை
மோட்சம் - நற்கதி
சித்தம் - உட்கரணம் நான்கின் ஒன்று
சங்கை - ஐயப்பாடு
மருகன் - மருகன் (மாப்பிள்ளை)

பெற்றபலன் உங்களை நான் பெருந்தவம் என்றிருந்தேன்
உற்றவத்தை ஒதுங்கி விட்டுப் போனீர்களோ
சிந்தை நிறைந்ததவம் செல்வனுக்கு செல்வியரை
விந்தையுடன் வாழ்ந்திருந்தால் மீறுதவம் என்றிருந்தேன்
உங்கள் மணாளன் உயர்தவ நீதி நெறி
பொங்கமுடன் காணாமல் போனீரோ விண்ணுலகம்
மணவறையில் ஏறி மணாளன் உங்கள் செங்கை தொட்டு
மணமுடிக்குங் கோலம் வண்மையுடன் கண்டிலனே
எந்தையுங்கள் தம்மை எடுத்து வளர்த்த இன்பம்
சொந்தம் மடிந்த இன்பம் துக்கமோ பார்த்திருந்தேன்
வீடுதனில் இன்பம் மிகுந்த தவம் தள்ளிவிட்டு
காடுதனில் மாளக் கருது விதி மூண்டதுவே
என்றுமடமாது இரங்கி அழும் கவலை
அன்று முனிபார்த்து அழுகா நீ என்றமர்த்தி
மண்ணுலகில் மீறும் வளர்மக புனல்தவத்தால்
இன்று மக்கள் தம்மை எழுப்புவேன் என்றமர்த்தி
மங்கையர்கள் நால்வரையும் வாகு மனையிற் கொடுபோய்
தங்கும் என்னைப் பந்தல் தனில் கிடத்தி மாமுனியும்
மாகப் புனலாடி வலுயம காலனையும்
தாகமுடன் முனிவன் தாள் நினைந்து நெஞ்சுருகி
பொங்கு வல்சூல் புனிதனே மாமறலி
எங்கும் சிறந்த பொருளே எமனே போற்றி என்றான்.

---

அரும்பத உரை :

அவத்தை - (அவஸ்தை) துன்பம்
பொங்கம் - மனமகிழ்ச்சி
விண்ணுலகம் - சொர்க்கம்
செங்கை - சிவந்தகரம்
எழுப்புவேன் - உயிர்பெறச்செய்வேன்

## விருத்தம்.

படியெவை அண்டரண்டம்
பலதிசை புவனத்தீவில்
நெடிதுயர் மூவர் தேவர்
நீளவிதி அறிந்து ளோனே !
துடி வலுகால ஈசர்
சுடர் மழு சூல பாணி
அடியன் நான் எனக்கு வந்த
ஆபத்தை நீக்குவாயே !

## நடை

இந்த முனிவன் இருந்த தவம் அறிந்து
வந்து மகாக் காலன் மாமுனியே அஞ்சேல் என்று
மாமுனியே நீர் தாமும் மகாப்புனலாடி
நேமமுடன் நம்மை நினைந்த வகை சொல்லும் என்றார்
அந்த உரை கேட்டு அம்முனிவன் காலனையும்
சிந்தையுடன் வணங்கி சிந்தை மகிழ்ந் தேதுரைப்பான்

---

**அரும்பத உரை :**

படி, புவனம் - உலகம்
நீள - நீண்ட
துடி - உடுக்கை
மழு - சிவன் கையில் உள்ள ஆயுதம் (கோடரி)
சூலம் - திரிசூலம் (ஆயுதம்)
பாணி - கை
நேமம் - நியமம்

அய்யனே மாமறலி 'யார்க்கும் விளை பொருளே'
செய்ய புகழ் அண்டம் சிறந்த பலவானே !
மாகப் புனலாட எந்தன் மங்கையர்கள் போம் வழியில்
வேகமுடன் யானை விரட்ட விழுந்தே கிணற்றில்
மாண்டுவிட்டார் நான்கு பெண்கள் மாண்டுவிட்ட நால்வரையும்
நீண்ட புகழ் உடை பார் நீர் எழுப்ப வேண்டும் என்றார்
அந்த நிமிஷமதில் ஆயிழைமார் நால்வரையும்
சிந்தை நிறை காலன் நிறமாய எழுப்பி விட்டாண்டு
போயிருந்தார் எமபுரம் போனதற்பின் மாமுனியும்
சேயிழந்து நெஞ்சம் தியங்கின தெல்லாம் மகிழ்ந்து
பொங்கு புகழ் பிள்ளைகளும் பெண்டிரும் இன்பமுற்று
பொங்கும் புலி மாகப் புனல் தவத்தால் வீற்றிருந்தான்
மணமுகூர்த்தம் செய்து சென்ற மாமுனியும் மைந்தருடன்
பணமிருந்த செல்வம் பல பாக்கியங்களையும்
திட்டெனவே வந்து சிறந்த புகழ் மைந்தனுக்கு
வட்டமுலை மாதர்களை வாகாய மணம் முடித்து
காட்சிக் கலியாணம் கடுகி மகிழ்ந்தேகி
சூழ்ச்சி புகழ் தொங்கல் தொல்புவியில் வீற்றிருந்தார்
சங்கரனார் சொற்படியே தங்கும் மிருகசிங்கன்

---

அரும்பத உரை :

- மறலி - யமன்
- செய்ய - சிறந்த
- வேகம் - கோபம்
- எழுப்ப - உயிர்ப்பிக்க
- ஆயிழை - பெண்
- சேய் - குழந்தை
- தியங்கி - சோர்ந்து
- பாக்கியம் - நல்வினை (செல்வம்)
- கடுகி - விரைந்து
- சூழ்ச்சி - ஆலோசனை (ஆராய்ந்த)
- தொங்கல் - மாலை

மங்கையர்கள் நால்வருடன் வாழ்ந்து சுகம் பாராட்டி
வேறா மறதியுடன் மேன் மேலும் சிலநாள் இருந்து
வாரா மனைவியர்கள் மாமுனியைப் பார்த்துரைப்பார்
சாலக் குழவியில்லா தருமம் நிலை நில்லாது
பாலன் இல்லாச் செல்வம் பாக்கியமும் போய் அகலும்
ஐந்து முகத்து அரனார் ஒரு குழவி
தந்திலரே என்று தன் புருஷனோடுரைத்தார்
அத்த உரையில் அருள் சிறந்த மாமுனின்
மைந்தர் புகழ் ஆசையினால் மாது பங்கனை நோக்கி

## விருத்தம்

பங்கையன் படைத்த சீவன்
பலபல உரு(வு) ஆனாலும்
இங்கித மங்கை ஆசை
இல்லறந் துறந்த பேர்க்கு
தங்கிய தனது சீவன்
தயவினில் அடங்காது என்று
செங்கை நீள் மலர் ஆசைத்
திருவை விட்டிறாதே என்றும்

## நடை

சங்கரரை நோக்கி தவம் புரியும் மாமுனியும்
பொங்கரவம் பூணுகின்ற புண்ணியனே போற்றி என்றான்

---

அரும்பத உரை:

சால - மிகுதி
குழவி - குழந்தை
பொங்கரவம் - சினங்கொண்டபாம்பு
சீவன் - உயிர்

ஆலமுண்ட கண்டத்தாரும் வந்து கண்டார்
பாலன் எனக்கு பரனே அருளும் என்றார்
அப்போதரனார் அவர் முகத்தை நோக்கி
தப்பாது காண் தலையில் எழுத்து உனக்கு
முன்னாள் நளின வேதன் முகிழ்த்த விதிப்படிக்கு
இன்னாளில் பிள்ளை உனக்கில்லை என்றார் ஈஸ்வரனார்
அந்த உரை சொன்ன அகண்டியைத் தெண்டனிட்டு
ஏந்தவிதம் தன்னிலுமே எனக்கு சிறு மதலை
தாரீரே ஆமாகில் சங்கரரே தந்தருளீர்
காரீ கயிலை வரைக் காரணரே நான் வருவேன்
அன்று அடியேன் கேட்டதற்கு அல்லமில்லம் போயீர் என்றீர்
குன்று வரம் பெற்றேன் இயல்கயிலை நான் வருவேன்
என்று முனி உரைக்க ஈஸ்வரருமே துரைப்பார்
மண்ணுலகில் உந்தனுக்கு மக வாசை தீரவென்றால்
அறிவுமதியில்லாத அழகுமதலை ஒன்று
கிரி ஒன்று ஆகிறேன் சிந்தை கலங்காதே என்றார்
என்று அரன் சொல்ல இயல்முனிவன் ஏதுரைப்பான்
நன்றல்லவே அரனே ! நல்லறிவில்லாதான்
பாரில் பிறந்தால் பாக்கியமும் போயகலும்
வேரில் முளை பாவம் வெருண்டோடும் புண்ணியங்கள்
அன்னை தந்தை நீதி குரு ஆனகிளை யடுத்தோர்

---

அரும்பத உரை :

ஆலம் - விஷம்
கண்டம் - கழுத்து
முகிழ்ந்த - விதித்த
அகண்டி - கூறுபடாது ஒன்றியதன்மை
மதலை - பிள்ளை
மதி - புத்தி
மதலை - பிள்ளை
புண்ணியம் - நல்வினை (தருமம்)

மண்ணுதவி மூத்தோரும் பேருரைத்தோர்கள் விழித்தோர்
எல்லாத்தவமும் அழிந்து விடும் பிள்ளையினால்
சொல்லா நரகம் எல்லாம் சேர்வார் பரிதவித்து
சீலமுள்ளோர் செய்தவத்தில் தீயாம் இவன் பாவம்
வால நெறியும் தெரியா பாலர் என்றால்
எல்லாப் புகழும் அழியும் அன்னைதந்தை யாவருக்கும்
பொல்லாத பாலன் பிறப்பதன் முன் அன்னைதந்தை
இறந்தாலும் நன்றவர்க்கு ஈவளவு சொர்க்கமுண்டு
அறந்தான் அழியும் அவன் பிறந்தான் பின் பிறந்தால்
பரந்தான் கிடையாது பாரிலும் பொல்லாதுகமை
நிறைந்த பெருங்காணில் நிமிர்ந்தோங்கி வளர்ந்து
அண்டியே ஆண்மூங்கில் பெண்மூங்கிலை உரசும்
மண்டலத்தில் அக்கினியும் மைந்தரைப்போல பிறக்கும்
அக்கினியும் தான் பிறந்து ஆன இரண்டு மூங்கிலையும்
தக்க விசையால் எரித்துத்தான் கண்டு பக்கமெல்லாம்
சுத்தி எரித்து அனல் தூளாய் நொறுக்கிவிடும்
அத்தகைமையாகும் அறிவு மதியில்லாதான்
சுத்த மிலேச்சன் தொல்புவியிலே பிறந்து
பத்து மெனதுதவம் பாலன் கெடுக்கவன்றோ
பாதகன் அப்பிள்ளைதனை பாருலகில் நான் வேண்டேன்
நீதி கலை ஞானம் நெறியும் புகழ் அறிவும்

---

அரும்பத உரை :

பரிதவித்து - துன்புற்று
சீலம் - ஒழுக்கம்
வால - தூய்மை
பொல்லாத - கொடிய
பரம் - மேற்கதி
சுத்தி - சுற்றி
மிலேச்சன் - மதிகேடன்
தொல்புவி - மிகப்பழைய பூமி

தருமநெறி யோகம் சகலபுத்தி வித்தையுடன்
காமஞ்செய்யா மனசு காலன் அணுகாதவனாய்
மாதா பிதாக் குருக்கள் மைந்தன் நெறிதவசால்
மீதாக நின்னருளின் மேல் மனம் என்னாகும்
பொங்கும் பிதிர் தேவர் நிறை புண்ணியமும் பூவிலங்கும்
எங்கும் அருள் வளம் ஈடேற உன் பாதம்
பாலன் அருளும் என்றார் பண்பு நெறி மாமுனிவன்
ஆலம் உண்ட கண்டர் அவனை முகம் நோக்கி
மதியறிவு பாலன் மாமுனியே வேணுமென்றால்
அதிதேவ ஞானம் ஆரருளில் தவசு செய்வான்
இந்நாளில் ஈந்து விட்டு எவ்வனவே நாமும்
அன்னாள் அன்பிற்கே ஆனந்திரிய மாட்டேன் காண்
நீதிநெறி யில்லாதார் நீண்ட நெடு நாளிருந்து
ஆதியவன் பால் அணுகோம் எமன் அங்கு வருவான்
சிட்டிக்க சங்கரிக்க சேர்ந்த தெவையும் காக்க
கட்டியது மூவரிடம் கற்பினையே பூவுலகில்
தங்கள் கரம் பிடித்து தங்கள் கண்ணில்
பொங்கமுடன் சிட்டிக்க புவியில் அயன் ஏதுசெய்தான்
காமன் தனை ஏவி காமக்கணை விடுத்து
காம சுக போகம் கலவி விந்தில் பிண்டம் வைத்து
மாதர் வயிற்றில் மலரின்பன் நுழைந்து
ஏதாகப் பிண்டம் எவர் திரட்டி வைத்தனரோ

---

அரும்பத உரை :

பிதிர் - தென்திசை (ஆவி) இருப்பவர்
சிட்டிக்க - சிருஷ்டிக்க (படைத்தல்)
சங்கரிக்க - அழிக்க
கரம் - கை
காமன் - மன்மதன்
கலவி - புணர்ச்சி (கலப்பு)
பிண்டம் - உடல்

மைந்தர்களை இரட்சிக்க மாலோன் மயல் பூட்டி
சிந்தை புகழ் வஞ்சி சிறந்த தொரு அன்னையர்க்கு
போதம் இவர் சூட்டப் பிள்ளையின் மேல் ஆசைவைத்து
நீதமுடன் வள்ர்ப்பார் நீண்ட நட்சத்திர ரிஷி
அந்த நிறை யோகம் அடுக்கக் கலியாணம் வரும்
...........தாய் தேடும் தனத்தில் பிழைக்க வைப்பாள்
மைந்தனுக்கு மாலவனும் வாயிலஞ்சி சோறூட்டி
கந்தமுடன் வளர்த்துக் காத்திருந்து பெண்தேடி
மணம் முடித்துப் புத்தி சொல்லி வாழ்வுமுதல் ஈந்தனரே
கணமுடலை சங்கரிக்க தங்கு புகழ் ருத்திரனும்
பித்தம் சிலேட்டு மமும் பேதலிக்க வாரமதில்
உற்ற உடல் போட்டு உயிர் போம் எமன் அருகில்
செத்தார் பிறவி சிறந்தத்ளிதார் சங்காரம்
வித்தரான ருத்திரனும் வெட்டியுயிர் வாங்கலையோ ?

## விருத்தம்.

பாரினில் விந்து கர்ப்பம்
பங்கையன் படைப்பதானான்
சீரினில் மயலை மூட்டி
செங்கண்ா மால்காப் பதானான்
வேரினின் வியாதி மூட்டி
விதி நமன் கொல்வதானான்

---

அரும்பத உரை :

பித்தம் - ஈரலிலிருந்து தோன்றும் நீர்வகை
சிலேட்டுமம் - குளிர்ச்சி (கபக்கூறு)
கர்ப்பம் - கருக்கொள்கை
பங்கையன் - தாமரை ஆசனம் அமரும் பிரமன்
மயல் - மயக்கம்

தாரினில் தவஞ் செய்வோர்க்கு
தமக்கு நான் ஏவலாளோ ?

## நடை

அப்படியாய்ச் செய்து அவர்கள் சுகமேயிருந்தார்
இப்படியாய் உங்களுடன் எவ்வாறு நான் திரிந்தேன்
மைந்தன் அறிவுள்ளவனாய் மாமுனியே நான் கொடுத்தால்
எந்தன் தனை நினைப்பான் யாமும் அவன்.........ன்று
உந்தன் மகனுக்கு உதவி பலவெல்லாம் செய்து
எந்தனால் நீக்கரிது எந்தன் வரையை விட்டு
கன்னல் புகழ் ஆண்டு கருணை பதினாறாய்
இன்னிலத்தில் நல் மதலை ஈந்தோம் என உரைத்தான்
அந்த உரை சொன்ன அரனை முனிதெண் டனிட்டு
கந்தன் தனை ஈன்ற கருணை அருள் கடலே!
மன்னுமோங்கி நின்ற வித்தகனே! சக்திபங்கா!
என்றும் பதினாறு இருப்பானழிவில்லை என்று
மண்ணுலகில் உந்தன் மலர்த்தாள் உதவுமென்று
பொன்னடியில் வீழ்ந்து புகழ்ந்து தொழுதே முனிவன்
கன்னல் மொழி மாது கமல அடியும் தொழுதான்
அப்போது அரனாரும் அம்முனியை விட்டு அகன்றார்

---

அரும்பத உரை :

திரிதல் - அலைதல்
வரை - மலை (கயிலை)
கன்னல் - நாழிகை
வித்தகம் : சாமர்த்தியம் (அதிசயம்)
சக்தி - பார்வதி
பங்கா - உமையொருபாகன்
கன்னல் - கரும்பு
கமல அடி - தாமரைப்பூப்போன்ற மென் பாதம்

தப்பாத சொல்முனிவன் சங்கரனைப் போற்றிச் செய்து
சிந்தை மனைவியர்கள் செல்வமனையில் வந்தான்
வந்த கணவன் மலரடியில் நால்வர்களும்
சிந்தையுடன் தெண்டனிட்டு சிந்தை மகிழ்ந் தின்பமுற்ற
மங்கையரைப் பார்த்து மதியில் நிறை மதனை
சங்கரனார் ஈய உமைதான் கொடுத்தார் என்று சொல்லி
தங்கு கல்வி சுகமதான மூழ்கி யோக மதாய்
பொங்கும் உரு மாதர்களை புணர்ந்து நலம் பாராட்டி
மன்மத பாண மாயக் கடல் மூழ்கி
தன்மநெறி தப்பாத் தையல் அதில் ஒருத்தி
தாமச்சடை முடியார் சங்கரனார் சொற்படிக்குக்
காமப் புணர்ச்சியிலே கருவுண்டாய்க் கர்ப்பமுற்றாள்
அன்ன நடை மாது அருந்ததி போல் கற்புடையாள்
கன்னல் தவத்தால் கருணை மைந்தன் பெற்றெடுத்தாள்

## விருத்தம்

பொங்கு சின்னம் நரராலிது
பிறந்தேன் பூவில் நாற்றமிது
அங்கனார் ரூபம் எ(ன்)னும்
அறிவதறியா நடை மிருகம்
எங்கும் இவரால் எவை(யும்) புகழாம்
எவையும் புகழாம் சொலும் நாள்

---

அரும்பத உரை :

மதி - அறிவு
மதனை - மதலை, மைந்தன்
அங்கன் - புதல்வன்
ரூபம் - வடிவம்

திங்கள் த(ன்)னைப் பிரியாதான்
சிறந்தான் தாயின் வயிறு பிரிந்தே

## நடை

மதலை என் மார்க்கண்டன்
வந்து பிறந்தான் உலகில்

குதலைக் கனி(யாம்) வாயில்
கோதை முலை(யை) அருந்த

தவள மருள முத்தெனவே
தாரணி யிலே(தான்) பிறந்தான்

பவள இதழ்வாய் திறந்து
பாங்காக வே(தான்) அழுது.

ஆடல் மதனன் அழகுக்கிணையாக
தேடரிய இன்பம் சிறந்த மதலையதாய்
பாலன் பிறந்ததனால் பண்பு மிருக சிங்கன்
சீல நிறை அன்னை தந்தை சீர் மாமியரும்
தங்கு புகழான தரு(ம) மனையான நால்வரும்
பொங்கு மகிழ்ச்சி புதல்வன் பிறந்தான் எனவே
போதமிகு தானம் பூவியல் பெனவே

---

அரும்பத உரை :

மதலை - குழந்தை
குதலை - மழலைச்சொல் (பொருள் விளங்கா உரை)
கோதை - பெண்
தவளம் - வெண்மை
முத்து - நவமணியில் ஒன்று
பவள இதழ் - (பவளம் போன்ற) சிவந்த உதடு
போதம் - ஞானம்

நீதமுடன் ஈந்து நிறைந்து மகிழ்ச்சி பொங்க
ஐந்து முகத்து அரனார் அருளாலே
மைந்தன் தன்னை நன்றாய் வளர்த்தனர் காண் இன்பமுற்று
ஒன்று வயது இரண்டாய் ஒரு மூன்று நாலாகி
நின்றவயது ஐந்தாய் நிறை மார்க்கண்டன் மைந்தன்

## விருத்தம்.

தங்கும் வயது ஓர் ஐந்து தனில்
தரும நெறியும் நால் வேதம்
பொங்கு நீதி சாத்திரமும்
புனித நூலும் புராணக்கதை
எங்கும் நிறைந்த கலை ஞானம்
எழுத்தும் ஈசன் எழுத்ததுவும்
பங்கு பலவும் தானுணர்ந்து
பாலன் அதிக மதியானான்.

## நடை

அஞ்சு வயதானதற்பின் ஆனதவ மெய்ஞ்ஞானம்
செஞ்சொல் புராணம் திகழ் வேத சாத்திரமும்
பத்து வயதில் பல கலைகள் ஆராய்ந்து
தத்துவங்கள் ஞான நெறி தன் வயதும் ஆராய்ந்து
செல் காலம் நிகழ் காலம் சேரவருங்காலம்

---

அரும்பத உரை :

நால்வேதம் - நான்மறை (ருக், யசுர், சாம, அதர்வணம்)
சாத்திரம் - வேதாந்தம், வைஷேடிகம், பாட்டம், பிரபாகாரம்
பூருவமீமாஞ்சை - உத்தரமீமாஞ்சை (கலைகள்)
ஈசன் எழுத்து - பஞ்சாட்சர மந்திரம் தத்துவம் - 36வகை

வெல்காலம் ஆராய்ந்தான் வேதாவின் கற்பனையால்
மைந்தன் கருத்தருமை மாதா பிதா வறிந்து
இந்த புதல்வனுக்கு இறைவனார் சொன்னபடி
பந்து முலை மடவார் பார்த்துக் கவலையுற்றார்
மன்மதனைப் போலே மகன் வடிவு கண்டுருகி
என் மதனும் பூவில் இறந்தானே யாமாகில்
ஆதியரனார்க்கும் ஆயிழைக்கும் ஏற்குமதோ?
பாதி மதி சூடும் பரனே என் பாலனிடம்
எமன் வாராமல் இறையோனே காரும் என்றார்
காமன்தனை எரித்த கண்ணுத லோன் தன்மைந்தன்
என்று தாய் நால்வரும் ஏங்கிக்கவலையுற்றார்.
மன்னுலகில் மைந்தனையும் வாஞ்சையாய் பார்த்துரைப்பார்
தந்தை தந்தையவர் தாயினன்னை தந்தையவர்
முந்(தை) விதி எவ்வாறு மூளுமோ என்று நொந்தார்
தந்தை மனது நொந்து தாரணியில் உழி விதி
எத்தவகையோ இறைவனார் மைந்தனுக்கு
கொஞ்ச வயது கொடுத்த விதி எப்படியோ?
வஞ்சனையோ வேதா வகுத்ததறி யோமே.
புத்திரன் தனவானாகி பூவுலகில் பாலர் எனும்
சித்திரமாய் விட்டிருக்கச் சிந்தை திடம் கூடாது
கந்தன் தனைக் கிணையான மகனைக் காப்பது நீ
என்றுரைத்தார்

---

அரும்பத உரை :

வேதா - பிரமன்
பாதிமதி - பிறைமதி
கண்ணுதலோன் - நெற்றிக்கண்ணுடைய சிவபிரான்
வாஞ்சை - அன்பு
கொஞ்ச வயது - பதினாறு ஆண்டு அகவை
வஞ்சனை - பொய்
சித்திரம் - பேரழகு

அந்த நினைவெல்லாம் அறிந்து மார்க்கண்டனும்
நாடியே தத்துவங்கள் நன்றாக ஆராய்த்து
வாடி மனதுருகி மகா தேவர் கற்பனையில்
சென்ற வயததுவும் செல்லாமல் அந்நாளில்
நின்ற வயததுவும் நீதியுடன் ஆராய்ந்து
கேடு வருங்காலம் கிருபையுடன் ஆராய்ந்து
ஆடுகின்ற ஈசன் அரனார் தமக்கேற்க
என்ன தவசு செய்து ஈடேறப் போ(கி)றோம் நாம்
அஞ்செழுத்தை நெஞ்சில் வைத்து ஆகம் மிகவுருகி
வஞ்சனைதீரும் மகாதேவர் தஞ்சமென்று
முந்தை விதி கிட்டி முடுகியதே நின் மலன் தான்
எந்தத்தவங்கள் செய்து ஈடேறுவேன் அடியேன்
முட்டி விதி கிட்டி முடுகிய தே எமவினை
..............................................................

போட்டேன் நான் செய்யும் தவறேது?
தவமில்லாது ஆவி தவங்கி விழும் போ தொருக்கால்
சிவசிவா என்றுரைத்தால் சிறந்த சொர்க்கம் உண்டெனவே
வேதத்தில் ஓங்கும் விளைவு சுருதிதவம்
நீதத்தில் தவம் நீண்ட சிவ பூசை தவம்

## விருத்தம்:

பூவில் செனனம் எடுத்தோரில்
புனிததவம் ஒன்று அறியாமல்

---

அரும்பத உரை :-

நாடி - ஆராய்ந்து
வாடி - வருந்தி
உருகி - கசிந்து
ஆடுகின்ற ஈசன் - நடராசர்
அஞ்செழுத்து - ''நமசிவாய'' (திருவைந்தெழுத்து)
ஈடேறுவேன் - உய்வேன்
சுருதி - வேதம்
புனிதம் - தூய்மை

ஆவிக் கிடுக்கண் வருநாளில்
அரனே சிவனே சிவா எனவே

நாவில் புகழும் பேருரையால்
நமன் ஆகம்பற்ற அஞ்சுகவரார்

பாவிக்கென்றும் பரலோகம்
பலதேவெல்லாம் ஓர் உரையே.

## நடை

மார்க்கண்டன் தானும் மகாதேவன் தாளிணையில்
த(ர்)க்குண்டாய் பூசை செய்ய தானினைந்த பாலகனும்
ஈசனடி இணையை இயல்பாக(வே) நெஞ்சில் வைத்து
வாசமலரால் மகாதேவன் தாளிணையில்
பூசை செய்து நின்றான் புகழ்பெரிய பாலகனும்
ஆசை மனதீசன் அடியிணையை நீங்காமல்
ஓங்காரம் ரீங்காரம் உண்மை மனதில் வைத்து
ஆங்காரமான அரனடியைத் தஞ்சமென்று
............முறைமை............சிவபூசை செய்தவமாம்
வையகத்திலோங்கும் மகாலிங்கபூசை செய்தால்
இந்த சிவபூசை இவன் முடிக்கும் நாளையிலே
அந்தி மதி சூடும் அரனார் உரைத்தபடி
ஆண்டு பதினாறு அந்நாள் முடிந்ததுவே

---

அரும்பத உரை :

இடுக்கண் - துன்பம்
மகாதேவன் - பெருந்தேவப்பிரான்
ஓங்காரம் - பிரணவம்(ஓம்)
ரீங்காரம் - இனிய இசை
எண்டிசை - எட்டுத்திசை

எண்டிசையின் காலன் ஏவலர் வந்தார்
எங்கும் இயமனார் இளவரசின் தன் ஏவல்
சேனாபதியின் சிறந்த தளகர்த்தனும்
..............வையும் வளைந்திருக்கும் நாற்தூதன்
மூன்று முகத்தான் முளரி செங்கை ஆறுடையான்
ஊன்று மார்க்கடன் ஒளிவு விதி ஆராய்ந்து
பித்தமுடன் வாதம் பெருநீர்சிலேட்டுமமும்
உற்றபல நோய் எவையும் நாற்தூதன் ஏவிவிட்டான்
அங்கம் அதன் ஊடே அணுகும் வியாதியெல்லாம்
பொங்கும் கயிலை மலைப் புண்ணியனார் தம் அருளால்
தீய்ந்து கருகி திகைத்தோடி போனதுவே
ஆய்ந்த வின்ன நோவு அகன்றோடிப் போனதுவே
கண்டுதான் தூதன் கருணை மனஞ்சினந்து
........................உருங் கணங்கள் தன்னை
........................நினைத்தான் வந்து உருக்கணங்கள்
கோவே சரணம் என்று கோன் அடிதொழுது
அண்டம் புதனம் அடுக்கு நிலைப் பாதாளம்
எண்டிசைக்கும் அல்லல் இயல்பு புகழ்தூதரசே
எங்கள்தமை அழைத்த நின்னருளுரையும் என்றான்

---

அரும்பத உரை :

ஏவலர் - பணியாள்
முளரி - தாமரை
ஊடே - இடையே
அணுகும் - நெருங்கும்
நோவு - வருத்தம்
கணம் - கூட்டம்
கோகோன் - தலைவன் (சிவன்)
சரணம் - அபயம்
அண்டம் புவனம் - உலகம்
அல்லல் - துன்பம்

அப்போது தூதன் அவர்களுடன் ஏதுரைப்பான்
ஒப்பான பாரனந்தம் ஓங்குமொரு கோடியதில்
எங்கும் பரந்திருந்து பல தீவினுள்ளே
தங்குமச் சிறப்புறத்தீவில் தருமனொரு பாலன்
பத்துமொரு ஆறுவயது ஆண்டு உள்ளபடி
சற்றுமொரு நாழிகையின் தாமதிக்க நேரமில்லை
இருந்த கடிகையின் இறுதியினிரண்டினுள்ளே
இருந்து மவனுயிரைச் சீக்கிரமாய்த் தான் பிடித்து
கொண்டிங்கே வாருமென்று கூறி அனுப்பிவிட்டான்.
சண்டனுடன் தூதுவனார்தான் மகிழ்ந்து மேகினர்
மார்க்கண்டன் தன்னை வளைத்துப் பிடிக்கவென்று
தார்க்கண்டன் பூவுலகில் தான் விரை ஓடிவந்தான்.
காலமதிலே கிணங்கள் தான் வரும் முன்னே பாலன்
வாலமதி சூடி வகுத்த விதி நாளை என்று
விடியயொரு சாமம் விரைந்து எழுந்திருந்து.
கடிகியே நீர்தன்னில் கலை தோய்த்துத்தான் முழுகி
பொற்குடலை தன்னை புனலில் மிகத் தோய்த்து
நற்பூவெடுக்கத்தரு மலர்த்தோட்டம் புகுந்து
மயிர்க் கொன்றைப் பூவும் வாகு பவளமல்லி
வெயிற்கு விரியும் விரிவுள்ள தாமரையும்
...................கீதம் பரளிதமாம் வெள்ளரளி

---

அரும்பத உரை :

பத்துமொரு ஆறு - பதினாறு
கடிகை - (நாழிகை) விரைவு
கண்டன் - காலன்(நகன்)
வால - தூய
சாமம் - (நடு)யாமம், ஏழரை நாழிகை கொண்ட காலம்
கலை - ஆடை
குடலை - பூக்கூடை
புனல் - தண்ணீர்

..................(செம்) முல்லை சத்தி சயிலம் சண்பகமும்
தங்கழகு வாசம் தரு குங்குமப் பூவும்
செங்கழுநீர் வில்வம் செல்வரளி நந்திமலர்
முல்லையுடன் பிடலை முழுநீலந்தருமலர்
அல்லி அகற்றும் அருள் சோதிப் பூவுடனே
பாரிசா(த)புட்பம் பசுந்தாரு வெள்ளெருக்கு
தாருஷா அசோகமெனும் சந்திர காவிமலர்
வெட்டி விலாமிச்சு மிகுத்த மருக்கொழுந்து
கெட்டிக் கெளிதம் கெவிளி மலர்ச்சாந்திகம்
விள்ளுமகிழ் பச்சைவிரி பவள பஞ்சிமலர்
உள்ளமுகிழ்ச் செந்தூரம் உண்டான புஷ்பமெல்லாம்
கண்டுபறித்துக் கதிரோன் எழுவதன்முன்
கொண்டுவந்து சன்னதியில் குணமுடனே மாலைகட்டி
காராவின் பால் தேன் கலந்து அரன்மேல் சொரிந்து
சீராக நன்னீர் சிவன்மேல் நீராட்டி
திருமஞ்சனத்தை திமிர்ந்து மகிழ்ந்து சொரிந்து
மருவு மகிழ்மிகு வாசம் மலர்க்காயின் சந்தனமும்
வாசம் நிறை கஸ்தூரி வளமை சவ்வாது புனுகு
தேசு புகழ் பாலன் சிறப்பாக ஈஸ்வரர்க்கு
போற்றித் தீர்த்தஞ்தன் மேல் (அ) மாலைதான் சாத்தி
ஆலத்தித் தூபம் அரனும் உமையாள் மகிழ்
ஞாலத்தில் அஞ்சு நளின உபசாரமதாய்

---

அரும்பத உரை:

தரு - மரம்
மகிழ் - மகிழம்பூ
திருமஞ்சனம் - அபிஷேகநீர்
மருவு - பொருந்திய
கஸ்தூரி - மான்மதம்
சவ்வாது - ஒருவகைப் பூனையின் வாசனைத்திரவியம்

## விருத்தம்

சீரில் அருளாம் எவைபொருளாம்
சிறந்த பூசை சிவலிங்கம்

பாரில் உயிராம் சின்னவினை
பாசமிருக்க பழவிதியாம்

நீரில் உணர்வாம் நேர்நிலைமை
நினைவு மறவாதிருந்தவர்கள்

நாரிலெந்நாளும் சிவ பூசை
தவறாதவர்கள் சிவனாவார்

பூவில் விரையை விளைவு செய்தால்
போதவிரையும் அனேக மதாம்

பாவில் பொருளை விளைவுசெய்தால்
பாரில் புகழும் அழியாதாம்

நாவில் புனிதத்தியான மதால்
நளின மூவர்ப் பெறலாம்

சேவில் தவசு சிவபூசை
செய்வார் (தாமும்) சிவனாவார்.

---

அரும்பத உரை :

பூசை - ஆராதனை (வழிபாடு)
பழவிதி . ஊழ்வினை
நார் - அன்பு
விரை - மணம்

''சூரை வென்றவன் தந்தை'' கண்ணைத் தொழுது நிற்கும் வேளையிலே

காரை ஒத்த மேனி காலக் கின்னரரது
தண்டராகி இந்நாள் சாடவருகிறதை
மார்ச்கண்டன் தானும் காணான் மார்க்கண்டனை அவர்கள்
தார்க்கண்ட மாய்கை தவறாதவர்கள் கண்டு
வேஷமாறாகி இவர்கள் வேற்றுருவந்தானாகி
வாசமணி ஈஸ்வரனார் வாசல் தனில் புகுந்து
அய்யமார் தூதர் அரனார் எதிர்ப்பாக
செய்ய நந்தி பீடம் சிறந்தொளிந்தார் அதன்பால்
பாலன் சிவபூசை பக்திதவமே அனலாய்க்
கோலமுடன் சுடுது; கண்டு கிட்ட நாம் அணுக்
பாலன்மனது பரமே சுவரன் செயலாய்
சீலமுடன் எப்படியோ செந்தீயில் வெந்திடுவோம்
தங்கு சிவபூசைதனில் அணுகி நாமும் பிடித்தால்
சங்கரனுக் கேற்காது சங்கரலிங்கம் பூசைபண்ணி
படிவிட்டுக் கீழிறங்கி பாங்காய் வருகையிலே
அடிதப்பிக் கீழே விழுக யான் கொல்லவேணுமென்று
பூசை செய்து பாலன் புனித தவமும் முடிந்து
வாசல் கடந்து இப்பால் வருமளவும் இவர்கள்
பொங்குமுடலை புகைபோல் அணுவுருவாய்
தங்கு நந்தியிடந்தனில் ஒளிந்து காத்திருந்தார்

---

அரும்பத உரை :

சூர் - சூரபதுமன்
கார் - மேகம்
வென்றவன் - முருகன்
கின்னரர் - யமதூதர்
நந்தி பீடம் - பலிபுரியும்மேடை
பொங்குமுடலை - பருத்த உடலை
புகை - கருநிறம்
நந்தி - நந்திதேவர்

## விருத்தம்.

அவத்தில் அணுகி இடியேறாய்
அடர்த்து வதைக்கும் எமதூதர்

தவத்தில் அணுக மாட்டாமல்
தயங்கி ஒளிந்து காத்திருந்தார்

சிவத்தின் வலிமை யாரறிவார்
சிறந்த உயிர்க்கு உதவிதவம்

எவத்தின் உயிரும் உயிர்உதவி
இதுவே அருளாய் மகிழ்வரிங்கண்

அப்போது நந்தம் அரன் வாகனங் காண்
இப்போது எம(ன்)கிங்கரன் இங்கு வருமோ எனவே
கன்றிமனஞ்சினந்து காலாக்கின நாதர்தன் மேல்
அன்று வடகனலை அங்கவர் மேலேவிட்டார்
பற்றியன்றும் படர்ந்து அவர் மேலே
சுற்றிவளைத்து அனல் சூரையிட்டு தான்முழங்கி
அஞ்சியே தூதர் அபயமிட்டுத்தாங்கரிது
கெஞ்சியே அஞ்சி கெவுட பிலமுழந்து
தேடுந்தலையாரி மனை சேர்ந்த கள்ளர் போல் ஒளிந்து
பாடுபட்டு வராது போல பங்கமிவர் பட்டுலைந்து

---

அரும்பத உரை :

அவம் - வீண்
வதை - துன்புறுத்தல்
வாகனம் - இடபம்
கன்றி - கோபித்து
காலாக்கினநாதர் - (யமன்)
கள்ளர் - திருடர்

நாங்கள் இங்கே வரத்தில்லை நந்தி திருவாணை
எங்கள் தனை விட்டு விடீர் என்றே அபயமிட்டு
திங்கள் அணிந்த சிவனே சரணம் என்று
வெங்கனல் பொலுக்கமாட்டாமல் காலாக்கினிநாதர்
புனலாஞ் சமுத்திரத்தில் போய் விழுந்து தூதனிடம்
வந்து தெண்டனிட்டு வருந்தியவர் ஏதுரைப்பார்
அந்தகனே நாங்கள் அணுகி உயிர்க்கொல்லும் முன்னே
எங்கள் உடலை எரிக்க அனல் தான் வெகுண்டு
பொங்கி விரட்டியதால் போத அஞ்சி ஓடிவந்தோம்
என்று கிண்ணாதர் இயம்ப வெகுண்டே தூதன்
நன்றா பாலகனும் நம்மில் பெரியவனோ
இன்றிங்கே நான் போய் இயல் சுடரைப் பாலகனை
கொன்றுவிடுவேன் எனவே கோபித்து எழுந்தான் தூதன்
தூதன் எழுந்திருக்க துடியுண்டாய் ஆயிரம் பேர்
சேதி தொடரக்கிங்கரர் சென்ற மத்தி யேது சொல்வார்
நாராயணனும் அல்ல நான்முகனாம் தேவர் அல்ல
வேறாயுய்ச் சூரன் உடல் வென்ற முருகேசன் அல்ல
திடமுடைய தேவரிடம் தேவே நீ போவதல்லால்
படியில் ஒரு பாலனுக்கோ பார்மீதில் வருவது
நாங்கள் இமைப் பொழுதில் நாடியே சென்றணுகி

---

அரும்பத உரை :

பாடுபட்டு - உழைத்து
உலைந்து - துன்பமுற்று
அந்தகன் - யமன்(காலன்)
போத - போக
சேதி - செய்தி
சூரன் - சூரபத்மன்
படிபார் - உலகு

பொங்கிச் சினந்து பிடித்து வருவோமெனவே
பாதத்தில் விழுந்து பணிந்தார்கள் ஆயிரம்பேர்
போதுற்ற தூதன் பிடித்துவர ஏவிவிட்டான்
விண்டு இடிபோல வெகுண்டெழுந்த கிங்கரர்கள்
தண்டு தடி எடுத்து தான்வந்து பாலனிடம்
கிட்டினார் கிட்ட கெடவுட(னே) வடகனலும்
முட்டியே சுற்றி முழங்கி வளைத்ததுவே
கனல் வேகம் கண்டு யமதூதர் கிங்கரர்
அனல்வேக மூண்ட அரனாசியிலே ஆகுமென்று
நம்மாலே பாலகனை நாடிப் பிடிப்பதற்கு
சும்மாதான் தூதனிடம் சொன்னோம் பலவார்த்தை
அம்மா இவனை வெல்லப்புகவும் கூடாது
எம்மால் முடியாதென் றேகினார் கிங்கரர்
வந்தவரைப் பார்த்து மகாதூதன் கோபமுற்று
மைந்தன் உயிர் எங்கேயடா? மைந்தன் உயிர்வாங்கலையோ?
ஆயிரம் பேர் சென்றதிலே யாரடா மாண்டவர்கள்
வாயுரமாய் நீங்கள் சென்று வந்தவகை சொல்லும் என்றார்
அந்த உரையில் அவர் அஞ்சி நின்று ஏதுரைப்பார்
மைந்தனுக்கு இப்பால் ஒரு நாழிகைதூரம்
வடகிரிபோல் நின்று வடகனலும் தான்சீறி
உடல் எரிக்க வந்ததனால் ஓடி பயந்து வந்தோம்
தங்கு புகழ் பாங்கன் பால்தான் போக ஒட்டுவதில்லை
திங்கள் அணிந்த சிவன் செயல்தான் எப்படியோ
என்று இவர் சொல்ல எரியில் எண்ணெய் விட்டார்போல்

---

அரும்பத உரை :

விண்டு - பிளந்த
தண்டு - ஆயுதம்
வடகிரி - இமயமலை
எண்ணெய் - எள்நெய்

மன்று தூதன் மகா கோபமாய் வெகுண்டு
செங்கதிரைப் போலே சிறந்ததொரு முகமும்
பொங்கும் தீயைப்போல் பொழியுமொரு முகமும்
திங்கள் எனவே சிறந்ததொரு முகமும்
தங்கு முக மூன்று தருகை செங்கை ஆறுடையான்
ஆறுவிழியும் அனல் பொழியும் மூன்று முகம்
சீறி வெகுண்டு சிறந்த செங்கை ஆறுதனில்
வேலும் இடிசூலம் விசைபாகம் நேமி தண்டு
கோல இடிபோல் ஏந்தி கோபித்துப் பாரில் வந்தான்
வந்தவனைக்கண்டு வட கனலூந்தான் சீறி
அந்தரமும் பாரும் அதிர்ந்து நடுங்கியதுவே
...........வளைத்த வடகனலையே தூதன்
சிந்த அடித்து சிதற நொறுக்கி விட்டான்
அந்த நிமிடம் அனல் பயந்து நந்தீசர்
எந்தனையே காத்தருளும் என்று மிரண்டோடியதே
அந்நேரம் ஏவுமென்ன ஏவ அது மூண்டதுவே
முப்புரத்தைச் சுற்றி முடுகும் வடகனல் போல்
செப்பமுடன் சத்துருக்கள் பொறி எழும்பி
அண்டம் ஈர் ஏழும் அடங்கலும் ஒன்றாய் நிரம்ப
தென்றிரை ஏழும் அலறச் சீறிச்சினந்த தனால்
மெத்த பயந்து வெருண் டோடியே தூதன்
உற்ற எமன்பால் ஒதுங்கி இவன் ஏதுறைப்பான்

---

அரும்பத உரை :

சீறி - கோபித்து
சூலம் - திரிசூலம்(ஆயுதம்)
நேமி - சக்கராயுதம்
அந்தரம் - ஆகாயம்
சத்துரு - பகைவர்
தெண்டிரை - தெள்ளிய அலையுடைய கடல்

தங்கு புகழோனே தருமா எமதருமா
பொங்கு மொரு பாலனுக்கு பூதலத்தின் விட்டவிதி
சென்றதையோ நான் பிடிக்க சென்றேன் கண்ணால் சோமன்
கொன்று விடவந்தார் என்னைக் கொற்றவனே இங்குவந்தேன்
என்னால் புவியில் இனிப்பிறந்தோர் அனைவரையும்
மன்னுவதைக்கரிது வாரும் வடகனலால்
உந்தனுக்கு பாலன் உலகில் வலுவானான்
நந்தபட்டம் இன்றிழந்தேன் தெண்டனி(ட்டேஇ)ஷவரசே.

## விருத்தம்.

மிக வலுவுடையோர் கோபம்
விளை சுடும் எளியோர் மீது
நகுமெளியோர்கள் கோபம்
நாடுமோ வலுவுள்ளோர் பால்
புகுவது மூலை தேடி
போய்விடும் வாழ்வானோன்
தகும் எரிபாலன் வீரம்
சாட நான் ஓடிவந்தேன்.

என்று தூதன் இயம்பலும் எமன்
நன்றடா தூதர் நரனுக்கோ அஞ்சிவந்தாய்

---

அருபத உரை :

சோமன் - சிவபிரான்
எரிபாலன் - மார்க்கண்டன்
சாட - வருத்த
இயம்புதல் - சொல்லுதல்
நரன் - மானுடன்(மனிதன்)

வலியவனோ என்னில் வலியவரும் பூவிலுண்டோ?
எலி தனக்கும் பூனை இளைத்தது போல் ஓடிவந்தாய்
மைந்தன் நமக்கு வலுவோ அதற்குதவி
வந்த இரண்டு அக்கினியும் மாய்த்து அவனுயிரை
கொண்டுவருவேன் எனவே கோபித்தான் எட்டுமுகன்
அண்டம் தனிலும் அகண்ட பலமுடையான்
சூரியன் போலே இரண்டு முகம் சூழ்கனல் போல்
இரண்டு முகம்
மாரி இடி இரண்டு முகம் வாரிதிங்கள் இரண்டுமுகம்
எட்டு முகத்தில் எரி விழி ஈர் எட்டுடையான்
திட்ட நிறை வீரம் சிறந்த பகுவாய்க்கடித்து
வில்லுடனே குலிசமும் விளங்கு சங்கு சக்கரமும்
கொல்லும் மழுவும் அக் கொழுவும் இடிக்கல்லுளை
ஆலம் வாள் வில்லும் அகண்ட பெருபாழி
சூலக் கருவியும் துலங்கு பதினாறு செங்கை
அட்டமுக செங்கை அழன்ற இடியேறு எனவே
திட்டமந்திசைத் தோரும் சிறந்த வரையெதிர்
வந்துமை பாலனிடம் வாகாய் அணுகு முன்னே
அந்திமதி சூடும் அரன் விழியில் அக்கினியும்
வீரத்தில் கோடிமிகுந்த இடியேறு எனவே
தீரத்தில் சுற்றில் சுற்றி சரிந்து வந்துதான் வளைய
பார வடகனலும் பாங்காகவே முழங்கி

---

அரும்பத உரை :

பூவில் - உலகில்
இளைத்தது - மெலிந்தது
மாரி - மழை
எரி - தீ
பகுவாய் - பிளந்த வாய்
ஆலம் - விஷம்
முழங்கி - ஓசையிட்டு

வீரத்துடனே வெகுண்டு வந்துதான் வளைய
திரிபுரத்தின் தீயும் சிறந்த வடகனலும்
இருபுறமும் சுற்றுகையால் ஏவல்நமன் வெகுண்டு
ஆங்காரங் கொண்டு அதட்டி வலு சூலமதை
ஓங்கார அக்கினிமேல் ஓங்கி இவன்நெறித்தான்
அந்த இடி சூலமதில் அக்கினி இரண்டும் பயந்து
சிந்தை கலங்கி திகைத்து நந்திதான் வெகுண்டு
ஈசர் செங்கை தன்னில் இருந்த மழுவாயுதத்தை
வாசநிறை நந்தீசர் வன்மையுடனே விட்டார்
அக்கணமே மீளா மழு அண்டரண்டந்தான் அதிர
தக்கமுடன் ஏவல் நமன்தான் பயந்து காவலனிடம்
சென்று அடிதொழுது தேவே சரணம் என்றார்
அன்று வணங்கும் அடல் ஏவல் எமனையும்
தங்கு வலுகாலன் தான்பார்த்து ஏதுரைப்பான்
பொங்குந்திசை ஏவல் நமா போற்றி வணங்கும்வகை
இங்கே நீ இப்போ(து) இயம்படா என்றுரைத்தான்
தங்கு வலுகாலன் தான் கேட்க ஏவல் நமன்
ஆண்டு பதினாறு வயதானான் ஒரு புதல்வன்
நீண்ட புகழோனே நின்னருளால் கொல்லுதற்கு
சென்றுதான் தூதன் சிதைக் கரிதாய் ஓடிவந்தான்
அன்று அடியேன் வெகுண்டு ஆங்காரமாய்ப் போனேன்
என்றாலும் கொல்லரிது ஏக இருகனலும்
மன்னா மழுவதும் வந்ததனால் ஓடிவந்தேன்

---

அரும்பத உரை :

திரிபுரம் - முப்புரம்
ஆங்காரம் - ஆணவம் (கோபம்)
இயம்பு - கூறு
சிதைக்கரிது - கொல்லமுடியாமல்
ஏக - ஒரேசமயத்தில்

கந்தன் தந்தைதன் அருளாலே கந்தனருளாலோ அறியேன்
சிந்தையுடன் பூமியில் என்னால் செயற்கரிது ஆனதையும்
இன்று முதல் எந்தனுக்கு எமப்பட்டம் போதும் என்றான்
குன்று வலுதோள் காலன் கோபித்துக் கண்சிவந்து
பாலன் தனக்காய் பயந்து பட்டம் விட்டனையே
காலன் என்று எண்ணாக் கனலும் எழுந்ததுவோ
என்று இடியேறு எனவே எழுமுகத்தோன் சீற
அன்று பதினாலு விழி அக்கினியதை ஏவி
பற்றியிரு எமன்றான் பகிரண்டந்தான் நடுங்க
சுற்றும் இருகாலன் சினந்து வெகுண்டதனால்
அங்கு நின்ற கிங்கரர் எல்லாரும் பயந்து
பொங்கமுடன் அப்புரத்தே போய் ஒளிந்தார் எல்லாரும்
ஏழுமுகன் கோபத்தை எட்டு முகத்தோன் பார்த்து
சூழும் உடம்பு துணுக்கிட்டு அஞ்சி நின்றாள்
அந்நேரம் காலன் அவன் முகத்தைப் பார்த்திரைப்பான்
இந்நேரம் அக்கினிக்கு ஏங்கி அஞ்சி வந்தாயடா

## விருத்தம்.

துடியிடிக்கும் அரி ஓங்கி
சூழ்திசை படியில் தாக்கும்
இடிதனக்கும் எதிராய் நின்று
இயல்குடை தாங்குமோடா

---

அரும்பத உரை :

கந்தன்தந்தை - முருகையனின் தந்தை சிவபிரான்.
குன்று - மலை
துணுக்கிட்டு - நடுங்கி
ஏங்கி - தவித்து

பொடிமணல் தனக்கும் மீளும்
பொரக்கிரி அஞ்சியோடி

கடிதிட மகலும் மெல்லக்
கண்டிலம் காண்கிலேன் என்றான்

## நடை

தப்பாது எந்தன் வலிமைதான் பாரடா எனவே
ஒப்பார் எனக்கு உறுதி எவர்தான் எதிரோ
என்று இசையில் சொல்ல எமது கிடா வாகனத்தைக்
கொண்டு வருக என்று கூறுமுன்னே கிங்கரர்
ஆறாயிரங் கோடி யானவரை போல் வலுத்தோர்
வீறாயிரம் பேர் விரைந்து அணுகி வார்த்தையும்
கண்டு வெகுண்டு கண்பகடுதான் எழுந்து
தெண்டிரையில் நஞ்சாய் திடுக்கிட்டுக் கோடேறி
திகைத்து அது முழங்கி நிசக் கொடிதானெதிர்
பகைத்தவர்கள் தன்னை பதற முடிக்கியதே
கொம்பாலடிபட்டு சூலை உண்டாயிரம் பேர்
வம்பார்தூதர் வளைத்துப் பகடுதன்னை
எத்து வழியாக இகலும் வலுகிங்கரர்

---

அரும்பத உரை :

கிரி - மலை
உறுதி - வலிமை (நெஞ்சுறுதி)
கிடா - எருமை
அணுகி - நெருங்கி
பகடு - எருமை
பதற - திடுக்கிட
சூலை - உளைவுநோய்
வம்பன் - தீயோன்
இகழும் - பகைக்கும்

குத்தும் பகட்டைக் கூடிவந்தே பிடித்து
காலுக்குத்தண்டை கனத்த கொம்பில் பொற்குமிழ்
மேலில் சகலாத்து விரித்ததன்மேல் சென்மதாய்
முத்தால் முகத்தில் முகப்பட்டாதான் அணிந்து
கொத்தால் நிறைந்து இலங்க கோல முக முட்டணிந்து
பச்சைவைரம் பவளமணி வாகை கட்டி
இச்சை புட்பராகம் இருபுறமும் கட்டி இறுக்கி
தத்து மரகதத்தின் கல்லி(ன்) பட்டுக்குஞ்சமணிந்து
சுத்திலங்கு தங்கம் துலங்கு தொங்கல் தானணிந்து
மாணிக்கம் நீலம் வைடூரியம் பூட்டி
ஆணிக்கனகம் அழகு விதரணம் இட்டு
வயிரமணிக்கட்டி மதவேக அப்பக்கடை
அயிரபதம் எனவே அடரும் அயிரபதமாய்
கழுத்திலிடு பொன் மணிகள் காதவளிஓசை என
அருத்துகின்ற இரத்தினங்கள் அசைந்துரை அக்கழுத்தில்
பகடுதனை கிங்கார் பாங்காய் வடிவுபெற
சகடு அணிந்து சண்ட நடம் தான் நடத்திக் கொண்டுவந்தால்
வெள்ளிமலை அன்று மேதினியில் வந்தாற்போல்
துள்ளி பகடு வந்ததே தோன்றியதே காலனிடம்

---

அரும்பத உரை :

தண்டை - காலில் அணியும் ஆபரணம்
சகலாத்து - பார்பளித்துணி
குஞ்சம் - பூங்கொத்து
தொங்கல் - மாலை
ஆணிக்கனகம் - மாற்றுக்குறையாததங்கம்
விதரணம் - அழகு
ஆயிரபதம் - அயிராவதம் (இந்திரன் யானை)
வடிவு - அழகு
சண்டநடம் - நாட்டியம்

## விருத்தம்.

அண்டம் மீது அடங்காது எங்கும்
அடர் இடி அதிர்க்காலன்

மண்டலம் பாலர்க்காக
வரும் எச்சரிக்கை மைந்தன்

சண்டையில் பலம்தெனோ
சங்கரர் உதவி கண்டு

அண்டமும் பயந்தவாறு
யார் இவர்க்கு உதவி என்றான்.

மலைகள் நிறந்த(து) ஒப்பாம் மறலி அகோர மு(க)த்துக்
கலை புகழுங்கால் நமன் காரிடியான் பூவில்வந்தான்
தங்குசிரசு எழில் தரு கேழு பொற்கிரீடம்
பொங்கு மஞ்செவியீரேழில் பூணும் திங்கள் குண்டலமாம்
எங்கும் ஒளியாய் ஒளியாய் இயல்காலன் நெற்றிதனில்
தங்கு திலகம் தரு காது எழுகதிர்போல்
மீசைமுறுக்கேறும் மேவும் பிறை எயிறும்
நேசமுறுசித்திரை நிறைந்த புருவவில்லும்

---

அரும்பத உரை:

அண்ட - நெருங்க
அகோரம் - கொடுமை(அழகின்மை)
சிரசு - தலை
எழில் - அழகு
கிரீடம் - மகுடம்
திங்கள் - ஒளிவீசும்
குண்டலம் - காது அணிகலன்
எயிறு - பல்
கவின் - அழகு

[illegible]ங்கும் விரலில் இயல்பு இரத்தின மோதிரமும்

[illegible] கவினை பூட்டும் ஈரேழு செங்கை

மூத்துச்சர பதக்கம் மோகன மாலைகளும்

கொத்துச் சரப்பளியும் கோல இரத்தின பூசணங்கள்

மாணிக்கம் பச்சை வைரம் வைடூரியங்கள்

ஆணிப்பவளம் அடல் நீலமாலையிட்டு

தங்குபுகழ் மார்புதனில் தங்கரத்தின வச்சிராங்கி

பொங்கும் இடையில் புனித பீதாம்பரமும்

நாமம் விபூதி நலக் கோபி சந்தனமும்

நேமம் நிறை கஸ்தூரி திறை காவி நிரஞ்சனமும்

ஏழுமுகம் ஏழுகுறி ஏழுமோக முந்திரியாம்

சூழும் இடிபாசம் துலங்குகண்ட கோடாலி

வேலுடனே தெரிசமும் விளங்கு சங்கு சக்கரமும்

சூலம் மழுவில்லும் தொடரும் வாளிபாய் பகடு

தண்டுவாள் கண்டும் சிறந்த பதினாறு செங்கை

அண்டர்புகழ் காலன் அழகந்த கிடாமீதேறி

பொங்கும் வடகிரியில் போதவே சூரியனும்

தங்கியிருந்தது ஒப்பாய்த்தான் அண்டத்தினுள் பகட்டை

## விருத்தம்.

அல்லல் மகிழ்வு அயன் விதியை
யார் இரண்டறிய மாட்டார்கள்

---

அரும்பத உரை :

சரப்பளி - வயிரக்கழுத்து அணி
பூசணம் - அணிகலன்
ஆணிப்பவளம் - உயர்ந்தபவளம்
நிரஞ்சனம் - ரசகற்பூரம்
பீதாம்பரம் - பொன்னாடை
அண்டர் - தேவர்

அல்லல் செனனம் அவதிவிதி
வருதல் அறிதல் மார்க்கண்டன்

செல்லும் வயது அறிந்து நமன்
திரமாய் வருதல் அவன் உயிரை

வெல்ல அரனும் வருதல் என
விதியார் அறியார் எவர் காண்பார்

முன்னே செனனம் எதுபோ பின்முளைத்த செனனம் அவதிசுகம்
இன்னாள் அறிவதே யாரறிவார் இதுபோய் வருஞ்செனனம் எவை
பின்னாள் அறிதல் எவை எவை? பிரமன் அறியா விதிசிரசு
அந்நாள் போக விதியறியான் அதுபோலக்காலன் வருதல் உற்றான்

## நடை

பிறப்பும் இறப்பும் பிறப்பதற்கு முன் செனனம்
சிறப்பும் விதிசுகமும் செத்தபின் உறும் செனனம்
எல்லா உயிர்க்கும் இயல்புதவமாம் மறலி
எல்லாம் அறிவான் அயன் சிரசு போம் விதியும்
அன்னாள் அறியாதவர் போல் நமனாரும்
இன்னாள் மார்க்கண்டன் இயல்புவிதி ஆராய்ந்து
ஆதித்தானந் தாளில் அகப்பட்டு உதைபடவும்

---

அருஞ்சொற்பத உரை :

அல்லல் - கவலை
செனனம் - பிறப்பு
அவதி - துன்பம்
சிரசு - தலை
மறலி - யமன்
ஆதி - சிவபிரான்

சேதி இது மாய்கை இவர் சிந்தை அறியாமல்
பாலன்தனைச் செயிக்க பண்புடனே மாமறலு
ஆலம் எனவே அழன்று பொங்கியே நடந்தார்
நமனார் (மாக்)கிரி நன்றாகவே நடக்க
எமனார் பின்கிங்கரர் ஏழாயிரங்கோடி
ஈமத்தடிக்காரர் எண்ணாயிரங் கோடி
சாமத்தடிக்காரர் தான் அங்கு ஒரு கோடி
வெள்ளித்தடிக்காரர் வேண்டும் பலகோடி
தெள்ளிமை சேர்தங்கம் சேர்ந்த தடிக்காரர்களும்
உருக்குத்தடியும் உலக்கைத்தண்டு வளையமும்
இருப்புத்தடிக்காரர் இரு நூறு கோடி வெள்ளம்
தேர்கள் ஒருகோடி சேரமா இரு கோடி
பார்க்குள கரிகள் பதினாயிரங்கோடி
செந்தூள் பறக்கச் சிறந்தார் பாரமுடன்
வந்து தொழுதார் மகாகாலன் பொற்பாதம்
அங்கவரைத் தான் நோக்கி ஆளின் வலுகாலன்
பங்கமறவே நாமும் பாலன் தனக்காக
படையெடுத்தோமாகில் பாருலகுதான் (ந)கைக்கும்
தடையறவே பாலகனைச் சங்கரிப்பீரோ நீங்கள்
உங்கள் தனையும் உலகெவையும் ஓர் நொடியில்
மங்க உயிர் கொள்ளும் மகாதூதன் அஞ்சிவந்தான்

---

அரும்பத உரை :

ஆலம் - நஞ்சு
அழன்று - கோபித்து
கிரி - எருமை வாகனம்
உருக்கு - இரும்பு
வளையம் - கைவளை (வட்டம்)
மா - குதிரை
நகை - சிரிப்பு
நொடி - காலநுட்பம் (கைந்நொடி)

தங்கு வலுதூதன் தனைப் போவே ஓர் அனந்தம்
பொங்கும் பிலத்தில் புடை எமன் தான் பயந்து
வந்தான் வடகனலில் வார் பெரு உலகமெல்லாம்
செந்தீயின் நூறாய்த்திரள் பொடியாக்கிவிடும்
அந்தவடகனலில் ஆயிரத்தின் கோடி பலம்
விந்தை நெற்றிக்கண்ணில் மிகுந்த புரமும் தீய்த்த அனல்
அப்புரத்தின் தீயின் அகண்ட பலமாயிரமாம்
ஒப்புரத்தின் நின்ற மழு ஓங்கு மழுத்தான் பிலத்தில்
பத்து இரட்டிச் சூலம் வரும் பாரிலவையடங்கும்
ஒத்தும் மைந்தர்க் கின்னாரும் உதவியதாய் முன்பு நின்றால்
உங்கள் தனைக்கண்டால் ஒருநொடியில் தூளாக்கி
மங்கி நீர் மாண்டு விட்டால் வான் எம(னுக்கு) நாணமதாம்
பங்கமுடன் நீங்கள் வந்து பட்டு வெட்கமாகாது .
செங்கண் நெடுமாலும் திசைமுகனும் மாமுகத்தோன்
திங்கள் அணி ஈஸ்வரனும் தேவர்களும் தான் கைப்பார்
இங்கே நில்லும் என்று இவர்களையும் தான் நிறுத்தி
மலைகள் அது நீறுப்பட மண்டலங்கள் தான் நடுங்கி
கலையமரருள் திசையோர் காவலரும் ஏக்கமுற
ஆகாசம் அட்டகிரி அண்டம் கிடு கிடு வென
வாகாய ஏழுகடலும் மண்டலமீது எழுதிர்
ஏதோ உகாந்த இறுதி எவர்க்கோமுடிவு

---

அரும்பத உரை:

புரம் - முப்புரம்
மழு - ஆயுதம்
சூலம் - திரிசூலம்
நாணம் - வெட்கம்
கைப்பார் - விரும்பார்
நீறு - துகள்
மண்டலம் - உலகம்
அட்டகிரி - எட்டுமலை

மீதா பிழைக்கரிது மீறி இவர் வெ(கு)ண்டால்
பாதாள லோகம் படிபாம்பின் உடல் அதன்
மீதான அட்டகிரி எட்டும் நிலைகுலைய
அண்டபகிரண்டத்துறை வோர்களும் பயந்து
எண்டிசையில் காலன் எங்கே பயணமதோ
வேதரிவர் மாலோ வினை இவர்க்கு ஈஸ்வரனோ
மீதான அண்டத்தில் விரைய வருவானோ
எல்லா உயிரும் இயல்புடனே சங்கரிக்க
வில்லான காலன் மனதில் நினைந்ததுவோ
என்னவிதியோ இறுதி எவர்க்கோ அறியோம்
அன்னம் உயர்த்தோன் அருளும் விதிதனக்கும்
காலன் தனக்கும் அஞ்சி காணாமலே ஒளிக்க
சீலமுடன் எவ்விடங்காண் சேர அவர்களிடம்
அண்ட பகிரண்டம் அடங்கவெல்லாம் ஓர் உறவாம்
மண்டலம் ஈர் ஏழ்புவனம் வாழும் உயிர் நற்றவசம்
காலன் என வளரும் கனத்த உலகந்தன்னை
சீலமுடன் ஒடுக்கையில் செகத்தில் உள்ள சீவனெல்லாம்
உலக்கை இடிக்கஞ்சி ஒதுங்குமிடம் ஏது?
விலக்கம் இனி ஏது இவர்க்கு வந்ததெல்லாம் கண்டறிவோம்
என்று அண்டந்தனிலிருந்தவர் எல்லாம் பயந்து
மன்னுலவு காலன் வருந்திசை காணாதுழன்றார்

---

அரும்பத உரை :

உகாந்த - யுகஅந்தம் (பிரளயம்)
சங்கரிக்க - அழிக்க
இறுதி - முடிவு
அன்னம் உயர்த்தோன் - பிரமன்
ஒளிக்க - மறைய
சீலமுடன் - ஒழுங்காய்
ஒடுக்கம் - ஒன்றில் அடங்குகை
செகம் - உலகம்

## விருத்தம்.

சுகத்தை விரும்பு வாரேனும்
துக்கத்தை விரும்ப மாட்டார்கள்
செகத்தில் விரும்பும் மனுநீதி
சிறந்தசைவதன்றிப் பதைப்பால்
வருகில் மனம் பதறும் மனிதரது போல்
திகைத்து அமரர் மருகலுற்றார்
சினந்தே காலன் வரும் போதே
..................................................

## விருத்தம்.

காலனும் எழுந்த ஓசை
கண்டுதிசை புவனம் அண்டம்
மேலவர் எங்கோ என்று
வெருண்டன எல்லா உலகமும்
கோல வேத(ன்) வசமாவர்
கொடுமையின் உலகைக்காலன்
சாலவே இடிக்கும் தப்பி
தாக்கினினதுவோ என்றார்

---

அரும்பத உரை :

விலக்கம் - மாற்றம்
உழன்றார் - வருந்தினார்
மனுநீதி - மனுதருமசாத்திரம்
கோல - அழகிய
சால . மிகுதியாக

## நடை

எமபுரம் விட்டு இனிய புகழ்க்காலன்
சாமவேத பாலன் தானிருக்கும் பூவில் வந்தான்
வெய்ய அரன்மால் வேதன் மீருஞ் சதாசிவன்முன்
துய்ய மகேசுவரனும் துடிகாலன் நிச்சயமாய்
தங்கும் ஓர் ஏழுதகமை சொருபமுடன்
எங்கும் புகுவான் எந்த உயிரும் சங்கரிப்பான்
அக்கினியில் ஓங்கும் அகோரச் சினம் உடையான்
படிபுவனம் அண்டரண்டம் பலதீவில் இவரெல்லாம்
மடியும் முடிவும் வளமை நேரிதானறிவோன்
மூவரும் மூவேழு ஆயிரம் முன்னூறு இரட்டி
சிவன் அவைக்கெல்லாம் சிறந்த விதி மூச்சு
ஓடுஞ் சுவாசம் ஒன்று எனினும் ஏறாமல்
சாடுங் கயிறதனால் தரும எமராசன்

## விருத்தம்

மூடுகிய சுவாசம் மூவேழு
ஆயிரத்தின் ஆறினநூறு
கடுகியே வெளிபோய் மீளும்
கயிறோடு தருமன் வந்தால்

---

அரும்பத உரை :

சாமவேதம் - நான்மறையின் மூன்றாம் பிரிவு
பாலன் - மார்க்கண்டன்
சொருபம் - உண்மை வடிவம்
அகோரம் - கொடுமை
மடியும் - இறக்கும்
சுவாசம் - பிராணவாயு
சாடுங்கயிறு - பாசக்கயிறு

நொடிகையோ நிமிடமோதான்
நுழைவளி நுழைய ஒட்டான்

துடிகள் வசூல் பாணி ஆள்
வினை(யின்) நினைவுள்ளோனே

கோலமுடன் எழுகொண்டல் வந்து சூழ்ந்தாற்போல்
சீலமுடன் காலன் சினந்து வரும் வேளையிலே
பொங்கு புறக்கனலும் பூவில் வடகனலும்
திங்கள் அணி ஈஸ்வரனார்..............
செங்கை நிறை ஆலமும்..............
காலன் நேர்மைக் கண்டால் கடுகவே கொல்வான் என்று
ஆலய மதிலோடித் தயங்கி ஒளிந்ததுவே
நந்தி ஈஸ்வரரும் நமனின் கோலம் கண்டு ஒளிந்தார்
வந்தார் எதிர் ஒருவர் வாசல் தடையில்லாதான்
முந்த வந்த சேதி சமர்மூண்டவினை அத்தனையும்
மைந்தன் இவையறியான் வாஞ்சி சிவபால மனத்தான்
சிவசிந்தை நேசம் சிவபூசை எமனதாய்
தவம் செய்த மார்க்கண்டன் தானிருக்கும் நேரமதில்
வந்த எமகாலன் மார்க்கண்டனைப் பார்த்து
கந்த நிறை காலன் கண்டு சினந்து ஏதுரைப்பான்.
தாக்குடனே வெள்ளமது தான் வருமுன்னே அணையின்
சீக்கிரமதாக சிறந்த தண்ணீர் போகாமல்

---

அரும்பத உரை :

எழுகொண்டால் - ஏழுமேகம் அவை சம்வர்த்தம், ஆவர்த்தம் புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி நீலவருணம், இவை பொழிவன முறையே மணி, நீர், பொன், பூ, மண். கல், தீ.

வெள்ளம் - நீர்ப்பெருக்கு

கட்டினால் நிற்கும் கடுகியதோர் வெள்ளம் வந்து
முட்டியபின் கட்டில் முறிக்கும்; அணை நிற்குமதோ
மங்கை வருமுன்னே தவஞ்செய்தல் ஆற்றல் தமக்கும்
தங்குமடா சாகுந்தருவாயில் என்னதவம்?
சாவு வருமுன்னே தவஞ்செய்வாய் நீ பாலா
மேவுபுகழ் பூவுலகில் விமலன் விதித்த விதி
வேதன் எழுத்தும் விதியும் முகிழ்த்ததற்பின்
ஆதரவாய்ப் பூசை அறிந்தாலோ பாலகனே?
இட்ட எழுத்து இயல்பாய் முடிந்தோர்க்கு
திட்டமுடைய சிவபூசை தள்ளுமதோ
தாகமுடன் விரிஞ்சன்தான் எழுத்து முன் விதியை
சாகப்பயந்து தவஞ்செய்தால் போகுமதோ
இப்பெரிய பூவில் எவரேனும் உள்(ள) விதியை
தப்பிப்பிழைக்க வென்றால் தப்பவொட்டேன் யாவரையும்
அந்த நாள் ஈசன் அயனும் விதித்தவிதி
இந்த நாள் சாவுனக்கு யான் விடேன் ஏங்குகிலும்
விண்டா பூசை விரும்புகிலும் சாவுனக்கு
கண்டாய் நிலையும் கலங்கி உயிர்தான் பார்த்து
குத்தி உளையும் கொலை செய்து கொன்றுழக்கி
வெற்றிசெய்வேன் கல்லு நிலை விட்டு வெளிவாடா
என்றுதான் காலன் இவை கூறவே பாலன்
அன்று திடுக்கிட்டு அடர்க்காலனைப் பார்த்தான்.
காலன் உட(ல்) கோலம் கண்டவுரிப் பாலகனும்

---

அரும்பத உரை :

முறிக்கும் . குலைதல் (கெடுதல்)
தருவாய் - தக்கசமயம்
விமலன் - குற்றமற்றவன்
பூ - உலகம்
விரிஞ்சன் - நான்முகன்

சீல நெறி நெஞ்சம் திடுக்கிட்டு உடல்பதறி
சண்டன் எதிர் பாலன் தனித்து நிற்கவே பயந்து
அண்டர் பிரான் கிட்டே அலறி பயந்து அணுகி
வாடிமனம் பதறி மார்க்கண்டன் ஏக்கமதாய்
நாடினேன் உன்பாதம் நாயகனே என்று அழுதான்
பயந்தேன் எ(ன்)னைக் காரும் பரனே அபயம் என்றான்
அயர்ந்தேன் இதுசமயம் ஆதியே காரும் என்றார்
உந்தன் அடைக்கலமாய் உண்மை அடியேன் இருந்தால்
எந்தன் தனக்கு எமவாதை உண்டாச்சோ
அரனே பராபரனே அறுமுகன் தந்தையாரே
பரனே அபயமென்ற பாலனைப் பார்த்தே காலன்
வெள்ளிமலை ஈசர் சொல்லை மேதினியில் பூசைகொள்ளும்
ஒள்ளிய தோர் கல்லு உன் விதியைத் தன்னுமோடா
வல்லவர்கள் மூவர் வகுத்த விதி ஆறில் வந்தால்
கல்விதுவும் தன்னுமதோ கண்டாயோ ஈஸ்வரனை
ஈசனிருப்பும் இறையோனிடத்து உமையும்
காசினியில் கல்லாகக் கண்டுடா பூசை செய்தாய்
கற்பனையாய் அனைவரையும் கற்பித்தானவனுக்கு
ஒப்பினையோ கல்லு உலகில் அவர்க்கிணையோ

---

அரும்பத உரை :

அலறி - ஓலமிட்டு
பதறி - நடுங்கி
வாடி - வருந்தி
ஏக்கம் - பரிதவிப்பு
நாயகனே - தலைவனே (சிவன்)
காரும் - காப்பாற்றுங்கள்
அபயம் - அடைக்கலம்
அயர்ந்தேன் - வருந்தினேன் (சோர்ந்தேன்)
பராபரன் - மேலானவன்
அறுமுகன் - ஆறுமுகன்
வெள்ளிமலை - பனிசூழ்ந்தகயிலை

உண்டாக்குவான் எவையும் உண்டாக்கியே ஒளிப்பான்
உண்டாக்க வல்லவனே; உண்டாக்க வல்லதோ
இந்தபடி கல்லு இயல் வளரும் பூமியிலே
தந்தையுடன் எண்ண ஒண்ணாதெய்வாமென்பார் மெத்த
உண்டு

சிவசொரூபம் காணார் சிறந்த விஞ்சைக் கல்லை நம்பி,
தவஞ்செய்தாருள் விதி தள்ளி எவர் வாழ்ந்திருந்தார்
வாடா நீ உன்னுயிரை வாதையில்லாதே வாங்கி
தாடாளா நான் போகிறேன் தயங்காமல் வந்திடு என்றான்
அந்த வுரை கேட்டு அர(ன்) மேவித்துதி பாலகனும்
எந்தன் பிரானே இமையோர்கள் தேடரியா
சுந்தரனை கல்லதென்று சொல்லுவனோ காலநமன்
இந்த மொழி கேட்க என் விதியோ என்று அழுதான்
மைந்தன்னாக மாகாது எவர் பயம் எவையும்

## விருத்தம்

கண்ணில் செவியில் நாசியின் வாய்
கருணை எவையும் இருதயத்தில்

எண்ணிக் கலந்து ஏகமதாய்
எங்கும் நிறைந்த பரஞ்சோதி

மண்ணறு பாவன மனது பயம்
மாய்கை வினை கல்லுவாக்கி

---

அரும்பத உரை :

ஒண்ணா - பொருந்தாத
விஞ்சை - மந்திரம் (கலை)
தாடாளா - முயற்சியுள்ளோன்
மேவி - பொருந்தி
பிரான் - தலைவன்

விண்ணில் பெரிய எமனுடன்
கடமுரைக்க மூட்டி விட்டார்

அடியும் முடியும் நடுவாகி
அகண்ட திசை யோ ரணு வளவும்

நொடியும் ராசி வாரமதில்
நுகரும் காதல் அணுகாதான்

நெடிய தவமும் நெறிதாள்
நிமிடம், கலா நெறியோர் பால்

படியில் இருளில் பகவானான்
பாலன் மனதில் பற்றான்

## நடை

ஆய்ந்த புதல்வன் அரனார் அருளாலே
பாய்ந்திருந்து பாலகனும் பார்த்தே எமனோடு உரைப்பான்
கல் என்று சொன்னீரே கருணாகரப்பொருளைச்
சொல் ஒன்று தன்னால் சுருதி விளைந்ததவம்
கல்லுக்குள் ஈசன் கருத்துக்குள் ஈசன் உண்டு
அல்லுக்குள் ஈசன் அகண்ட வெளி ஈசன்

---

அரும்பத உரை :

பாவனம் - அனுமானம்(அளவை)
கடம் - காரணம்
இராசி - சூரியன் கடந்து வரும் இடங்கள்
வாரம் - ஏழுகிழமை கொண்டது (பஞ்சாங்கத்தினொன்று)
கல் - சிலை
கருணாகரன் - கடவுள்
சுருதி - வேதம்
அல் - இருள்

இங்கு நின்ற லிங்கம் இயல்பாக எங்களுக்கு
திங்கள் அணியும் அரன் உடையாள் என்றிந்தோம்
நங்கும் லிங்கம் கல்லெனவே தானுரைக்க நீதியல்ல
ஙகும் நிரம்பியிருக்கின்ற மெய்ப்பொருள்
அடியார் மனது அறிய ஆதிலிங்கமாய் உலகில்
நெடியோன் மகிழ்ந்து நினைவின்படி வருவார்

## விருத்தம்.

பாரில் அளித்தல் சங்காரம்
படைப்பு மூவர் அறியாமல்

சீரில் ஒளித்தல் எவராலாம்
சிறக்கும் அரிவேடத்தில் மூவர்

தாரில் சிலையில் சிவலிங்கம்
தருகுஞ் சிவனாமம் மனதறிந்து

நேரில் புகழ்ந்த வரம் கொடுக்க
நிமிடம் அரனார் வருவாரே.

## நடை

ரியார்க் கெளியான் இகல் வலியானாற்கு வலியான்
பளியாகி நின்று விளைந்த சிவலிங்கமீது
ங்கசிவம் எங்களுக்கு நீதி நிலையாது இருந்தால்
கரரைத்தேடி எங்கே தான் நாம் காண்போம்; ஆவி

---

நம்பத உரை :

லிங்கம் - சிவன் உரு (அடையாளம்)
மெய்ப்பொருள் - (சிவனாகிய) கடவுள்
வெளி - ஆகாயம்

இயக்க உணர்த்திநியோ இயல்தவம் தன்னில் என்னை
மயக்கும் வகையேது மனது சிவனார் ஆனால்
என்று மார்க்கண்டன் இயம்ப வல்லு எமன்
குன்று வலிதிண்புயத்தால் கோலமுடன் ஏதுரைப்பான்
சங்கை வருமுன்னே சடுதியாய் நாம் பிடிப்போம்
மங்கை பங்கன் அந்நாள் வாகாக உந்தனுக்கு
கொஞ்சவயது கொடுத்த உமை ஈஸ்வரனார்
அஞ்சுவயதில் அவரைவிட்டு உமைபோன தென்னோ
உந்தனை நானும் தேடி உனைப்பிடிக்கக் காரியம் என்ன?
எந்தனுடைய வீட்டுடைமை எதுபறிபோயிற்று? மைந்தா!
விந்தையுடன் நான்பிழைக்க வேண்டுமென்றே தேடிவந்தேன்
எந்தனுக்கு வேறு தொழில் இல்லையோ? உன்னுயிரை
இந்நாளில் காக்க இருந்த சிவலிங்கமது
அந்நாளில் காத்து அதிகவரம் வழங்கலையோ?
ஒத்த விதியும் உமைபாகம் சொல்படியும்
பித்தனே பாலா பிழைப்போமடா எவர்க்கும்
பேசுமோ லிங்கம் பெருகுமோ சீவனுடன்
நேசமாய் எங்கும் நிரம்புமோ இந்தலிங்கம்
தங்கும் கயிலை தனிலிருந்து வந்ததுவோ?
பொங்கும் கயிலை மலை போய் அணுக மாட்டாதே

---

அரும்பத உரை :

**இயக்கம் - இயங்குகை (செலுத்துதல்)**
**இயம்ப - கூற**
**திண் - வலிமை**
**சங்கை - ஐயம்**
**சடுதி - விரைவு**
**மங்கைபங்கன் - அர்த்தநாரி**
**பறி - கொள்ளை**
**பித்தன் - பைத்தியக்காரன்**

பாரடா சூலம் மழுபார் இரண்டு தீயும் எங்கே?
ஆரடா நான் சினந்தால் அழைப்பாயுனக்குதவவே
பூசித்த கல்லும் பிடுங்கி உனதுயிரை
வீசியே எமபுரம் வீறுடனே போறேனடா
என்றுதான் காலன் இவை கூறவே புதல்வன்
இன்று கந்தன் தந்தை என்ன எண்ணியிருந்த லிங்கம்
பொங்கி வலுகாலன் பிடுங்கி எறிவேன் என்றான்
"லிங்கமே! சங்கரனே! நீதிபராபரனே!
இந்த வசனம் எனது செவி(யால்) கேட்பேனோ?
எந்தன் சிவபூசைக்கு இது இழுக்கிலையோ?
உண்டென்று நம்புவார் உள்ளத்தில் இருக்கவிலையோ!
உண்டு இல்லை என்று ஒளித்தால் இனி(பே)பனோ
உற்ற அடியார் ஒரு பிடிப்பை நம்பி நின்றால்
உற்வர்க்குப் போலும் உண்மை நிறைத்திலையே
மற்றவர்கள் உன் கயிலை வந்து தினம் காண்பதற்கு
முற்றுமோ? வித்தே? முழு முதலே!" என்றழுதான்
தங்குவது காலன்தனை நோக்கி ஏது சொல்வான்
பொங்கும் புகழ் பூவுலகில் போதமிகு மானிடர்க்கு
பத்தி யில்லார்க்(கு)க் கல்லே லிங்கம்; பக்தி உற்றோர் யாவருக்கும்
உற்ற சிவனும் உமையாளோடு வரும் அங்கே
தீயுஞ் சிவனும் சிறந்த எவையும் உள்கலந்து
நேயம் பல ரூபமாய் நிற்கும் நிலை சக்தி சிவமாம்

---

அரும்பத உரை :

**பூசித்த - வழிபட்ட**
**வீறு - பெருமை**
**வசனம் - சொற்கள்**
**போதம் - அறிவு**

பூமென் வாசம் என்பார் பொங்குஞ்சிவரூபம்
நாமறியோம் அங்க அரன் நம்பும் பக்தியே சிவமாம்

## மார்க்கண்டன் கூற்று

### விருத்தம்

அரன்மாலும் வேதன் துறவோர்கள்
மூவர் அதிரூப இந்துபகலோன்
வரமான பேர்கள் சிவபூசை நம்பி
மனதால் நினைந்து அருளை
பரமாக எண்ணி அரை உமபாதியாகி
பலரூப விஞ்சை தருவார்
வரமான லிங்கம் சிவபூசை செய்யும்
மனதே சிறந்த அரனே !
லிங்கத்தைப் பூசை செய்யும்
நெறியினோர் மனதே ஈசன்
அங்கமே சக்தி யாகும்
அங்கேயரன் பிர்மன் மாலோன்
செங்கண்(ணே) இந்து வெய்யோன்
செவியும் மனனாதி மூன்றும்
பொங்கிய அண்ட ரண்டம்
புவனம் எண்டிசை யுமாமே.

---

அரும்பத உரை :

இந்து - சந்திரன்
பகலோன் - சூரியன்
மனனாதி மூன்று - மனம், மொழி, மெய்,
விஞ்சை - மந்திரம்
அங்கம் - உடம்பு
பரம் - மேல்

## மார்க்கண்டன் மாற்றம் கேட்ட யமனின் சீற்றஉரை

### நடை

என்று மார்க்கண்டன் இயம்பு மொழி கேட்டு
நின்று மகாக்காலன் நெருப்பெழவெ கண்சிவந்து
போமடா சாத்திரங்கள் போத உரைத்தாலும் விதி
நாமடா வீண்போமோ நாடியுந்தன் மட்டுமல்ல
ஆயிரத்தெட்டண்டம் அடங்கலும் ஈரென்றேழுலகும்
பாயிரத்தின் கோடி பூவியல் ஆயிரத்தின் அண்டம்
ஈரெழுத பூ வொண்ணா ஒண்ணாதர் புவனம்
நீரெழு மண்டலங்கள் நிறைந்த உலகமெல்லாம்
மன்னும் புவி ஈரேழில் எண்பத்து நான்கு லட்சம்
மன்னும் கடலில் வைத்து ஒளித்த சீவன் முதல்
பாதாளலோகம் பறந்து ஒளித்து வைத்ததுவும்
மீதான தாபரத்தில் வித்தில் ஒழித்ததுவும்
கல்லுக்குள் தேரை கருவுள் அடக்கியதும்
பல்லுக்குள் மெய்க்குளப் பதித்த கிருமிமுதல்
நான் முகனார் தான் படைப்பார் நாமுமதை ஆராய்ந்து
வான் முகட்டில் ஏற்றி வதைப்பேன் ஒரு கயிற்றால்
நமனை யறியாமல் நாடி உயிர் மாளாது
எமனை அறியாமல் ஏகுமோ சீவன் எங்கும்.

---

அரும்பத உரை :

சாத்திரம் - நீதி நூல்
ஒண்ணாதார் - (பொருந்தாத) பகைவர்.
மன்னும் - நிலையான
தாபரம் - ஆதாரம்
கிருமி - புழு (பூச்சி)
மாளாது - சாகாது

## கூற்றுவன் தன் ஆற்றலுக் கேற்றம் கூறுகிறான்

### விருத்தம்.

தங்கிய பிரமன் என்றால்
தாரணி செனனம் மீளும்
பொங்கிய மனைய தென்றால்
போதவே எவையும் காக்கும்
எங்கிய பூமி ஒன்றே
ஏகமாய் எவையும் காக்கும்
சங்கையில் நமன் என்றில்லாமல்
சாகுமோ சீவன் எங்கும்

### நடை

படியில் வருஞ்சொரூபம் பாங்காகவே எடுத்தால்
மடிவது தான் திண்ணம் இவை மானிடற்கு மாத்திரமோ
எல்லோர்க்கு மூவர் எனக்கும் விதி நீ கேளாய்
வல்ல பிரமன் வாழ்க்கை வாகாய் உரைப்பது கேள்
நாலுயுகமும் நளின முடனே நிறைந்தால்
காலமதில் நால்யுகமும் சதுர்யுகமாகும்
தங்கும் சதுர்யுகம் தங்கு இரண்டாயிரத்தில்

---

அரும்பத உரை:

தாரணி - உலகம்
செனனம் - பிறப்பு
சங்கையில் - ஐயமின்றி
படி - உலகம்
மடிவது - இறப்பது
திண்ணம் - உறுதி
சதுர் - நான்கு

துங்கன் புரந்தரனார் தோன்று பட்டம் ஈரேழாம்
நீதி அயனாருக்கு நிறைந்தது ஒரு நாளாம்
ஓதுதினம் முப்பதென்றால் கூடுமது ஒரு மாதம்
அப்படியே பன்னிரண்டு ஆனதொரு வருடம்
இப்படியே நூறுசென்றால் இயல் ஆண்டில் ஓர்பிரமன்
விந்தையுடன் அகலும் மேலும் அயன்கோடி சென்றால்
கந்தம் நிறைந்த கருணை அரிக்கு ஓர் நாளாம்
இப்படிநாள் முன்னூற்றறுபலுமே சென்றக்கால்
செப்பமுடன் ஓர்வயது செங்கண் நெடுமாலவர்க்கு
நூறுவயது தொடங்கில் அவதாரம் ஒன்று
மாறிவருஷம் கோடி வகுத்த அவதார மென்றால்
சாந்தகஞ் சேர்மாது தருமநெலி பார்வதிக்கு
கூந்தல் அவிழ்த்து குழல் சொருகு நேரமது
ஒரு நாழிகைக் கொருக்கால் பொங்புகழ் பார்வதியும்
பருவமுடன் கூந்தல் பண்பாய் முடித்தக்கால்
அரிதான ஓர்நாளாய் அப்படியே முப்பதுநாள்
சென்ற தென்றால் ஒருமாதம் சீருடனே பன்னிரண்டு
இந்தப்படிச் சென்றால் இயல்புடனே ஓர்வருடம்
சிந்தை நிறை பார்வதிக்கு திரள் வயது நூறானால்
அந்தம் கடந்த அரனுள் கலந்திருக்கும்
கந்தம் நிறை உமை காட்சியுடனே மகிழ்ந்து
சக்தியொரு கோடிகடல் தான்கலந்தால் ஈஸ்வரர்க்கு

---

அரும்பத உரை :

யுகம் நான்கு - கிரேதயுகம். திரேதயுகம், துவாபரயுகம், கலியுகம்
துங்கன் - பெருமைக்குரியவன்
புரந்தரன் - இந்திரன்
அவதாரம் - மேலிருந்து கீழிறங்கும் பத்துப்பிறப்பு (திருமால்)
சீர் - பெருமை

உற்ற நிமிட மென ஓங்கி நடனம் புரிவார்
அண்டபகிரண்டம் அடங்கல் வெளியாகும்
கண்டதெல்லாம்தான் அழியும் காட்சி அரன் அழியான்

## "தோன்றியழியும் யமதருமனின் தகவல்"

### விருத்தம்.

வெளி (தாள்) திண் நிலை யதாகும்
விழியினால் கண்ட தெல்லாம்

அழியும் நாள் எவையும் நீங்கும்
ஆதியும் வெளியில் நின்றார்

தெளிவுடன் உனதா பூமன்
திடம்வாழ் ந்திருக்க வென்றார்

சுழியயன் சூட்டும் விஞ்சைச்
சூத்தி ரம்விட் டிடாதே

## "பாசக்கயிற்றின் பெருமை பேசுகிறான் காலன்"

### நடை

எங்கள் தனக்கு இறப்பும் பிறப்பும் வந்தால்
தங்கில் உன்னால் பாரில் தரிக்கச் சதமல்லவே
உந்தனுடைய முன்செனனம் உண்மையதுவில் ஒன்று

---

அரும்பத உரை :

ஆதி - பரமேசுவரர்
சூத்திரம் - இரகசியம்(நூல்)
தரிக்க - இருக்க
சதமல்ல : நிலையில்லை

சிந்தையுடன் நீயறியாச் சேரவே நாம் அறிவோம்
அந்தச் செனனம் அறியாத நீதி தவம்
இந்தச் செனனம் எடுத்தாய் இதுசிறிது
உந்தனை முன்கட்டுங் கயிறு உண்மை எந்தன்கையிருக்க
இந்த நாள் சாவுதள்ள எத்த வலுவோ உனக்கு?

## "மார்க்கண்டா உன் உயிரைப் பிரிப்பேன்" என மறலிமுழக்கம்

### விருத்தம்.

முன்னாள் நீயும் பிறந்திறந்து
முழுதும் உழன்றாய் பார்தனில்

அன்னாள் அவையும் நீயறியாய்
அறிவோம் பிழையில்லாமல்

இன்னாள் தவசு சிவபூசை
இதனால் அறிந்து உழைத்ததனால்

என்னாணை உனதுயிர்ப் பிரித்து
இறையோன் உலகில் ஏற்றுவனே!

## "யமன் உலகிற்குத்தள்ளாது தவ விதி தருமம்"

### நடை

என்று நமனுங் கூற இயல்பாலன் ஏதுரைப்பான்
இன்று நீ சொன்ன விதி எங்களுக்கு வாராது

---

அரும்பத உரை :

உழன்றாய் - துன்புற்றாய்

சீரில் நிறைந்த சிவபூசையின் பெருமை
காரி நிற மாலோன் கருணை அயன் அறியான்
அவம் விதியைத் தள்ளாது ஆனவிதியே வலுவாம்
தவம் விதியைத் தள்ளிவிடும் தருமமிது வெல்லுவார்
அவமதனில் நீரும் அடரிட்டுயிர் வதைப்பீரோ!
தவமதனில் வந்து அணுகி தான்பிடிக்க மாட்டீரே!
பாவத்திருளில் பருதி தவமே புரிந்தால்
ஆவத்திரளும் அகன்றோடும் எமன்விதி
தீவினையைத் தள்ள சிறந்த தவங்கள் செயல்
பாவனையாய் மாமுனிவர் பாரில் நிலைத்தார்க்கே
பகலாம் மறவியனுகாப் பகலில்லாத தேச மெங்கே?
தருமே யிருள் நீ தானில்லாத தேசமெங்கே

## ''சிவபூசைத்தவச் சிறப்பு''

தவத்தில் சிவபூசைதனிலும் அரனார் இருப்பார்
எவற்றின் பலம் குறித்து எதிர்வந்தீர் என்னிடத்தில்?
இருளும் பகலவனோடு ஊடாடி நிற்குமதோ?
வெருளும் இருளும் பெருமூச்சு நேர்தவம்
பூசை செய்தகையும் புகழ்ந்த ருசிநாவும்
ஈசர் லிங்கம் அகண்டத் தியல்பு விழிநாசி சேதி
நெஞ்சகத்தில் வைத்த நினைவு சிவ ஆக்கைசக்தி
தஞ்சம் உயிர் ஆக்கை விட்டுத்தான் அகலாது உன்கயிற்றில்

---

அரும்பத உரை :

காரி - கருநிறம்
அடர் - செரு
வதைத்தல் - துன்புறுத்தல்
பாவனை - இயல்பாய்
தேசம் - நாடு
பூசை - வழிபாட்டுமுறை

ருசி - சுவை

## தவத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை

### விருத்தம்

வேதனார் விதியைத் தள்ள
மீறிய தவங்கள் செய்து

நீதமா முனிவர் பூவில்
நிறைந்தனர் ஏது செய்வார்

நாத மாப்புழுவைத் தன்போல்
நாட்டு வெட்டுவனுமாறாய்

சூதான தவத்தில் வேதன்
சுருதியும் நீரும் ஏதோ?

## ''யம பயம் யாரை விட்டது'' மீண்டும் காலன் கூற்று

### நடை

என்று மார்க்கண்டன் இவை கூறவே காலன்
ஒன்றும் அறியாது உரைத்தாயே பாலகனே!
இந்த உலகில் இருக்கின்ற சீவன் எல்லாம்
வந்து எனது பாசம் வதையாது இருந்தவர் யார்?

## ''மணிகண்ட இணையடிப் பெருமை''

### விருத்தம்

மாற்றம் இன்னது கேட்டது
மணிமுடியானைப் பாரில்

---

அரும்பத உரை :

வேதனார் - பிரமன்
பாசம் - கயிறு
மாற்றம் - சொல்

போற்றும் அன்பர்கள் இந்திரனின்
பொன்னுலகிற்குப் போகார்

கூற்றுவ உனது உலகமும்
குணமொடுங் குறுகார்

ஏற்றமாகிய சிவபதம்
அடைந்து இனிது இருப்பார்

உன்னை எண்ணாராம்
உம்பரை எண்ணலாம்

மன்னன் எண்ணாராம்
மாமறைப் பண்ணவன்

தன்னை எண்ணலாம்
தன்துளப வேரினையும்

பின்னை எண்ணலாம்
பிஞ்ஞகர்க் கற்புன்னோர்

படைப்பவன் அளிப்பவன்
படைத்த யாவையும்

துடைப்பவன் துடைத்தவன்
சுடலை மீதிலே

---

அரும்பத உரை :

குறுகார் - நெருங்கார்
சிவபதம் - பதமுக்தி
உம்பர் - தேவர்
மறைப்பண்ணவன் - பிரமன்
சுடலை - சுடுகாடு

நடிப்பவனே ஒருவனே
நமனை வென்றவன்

அடைந்தவர் தமக்குமே
அழிவு நீக்குவான்

''மங்கை பங்கன் அடியார்க்கு மரணமிலை; மறலியே
அறிந்து கொள்''
அண்டம் ஒருங்கி அரிவிரிஞ்சன்தான் ஒடுங்கி
தெண்டிரை நீரேழாம் சிதறி நீர் மாண்டாலும்
எங்கும் நிரந்தரமாய் இயல்தூளி ஆனாலும்
மங்கை பங்கன் அன்பர்க்கு வாராது ஒருநாளும்
அப்படித்தான் ஓர்யுகந்தான் ஆகி முடிந்தாலும்
செப்பமுடைய சிவன் உடலில் ஊக்கம் வந்து
ஒப்புடைய தூலமெனும் உன்னுடலை விட்டிடுமோ
நட்புடைய எசர் நளின உள்ளமே அறியும்
உந்தனிடம் வாரதில்லை உண்மையிது காலா கேல்!
சிந்தைலிங்கம் பூசை சிவன் கயிலைச் சேர்ப்பதுகாண்!''
எங்கள் மனதில் இறையோன் ஒளிந்திருப்பான்
மங்கை பங்கன் பாதம் மனம் மறவாத வித்து
கொஞ்சம் இவன் என்று எண்ணி கோபம் நினையாதே
அஞ்செழுத்தில் ஈசன் அடியார்கள் தங்களுக்கு
தீங்கு நினைந்தோர் திடமாய் உயிர் இழப்பார்

---

அரும்பத உரை :

அழிவு - சிறப்பு
விரிஞ்சன் - நான்முகன்
நிரந்தரம் - நிலையாக
செப்பம் - நடுநிலைமை
தூலம் - ஸ்தூலம் (பருஉடல்)
அஞ்செழுத்து - ''வேதம் நான்கினும் மெய்ப்பொருளாகிய
நாதன் நாமமாம் நமச்சிவாய வே''

ஓங்கி என்னைக் கொல்லாது ஒதுங்கியே ஏகும் என்றான்

## ''பரமனுக்கு பூவிட பாவ இருள் நீங்கும்''

## விருத்தம்.

நேமநியமம் அறியாரும்
நிமலன் பூசை ஒருமலரால்
நாமம் ஓதி பூவிலிட
நாடும் பாவ இருள் நீங்கும்
சோமன் அருளும் இவர்கள்தவம்
சுருதி அயன்மால் அறியார்
ஏமா உனதால் அறிவரிது
எவையோர் அருளச் சிவலிங்கம்

## ''தன்னிலைக்குக் கழிவிரக்க எண்ணுகிறான் காலன்''

அந்தவுரை கேட்டு அடர்எமன் பாலனையும்
அந்தநாள் கொல்லாமல் ஏகவிட்டு நான்போனால்
எமனோடு தூதர் இயல்பாம் எனை நகைத்து
காலன் ஒரு பாலன்தனைச் செயிக்க மாட்டாமல்
வந்தாராம் எனநகைப்பர் வாழ் அமரர் சூழ்திசையோர்
முந்தோரும் அண்டம் நிறை மூவுலகிலுள்ளோரும்
பாரில் வந்த வீரப்பராக்கிரமம்தான் அறிவார்

---

அரும்பத உரை :

நிமலன் - தூயவன்
நாமம் - திருப்பெயர் (பஞ்சாட்சரம்)
சோமன் - சிவபெருமான்
பராக்கிரமம் - வலிமை (வீரம்)
சுருதி - வேதம்

சீரில் நிறை பாலன் திடநமையும் ஏழை என்பார்
ஆதி உரைதப்பி நாம் அநியாயம் செய்யவிலையே
வாதி உயிரை வதைக்க வழக்கோ நமக்கு
சீக்கிரமதாக சிறந்த விஞ்சை மந்திரத்தால்
தூக்கி உயர்மாள தருமன் விடுத்தான் சூது

## "ஏழுவாய் திறந்து ஏதம் உரைக்கின்றான்"

சென்று விஞ்சைமாய் கைச்சினந்து உயிர் வாங்குமுன்னே
அன்று லிங்கம் சீர் விஞ்சையற்று ஓடியதே
மாய்கை விஞ்சைச் சூது மயக்கம் வெருண்டோடும் வகை
வாய்கள் ஒரு ஏழுடையான் வாகாதப் பார்த்துரைப்பான்
ஈசன் செயல் இதுவோ ஏறவில்லை நன்றாக சூது
வாசமுடன் பாலன் மகா நீதம் என்று ஒருவாய்ச்
சொல்லும்; அதில் பின்னொரு வாய் சொன்னவிதி பாலனுக்கு
இல்லை இந்த நாளில் இவன் உயிரைக் கொல்வதல்ல
என்று சொல்லும்; பின்னொருவாய் இப்பாரில் பாலனுக்கு
இன்றுவிதி போச்சு இனிமேல் இவன் உயிர்க்காய்
வந்து விட்டு போவதல்ல வாகாய் வதைக்க என்றும்
பிந்தும் ஒருவாய் பிடிக்க விதி இன்று ஏதுவோ?
பின்னும் ஒருவாய் பிடித்து இவனைக் கொன்றுவிட்டால்
சின்னமதி சூடும் அரன் சிந்தை செயல் எப்படியோ
என்று சொல்லும் பின்னும் ஒருவாய் ஏதன்
இவர்க்கென்பானால்

---

அரும்பத உரை :

ஆதி - சிவபெருமான்
மாற - சாக
சின்னமதி - பிறைநிலா
ஏசும் - ஒன்று
ஏகம் - ஒருவன் என்று ஏத்த நின்ற நுண்ணுதல் கடவுள்

அன்று விதி மெத்த அருளாறோ என்று சொல்லும்
அரனார் சொல் பொய்யுாகும் மறையுவைதவறும்
என்று சொல்லும் பின்னொருவாய் இன்னாள் இவன்உயிரை
கொன்று விடச் சூது விட்டோம் கோமாய்கை ஏறவில்லை
மிஞ்சுந்தவத்தில் விளைந்தபலன் இவர்க்கு
வஞ்சகக் கொடுரமதால் வாங்த உயிர் வேணும் என்று

### "நெடிய காலனின் கொடிய வேடம்"

பருப்பதம் போல் மேனி பருத்தக்கருவுடலும்
திரைபோல் எழுந்தகையும் திண்தோளடைமார்பும்
அந்தரத்தில் மேகம் அடர்ந்த குழற்காடு
மீசைமுறுக்கும் மின்னு பிறை எயிறும்
நேசம் பதினாலு நிறைந்த விழி அக்கினியும்
பொங்குஞ்செய்கை ஈரேழில் பொற்கோல ரூபமதை
தங்குபுகழ் பாலகன்முன் தான் காட்டினான் இடிபோல்
காலனுடைய ஏழுமுகம் கண்டு அலறியே பதறி

### "காருடல் காலனைக் கண்ட பாலனின் மருட்சி"

பாலன் திரும்பிப் பார்த்தான் அங்காலனை அந்நாளில்
ஓங்கு கண் ரூபம் ஒடுங்கியே பாலன் உயிர்
நீங்குமெனக் காட்டலுற்றான் நீங்க வில்லை பாலன் உயிர்
காலன் கண் கோலம் தன்டு ஒடுங்கி பாலகனும்

---

அருஞ்பத உரை :

பருப்பதம் - இமயமலை
திரை - அலைகடல்
குழற்காடு - தலைமுடிக்கற்றை
எயிறு - பல்

சீலநெறி நெஞ்சம் திடுக்கிட்டு உடல்பதறி
சண்டனுடன் முன்னே தனித்து நிற்கவே பயந்து

### "தவச்சிங்கம் சிவலிங்கத்தைக் கட்டியணைக்கிறது"

அண்டர் பிரான் லிங்கம் அணுகியே ஓடிவந்து
உன்னுடைய அபயம்! இருக்க முடியாமல்
பொன்னுடலை நாயடியேன் போதவே கட்டுகிறேன்
கோபத்துடனே கொடிய சண்டன் வருவதனால்
ஆபத்துக்கு பாவம் அறியேன் அடியேனும்
உந்தன் சரண் நம்பி உனது அடைக்கலம் நான்
எந்தன்தனைக் காத்தருளும் ஈஸ்வரனே தஞ்சமென்று
வந்து லிங்கங்கட்டி மறைந்து நின்றான் பாலகனும்
சிந்தை எனக்குந்தன் (சிவன்) பாதமே துணையாம்!

### "இனி ஆளாய் உனக்கல்லேன் எனலாமே"

அடிமை யுனது அடிமை என் நான் இருந்தேன்
படியில் எனைக்காக்க பரனே நீ வந்ததிலையோ
உந்தன்னருள் பெற்றோர்க்கு உண்டோ உலகில் நமன்
எந்தனைக் காத்து இரட்சிக்க வந்ததிலையோ?

### "உயிர்காப்பாய் நஞ்சுண்ட கண்டா"

அண்டத்தமரர் அனைவரும் தஞ்சமென்ன
கண்டத்தில் நஞ்சை வைத்து காக்கிலையோ அன்றுவரை?

---

அரும்பத உரை :

சண்டன் - யமன்
சரண் - அபயம்
பரனே - எல்லாருக்கும் மேலான நாயகனே!
இரட்சிக்க - காப்பாற்ற
படி - பூமி

எந்தன் மொழிக்கவலை இயம்பு பராபரனே?
உந்தன் செவிக் கேட்க வில்லையோ? உத்தமனே!
என்று அழுதான்!

### "மனக்கவலை தீர்க்க மலர் பூசை செய்தேன்"

பாரிலுனைப் பூசை செய்ய பார்த்து எதிராக நின்றாய்
பாரிலிந்த லிங்கம் பரன் உமையுமில்லாததா?
சிவபூசை செய்து சிறந்ததவம் தள்ளி விட்டு
அவமதனில் நீரும் அணுகியோ வீற்றிருந்தீர்!
பூசைதவம் நீதி புகழும் உனக்கல்ல வென்றோ?
ஆசை வஞ்சப் பாதகரை ஆளடிமைக் கொண்டீரோ?

### "மறு பிறவி எடுத்தாலும் மலர் பாதம் மறவேனே!"

இந்த செனனம் இறந்தாலும் பிற செனனம்
வந்து சிவ பூசை மனதுள் வைக்கவே அருள்வாய்!
எமனிடத்தில் இயல்பாக இறக்கும் வண்ணம்
காமனை முனங் காய்ந்தவரே காட்டிக்கொடுத்தீரே!
இன்னுமொரு செனனம் இயல்பாய் எடுத்தாலும்
உம்முடைய பாதம் உதவுவீர் என்று அழுதான்!
பாதம் வணங்கப் பவுசு சொர்க்கம் ஈயாமல்
ஏது நீர் எமனிடம் என்னை வசமாக்கி விட்டீர்

---

அரும்பத உரை :

தஞ்சம் - அபயம்
கண்டம் - கழுத்து
நஞ்சு - விஷம்
பாதகர் - பெருந்தீவினை புரிபவர்
காமன் - மன்மதன்
காய்ந்தவர் - நெற்றிக்கண்ணால் எரித்தசிவன்
பவிசு - சிறப்பு

ந்தனுடைய பூசை எனது மனதில் அன்பு
ந்தன் மனந் தோற்றலையோ! உத்தமனே! என்று அழுதான்

### "பாலன் செபமலைக் கண்ட காலன் நிலை"

மந்தன் ஆகம் மகாக் காலன் கண்டு சிவந்து
ந்தனுடைய விஞ்சை இயல் மூவர் தம் விதியும்
ந்தையுடன் வாங்கும் விரக்கால் கோபமதைக்
ண்டவுடன் அத்தேவர் கலங்கே மடிந்தே விழுவார்
ண்டுதவ நெறி ஒப்ப பாலன் இந்த இரண்டினுக்கும்
ளாதிருக்க வழி எவனோ? நாமுந்தான்
ளாமல் பாசக்கயிறால் வதைப் போம் எனவே
ர்க்கண்டன் உடம்பின் வருத்தம் நமன் பாராமல்
ர்க்கண்டம் போய் ஒளிந்தாய் நான்விடேன் என்றே மிரட்டி

### "பாசக் கயிற்றை வீசல்"

தசொளிர் லிங்கம் மேலும் இயல் புதல்வன் தன்மேனும்
சக் கயிறிட்டான் பகிரண்டம் தான் நடுங்க
அண்டம் பாதாளம் அடுக்கு திடு திடு என்றாட
தண்டிரை நீர் எழும் சிதறி வெருண்டு ஓட
ட்ட கெஜம் எட்டு அலைய ஆணிவடமேரு அசைய

---

அரும்பத உரை :

சிவந்து - கோபங்கொண்டு
மிரட்டி - அச்சுறுத்தி
தேசு - (தேஜஸ்)ஒளி
அண்டம் - உலகம்
பாதாளம் - கீழுலகம்
ஆணி - அச்சாணி

சிட்டர்க்கருளும் எட்டுத்திசையும் திடுதிடென(வே)
தோட்டத்திறள் புவனத்தொல்புவி எல்லாம் அதிர
செங்கண்மால் வைகுண்டம் சீர்பிரமன் பூ வசைய
எங்கும் அருளால் அசைய எவ்வுலகுந்தான் அதிர
இறுக்கி கயிறிட்டிறுக்கி உடல் பூட்டி
மறுக்கி இழுத்தான் மகாலிங்கத் தேவரையும்
பாவைக் கடலில் பாரமலை போட்டு
ஆவைக் கடலில் அமரர் இழுத்தாற் போல
பொங்கு மகாக்காலன் பூட்டுங் கயிறதனால்
சங்கரன்தன் மேலும் சற்றே அசைந்ததுவே

## ''அசைவில் பதறும் சிவபாலன்''

அண்டமும் கடல்கள் ஏழும்
அகண்டதோர் கிரிகள் எட்டும்

மண்டலமும் புவன லோகம்
வடகிரி மூன்று லோகம்

எண்டிசை எவையும் லிங்கம்
இவையவை அசைவதாகும்

சண்டனும் மருளான் அன்று
தன்னுடல் பதறி நின்றான்

---

அரும்பத உரை :

மேரு - இமயமலை
சிட்டர் - சிரேஷ்டர் - சிறந்தவர்
மருளான் - அஞ்சான்
சண்டன் - காலன்

1-Sheet MarkandiyanAmmani

## ''இறை மீது கயிறு வீசியதற்கு இளைய பாலகன் அழுகிறான்''

லிங்கம் அசைய நெறி சிறந்த பாலகனும்
அங்கம் பதறி அரனே என்று அழுதான்
உன்னுடலைக் கட்டும் உற்ற அடியவற்காய
பொன்னுடலில் பாசக்கயிறு பூட்டுமோ என்றழுதான்
''வலையில் அகப்பட்ட மகரம் என்ன'' நாயடியேன்
தலையில் எழுத்து இதுவோ? சாகும் இந்த வேளையிலே
வாசமணி ஈசன் மகாதேவன் என்விதியில்
ஈஸ்வரர்க்கு பாசக்கயிறு என்விதியோடு ஒத்ததுவோ?
எந்தனுடைய சீவன் இறந்தும் பிறப்பதென்றால்
எந்தனுடைய அய்யர்க்கும் இறப்பும் பிறப்பும் உண்டோ?
லிங்கம் அரன் என்ற நினைவு மறவேன் நிமிடம்
சங்கரனே உந்தன் அன்பு சாம் அளவும் நான்மறவேன்''

## ''இறைதாள் மறவார் அறிவினர்''

### விருத்தம்.

பூசை அரன் என்றிருப்பவர்கள்
பொருளை மறவார் அறிவினர்கள்!

பாசநினைவு நினையார்கள்!
பலவாக் கனவு மனதில் எண்ணார்

நேசம் எனது நினைவு ஏது
நிமிடம் மறவேன் எனதுமனம்

---

அரும்பத உரை :

வலை - மீன் முதலிய பிடிக்குங் கருவி
மகரம் - சுறாமீன்

ஆசை அறிய வந்திலையோ
அரனுக்கடுத்தது வாம் சிவபூசை!

## ''ஈசனை விடுத்து பாசத்தால் எனைப்பிடித்து ஏதாகிலும் செய்க''

### நடை

அடிமைக்கு வந்த அவதிதனை நீக்காது
கொடுமைக்கு அனுப்பி வைக்கக் கூடினீர் இன்பதுன்பம்
நம்பினவர் துன்பம் நான்பார்த்திருப்பதிலும்
அன்பினுடன் நாமும் அவதிஎனும் ஓர்புனையோ?
என்றும் பொருளானீர் உமக்கு எங்கள் போல் ஆனால்
இன்றேதான் நாங்கள் இப்பாசம் தள்ளுதற்கு
முற்றுமோ; வித்தே! முழுமுதலே! என்று அழுதான்
சக்தியுமை பாகர் நின் சரணமதே தஞ்சம் என்று
நீதிலிங்க பூசை நிமலன் உமையல்ல வென்றால்
சோதியன்ன உருதுலங்குமோ அவருக்கும்
பேதம் எவர்க்கும் பிரிவுதவ வேறெனிலும்
தாள்மறவேன் ''எமா'' காட்சி லிங்கம் தனை விட்டு
எத்தனையே நீ பிடித்து ஏதாகிலும் நீதி நெறி
விந்தையுடன் செய்யும் விதி பாவம் நான் அறியேன்
என்று மார்க்கண்டன் இயம்பிப் பதறுகையில்

---

அரும்பத உரை :

அவதி - துன்பம்
புனை - ஒப்பு
பாசம் - கயிறு
சரணம் - (கமலசரண) பாதம்
துலங்குமோ - விளங்குமோ?
தாள் - பாதம்

**''கடல் நஞ்சுண்டக் கண்ணுதலைக்கல் என்று இகழ்ந்துரைக்கிறான் காலன்''**

அன்று யமகாலன் அதட்டிநகைத்து ஏதுரைப்பான்
உந்தன் உயிர் போகையிலே உண்மைலிங்கமோ உறவு?
சிந்தை லிங்கம் தன்னருமை தேடுவாரார் பூணுவாரார்
பூசித்தோன் போகையிலே பூசை கொண்டகல்லதுவும்
ஆசையுற்றுப் பார்த்திருந்தால் ஆரடா பூசை செய்வார்
கல்லென்று பூசை கொண்டு காசினியில் வாழாவிட்டால்
அல்லல் தனை அடருமா என்பசியால்
ஈசன் என்றும் கல்லதென்றும் எண்ணிக் கண்டவர்யார்?
வாசமொன்றும் ஈசுவரனார் வந்து கல்லிலே நுழைய
பூத்தது வார் எங்கே போயிருக்க உளவெளிதான்
ஏத்த வசனம் பேச இயல் நாவு இல்லையடா!
கல்லை நீ விட்டாலும் கல்லுன்னை விடுமோ?
''வல்லகல்லு தன்னுடனே வாடா'' என இழுத்தான்

**''கல்லில் தோன்றும் கருணாமூர்த்தி''**

காலன் இழுக்க கல்கயிறு பூண்டிருக்கிற
பாலன் மார்க்கண்டன் மதிமயங்கி மெய் சோர்ந்தான்!
இந்தவகை பாலகனை ஈன்ற தந்தைதாய் அறியார்
வந்தவகை அத்தனையும் மாது அரன் அறிந்து

---

அரும்பத உரை :

நகைத்து - ஏளனமாகச்சிரித்து
காசினி - உலகம்
அல்லல் - துன்பம்
மதிமயங்கி - அறிவுகலங்கி
சோர்ந்தான் - தளர்ந்தான்
மாதுஅரன் - உமையொருபாகன்

கந்தன் அய்யர் ஈசர் கருணை மனம் வெகுண்டு
பந்துமுலை மாதுபங்கன் பண்பாய் வரநினைந்தார்
எங்கும் நிறைந்து இருந்த பரமேசுவரியை
திங்கள் அணிந்த சிவனாரும் பார்த்துரைப்பார்
''மார்க்கண்டன் நம்முடைய மலரடியில் பூசை செய்தான்
தார்க்கண்ட யமன்தான் பிடிக்க பாசமிட்டான்''
இங்கேயிருந்து இயல்வெளி இவரும் போனால்
அங்கேதான் காலன் அருள் இலிங்கம்கல் எனவே
சொன்னவுரை மெய்யாகும்; சோன்னவன் தன் முன்னே நாம்
கன்னல் லிங்கம் ஊடுருவி காட்டுவோம் நம் அழகை
லிங்கத்திருந்து நிறைந்து வெளிக் காட்டாவிட்டால்
லிங்க சிவபூசை நெறியும் எமன் அறியான்
ஈசுவரியை வாவெனவே ஈசரிடந்தரித்து
பாசம் நிறை ஈஸ்வரனார் மைந்தன் மனதும் அறிந்து
அடியார்கள் இன்பதுன்பம் அகல அருள் சூரியன் போல்
படியில் மலரோனும் பாற்கடலின் மாலவனும்
நெடிய அண்டத்திட்டு நிறைந்தே அவர் காணார்
முடிவும் வரவும் இல்லான் மகாதேவன் அந்நாளில்
துடிமிகுகாலன் வினைத் தூளாய் நொறுக்கவென்று
படிமீது லிங்கம் பிளந்து அரன் ஊடுருவி
சற்றும் அசையாத வலுசண்டன் இடுபாசம்

---

அரும்பத உரை:

அய்யர் - தலைவர்
பாசர் - யமனிடும் (உயிர்வாங்கும்)கயிறு
ஊடுருவி - உள்ளிருந்து
அருள்சூரியன்போல் - ''அருக்கனில் சோதி வைத்தோன் காண்க''
முடிவும் வரவும் இல்லான் - ''போக்கு வரவு இல்லாப்புண்ணியன்''
''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதி''

அற்றுப் பொடியாகும் ஆதிலிங்கம் வரவிசை
லிங்கத்துடன் எழும்பி நீண்ட அரன் வரவிசை
தங்கு புவன அண்டம் தானுதிக்கும் ஆகாசம்
அட்டவரை; அட்டகெசம் அண்டச்சுவர் அதிர்
வட்டஉலகு ஈரேழும் வான முகடு அதிர்
அண்டபகிரண்டம் அடங்க மூதண்டரண்டம்
கண்டதில்லை மால்வேதன்; காட்சிச் சதுர்யுகம்;
மூவெட்டில் காணா முடிவில் சதுர்யுகம்;
நாவெட்டி மீளும் நளின உடல்பாரம்
பூவில் ஒரு லிங்கம் புடைத்து எழும்பிவந்த விசை
நாவில் அருள் நூல் உணர்ந்தோர் நாடி இவைகண்டுரைப்பார்

## "உயர்ந்த வாக்கு ஒன்றேதேவன்"

## விருத்தம்

சொல்லிய அண்டரண்டம்.
தொகைபல புவன லோகம்

பல்லுயிர் எழுந்த தேவரும்
படர் இறை ஒன்று; இரண்டு

இல்லை என்று உரைக்கும்
விஞ்சைச் சுருதி முதியோர்வாக்கு

வல்லவன் ஒன்று லிங்கம்
வந்தவர்க்கு இணையார் சொல்வார்?

---

அரும்பத உரை :

எழும்பி - (தான்) தோன்றி
முகடு - உச்சி
இணை - உவமை (ஒப்புமை)
நம்பன் - சிவபெருமான்

ூவெல்லாங் கல்லது ஆனால்
பொருந்திய அனலால் குன்றும்

தேவெல்லாஞ் சிவன்தான் ஆனால்
தெரிசிப்பது எவரைக் கண்டு

யேவெல்லாம் இரும்பு கொண்ட
எளிபத மனந்தார் உண்டு

காவெல்லாம் மனதின் நம்பன்
பகலதானும் உண்டோரே

''எல்லாந்தானாகும் எழலரனார் தோன்றினார்''
லிங்கமென மேதினியில் நின்றது ஒருகல்உருவம்
''பொங்கிச் சினந்து புரம் எரிக்க வந்தது போல''
ஓர்முகத்தில் கோபிச் சந்தம் ஓர் புயத்து முந்நூலும்
சீர்சிறந்த நாவில் சிறந்த சரசுவதியும்
புத்தகமும் கும்பம் புகழ்தண்டு இருகரமும்
உச்சிக்குடுமி உயர் விதியோர் சொரூபம்
ஓர்முகத்தில் நாமநிறை ஓர் புயத்தில் குல்லைமணி
சீர்மிகுந்த இலக்குமியும் சீர்பெறவே மார்பு இருக்க
சக்கரமும் சங்கும் தரித்து இருகரமும்

---

அரும்பத உரை :

சுருதி - நான்மறை (நம்பினாரை வாழவைப்பது)
மேதினி - உலகம்
புரம் - திரிபுரம்
எரிக்க - சுட
சந்தம் - சந்தனம்
முந்நூல் - பூணூல்
குல்லை - துளசி (கஞ்சங்குல்லை)
திருநீறு - விபூதி

தக்கபுகழ் ஓர்முகத்தில் தங்கும் திருநீறு
ஓர்புறத்தில் பார்வதியும் ஓர் புயத்தில் அக்கமணி
சீர்கம்த்தில் மாறும் சிறந்த மழு இறக்கமதாய்
சித்திரரும் சேர் ஓர்முகத்தில் சேர் சந்தனம் களபம்
உற்ற பராசக்தி உயர்ந்த புயமீது இருப்ப
தங்குங் கபாலம் தமருகமொரு இரண்டுசெங்கை
பங்குபுகழ் இன்பம் பரமாகி நேமிநிசம்
ஓர்முகத்தில் நிச்சலமாய் ஓர் புயத்திலே எலும்பு
சீர்சிரத்தில் கங்கை சிறந்த நாதாந்த சக்தி
திங்கள் கதிர் அக்கினியும் சீர்விழியும் செங்கரத்தில்
பொங்குகண்ட கோடாலி பொரவே இருகரமும்
அஞ்சுமுகம் அஞ்சு தோளில் அஞ்சுசக்தி ஈஸ்வரனாம்
விஞ்சை லிஞ்கத் தூடே விளைந்தார் சிவமயமாம்.

## "ஒரேமரம் கிளைபல; ஓர் அரன் பிரிவுள"

## விருத்தம்.

ஓர்முகம் ஈஸ்வரன்
    ஓர்முகம் வேதன்

ஓர்முகம் மாலவன்
    ஓர்முகம் காலன்

---

அரும்பத உரை :

அக்கமணி - உருத்திராக்கம்
களபம் - வாசனைக்கலவை
கபாலம் - தலையோடு
தமருகம் - உடுக்கை
நிச்சலம் - அசைவின்ணம்(உறுதி)
எலும்பு - சுங்காளம்
சிரம் - தலை
கங்கை - கங்காநதி

வலதுகண் - சூரியன்
இடதுகண் - சந்திரன்
நெற்றிக்கண் - நெருப்பு

ஓர் முகம் நிச்சலம்
ஓங்கிய சொரூபம்

சீர்முகம் ஐந்துமாய்ச்
சிவன் வெளிவந்தான்.

✱

## "காலனுக்குக் காலனாம் கருணை அரனார் வந்தார்"

### நடை

சிவலிங்கம் ஊடுருவி சிவனாருந்தான் எழுந்து
தவஞ்செய்த பாலனையும் சண்டனையும் வந்துகண்டார்!
பாசக்கயிறு இட்டதுவும் பாலன் மயங்கினதும்
வாசநிறை காலன் வந்து அட்டி நின்றதுவும்
பூட்டுங் கயிற்றைப் பொருந்த இழுத்ததுவும்
வாட்ட முற்ற பாலன் மதிமயங்கி சோர்ந்ததுவும்
நாசம் வருங் காலன் நமன் வந்து நின்றதுவும்
ஈசன் விழி நோக்கி இயல் பாய் மனஞ் சினந்து
அண்டபகிரண்டத்து அடங்காதான் வந்து எதிர்த்தான்!
காலன் எவர்க்கும் கனவுயிர் சங்காரனுடன்
காலனுக்குக் காலன் கருணை அரன் வந்து உதித்தான்!
செகத்தில் உயிர்ச் சங்காரத் திறன் உரைகாலனுடல்
உகத்தில் உயிர்ச்சங்கார திரனும் வந்துதித்தார்

---

அரும்பத உரை :

பாலன் - மார்க்கண்டன்
சண்டன் - யமன்
அட்டி - (கயிறு) இட்டு நெருங்கி
வாட்டம் - வருத்தம்

## "மகாக்காலப் புலியிடம் காலன் எனும் பூனை ஒடுக்கம்"

### விருத்தம்

வலியவர் கொடுமை முட்டில்
வலியவர்க் கெளிது எதிர்ப்போ?

மெலியுமே எளியோர் சிந்தை
மீறிய வலியைக் கண்டால்

எலியது பூனைக்கு அஞ்சி
இருந்தநற் பாலன்; காலன்

புலியெனும் மானக்; காலன்
பூனைபோல் ஒடுங்கலுற்றான்

## 'லிங்கத்துச் சிவனைக் கண்டு அங்கம் நடுங்கினான் யமன்'

### நடை

அரன்வடிவைக் கண்டான் அகோரமுற்று வந்த கண்டன்
வரமணிந்த நெஞ்சம் மயங்கி நடுக்கமுற்றான்
கோபமாய் வந்த சண்டன் கோபம் விட்டுத்தான் பயந்து
சாபமாய் வீசும் தருபாசம் கீழே போட்டான்;
,'சிங்கத்தைக் கண்ட சிறு நரியைப் போல'' மெய்நடுங்கி
''பொங்குங் கருடன் முன்னே புற்று அரவம்'' போல் அஞ்சி

---

அரும்பத உரை :

செகம் - உலகம்
சங்காரம் - அழிப்பு
முட்டில் - தாக்கில்
ஒடுங்க - அடங்கி
நடுக்கம் - அச்சம்

கடுமலை போல் மீளும் யமன் சப்த நாடியும் ஒடுங்க
பருப்பதம் போல் வந்து நின்ற பகடு விட்டுக் கீழிறங்கி
மைந்தன் தனக்காய் மகாபெரிய ஈஸ்வரனார்
இந்த லிங்கம் தன்னிலிருந்து வந்தது யார் அறிவார்?
கல் என்று சொன்னோமே காணாத அரும் பொருளை
வல்லவர்க்குக் கோபம் வரும்; அறியாது இங்கு வந்தோம்
எங்கும் அருளாய் இருந்த நிறை மூவர் போலே
இங்குமே லிங்கமதில் எழும்புவதை ஆரறிவார்!
மைந்தன் உரைத்தான் மகாலிங்கம் ஈசர் என்று
அந்த வுரை தப்பி அறியாமல் நாம் வெகுண்டோம்
கெடுதி வருங்காலம் கெடுதியதில் உற்றோர்க்கு
சடுதியாய் சொல்லுரையைத் தள்ளி விடுமே கெடுதி
அண்டத்தமரர் அரி அயன் காணாது உடலில்
கொண்டு வந்து பாசமிடக் கொள்கையல்லவே நமக்கு
என்று மன தெவ்வளி ஏங்கி மதி மயங்கி
மன்றில் விழுந்து மலரடியில் தெண்டனிட்டான்
வாய் உலர்ந்து நா உலர்ந்து வாய் அடைத்துப் பேசாமல்
நெயுலர்ந்து நெஞ்சுருகி நின்றான் நடுநடுங்கி
நாளை மேலிர்க்கும் எரி போல் வருங்கோபம்

## ''ஐயந்திரப் பேசும் ஐந்துமுகம்''

கோளை வாரந்நன்னிலுமோ கொள்கை வலுவோ எதிர்த்தால்
இந்நப்படி அஞ்சி நின்ற எமனைப் பார்த்து ஐம்முகனார்
வந்தது என்னாம் என்று மலரோன் முகஞ்சினந்து

---

அரும்பத உரை :

நாடி - தாது
எரி - நெருப்பு
ஐம்முகனார் - சிவபெருமான்

ஏனடா காலா இயல் தவத்தின் பாலன் அஞ்சத்
தானடா பாசம் தகைமையில் லாதே வீசி
கொல்லுவையடா காலா கொடிய சினமொடு இழுத்தாய்
வல்லவனே நீ முரண்டால் மாளவோ பாலன்விதி
அஞ்சுகடிகை முன்னே ஆச்சு இது போகுமுன்னே
வஞ்சவினை செய்யாதான் மாளக்கடிகை போனதற்பின்
உன்னாலே கொல்லரிது உண்மையுடன் கொல்லவென்று
இன்னாளில் நின்றது உனக்கேற போடா என்றுரைக்க
நாராயணன் முகமும் நாச நமனே! காலா!
சீராய் நித்தம் சிவபூசை நாமானால்
எந்தன் அடியாரை நீயும் எளிது தொடலாமா மறலி?
சிந்தையுடன் பாலன் சிவபூசை பண்ணுகையில்
தொட்டு மறலி தொடர்ந்தனுகி பாசமிடக்
கட்டுவையோ? என்ன கருணை சிவனார் முகமும்
ஆமடா காலா அருள் லிங்கம் கல்ல தென்றாய்
நாமாடாக்கல்லு; நளின உந்தன் கண்ணாலே
பாரடா நீ விழித்துப் பார்த்தாயோ? பார்க்கலையோ?
யாரடா நான் சினந்தால் அன்பாய் உனக்கு உதவி?
என்று சிவன் கூற இயல்பு சக்தி ஏகமுகம்
இன்றுடா காலா எனது சொரூபம் எங்கே?
(கல்லோ) சிவனோ நாம் கண்டாயோ உன் விழியால்
அல் லோ பகலோ நாம் ஆதிலிங்கத்துள்ளிருப்போம்

---

அரும்பத உரை:

தகைமையில்லாதே - தகுதியில்லாமல்
வஞ்சவினை - கொடியவினை
நாசம் - அழிவு
மறலி - காலன்
நளின - தாமரை
அல்லோ - இருளோ?

துரும்பு சிவம் எனவே சொல்லி அன்பால் பூசை செய்தால்
துரும்பு சிவமாய்த் துலங்கி நிற்போம் எவ்வுயிர்க்கும்
நாம் இல்லா லிங்கம் அருளும் எந்தன் முத்திரையாம்
நாம் இல்லா லிங்கம் தருகும் எந்தன் முத்திரையாம்
என்று சக்தி ஏகமும் இயம்பவே காலன்முகம்
அன்று எமனை அடர்க்காலன்மேல் வெகுண்டு
மைந்தன் தனக்குதவி வாகாக இல்லை என்றாய்
உந்தன் தனக்கு உதவி இனி யாரோம்
இந்த லிங்கத்துள்ளிருந்த ஈஸ்வரனோ வேதாவோ
அரனோ அரியோ அடர்க்காலனோ உனக்கு
வரனோன் ம(க)னோ வாகாக நீ பாராய்
காலனே நாம் உனக்குக் காலனல்ல நீ யாரோ
சீலமுடன் நீயும் சினந்து வந்தாய் காலனைப்போல்
பாலனை நீ கொல்லவந்தாய் பாலனுக்காய் உந்தனை நாம்
காலன் எனக் கொல்ல வத்தோம் கண்டாயோ நீ காலா
பத்தராம் தவத்தோர் பரந்த தவத்தோர்கள் தம்மை
பத்தியாக் கண்டு பயப்படாது எதிர்ந்தாய்
முன்னாளில் காலா கேள் மூன்று புரத்திலுள்ளோர்
அன்னாளிலே அவர்கள் யாவரையுந்தான் வணங்கார்
ஓர்புரத்தில் வாழ்வோர் ஒரு கோடி நூறு அனந்தம்
சீர்புரத்திலே ஒருவன் திக்கெவையும் அட்டகிரி
அண்ட பகிரண்டம் அடங்க ஒரு செங்கையினால்
தண்டி எடுப்பாள் தயவுடன் நீர் ஏழுலகும்
அந்தப்படி அங்குள்தளார் இப்படியே மூன்றுபுரம்
விந்தைக் கடல்பாரில் விளைந்த மணல் எண்ணுகிலும்

---

அரும்பத உரை:

அனந்தம் - அளவின்மை (ஒருபேரென்)
பகலோ - ஒளியோ?
முத்திரை - அடையாளம்

அங்கிவனை இத்தனை என்றாலும் எண்ணரிது
பொங்கி வலுத்தோர் புரத்தை வெற்றி செய்யவென்று
வடவரையை வில்லாக்கி வளைத்து அரவுநாண் பூட்டி
திடமாலை பகழி; சிறந்த முனை அக்கினியாய்
செங்கைச் சிலை எடுத்து சென்றோம் சமர்புரிய
பொங்கிச் சினந்து புரத்தோர் இடி எனவே
மங்கும் கொடியவரை வாகாக நாம் ஒறுக்க
தங்குஞ் சிலையில் அம்பு நான் பூட்டாமத சிரித்தோம்
சீர் நெற்றிக் கண்ணில் சிறந்த பொறி எழும்பி
ஓர் அனல் புரத்தில் வீழ்ந்து புரம் தீயாக்கி
கண்ணிமைக்கும் முன்னே கடியபுரம் வெந்தவகை
விண்ணிமைக்கார் காணார் வெறும் உடல் இழந்தார்
அந்தச் சுருதி அரன் விழியிலங்கினியும்
இந்த லிங்கம் தன்னில் இருக்கிறதோ இல்லையோடா
சிந்தை பயமில்லாமல் தீர்க்கமாய் வந்து நின்று
எந்தன் உடல் மேலும் இயல் புதல்வன் தன் மேலும்
இந்தக்கயிறு இட்டவலு ஏதடா என்றுரைத்தார்
சிந்தை அய்ந்து வாயால் சிவனார் சிறந்துரைக்க
நொந்துபட நஞ்சு நெட்டிகை போல் மெய்மறந்து
முந்தை விதி கிட்டி முடுகியதே என்று சொல்லி
திங்கள் அணிந்த சிவனார் சினந்ததனால்

---

அரும்பத உரை :

வடவரை - மேருமலை(இமயம்)
அரவு - பாம்பு (ஆதிசேடன்)
நாண் - கயிறு
மால் - திருமால்
பகழி - அம்பு
முனை - நுனி
ஒறுக்க - தண்டிக்க

பொங்கு புகழ் அந்தன் தவமும் போகுமெனக்கலங்கி
பொருப்பிலிருக்கும் புனிதனை நோக்கி
நெருப்பிலிடு மெழுகாய் நெஞ்ச மஞ்சியே துரைப்பான்
ஆறுவாய் தன்னை அடக்கி மதியோர் வாயான்
சீறுமுக காலன் சினமும் அஞ்சி ஏதுரைப்பான்
முப்புரந்தைந்தீயாக்கும் மூர்த்தியே பாலனிடம்
தப்பிதமாய் வந்தடியேன் தான் பிடிக்க நல்குவனோ
முன்னாள் அவர்க்கும் ஒளிந்தீர் விதியறிவீர்
இன்னாள் அடியேனால் ஏதுகுறைகள் செய்தேன்
அன்று அவர்க்கு அரனே நீர் சொன்ன விதி
இன்று அறிவீர் எனைக் கேட்டதும் வாரேது
சொல்லுவதும் நீர் தாமே சூட்டு வினை மூண்டதென்றால்
வெல்லும் வயதுதனில் விட்டுவிடக் கூடாதே
ஈடுவாக உனக்காக நாதனே பொய்யாமல்
நடுவாக வந்தென் தளின என்மேல் குற்றமில்லை
என்று நமன் கூற ஈஸ்வரரும் கோபமுற்று
கொன்றை அணிந்த சடைக்கோமான் மனம் வெகுண்டு
வாடா நீ எமா வளமைக் குற்றமில்லை என்றாய்
கோடாமல் உன்னுடைய குற்றம் அறிந்திலையே
மைந்தன் தன்னை எமைபிடிக்க ஏது விதி
ஈர் எட்டில் பாலன் உயிர் எமா நீ கொல்லையிலே
சீர் எட்டு மைந்தன் சிறந்த சிவ பூசை லிங்கம்
(கேடு) அளிக்க வென்று கூறியதார் உந்தனுக்கு
தேடுந்தவத்தில் சிவலிங்கம் நாமா னோம்

---

அரும்பத உரை :

தீர்க்கம் - தெளிவு
புதல்வன் - மகர்க்கண்டன்
சீறு - சீற்ற (கோபம்)
கோமான் - சிவபெருமான்
கோடாமல் - கோணாமை

## "தொண்டர் உள்ளத்தொடுங்கும் தயாபரன்"

### விருத்தம்.

அண்டம் எவையும் தேடுமுனை
அணுவதளவும் கண்டிருந்தோம்

பிண்டம் எவையும் அப்படியாய்
பெருகி யானும் வெளியானோம்

கண்டம் எவையும் கண்டதனுள்
கள மடங்காத தண்மையதாய்

தொண்டர் உள்ளமுஞ் சிவலிங்கம்
துலங்கி நிற்போம் பொறிநேர்மை

## "காலன்புரி குற்றமதை நெற்றிக்கண் இறைகூறுதல்"

### நடை

மாலும் அயனும் மகேசுவரனும் (உ)நத்திரனும்
சீலம் சதாசிவனும் சிந்தை ஒன்றிலம் பொறியாம்
உனக்குத்தம் உன் விதியும் உ.ந்தனுக்குத் தோற்றவில்லை.
எனக்குற்ற பாத்திரங்கள் இவ்வுலகில் யாவரடா?
'தவஞ்செய்யாப் பேர்கள் தனைத்தான் இழுக்கும் உன்பாசம்'
சிவம் நம்பிப் பூசை செய்தோர் சிக்குவரோ நின் கயிற்றால்

---

அரும்பத உரை:

பிண்டம் - உடல்
துலங்கி - சிறந்து
சீலம் - குணம்
சிக்குவேரோ - கிடைப்பரோ?

அந்நாள் அவர்க்கு அருளும் விதியறியாய்
இந்நாளில் தப்பிதமாய் ஏனடா பாசமிட்டாய்?

### "பெரியதும் சிறியதும்"

### விருத்தம்.

---

சீரும் பூசை தருமமதில்
சினக்கக் கொடுமை நிலையாது?

பாரில் இருளும் பகலவனும்
பகையாம் இவரில் வியவனார்?

சாரிற்றிரியும் உடல்சிறிது
தருகாதிருளின் உடல்பெரிது?

பேரில் சிறிது பூசை தவம்
பெரிது பெரிதே சிறிதே நீ

### "சிந்தை கவர் செல்வ! சொல்லும் திறம் எனக்கில்லை"

அந்த உரையால் அடர்காலன் ஏதுரைப்பானான்
அந்த நாள் நீரும் அனேக விதிதான் கொடுத்தால்
மைந்தனிடம் வராதில்லை மைந்தனுக்கு நீர் உதவி
சிந்தையுடன் வாரசெயலும் அறியேன் அடியேன்
வஞ்சவினை செய்தாலும் மனதாரச் செய்யவில்லையே
அஞ்சல் மெய்யும் பொய்யாம் அரனே பொய் மெய்யாகும்

---

அரும்பத உரை :

வியவன் - தலைவன்
வஞ்சம் - கபடம்

எந்தவுரை செய்திடினும் ஏழையேன் கேட்பதல்லால்
சிந்தை எதிர் நின்று சொல்ல சிவனே திறமேது நான்?

## "பொய்யும் மெய்யும்"

### விருத்தம்.

பொய்யது மெய்யதாகும்
பொருந்தும் மெய்பொய் யதாகும்;
அய்யனின் செயலே ஆனால்
அளவறு உறுதி சொல்வார்
வையக அரசர் பொய்மெய்
மற்றவர் மெய்யும் பொய்யாம்;
அய்யம் பின்நியதி யிட்டு
அரசருக் கஞ்சு வாயே!

## "இன்றே காலன் அழிய என்றும் பதினாறு பாலன் பெற்றான்"

### நடை

அந்தவுரை கேட்டு அரனாரும் நீகாலா!
எந்தன்வுரை பொய்யாமோ? எந்தனுரையே நிலையாம்

---

அரும்பத உரை :

ஏழை - அறிவற்றவன்
உறுதி - உறுதிச்சொல்
வையகம் - உலகம்
அய்யம் - சந்தேகம்
நியதி - முறைமை
நிலையாம் - அழியாதது

மைந்தனை நீ கொல்லவந்தாய்! மைந்தனை நீ கொல்லுவதாய்ச்
சிந்தையுற்றாய் உன்னுடைய சிந்தைமனம் பொய்யாச்சே!
உந்தனை நாம் கொல்லவந்தோம் உந்தன் விதியறியாய்!
வந்துனை நாமும் வதைக் கரிதாய் நின்றுவிட்டால்
எந்தன் உரை பொய்யாம் எனது பொய்யும் மெய்யதுவும்
இந்த நிமிடம் இமைப் பொழுதில் நீ பாராய்!
என்றும் பதினாறு வயது ஈந்தோம் இப்பாலனுக்கு
மண்ணும் விண்ணும் போய்விடினும் மரணமில்லா பாலனுயிர்
தானடா சாவு இல் உயிரைத்தான் பிடிக்கப் பொய்யுரைத்து
ஏனடா இங்கு வந்தாய் எமா? எனச்சினந்து
திருநடனம் ஆடும் திருக்கால்தனை ஓங்கி
கருமலை போல் வந்து நின்ற காலனுடைய மார்புதனில்
கற்றைச் சடைமுடியார் கடுங்கோபத்தோடுதைத்தார்
அத்தர் உதைபட்டு அலறி விழுந்தான் காலன்
பொற்கிரீடம் ரத்தின பூஷணங்கள் தானங்களாற்
நற்கனக மாலை எல்லாம் நானிலத்தில் நைந்துவிழ
காலன் அறிவின் காற்குருதி மேலோட
சீலம் ஏழுவாய் தன்னிலே செங்குருதி தான்வடிய
நெஞ்சின் எலும்பு நெறநெற எனத்தானொடிய
அஞ்செழுத்து லிங்கம் அரனார் உதைத்ததனால்
அண்ட பகிரண்டம் அதிர்ந்து திடுதிடுவென்ன
தெண்டிரை நீர் ஏழும் சிதறி எழுந்தோட
பாதாள லோகம் பகிரண்ட விருமான அண்டம்

---

அரும்பத உரை :

வதைக்க - கொல்ல
நடனம் ஆடும் திருக்கால் - (உமைக்குரிய) இடதுதிருப்பாதம்
கடுங்கோபம் - கொடிய கோபம்
கனகமாலை - தங்கமாலை
பூஷணங்கள் - அணிகலன்கள்

மீதான ஒருகையால் மேதினி எல்லாம் அதிர்
அண்டச் சுவர் அடுக்கு நெறுநெறு வென
''கொண்டல் அடர்ந்து கொட்டுகின்ற செய்கைபோல்''
அட்டமலை எட்டு அதிர அட்டகெஜம்தான் நெறிய
தட்டு அண்டத் திட்டங்கல் தரணி கிடுகிடுவென
மலையெலாம் பொடியாக வனங்கள் பொடியாக
சிலையோடும் ஓசைதிசைகள் செவிடுபட
உடலைநெளித்து ஒதுங்கி அரவ கேசம்
வடமேற்கு வடசைய வ்ான் முகடு அதிர
அந்தரலோகம் அதிர்ச்சிக்கண்டு மூவுலகோர்
இந்த அதிர்ச்சி ஏது என்று தான் பயந்தார்
சந்திரனுஞ் சூரியனும் தாரகையும் விண்ணுலகோர்
அந்தரத்தில் நிற்க அவர் பயந்து போய் ஒளிந்தார்
(மலை) ஓடிந்த தொப்பாம் வானம் இடிந்தாற்போல்
நிலையில் நின்றோடி நெடுந்திசைக் காணா தொளிந்தார்
பாரமலையுடம்பு பஞ்சாய்ப் பொடியாகி
தீரமிழந்து சினந்து வந்தகால நமன்
அஞ்ஞூற்றுக் காதம் அகண்டபடி பாதாளம்
மெய்ஞ்ஞானன் கால் உதையால் வீழ்ந்தானே எமனுந்தான்!

**'கண்ணுதல் உதைக்க மண்ணில் உருண்டநிலை'**

அண்டமுதண்டம் அடங்கலும் குலுங்க
தெண்டிரை எண்டிசை நின்று தியங்க

---

அரும்பத உரை :

கொண்டல் - மேகம்
அட்டமலை - எட்டுமலை, அவை கைலை, இமயம், மந்திரம் விந்தம், நிடதம், எமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என எட்டுமலைகள்
பாரமலை - பெரியமலை தியங்க - சஞ்சலம்(புத்திமயக்கம்)

கொண்டல் அடர்ந்து இடிகொடிய தொப்பாய்
வெண்தரளத் தோள் மார்பன் வீழ்ந்தான்.

## "என்றும் பதினாறு எண்குணத்தான் அருள்"

### நடை

காலன் மயங்கி கலங்கி விழுந்ததனால்
பாலன் மனதில் பயம் வருமென்றே ஈசன்
சீலம் நிறை பாலகனே! செனனம் இறவால் என்றும்
எண்ணும் பதினாறு வயது தந்தோம் உனக்குவரம்
விண்ணும் மண்ணும் ஒன்றாய் வெளியாய் நிலைத்திடினும்
காலன் உனக்கில்லை கருணை மனம் மகிழ்ந்து
வாரமுடன் எந்நாளும் மைந்தனாய் வீற்றிருப்பாய்!
உந்தன் தனைப் பிடிக்க உறுதி வலுப்பேசி
வந்த நமன் மடிந்தான் மார்க்கண்டா! கண்டாயே!
சிந்தைபக்தி அன்பாய் சிவலிங்கம் பூசை செய்வோர்
எந்தன் அடியார்கள் தன்மேல் ஏகான் ஒரு நாளும்
தங்கு பிலகாலன் தனைச் செயித்தோம் உந்தனுக்காய்!

## "இக்கதை கேட்பவர் அடையும் பலன்"

பொங்கு புவியில் எந்தன் புகழின் கதையினை
பக்தியுடன் கேட்போர் படிப்போர் எழுதினவர்
முக்தியடைவார் அவர்க்கு முந்து சொர்க்கம் யாம்கொடுப்போம்

---

அரும்பத உரை :

கொண்டல் - மேகம் வெண்தரளம் - வெண்முத்து
சீலம் - குணம் வாரம் - அன்பு
மைந்தன் - திண்ணியன் (வலிமையுடையவன்)
வீற்றிருப்பாய் - புகழோடிருப்பாய் மடிந்தான் - இறந்தான்

சீலக்கதை கேட்டவர் பால் செல்லாது காலன் என்றும்
கோலமுடன் செல்வம் கொடுத்தோம் காண் உள்வைத்து
வன்பாதகம் நீங்கும்; மகிழ்ந்து கதை கேட்டவர்க்கு
என்பாதம் ஈவோம்; இடர்போம்; நரகம் இல்லை
சீலமதுரம் சிறந்த புகழ்க்கதையைத்
தாலமதில் செல்வம் தருப்போல் வளர்ந்தோங்கி
தேவர் சுகபோகம் திறமாய் அனுபவித்து
சீவன் விரும்பி இழப்போர் மோட்சம் என்றார் ஈசுவரனார்

## 'மார்க்கண்டன் மகிழ்ச்சியுரை''

அந்த உரை சொன்ன அரனார் இருபாதம்
சிந்தைபக்தி மைந்தன் சிறந்து கண்டு தெண்டனிட்டு
எந்தன் தனக்காய் இறையோனே பூவில்வந்து
கந்தமலர்த் தாள் அதனால் காலனையும் தான் உதைத்தீர்
செங்கமலக் கண்மால் திசைமுகனும் தேடரியா
தங்கும் இருதாள் சிரசு தான்கண்டேன் ஈஸ்வரனே!
அந்திமதி சூடும் அரனே பராபரனே
எந்தன் தவசு எவர்க்கும் கிடையாது உலகில்
அரனும் அரி அயனும் ஆதி மகேசுவரனும்
பரனும் சதாசிவனும் பார்மாது பூமாது

---

அரும்பத உரை :

பாதகம் - பெருந்தீவினை
இடர் - துன்பம்
மதுரம் - இனிமை
தரு - கற்பக மரம்
ஓங்கி - மேலும் வளர்ந்து
சீவன் - உயிர்
தவசு - தவம்
பூமாது - திருமகள்
பார்மாது - நிலமகள்

ஆதிசக்தி எங்கும் அகண்ட பராசக்தி உமை
நீதி சக்தி ஓர் உருவாய் நின்றீர் இருபாதம்
தங்கும் லிங்கம் தன்னில் தரு(க்)கி நின்ற சீர்பாதம்
சென்னிதனில் வைப்பான் சிறந்த முகமீது அணைப்பான்
கன்னம் மகிழ் நெஞ்சில் கருணைமகிழ்ச்சியதாய்
செங்கை இரண்டால் பாதம் சிறப்பாகவே அழுத்தி
பொங்குந்தமிழ் மாலைப் பூட்டுவான் சென்னிதனில்

## "கருணாமூர்த்திக்கு அருள் விருத்தம்"

## விருத்தம்

மார்க்கண் டரிஷி சொல்லுகின்ற
அருள்விருத்தம் படிக்கிற பேரும்

கேட்கிற பேருஞ்சகல பாவங்கள்
எல்லாந் தீர்ந்து மோட்சம் பெறுவார்கள்

என்றுசிவாய ரூபன் திருவுளத் தருளினாலே
அன்று அனுக்கிரகம் பண்ணினார்

"மார்க்கண்டர் பாடிய செந்தமிழ்"
"அருள் விருத்த மாலை"
"திரிபுர சங்காரம்"

சீர்மேவு மேருஞ்சிலை யாகநாணி
திரமான நாக நிலையாய்

---

அரும்பத உரை :

சென்னி - தலை
தமிழ்மாலை - தமிழ்ப்பாட்டு
அனுக்கிரகம் - அருள்
மேரு - இமயமலை
சிலை - அம்பு

கார்மேவு மேனி அரிதாணுமம்பு
கனமாய்த் தேய்வு நுனியாய்

பார்மேவு திரிபுரமே எரித்த
பரனே படர்ந்த பொருளே !

நீர்மேவு கங்கைமுடி சூடிநின்ற
நிமலா ! நிறைந்த சிவனே !

### "நஞ்சு பருகி உயிர்காத்த நயம்"

கடலேகொடுத்த கடுவால் இருண்ட
களனே ! எவைக்குள் அரனே !

படமேவிரித்த வடமாலை மக்கு
பணியே தரித்த அரனே !

இடமேயடுத்து உமையின் பாதி
தங்குமிமை யோர்கள் மூவர்முதலே !

திடமே உயிர்க்குள்ளுயிர் ஆகி
நின்ற சிவமாய் விளைந்த சிவனே !

### "வித்தும் விளைவும் விமலனே"

வித்தால் விளைந்த விரையாகி
வேரின் விரிவான கண்ணொளியாய்

---

அரும்பத உரை :

நாணி - வளைந்து
கார் - கருநிறம்
நீர்மேவு கங்கை - நீர்பொருந்திய கங்கா நதி
கடல் - பாற்கடல்
களம் - கழுத்து
கடுவால் - விஷம்
பரணி - பாம்பு

கொத்தால் மலர்ந்த மலர்மீது பிஞ்சு
காயாகி நின்ற கனியாய்

சுத்தால் நிறைந்தபடி யாகி எங்கும்
தொடரான அண்ட வெளியாய்

சித்தாய் ஓரைந்து பெரிதாகி இரண்டு
சிவமாய் விளைந்த சிவனே!

## "நாளும் கோளும் கடந்த காலன்"

விசையான சூலம்மழு பாசநேமி
விதமான சங்கு இடிவாள்

இசை மீளும் தண்டு அயில்வீர
கண்டிஇலை மீறுசெங்கை தனுவாம்

கசைவீர வாளிகவண் இலங்கு
கடுதீர விஞ்சை விதிநூல்

திசையிலை ஈரேழ் அதலக்
காலச்சிவமாய் விளைந்த சிவனே

## "விசும்பே மெய்யான வள்ளல்"

உருவான காயம் எவையோ?
சிறந்த ஒளி யாகிநின்ற வெளியே!,

---

அரும்பத உரை :

சித்தாய் - உண்மைப் பொருளாய்
சூலம் - திரிசூலம்
நேமி - சக்கரம்
இசை - புகழ்
தனு - உடல்

அருவான வாசமலராய் நிறைந்து
வளமேவும் இந்து கதிரே!

தருவான மாய்கை யவர்கான
வள்ளல்தனையே நினைந்த நினைவாய்

திருவான லிங்கமருளுடு வந்து
சிவமாய் விளைந்த சிவனே!

## "வஞ்ச வினைக் காலன் அஞ்சுவான்"

அவமாய்கை ஆசை புனலால்
விளைந்த் அதிரூபகந்தம் எவையோ?

தவமே புரிந்துன் இருதாள்
பணிந்த தமியோர்கள் வஞ்ச வினையால்

நவமீறுகாலன் அவன் ஏதுசெய்வான்?
நளிர் சிவசக்தி பரனே!

சிவமேயகண்ட வெள்ளியாகி
நின்ற சிவமாய் விளைந்தசிவனே!

## "சிவஞானச் சிந்தை விளைவே"

காடுஞ் சிறந்தமலை யும்புரந்த
கடலும் நிறைந்த பரனே!

---

அரும்பத உரை:

இந்து - சந்திரன்
கதிர் - சூரியன்
திருவான - அழகான
அவம் - பயனற்றவை
புனல் - தண்ணீர்
கந்தம் - மணம்
நளிர் - பெருமை

வீடுங் கடந்ததுற வுங்கலந்த
வெளியான பித்தா வினையே!

(பாடுந்திரை)யால் கடுக்கலந் தபொருளுங்
கலந்த வைபாகி யண்டவெளியாய்

தேடுஞ்சிறந்த சிவஞான சிந்தை
சிவமாய் விளைந்த சிவனே!

## "இதய மலரில் இறைவன்"

எட்டாய் சாணினொரு சாணதுள்
இதயமாம் கையாடும் இருசாண்

கட்டாய்ச் செனங்குகையே நிறைந்து
கனல்தேடு யோகி இவராய்

மொட்டாய் வாசலதுவே நுழைந்து
வெளியாகி நேசப் புனலுள்

திட்டான மேடை மனதேபுகுந்து
சிவமாய் விளைந்த சிவனே!

## "ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க"

எங்கும் நிறைந்துஅரன் மால்வேதன்
இமையோர் களவர் முதலாய்

---

அரும்பத உரை:

பித்தன் - சிவன் "பித்தா பிறைசூடி பெம்மானே" (சுந்தரர்)
கடு - விஷம்
சிவஞானம் - பதிஞானம் குகை : மனம்
மொட்டு - அரும்பு
ஏகரூபம் - ஓரேவடிவம்

பங்கும்புரிந்து பலவான ரூபம்
பரமாகி ஏக ரூபமாய்

லிங்கம் சிறந்த வெளியே
வளைந்து நிலையோக ஏழுமுகவன்

செங்கண் சிவந்தவினை போமென்று
சிவமாய் விளைந்த சிவனே!

## "ஐந்துபேர் அறிவுக்கும் கண்ணான சிவன்"

வாசம்புனைந்த மனோநாசி ரூபம்
மதியே சிறந்த விழியே!

நேசம் புனைந்த செவியோசை கேள்வி
நிறைநாவு சிந்தை ருசியே!

பாசம்புனைந்த அறிவான நீதி
பதியான லிங்க முமையே!

தேசம்புனைந்த அருளாதி நீதிச்
சிவமாய் விளைந்த சிவனே!

## "தூய மனமே ஆலயம்"

அருள் விருத்தம் கேட்டு அரனாரும் பார்வதியும்
திருமிகு நெடுமால் பிரமன் சீரின் பராசக்தி பங்கன்
நாதாந்த சக்தி நடன பராபரமும்

---

அரும்பத உரை :

லிங்கம் - சிவம் (அடையாளம்) மதி - அறிவு
கேள்வி - நூற்பொருளை பிறர்சொல்லக்கேட்டல்
தேசம் - ஒளி
நாதாந்தம் - ஞானநெறிகளில் ஒன்று (பஞ்ச கருத்தாவில் ஒருவன்)

வேதாந்த பாலகனை மேலுமன்பாய்ப் பார்த்துரைப்பார்
தங்கினோம் விந்தைசலிங்கம் தாபரிதநோன் உந்தன்மனம்

## 'அருளும் பொருளுந் தவமாம் சிவபூசை'

### விருத்தம்.

சீரில் விளைவில் முளை எனவும்
சிறந்த மனதில் அருளெனவும்

நீரில் விளையும் ருசி எனவும்
நினைவில் விளையும் பொருள் எனவும்

நேரிடும் பாலில் நெய்யெனவும்
நிசமான ஆதவம் எனவும்

தாரில் உனது சிவபூசை
தவிரா தெவையும் வாழ்வோமே.

## "வரதர் பொற்றாள் தொழ வரம் பெறலாம்"

### நடை.

இந்தக் கதையை இயல்புடனே கேட்டவர்க்கு
தந்ததுனக்கு வரம் தாபரிப்பாரென் வரையில்
எந்தன் தாளாணையதாய் எமன் அவர்களிடம்
சிந்தையுடன் செல்லான் திடமிதுவாம் யாவருக்கும்
பஞ்சமா பாதகத்தோர் பக்தியாய்க் கேட்டாலும்

---

அரும்பத உரை :

வேதாந்தம் - உபநிடதம் (அத்துவைதம்)
தாபரித்தல் - தாங்குதல் தாபரம் - ஆதரவு
பஞ்ச மா பாதகம் - பொய், களவு, கொலை, கள்ளருந்தல் குருநிந்தனை என ஐந்து

மிஞ்சுமே தருமம் வியாதி வறுமையில்லை
அஞ்சுமுக நாவால் அளித்தோம் உமக்குவரம்
நெஞ்சு நெறி இன்பம் நிசமா கடாட்சிக்கவும்
சிந்தை வைத்து நீயும் சிவபூசை செய்யுமென்று
அந்தலிங்கம் தன்னில் அனலுருவில் தானிருந்தார்

## "ஆதி போதித்தச் சோதி வார்த்தை"

### விருத்தம்

சிவதவ பூசை இன்பம்
சிறந்த தன்மையான் ஈசன்

தவமெனுஞ் சருகை ஆகம்
இருக்கை யின்ஞான பாதம்

ஏவரேனும் மடவார் கேட்கில்
இதுசிவ கதைய தாகும்

அவமெனும் எமனின் வாதை
அகலுமென் றாதி சொன்னார்

## 'நம்பினார்க் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு'

அன்னாள் மார்க்கண்டன் அனேகவரங்கள் பெற்று
தன்னோர் தவம்நிறைந்தோர் தந்தை தாய் பக்கம் வந்தான்
அந்தநிறை பாலகனை அன்னைதந்தை யாவருமே

---

அரும்பத உரை :

கடாட்சிக்க - அனுக்கிரகம்(அருள்)
சருகை ஆகம் - உலர்ந்த உடல்
ஞானபாதம் - தெளிவு சைவசமயமார்க்கம்
அகலும் - நீங்கும்

சிந்தையுடன் கண்டு சிறந்தபுகழ் மதலை
சிவரூப மானான் சிறந்ததவ வலுவோன்
அவம்விதியும் போச்சுதென்று அன்பாய் மனம்மகிழ்ந்து
சிந்தை உத்தரம் அங்கவர்க்குசித்தை மகிழ்ந்து இவ்வாறு
மைந்தன் உரைக்க மகிழ்ந்தவர்க்கு சிந்தை மகிழ்ந்து இவ்வாறு
மைந்தன் உரைக்க மகிழ்ந்தவர்கள் இன்பமுற்று
அந்திமதி சூடும் அரன் அருளே என்று இருந்தார்
செங்கண் நெடுமால் வேதன் தேவர் மகாமுனிவன்
தங்கியவர் செய்ததவம் தன்னளவாய் நின்றதுவே!
மார்க்கண்டன் செய்ததவம் மாநிலம் எல்லம் பெருகி
தார்க்கண்ட எமபுரம் தான் பாழாக்கிடந்ததுவே!
மைந்தன் தனக்கு அரன் வாசனையாய் ஈந்தவரம்
இத்தக் கதையை இயம்புவார்க்கு கேட்டவர்க்கு
அந்திமதி சூடும் அரன்பாதம் தப்பாது
பார்உலகில் வேறுதவம் பாங்காகத் தேடுவதில்
சீரில் நிறை செல்வம் சிறந்த தவம் இக்கதையை
உண்மை என்று 'நம்புவார்க்கு' உற்றதவம் நிச்சயமாம்
வண்மை யமகாலன் வருவதில்லை ஓர்நாளும்
விருத்தமாய் இக்கதையை மேதினியிலே உரைத்தால்
பொருந்தும் பொருள் அறியார் போதம் உண்டு பூமியிலே
தங்கும் அறிவினர்க்கும் சாரம் அறியாதவர்க்கும்
**"செங்கதிரோன் காந்தி சிறந்தெவர்க்கும் காணுதல் போல்"**

---

அரும்பத உரை :

மதலை - பிள்ளை | அவம் - வீண்
உத்தரம் - பதில்
பாழாகி - வீணாகி
பாதம்தப்பாது - இறைவனடி சேர்வர்
நம்புவார்க்கு - நம்பினார் கெடுவதில்லை நான் மறைத்தீர்ப்பு
விருத்தம் - பாவின்வகையுள் ஒன்று
போதம் - தெளிந்த அறிவு | சாரம் - நற்கருத்து

இருஞ்சீரில் சொல்மதுரம் யாவருக்கும்தான் தெரியும்
தருஞ்சீரில் இன்பம் தருகிலிது வேண்டும் தவம்

## "மங்கிய அறிவும் மதியொளி பெறலாம்"

### விருத்தம்.

பொங்கிய தவங்கள் நீதி
புனிதமாம் கதையின் சாரம்

தங்கிய விருத்த மாக
தாரணி யிலுரைத்தோ மானால்

மங்கிய அறிவி னோரகு
வகைபடத் தெரியா தென்று

அங்கையின் நெல்லி போல
யாவற்கும் மதுரங் கூரும்.

## "சிவத்தைப் பேணல் தவத்திற் கழகு"

உடலேது மாய்கை உதவிபொருளொன்று மில்லை
திடமேது பார்உடல் சிவனகன்று விட்டால்
சாகும் உயிர்முன்னே தவந்தேடினால் உதவும்
வேகும் இடுகாட்டில் உடல் வெந்ததன் பின் ஏது தவம்?

---

அரும்பத உரை :

புனிதம் - தூய்மை
கூரும் - பெருகும்
இடுகாடு - சுடுகாடு

ஆறாத நோயுற்றவரும் பிளிந்ரவன் குலைஞ்சல்
கட்டி அடிபட்டுலைவார் காரணமாய் நீதிபேச
நீதி அறிவும் நெறிமுறைமை தப்பாமல்
ஆசிரியரன் பாதம் அன்புடனே தான்பணிந்து
இந்நூலை ஓதி இவ்வுலகில் உள்ளோர்க்கு
பன்னூலத்தில் இந்நூலைப் பாடிவைத்தேன் நீதியாய்
மார்க்கண்டன் அம்மானை மகிழ்ச்சியுடன் கேட்டோர்
தீர்க்காயுள் பெற்று தெய்வலோகம் வாழ்ந்திருப்பார்
கற்றோரும் கேட்டோரும் காசினியில் வாழ்ந்திருப்பார்
ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேர்ஓடி
மூங்கில் போல சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்
படித்தவர்கள் நித்தம் நித்தம் பா(ர்புகழ்) பெற்றேவாழ்வார்
கேட்டோர் கிளையுங் கிலேசமற்று வாழ்ந்திருப்பார்.

சற்குரு பாதார விந்தம் துணையாக வேணும்

சம்பூரணம்

***

---

அரும்பதஉரை :

தீர்க்காயுள்-நூறுவயது
காசினி-உலகம்
ஆல்-ஆலமரம்
அறுகு-அறுகம்புல்
கிலேசம்-கவலை

## வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்.

மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம்.

